# தமிழின் ஆளுமைகள்

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் மணிவிழாக்குழு

தமிழின் ஆளுமைகள்

# தமிழின் ஆளுமைகள்

[கட்டுரைகள்]

வாகீச கலாநிதி, சித்தாந்த பண்டிதர்

**கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், M.A., Ph.D.**

*முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை,*

*சப்ரகமுவ பல்கலைக்கழகம்*

பதிப்பாசிரியர்

**எஸ். வை. ஸ்ரீதர்**

*முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை*

*சப்ரகமுவ பல்கலைக்கழகம்*

**கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் மணிவிழாக்குழு**

2013

தமிழின் ஆளுமைகள்

எழுதியது: கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்

பதிப்பாசிரியர் : எஸ். வை. ஸ்ரீதர்

பதிப்புரிமை © 2013, கனகசபாபதி நாகேஸ்வரன்

வெளியீடு: கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் மணிவிழாக்குழு

அச்சு: குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு - 06

Tamilin Aalumaikal

by Kanagasabapathy Nageswaran

Edited by S.Y. Sirithar

First edition © 2013, Kanagasabapathy Nageswaran

*Published by* Kanagasabapathy Nageswaran Felicitation Committee

*Printed by* Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo - 06, Tel. - 011 2364550

# அணிந்துரை

**பேராசிரியர் கலாநிதி வி. சிவசாமி**
*ஓய்வுபெற்ற பேராசிரியர், சம்ஸ்கிருதத் துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

நம்முடைய அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய மாணவரும், நண்பருமாகிய ஆசிரியரின் ஆய்வுக் கட்டுரைத் தொகுதிக்கு அணிந்துரை எழுதுவதில் மிக மகிழ்ச்சியடைகிறேன். சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறைச் சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளரும், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வழிவழி அறங்காவலர்களில் ஒருவருமான கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழாவையொட்டி வெளியிடப்படும் இக் கட்டுரைத் தொகுதி யிலே இடம்பெறும் ஆக்கங்கள் பல்வேறு காலப்பகுதி களிலே எழுதப்பட்டவை. பன்முகத் தன்மையும், நுண்ணாய்வுத் திறனுங் கொண்டவை.

யாழ்ப்பாணக் குடாநாட்டினை அடுத்துள்ள பிரதான சப்த தீவுகளில் ஒன்றாக நயினாதீவு திகழ்கிறது. ஏனைய தீவுகள் போலவே இதுவும் சமய ஞானம், தமிழ் முதலியவற்றிற்குச் சிறப்பான ஓரிடமாகும். இது இந்து சமயத்திற்கும், பௌத்தத்திற்கும் புகழ்பெற்ற புண்ணிய பூமியாகும். இந்து சமயத்தைப் பொறுத்த மட்டில் தென்னாசியாவிலுள்ள புகழ்பெற்ற சக்தி பீடங்களில் ஒன்றாக இங்கு விளங்கும் ஸ்ரீ நாகேஸ்வரி அம்மன் ஆலயம் தொன்மையும் திருவருள் பாலிக்கும் தனிச் சிறப்பும் வாய்ந்ததாகும்.

பழந்தமிழர் வரலாறு, சமயம், பண்பாடு, கலை, கல்வி, இலக்கியம், மருத்துவம், விரதங்கள், விழாக்கள் முதலியனபற்றிப் பலதிறப்பட்ட அறிஞர்கள், ஆர்வலர்கள், ஆய்வாளர்கள் எழுதியுள்ள கிடைக்கக்கூடிய பிரசுரங்களைத் தமது நுண்ணாய்வுத் திறன் கொண்டு ஆராய்ந்து கட்டுரை யாசிரியர் இக்கட்டுரைகளை நன்கு எழுதியுள்ளமை பாராட்டிற்குரியதாகும். ஆங்காங்கே புதிய தகவல்களையும், விளக்கங்களையும் ஆசிரியர் கூறத் தவறிலர்.

இவ்வாய்வுக் கட்டுரைகளை ஆசிரியர் தகவல்களைத் திரட்டிச் செம்மை யான செந்தமிழ் நடையிலே எழுதியிருப்பது வாசகர்களைக் கவரும் என்பதில்

ஐயமில்லை. இத்தகைய ஆய்வுக் கட்டுரைகளை எழுதுவதற்கு ஆசிரியர் பல்வேறு தகைமைகள் கொண்டுள்ளார். குறிப்பாக, அவரின் சிறப்பான ஆழமான தமிழ்ப் புலமை, வரலாறு, சமய அறிவு, ஆய்வு நோக்கு முதலியன குறிப்பிடற்பாலன. ஆசிரியர் காய்தல், உவத்தலின்றிக் கருத்துக்களைக் கூறும் நுட்பம் கவனித்தற்பாலது. இவர் இவ்விடயங்கள் பற்றியும், வேறு பல விடயங்கள் பற்றியும் இன்னும் பல ஆய்வுகள் செய்து அறிவியல் உலகிலே மேன்மேலும் சிறப்படைய எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ நாகேஸ்வரி இவருக்குத் திருவருள் பாலிப்பாராக.

# முன்னுரை

அடியேனின் மணிவிழா ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் 'தமிழின் ஆளுமைகள்' என்னுமிந் நூலிலே பதினான்கு கட்டுரைகளிடம்பெற்றுள்ளன. 'ஈழநாடு' பத்திரிகையிலே உதவியாசிரியராக இருந்த வேளையிலும், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறையிலே விரிவுரையாளராயிருந்த போதும், பின்னர் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலே முதுநிலை விரிவுரையாளராயிருக்கும் போதும் இக்கட்டுரைகள் எழுதப்பட்டன. இக்கட்டுரைகளை எழுத வேண்டும் எனத் தூண்டியவர்களை நெஞ்சில் நிறுத்தி நீள நினைந்து நன்றி கூறுவது பண்புடைமையென்று கருதுகிறேன். இந்நூலை வெளியிட முன்வந்த மணி விழாக் குழுவினர்க்கும், அழகும், வனப்பும் மிக்க முறையில் பிழையற அச்சிட்ட குமரன் புத்தக இல்லத்தாருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

வணக்கம்

மொழித்துறை<br>சப்ரகமுவ பல்கலைக்கழகம்<br>பெலிகுல்லோயா<br>12.03.2013

அன்பன்<br>*கலாநிதி க. நாகேஸ்வரன்*

# பதிப்புரை

எம் பெருமதிப்பிற்கும் பேரன்பிற்கும் போற்றுதற்கும் பாராட்டுதற்குமுரிய முதுநிலை விரிவுரையாளர் அருட்கலைமாமணி, சித்தாந்த பண்டிதர், வாகீச கலாநிதி, சொற்பேராழி, டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன் M.A. Ph.D அவர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு நூலாகத் 'தமிழின் ஆளுமைகள்' என்னுமிந்நூல் வெளியிடப்படுகிறது. மணிவிழாவையொட்டி வெளியிடப் படும் இந்நூல் காலத்துக்குக் காலம் ஆசிரியரால் எழுதப்பட்ட கட்டுரைகளின் அருங்களஞ்சிய மெனலாம்.

கலாநிதி க. நாகேஸ்வரன் அவர்கள் நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயத்திலும், நயினாதீவு மகாவித்தியாலயத்திலும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கல்வியைக் கற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர். முத்தமிழிலும் பாண்டித்தியமும் திறமையும் கொண்ட வாகீச கலாநிதி தமிழிலே புலமையும் வித்துவமுங் கொண்ட சான்றோர் பலரிடத்திலும் கல்வித் தொடர்புள்ளவர். வித்துவான் சி. குமாரசாமி, பண்டிதை புனிதவதி, நயினைக் கவிஞர் நா. க சண்முகநாதபிள்ளை, பண்டித வித்துவான் ப. க. குகதாசன், அதிபர் சபா. ஆனந்தர், ஆத்மஜோதி கா. முத்தையா, அறிவொளி த. சண்முகசுந்தரம், மகாஜனச் சிற்பி தெ. து. ஜெயரத்தினம், பேராசிரியர்கள் கலாநிதிகள் க.கைலாசபதி, கா. சிவத்தம்பி, அ. சண்முகதாஸ், எம். ஏ. நுஃமான், நா. சுப்பிரமணியன், கா. இந்திரபாலா, சித்திரலேகா மௌனகுரு, ஏ. ஜே. கனகரட்னா, நா. பாலகிருஷ்ணன், கா. கைலாசநாதக் குருக்கள், ப. கோபால கிருஷ்ணன், க. அருணாசலம், சபா ஜெயராசா பேராசான் சி. பத்மநாதன் ஆகியவர்களிடம் விரிவுரைகள் கேட்டவர். இலங்கை வானொலி யிலும் 'ஈழநாடு' பத்திரிகையிலும் பணியாற்றியவர். நேர்முக வர்ணனையாளர், கதாப்பிரசங்கக் கலைஞர், வானொலியில் பகுதிநேர அறிவிப்பாளர் என்று இன்றும் கலைப்பணிபுரிபவர். பண்ணுடன் திருமுறைகளைப் பாடவல்ல இவர் ஒரு வில்லிசைக் கலைஞருமாவார். நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் மரபுவழி அறங்காவலர் குடும்பத்திலும் நயினை வரகவி நாகமணிப்புலவர் பரம்பரையிலும் உதித்தவர். நல்ல சமயச் சொற்பொழி வாளரான கலாநிதி நாகேஸ்வரனின் விரிவுரைகள் மாணாக்கரை ஈர்த்துப்

பிணிக்க வல்லவை. பல்கலைக்கழகத்திலே மொழிப்பீடத்திலே கற்கும் அனைத்து மாணவரின் அன்பிற்கும் பாத்திர மானவர். புலமையும் வித்துவமும் எழுத்தாற்றலுஞ் சிந்தனை வளமும் நிரம்பப் பெற்ற முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரனின் எழுத்து வளத்தை இத்தொகுதி பறைசாற்றுகிறது. இந்நூலை வெளியிடுவதில் மணிவிழாக்குழு மிகுந்த பேருவகையும் மகிழ்ச்சியும் அடைகிறது. இன்னும் பல அரிய சிந்தனை ஆழங் கொண்ட கட்டுரைகளை எழுத வேண்டுமெனவும், வெகுவிரைவில் தமிழ்ப் பேராசிரியர் என்ற பதவியுயர்வினைப் பெற்றுத் தமிழ்த் தொண்டாற்ற வேண்டுமெனவும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

மொழித்துறை<br>
சப்ரகமுவ பல்கலைக்கழகம்<br>
பெலிகுல்லோயா

அன்புடன்<br>
***எஸ். வை. ஸ்ரீதர்***<br>
பதிப்பாசிரியர்<br>
மணிவிழாக்குழு<br>
14.03.2013

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| அணிந்துரை | | v |
| முன்னுரை | | vii |
| பதிப்புரை | | viii |
| 1. | நாவலர் பெருமான் வாழ்ந்த காலமும் அவரது தீரமிக்க பணிகளும் | 1 |
| 2. | மேடைநாடக முன்னோடி சங்கரதாஸ் சுவாமிகள் | 20 |
| 3. | பொன்றாப் புகழ்படைத்த சேர் பொன். இராமநாதன் | 23 |
| 4. | கலாயோகி ஆனந்த குமாரசாமியின் கலைக் கோட்பாடுகள் | 29 |
| 5. | முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள் | 46 |
| 6. | தமிழ்த் தூதர், பேராசிரியர் வண. தனிநாயக அடிகள் | 51 |
| 7. | 'செஞ்சொற்கொண்டல்' சிங்கார வேலன் அவர்கள் | 56 |
| 8. | பக்கம் சாராத திறனாய்வாளர்கள் | 69 |
| 9. | ஏழாலையும் ஈழத்திலக்கிய வித்துவப்புலமை நெறியும் | 73 |

**பின்னிணைப்புகள்**

| | | |
|---|---|---|
| I. | 'மதுரகவி' காரை முருகேசு பாலசிங்கம் அருளானந்தன் | 102 |
| II. | பேராசிரியர் இ.க. வைத்திலிங்கம் நந்தகுமார் | 117 |
| III. | விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி | 121 |
| IV. | 'ஆசிரியமணி' ச. விநாயகரத்தினம் | 134 |

1

# நாவலர் பெருமான் வாழ்ந்த காலமும் அவரது தீரமிக்க பணிகளும்

## நாவலர் வாழ்ந்த காலச் சூழ்நிலை

> முதலில் போர்த்துக்கீசரும் பின்னர் டச்சுக்காரரும் அதன் பின்னர் ஆங்கிலேயருமாக சுமார் இருநூற்றாண்டுகள் இலங்கை அந்நியர் வசமிருந்தது. அரசியற் பொருளாதார ஆதிக்கத்தின் உள்விளைவாகக் கலாசார வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. அந்நிய ஏகாதிபத்தியத்தின் தவிர்க்க முடியாத விளைவான சகல தீமைகளும் தலைவிரித்தாடின. நிலப் பிரபுத்துவ சமுதாய அமைப்பு நிலவியது. அதனைக் குலைக்க விரும்பவில்லை ஆங்கிலேயர். ஆயினும் சமூகத்தில் நிலவிய அந்த கார இருட்டு சமயத்துறையில் மிகத் தெளிவாகத் தன்னைக் காட்டிக் கொண்டது. தொன்றுதொட்டுச் சமயம் மக்கள் வாழ்க்கையில் முக்கிய மான ஒரு ஸ்தானத்தை வகித்துவந்த சமுதாயத்திலே சமயத்துறையில் ஏற்பட்ட சலனங்களே பிற இலக்கியங்களுக்கு முன்னோடிகளாக இருந்ததில் வியப்பெதுவுமில்லை. நாவலர் கருவியாக அமைந்த அக்காலச் சமய சீர்திருத்த இயக்கமானது தமிழ்மக்களிடையே ஏற்படத் தொடங்கிய முதல் விழிப்பின் தோற்றமாகும்.[1]

தூய வாழ்க்கை வாழ்ந்த நாவலர் பெருமான் சாதாரண மனிதருக்கு ஏற்படும் இன்பதுன்பங்களினாலே பாதிக்கப்பட்டிருக்கிறார். அன்றைய மனிதனைக் குழப்பிய பிரச்சினைகள் அவரையும் உலுப்பினர். தம்மைச் சுற்றி நடந்த போலி வாழ்க்கையைக் கண்டு நொந்தார்; வெறுத்தார்; நடிப்புச் சைவசமயிகளைக் கண்டார்; அதைப்போலவே ஏமாற்றிப் பிழைக்கும் போலிக் கிறிஸ்தவர்களையும் கண்டார்; இந்த நிலைகெட்ட மனிதரின் அவலத்தைக் கண்டு நெஞ்சு பொறுக்காமல் நாவலர் எழுதினார்; பேசினார்; இந்நிலையை மாற்றவும் முயன்றார்.

> பாதிரிமார் யாழ்ப்பாணத்துக்கு வராவிடின் நாவலராற்றிய அரும் பெரும் பணிகள் நிகழ்தற்குத் தருணமெழுந்திராது[2]

> உண்மையை நோக்குமிடத்து பதினான்கு வருடக் கிறிஸ்தவ சூழலே நாவலரை நமக்குத் தந்தது. ஆபிரிக்க தேசமே காந்தியை மகாத்மா ஆக்கியது. பதினான்கு வருடக் கிறிஸ்தவ சூழல் அமையாதிருந்தால் ஆறுமுகநாவலர் என்றொருவர் யாழ்ப்பாணத்தில் இல்லை.[3]

எனத் தனக்கேயுரிய நடையிற் பண்டிதமணி எழுதியுள்ளார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியிலும் இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலும் செல்வாக்குடன் இயங்கிய சமய மறுமலர்ச்சியின் பின்னணியிலேயே நாவலரை நாம் நோக்குதல் வேண்டும். குறிப்பாக, நாவலரைப் பொறுத்தவரை இந்தியாவின் பல பகுதிகளிலும் பரவிய சமய எழுச்சியின் பிரிக்க இயலாத ஓர் உறுப்பாகவே அவரைக் கொள்ள வேண்டும். கீழைத்தேச நாடுகள் பலவற்றிலும் அந்நியராட்சிக்கு எதிராகக் கிளம்பிய முதற் குரல் சமயத்துறையிலேயே கேட்டது. அதாவது இந்தியா, இலங்கை முதலிய நாடுகளிலே தேசியத்தின் முதல் தோற்றத்தைச் சமய, கலாசாரத் துறைகளிலே காணக் கூடியதாயுள்ளது.

நாவலரவர்கள் பேசியவையும், எழுதியவையும் கண்டித்தவையும், விமர்சித்தவையும் நூறாண்டுகளுக்கும் மேலாகியும் இன்றும் தமிழினத்தின் கூர்த்த கவனிப்புக்குள்ளனவாகவே உள்ளன. சாதி பற்றியும், சமயம் பற்றியும், நீதி பற்றியும், ஆலயங்கள், ஆலய அறங்காவலர்கள், சமூகம் பற்றியன வெல்லாம் அப்பழுக்கற்ற பேருண்மைகள் என்பதனையும் நாம் நன்குணர்தல் வேண்டும். நாவலரவர்களது சீர்திருத்தக் கருத்துகள் என்றும் நமது சைவ உலகிற்குப் பெரிதும் பொருந்துவன. அவரது முன்மாதிரிகள் கூர்த்த நுண்ணறிவினராலே கடைப்பிடிக்க வேண்டியவை.

சமயத் துறையில் எம்மவர்க்கு விழிப்பேற்படுவதற்கு ஆங்கிலக் கல்வி முக்கியமான காரணமாயிருந்தது. சமஸ்கிருதம், தமிழ், பாளி முதலிய மொழிகளில் புதைந்து கிடந்த பழைய செல்வங்களை முதலிலே கண்டுபிடித்து அவற்றுக்குப் புத்துயிரளித்தவர்களிற் பெரும்பாலானோர் ஆங்கிலக் கல்வியின் பயனைப் பெற்றவர்களும் அதனால் ஓரளவு சமுதாயத்திற் செல்வாக்குடன் விளங்கியவர்களுமேயாவர். இவர்கள் ஆங்கிலக் கல்வியின் மூலமாகவே தமது பாரம்பரியச் சிறப்பை அறிந்தனர். சமய/ சைவ அடிப்படையிலேயே பழமைக்கும் தமக்கும் தொடர்பை நிறுவிக் கொண்டனர். அதைப் போலவே சமயத்தின் அடிப்படையிலே சமூக ஒருமைப்பாட்டை உண்டாக்க முற்பட்டனர். இப்போக்கினை இலங்கையின் பிரதான சமூகங்கள் மூன்றிலும் காணலாம். ஆறுமுகநாவலர், சித்திலெவ்வை, அநகாரிக தர்மபாலர் ஆகிய மூவரையும் எடுத்துக்கொண்டால் தமிழ், முஸ்லிம், சிங்களச் சமூகங்களையே

முறையே சைவம், இஸ்லாம், பௌத்தம் ஆகிய சமயங்களின் அடிப்படையில் ஒற்றுமைப்படுத்தி மேம்படுத்த இவர்கள் விழைந்தனர் என்பது தெளிவாகும்.

> 'Nationalism was thus founded on the bedrock of common religion, cuture and historical tradition' என எழுதுகிறார் மஜூம்தார்.

> சமயம், கலாசாரம் வழிவழி வரும் மரபு ஆகிய மூன்றினை இங்கு குறிப்பிடுகிறார் ஆசிரியர். கிறித்தவம் முதலிலே எதிர்ப்பட்டு நின்ற பொழுது இறையியல், ஒழுக்கவியல் என்பனவற்றிலேயே முரண் பாடுகள் தோன்றின. ஆயினும் நாளடைவிலே வாழ்க்கையின் பல் வேறு அம்சங்களிலும் முரண்பாடுகள் முனைப்பாய்த் தோன்றின. ஊண், குடிவகைகள், ஆடை, மொழி, இசை போன்றவற்றிலெல்லாம் கிறித்தவம் பிரத்தியேகமான வழக்காறுகளையும், பழக்கவழக்கங் களையும் கொண்டதாயிருந்தது. இதனாலேயே கிறித்தவத்துக்கும் சைவத்துக்கும் நிகழ்ந்த பலப்பரீட்சையில் மதக்கோட்பாடுகள் மாத்திரம் பிரச்சினைக்குரியனவாய் இருக்கவில்லை. மக்களின் முழு வாழ்க்கை முறையும் மத அடிப்படையிலே நோக்கப்பட்டது[4]

மதமாறிக் கிறித்தவத்தைத் தழுவியவர்கள் அந்நியப்பட்டு விடுகிறார்கள் என்பதற்காகவே, மீட்டும் அவர்களை வைதிக சமயத்தில் சேர்த்துக்கொள்ளும் முயற்சியும் இந்துக்களால் கைக்கொள்ளப்பட்டது. நாவலரும் இத்தகைய கைங்கரியத்தைச் சில சந்தர்ப்பங்களில் செய்திருக்கிறார். இக்கருத்துகள் இன்றும், எம் சைவத் தமிழ் மக்களது சிந்தனையிலே உறைப்பாகவே இருக்க வேண்டிய கருத்துகளாகும். இன்று லண்டன், கனடா, அவுஸ்திரேலியா, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க், நோர்வே, நெதர்லாந்து, நியூஸிலாந்து என்னும் நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து ஈழத்திலிருந்து சென்று வாழுவோர் அனைவரது சிந்தனைகளிலும் நாவலரவர்களது போதனைகள் முன்னிற்க வேண்டும் என்பது எமது வேணவா; எக்காலத்துக்கும் பொருத்த மான பேருண்மைகளை நாவலர் பெருமான் சமய, கல்வி, பண்பாட்டு, விழுமிய இலட்சியங்களாகவே விட்டுச் சென்றுள்ளார். இக்கருத்தை எவருமே மறுத்தலரிது; நிராகரிக்க முடியாது.

> கறல் விசுவநாதபிள்ளை என்னும் பிரசித்திபெற்ற கிறித்தவத் தமிழறிஞர் நாவலரது செல்வாக்கினால், சைவசமயமே உண்மையான சமயமென்று உணர்ந்து பச்சாத்தாபமுற்றுச் சிதம்பரத்துக்குப் போய்த் தாம் செய்த சிவதூஷணங்களுக்குப் பரிகாரமாகப் பொன்னூசி காய்ச்சித் தமது நாவைச் சுடுவித்துக் கொண்டு சைவரானார்.[5]

இன்னும் சில பிறவிச் சைவர்கள் தங்கச் சிலுவை தரித்தும், ஞானஸ்நானம் பெற்றும், ஆண் குறியை அறுத்தும் கிறித்தவத்திலும், இஸ்லாத்திலும் மதம் மாறித் திணறி வாழ்வது நீங்கள் அனைவரும் அறிந்த சங்கதியே.

> எதிரிமீது தாக்கும்பொழுதும் தம்மிடையேயுள்ள துரோகிகளை அம்பலப்படுத்தும்பொழுதும் நாவலரின் வலிமைமிக்க கண்டனப் பிரசங்கங்களும், பிரசுரங்களும் அசுரவேகத்தில் வெளிவந்தன. 18 ஆம் நூற்றாண்டின் தலையாய கண்டனவாதி சிவஞான முனிவர் எனக் கொண்டால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கண்டனவாதி நாவலர் என்பதிற் சந்தேகமிருக்க முடியாது. 'யாழ்ப் பாணச் சமயநிலை', 'சைவதூஷண பரிகாரம்', 'சப்பிர போதம்', 'மித்தியாவாத நிரசனம்', 'போலி அருட்பா மறுப்பு', 'விவிலிய குஞ்சிதம்' ஆகியன நாவலர் வெளியிட்ட கண்டனப் பிரசுரங்கள் சில. நாவலரைப் பின்பற்றிச் சண்டமாருதம் போல எண்ணற்ற கண்டனநூல்களை அவர் மாணாக்கரும் பிறரும் எழுதினர். சி. வை. தாமோதரம்பிள்ளை, சங்கர பண்டிதர், நா. கதிரைவேற்பிள்ளை, சபாபதி நாவலர் ஆகியோர் நாவலர் மரபிற் குறிப்பிடத்தக்கவர்கள். மேனாட்டினம் ஏற்படுத்திய விழிப்பின் காரணமாய் நாவலர் தொடக்கிய சமயச் சீர்திருத்தம், சபாபதி நாவலர் காலத்திலே கண்மூடித் தனமான பழமைப் பித்தாக மாறுவதையும் நாம் காணலாம்.[6]

என்றும் கைலாசபதி விமர்சித்துள்ளமை கருதத்தக்கது; சிந்தனைக்குரியது.

வைரம் பாய்ந்த வைதிகப்பற்றுடன் சமயத்துறையில் விடாப்பிடியாக உழைத்த நாவலர், சமூகத்துறையில் தமது கவனத்தைச் செலுத்தியபொழுது, மக்கள் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடைய பிரச்சினைகளில் முன் னின்றுழைத்தார். உணவு, சுகாதாரம், உழைப்பு, கல்வி, ஆட்சிமுறை முதலிய எல்லோரையும் பாதிப்பவை. இத்துறைகளிலே ஆங்கிலேயர் ஆட்சியிற் காணப்பட்ட அநீதிகளையும், அபத்தங்களையும் ஆன்மவீரர்களுக்குரிய இலட்சியப் பிடியுடனும், கண்டிப்புடனும் வெளிப்படுத்தினார். சுகாதாரம், ஆட்சிமுறை போன்றவை காரணமாகவே துவையினத்துரையுடன் மோதினார். 'வெகுசனம்' என்னும் சொற்றொடரை நாவலர் அன்றைய வரலாற்றுச் சூழலில் பரந்தபொருளிலே பிரக்ஞைபூர்வமாகவே பயன்படுத்தினார் என்பது மனங்கொளத்தக்கது.

'வெகுசனத் துரோகம்' என்ற சொற்றொடரையும் நாவலர் வழங்கி யிருக்கிறார். நாவலர் தாய்மொழியில் அரசியல் பேசினார்; எழுதினார். இதனால் தமிழ்மொழியும் வளமடைந்தது. சமகாலத்தினர் ஆங்கிலத்திலேயே அரசியலையும் பேசினர். 'வெகுசனத் துரோகம்', 'திக்கற்ற ஏழைகள்'

முதலியன பிற்காலத்தில் வேகமும் வலுவும் பெற்ற அரசியற் தொடர்களாகப் பரிணமித்ததையும் எண்ணிப் பார்த்தல் வேண்டும். இது விஷயத்தில் பின் வந்த திரு வி. க. போன்றோருக்கு நாவலர் வழிகாட்டியாக விளங்கினார் என்றும் கூறலாம்.

சமயவாதியாகிய நாவலரை அரசியல், பொருளாதார, சமூகத் துறைகளில் ஆழ்ந்த அக்கறை கொள்ள வைத்த வரலாற்று நிகழ்வுகளில் ஒன்று ஈசுர வருஷத்தில் (1877) யாழ்ப்பாணத்திலே உண்டான கொடிய பஞ்சமாகும். பஞ்சத்துடன் கொள்ளை நோயும் சேர்ந்து சொல்லொணாத் துன்பம் விளைத்தன. இப்பஞ்சம் பற்றி அக்காலத்தையொட்டி வெளிவந்த வரலாற்று நூல் ஒன்றில உருக்கமான விவரணம் காணப்படுகிறது. ஜோன் (John) என்பவர் 1882 இல் வெளியிட்ட யாழ்ப்பாணச் சரித்திரம் மேல்வருமாறு கூறும்.

> பஞ்சமும் இதுவே. சமயம் என்று அஞ்சல் இன்றி அகோரமாய்ப் பரந்தது அகவிலை மிக விலையாயிற்று. மனுஷர் பெரும்பாலும் என்பு ரூபிகளாயினர். அனேகரிற் கங்காளம் எண்ணிக் கணக்கிடத் தக்கதாக இருந்தது. தீவார் தங்கள் உதரக்கனிகளை விற்று உணவு கொள்ள முயன்றனர். இறந்து, காட்டோரமாகக் கிடந்த நாட்டான் ஒருவனுடலை அங்கதேசனஞ் செய்து பரீட்சை பண்ணியபோது, இரைப்பைக்குட் புற்கற்றை காணப்பட்டதாமே! பஞ்சத்தின் விஞ்சிய கொடுமை இதாற் தெளிவாகின்றது. சனோபகாரிகள் இதைக் கண்டு வண்ணார்பண்ணையிற் கஞ்சித்தொட்டியொன்றுண்டாக்கிப் பஞ்சப் பட்டவர்களுக்குக் கஞ்சி காச்சியூற்றினார்கள். அக்காலத்திலே பஞ்சப் பட்ட மக்களுக்கு வண்ணார்பண்ணையிற் கஞ்சித்தொட்டி உண்டாக் கியது நாவலரின் நற்பணிகளில் ஒன்றாக அமைந்தது.[7]
>
> வட இலங்கையிலே வைதிக சமயப் பாதுகாவலராக வாழ்க்கையை ஆரம்பித்த நாவலர், படிப்படியாகப் பரிணமித்து, 'மதுவிலக்கு' பற்றிய இக்கூற்றிலே, 'இலங்கைச் சனங்கள்' என்று தேசமுழுவதையும் மனங்கொண்டு பேசுவதைக் கேட்கிறோம். இதுவே தேசியத்தின் பரிணாம வளர்ச்சியுமாகும். இதன் வெளிப்பாட்டை 'விவசாயம்' பற்றிய பிறிதொரு குறிப்பிலும் காணலாம்.[8]

நாவலர் பெருமான் சைவத்தின் காவலர் மட்டுமன்று; சமயவாதியாய்த் தொடங்கித் தேசியவாதியாய் முகிழ்ந்த நாவலர் செயல் வீரராவார்.

> 1877 இல் பஞ்சம் ஏற்பட்டபொழுது தர்மசிந்தனையுடன் கஞ்சித் தொட்டி உண்டாக்கியதோடு அமையாது, 'யாழ்ப்பாணம் - மட்டக்

> களப்பு வர்த்தக வேளாண் சங்கம்' என ஒரு நிறுவனத்தையும் தொடங்குவதற்கு முன்னின்றுழைத்தார். சங்கத்தின் கொள்கைகளை ஊக்குவிப்பதற்காகவே தாம் இரண்டாயிரம் ரூபாவுக்கு, இருநூறு பங்குகள் வாங்கிக் கூட்டுமுயற்சியை வளர்க்க முனைந்தார். இவ் வாறே கந்தளாய் நிலத் திருத்தச் சட்டத்திலும் அதிக அக்கறை கொண் டிருந்தார் நாவலர். இவை யாவும் நாவலரது கண்ணோட்டமும் காட்சிகளும் அக்கறைகளும் அகன்று விசாலித்து விரிவடைந்து கொண்டே சென்றமையை எமக்குக் காட்டுகின்றன. இது தேசியத்தின் பிரிவு என்றும் கூறலாம்.[9]
>
> நாவலர் வழிவரும் தேசியம் இச்சமயத்தில் நமக்கு வழிகாட்டக்கூடிய தாகும்.[10]

நாவலர் பெருமான் புதிதாகச் செய்த முயற்சிகள் அவரது பெருநோக்கத் துக்கு ஏதுக்களாகவே கருதப்பட்டன என்பன நினைவில் நிறுத்த வேண்டியது. இவற்றின் மூலம்,

> சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையே'' தன்னை இருபது வருடகாலம் இரவும் பகலும் தொண்டாற்றச் செய்தது என்று சைவ சமயிகளுக்கு விக்கியாபனம் (1868) என்னும கட்டுரையில் எழுதி யுள்ளார்.[11]

## நாவலரின் விவேகமும் நுண்மாண் நுழைபுலமும்

தமிழ்மக்கள் செய்த தவத்தின் பயனாக அவதரித்த மகாபுருஷர் நாவலர் பெருமான். சைவமும் தமிழும் தன் இரு கண்கள் எனப் போற்றியவர். மக்களுக்கு மத்தியில் ஒழுக்க வாழ்வை நெறிப்படுத்துவதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்தவர். எமது மக்களை மேன்மைப்படுத்துவதற்காக அல்லும் பகலும் உழைத்தவர். ஒரு பெரிய நிறுவனம் செய்ய முடியாதவற்றைத் தனியொரு மனிதனாக நின்று சாதித்தவர். தனிமனித இயக்கமாக நின்று தமிழுக்கும், சைவத்திற்கும் பணி செய்த பெருமகன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள். அவரில்லையேல் சைவம் ஈழத்தில் அழிந்திருக்கும். தமிழகத்தில் சிதைந்திருக்கும்; தமிழ்வளம் குன்றியிருக்கும். இலங்கையில் தமிழுக்கும் சைவத்துக்கும் ஏற்படவிருந்த பேராபத்தைத் தடுத்து அவை மீண்டும் புத்துயிர் பெறச் செய்த கர்மயோகி நாவலரவர்கள். ஆன்மிகம், பண்பாடு, இலக்கியம், சமூகம், கல்வி, மொழி எனப் பல துறைகளிலும் அவர் புரிந்த தொண்டுகள் பன்முகப்பட்டன. நாவலர் வரலாற்று நாயகர்; தேசியப் பெரியார்;

சைவத்தின் காவலர். இலக்கண இலக்கியங்களிலும் சைவசித்தாந்த சாத்திரங் களிலும் பரந்த அறிவினையும் சைவப்பிரசங்க வல்லமையையும் கொண்டிருந்தார். சிவ தீட்ஷையை மேற்கொண்டு அவைகளில் சிறிதும் தவறாது ஒழுகியவர்; சாதனையாளர்; நைட்டிகப் பிரமச்சாரி; சைவசமய உண்மைகளை எளிய இனிய நடையில் எடுத்துரைக்கும், எழுதும். சொல் லாற்றலில் வல்லவர். சைவமாம் சமயம் சாரும் புண்ணியமுடையவர். வாழும் வாழ்க்கை முறைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர். ஈழத்திலும், தமிழ கத்திலும் சைவத்துறை விளங்கப் பணியாற்றிய தனிச்சிறப்பு இவருக் குரியது. நாவலரவர்கள் எழுதிய பால பாடங்கள் இளைஞர் உள்ளங்களில் நல்லொழுக்கத்தையும் ஈசுர பக்தியையும் உறுதியாகப் பதியச் செய்வன. அஞ்சாநெஞ்சுடன் இலட்சியப் பணிபுரிந்த உத்தமர் நாவலர் பெருமான். ஏட்டுப் பிரதிகளாயிருந்த பழந் தமிழ்ப் படைப்புகளை அச்சுவாகனமேற்றி, விளக்கவுரைகள் எழுதி வெளி யிட்டு, பாடசாலைகளை ஸ்தாபித்து, பிரசுரங் களை வெளியிட்டுத் தமிழுக்கு எழுச்சியூட்டியவர் நாவலர். அவர் ஒரு பெரும் சிவபக்தர். சிவநெறி குன்றிப் போவதைச் சகிக்காமல் அதன் உண்மை களை விளக்கி நிலைநாட்டினார்.

கிறித்தவ சமயத்தை அவர் நிந்திக்கவில்லை. ஆனால் அச்சமயத்தின் உண்மைகளை விளங்கிக் கொள்ளாதவர்கள் விலைகொடுத்து, மதமாற்றஞ் செய்ய முற்பட்டதையே அவர் கண்டித்தார். பேர்சிவல் பாதிரியாரோடு கிறித்தவ வேதநூலாகிய விவிலியமெனப்படும் 'பைபிளை'ச் செந்தமிழ் மொழியில் மொழிபெயர்த்துதவியவர் நாவலர் பெருமான். தமிழ் உரை நடையின் தந்தை நாவலர் பெருமான்; நாவலர் ஒரு மகான்; அவர் ஒரு மேதாவி; தீர்க்கதரிசி.

> யாழ்ப்பாணத்து ஆறுமுநாவலரவர்கள் ஒரு அவதார புருஷர். இடை யிருட்கடைக் காலத்தில் விடியுமுன் விசும்பில் விளங்கும் வெள்ளி போலத் தமிழகத்தில் தளரும் சைவமும், தமிழும், தழைய, அவ்விரண் டிற்கும் புத்துயிர் வழங்கப் பிறந்த வள்ளலாவார்.[12]

என எழுதுகிறார் சோமசுந்தர பாரதியார்.

### நாவலரின் கல்விப்பணி

1848 ஆம் ஆண்டு மாணாக்கர்களுக்குத் தமிழ்க்கல்வியும், சமயக்கல்வியும் கற்பிக்கும் நோக்கத்தோடு அவரது வீட்டின் திண்ணையிலே தொடக்கப்பட்ட பாடசாலையே சைவப்பிரகாச வித்தியாசாலை தோன்றுவதற்கு ஆரம்பமாக

அமைந்தது. இப்பாடசாலையின் பெயரே நாவலது நோக்கத்தினை வெளிப் படுத்துகிறது. சைவப்பிள்ளைகள் படிப்பதற்கென இப்பாடசாலையை நாவலர் தொடக்க வேண்டிய சமுதாயத் தேவை அக்காலத்தில் இருந்தது. தமது கல்வித் தொண்டினை விஸ்தரிக்கும் நோக்கத்தோடு 1864 ஆம் வருடம் யாழ்ப்பாண மக்கள் உபசரித்த பொருளுடன் சிதம்பரத்தில் ஒரு சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். அத்தோடு சைவப்பிள்ளைகள் படிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக 1872 ஆம் ஆண்டு ஓர் ஆங்கிலப் பாட சாலையை வண்ணார்பண்ணையில் நிறுவியபோதும் பொருளாதார வசதி யின்மையால் இரண்டு ஆண்டுகளின் பின்னர் அப்பாடசாலையை மூட வேண்டிய நிலைமை உண்டாகியது. நாவலர் நிறுவிய இவ்வாங்கில வித்தியா சாலையே இன்றைய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு வழிவகுத்தது. கிறித்தவருக்கு எதிராக நாவலர் ஆரம்பித்த இயக்கத்திலேயே அவரது கல்வித் தொண்டு முக்கிய இடத்தை வகித்துள்ளமை அவரது வரலாற்றைப் படிப் போருக்குப் புலனாகாமற் போகாது.

> நாவலரை அவரது களத்தில், காலத்தில் வைத்தே மதிப்பிடல் வேண்டும். அவரது களம் சமய - பண்பாட்டு - மரபுக்களமாகும். சமயப் பண்பாட்டு மரபுகளைப் பரப்புவதையும் பேணுவதையும் புதுக்குவதையுமே தமது கல்விப் பணிகளின் முழுமுதல் நோக்கமாக வளர்த்துக் கொண்டவர் நாவலர்.[13]

> சமயச் சூழலிலே இளம்பிள்ளைகளுக்கு கல்வி பயிற்ற வேண்டும் என்னும் வேட்கை நாவலருக்கு இருந்தது. அவ்வேட்கையின் வெளிப் பாடே அவர் நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசாலைகள்.[14]

சமய ஆசாரங்களையும் சமய தத்துவங்களையும் உணர்த்தி, சமயாபி மானத்தையும் பற்றையும் ஊட்டுவதே நாவலரது கல்விக் கொள்கைக்கு அடிப்படை. 'கல்வியலும் சமயமே அதிகம்' என்பது அவர் தம் கோட்பாடு. நாவலரது தலையாய பணியாகக் கல்விப்பணி அமைந்தது. தமிழறிந்தவர்கள் தமக்குத் தெரிந்தவற்றைப் பிறருக்குக் கற்பிப்பதில் விருப்பமற்றவர்களாக இருந்தனர். நாவலர் காலத்துத் தமிழ்க் கல்வியின் நிலையைத் த. கைலாச பிள்ளை மேல்வருமாறு கூறுகிறார்:

> நமது சமயம் தப்பியிருந்தது போல தமிழ்ப் பாஷையுந் தப்பி யிருந்தது. இங்கிலீசு அரசு வந்த பின்னரும் அனேக தமிழ்ப் பண்டி தர்கள் இங்கே இருந்திருக்கிறார்கள். அவர்கள் நச்சினார்க்கினியர், பரிமேலழகர், சிவஞான முனிவர் போன்ற திறமையுடையவரல்ல ராயினும் தமிழ்ப் பாஷையிலே மிகவும் பாண்டித்தியம் உடைய

> வர்கள். ஆயினும் இவருட் சிலர் தாம் கற்றதைத் தம் பிள்ளைகளுக்குத் தானும் சொல்லிக் கொடுக்கமாட்டார்கள். சிலர் பிறரிடத்தே ஏடுகளை வாங்கித் தம் பிரதி செய்துகொண்டு பாட ஏட்டை இயன்றளவு பிழைபடுத்திவிட்டுக் கொடுப்பார்கள். ஒரு வித்துவான் தான் கற்குங் காலத்தில் எழுதிய சில நூற்குறிப்புகள் மரணிக்குங் காலத்தில் தமக்கு முன்னே கொண்டு வந்து கட்டுப்போட வேண்டும் என்று சொல்லிச் கட்டுவித்து அதன்பின்னர், தம் உயிர் போகப் பெற்றார். இப்படிப்பட்ட காலமே ஆறுமுகநாவலர் பிறந்த காலம்.[15]

சைவசாத்திர சாரங்களான பாடநூல்களை எழுதுவதையும் அவற்றை அச் சிட்டு வெளியிடுவதையும் தமது கல்விப் பணியின் கூறுகளாகக் கொண்டவர் நாவலர். பாடசாலைகளைத் தரம்பிரித்து அமைப்பதும் அவர் நோக்கமாயிற்று. 'எண்ணக்கருவளர்ச்சி பற்றிய பூரண உணர்வுடன் நாவலர் தாம் எழுதிய நூல்களையும் பதிப்பித்த நூல்களையும் வெளியிட்டார் என்பது மெய். மக்கள் மொழியாகிய பழகு தமிழ் உருவாவதற்கு ஒரு முன்னோடியாக விளங்கியவர் நாவலர். இலக்கண நெறி சார்ந்த ஒரு புதுவகை வசனநடையை நாவலர் தாமாகவே உருவாக்கிக் கொண்டார். திரிசொற்களை அதிகம் கையாளாமல் இயற் சொற்களையே பெரிதும் கையாண்டார். குறிய வசனங்களையும் நெடிய வசனங்களையும் தேவை நோக்கிப் பிரயோகித்தார். 'நாவலர் ஒளித்து மறைத்துச் சொல்லத் தெரியாதவர்'. நாவலரது சொற்கள் உணர்ச்சி மயமாகத் தொழிற்படும் பொழுது அவற்றில் வேகம் மிகுந்திருக்கும்; சூடு பிறந்து விடும். நிறுத்தற் குறியீடுகளின் பயன்பாட்டை வரையறுத்து அக்கு றிகளைத் தமிழ் வழக்குடன் இணைத்து வைத்தமையும் நாவலரின் மொழிப் பணிகளுள் ஒன்று.

> யாழ்ப்பாணத்திலே ஏற்பட்ட சைவசமய விழிப்புணர்சிக்கும் அச் சமய வளர்ச்சிக்குக் கருவியாகிய வித்தியாசாலைகளது தாபிதத்திற்கும் காரணகர்த்தா ஆறுமுகநாவலரே. கோப்பாய் போதனா பாடசாலை யிலும், அதன் தொடர்பான திருநெல்வேலி சைவ ஆசிரிய கலா சாலையிலும் கற்றுத் தேறிய பலர், நாவலர் வழியில் கல்வித் தொண்டாற்றினர். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையை இக்காலத்த வருள் முதல்வராகக் கொள்ளலாம். சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றும் எண்ணம் நாவலராலேயே சைவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இவ்வெண்ணம் நாவலர் காலத்திலே அரும்பி வளர்ந்த போதும் அவர் பரம்பரையினரால் நன்கு வளர்க்கப்பட்டது. சைவப் பள்ளிக்கூடங்களான பரமேஸ்வராக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி ஆகியவற்றின் தாபகராகிய சேர். பொன். இராமநாதன்,

மகாஜனக் கல்லூரி நிறுவனர் பாவலர் துரையப்பாபிள்ளை ஆகியோர் இவ் வரிசையில் அடங்குவர்.[16]

**நாவலரின் இலக்கியப் பணி**

நாவலரின் இலக்கியக் கொள்கை, கோட்பாடுகள் பற்றித் துல்லியமாக அறிய வேண்டுமாயின் அவரெழுதிய நான்காம் பாலபாடத்திலுள்ள 'தமிழ் புலமை' என்னும் வியாசத்தில் இடம்பெறும் கருத்துகள் ஊன்றிக் கவனிக்கப்படத் தக்கவை. நாவலர் எழுதுகிறார்.

> திருவள்ளுவர் குறள்; நாலடியார் முதலாகிய நீதி நூல்களைப் பதப் பொருளுடனே கற்றறிந்து கொள்க. தேவாரம், திருவாசகம், திரு விசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் அருட்பாக்களைப் பண்ணுடன் ஓதவும் சுத்தாங்கமாக ஓதவும் பழகிக் கொள்க. பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்தபுராணம், உபதேசக் காண்டம், கோயிற்புராணம், சேதுபுராணம், பதினோராந் திருமுறையிற் பிரபந்தங்கள், குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த பிரபந்தங்கள் முதலாகிய இலக்கியங்களை ஆராய்ந்தறிக. திரு வள்ளுவர் குறள் பரிமேலழகருரை, திருச்சிற்றம்பலக்கோவையார், நச்சினார்க்கினியருரை, கல்லாடம் நச்சினார்க்கினியருரை என்பன வற்றைக் கற்று இடைவிடாது பலராலும் உளங்கொளப் பயிலுக. இலக்கணங்களைக் கற்றறிந்து தாம் கற்ற இலக்கியங்களில் இவ்விலக் கணங்களை அமைத்துப் பழகுக.[17]

நாவலரவர்களது இலக்கிய நோக்கை மட்டுமன்றி அவரது கல்விக் கொள்கை யையும் தெளிவுபடுத்தும் வகையில் அமைந்த இம்மேற்கோட் பந்தியில் புராணங்களைப் பற்றிக் கூறுகின்ற பகுதியில் அவற்றை 'இலக்கியங்கள்' எனச் சிறப்பித்திருப்பதும் கவனிக்கத்தக்கதே. 'கல்வி கேள்விகள் இல்லாதவர்கள் கடவுளை அறிந்து வழிபட்டு உய்யமாட்டார்கள்' என்று கல்விக்கே குறிக்கோள் கூறியவர் நாவலர். நாவலர் சீவகசிந்தாமணி போன்ற சமணச் சார்புடைய காவியத்தைப் போற்றத் தவறவில்லை. அந்நூலை அவரே பதிப்பிக்கவும் எண்ணியிருந்தார்' தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதி முனைந்தவர் நாவலரவர்கள்.

நாவலரவர்களைச் 'சாதிமான்' என்று எள்ளி நகையாடி ஏளனமாகவும் சுட்டுவோர் இன்றும் வாழ்கின்றனர். இப்பண்பின் காரணமாகவே நாவலரைத் 'தீண்டத் தகாதவர்' என்று ஒதுக்கிய அறிஞர்களும் தமிழரிலுள்ளனர். இவ்வாறு கொண்டமையால் பிறப்பினாலல்லாது தம்மையும் 'உயர் சாதியினர்' என்று

எண்ணி மகிழ்வோரும் உளர். எது எவ்வாறாயினும், நாவலரவர்கள் உயர் சாதியினரது ஏகப் பிரதிநிதியாக விளங்கினார். அவர் சாதி பற்றிய தமது கருத்தை மாற்றிக்கொள்ளவில்லை. முதலாம் சைவவினாவிடையில், 'எவர் களிடத்திலே போசனம் பண்ணலாகாது' என்ற வினாவுக்குப் பதிலாக, ''தாழ்ந்த சாதியாரிடத்திலும் போசனம் பண்ணலாகாது'' எனவும், நான்காம் பாலபாடத்தில் 'நல்லொழுக்கம்' என்னும் கட்டுரையிலே, 'தீண்டத்தகாத சாதிமாரையும்.. தீண்டினாலும் உடுத்த வஸ்திரத்துடனே ஸ்நானஞ் செய்தல் வேண்டும் எனவும் 'தேவாலய தரிசனம்' என்னும் கட்டுரையிலே, 'திருக் கோயிலுள்ளே போவதற்கு யோக்கியர்களல்லாத சாதியார்கள்... போன்றவை இளஞ் சந்த‌ததியினருக்குச் சாதி பற்றிய அறிவினைப் புகட்டும் தன்மை வாய்ந்தன. சாதி உண்டா இல்லையா என்பதனை அவரவரே தீர்மானித்துக் கொள்க.

நாவலரது இலக்கியப் பணிக்குள் அவர் எழுதி வெளியிட்ட நூல் களையும் அச்சிற் பதிப்பித்த நூல்களையும் குறிப்பிடுதல் பொருந்துவதாகும். ஆண்டு வாரியாகவே அவை இங்கு நோக்கப்படுகின்றன.

1849 : **சூடாமணி நிகண்டு உரை, சௌந்தர்யலஹரி உரை.**

1850/51 : **முதலாம், இரண்டாம், நான்காம் பாலபாடங்களும் நீதி நூல்களும் அச்சிடல்.**

1851 : **திருச்செந்தினிரோட்டக யமக அந்தாதி உரை.**

1851 (அச்.): **நன்னூல் விருத்தியுரை, சிவாலய தரிசன விதி.**

1852 : **பெரியபுராண வசனம்**

1853 : **திருமுருகாற்றுப்படை உரை.**

1854 : **சைவதூஷண பரிகாரம், சுப்பிரபோதம், வச்சிரதண்டம்.**

1859 : **திருவாசக மூலம், திருக்கோவையார் மூலம்.**

1860 : **திருக்கோவையார் உரை.**

1861 : **திருக்குறள் பரிமேலழகர் உரை, தருக்க சங்கிரகம் அன்ன பட்டீயம் உரை, கந்தபுராண வசனம்.**

1864 : **திருவிளையாடற் புராண வசனம், சேது புராணம், இலக்கண விளக்கச் சூறாவளி.**

| | | |
|---|---|---|
| 1866 | : | **தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கணக் கொத்து அச்சிடல், அருட்பா பதிப்பு** (அகத்தியர் தேவாரத் திரட்டு, திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணச் செய்யுட் திரட்டுத் தொகுப்பு) |
| 1867 | : | **சிதம்பர மும்மணிக் கோவை, அருணகிரிநாதர் திருவகுப்புப்** பதிப்பித்தல். |
| 1868 | : | **கோயிற்புராண உரை, சைவசமய நெறியுரை.** |
| 1869 | : | **11 ஆந் திருமுறை பதிப்பித்தல், கந்தபுராணம் அச்சிடல்.** |
| 1872 | : | **யாழ்ப்பாணச் சமயநிலை, திருக்கேதீச்சர ஆலய விண்ணப்பம்.** |
| 1873 | : | **சைவவினாவிடை** முதற்புத்தகம். |
| 1875 | : | **திருவிளையாடற்புராணம், நன்னூற் காண்டிகையுரை, நன்னூல் விருத்தியுரை திருத்தி வெளியிடல்.** |

நாவலர், பிழை எனக் கண்டவற்றை அஞ்சாது எடுத்துரைக்க வல்லவர். நூல்கள் மூலம் சைவ உண்மைகளையும், சீர்திருத்தக் கருத்துகளையும் கண்டனங்களையும் எழுதி வெளியிட்டார். இத்தொடர்பில் இன்றுங் காணப் படும் குறைபாடுகள் பலவற்றையும் குறிப்பிட்டுப் பேராசிரியர் சி. தில்லை நாதன் அவர்கள் எழுதும் கருத்துகள் நமது சிந்தனைக்குரியனவாகின்றன.

> சைவ மக்கள் ஒழுங்கும் கட்டுப்பாடும் குறைந்தவர்கள் என்று கூறப் படுவதுண்டு. தமிழ் நாட்டிலும் சரி, இலங்கையிலும் சரி, பல கோவில் களின் வீதிகளிலேயே எச்சில் உமிழ்தல், மூக்குச் சிந்துதல், மலசலம் கழித்தல் போன்றவை நிகழும். அத்தகைய சீர்கேடுகளைத் திருத்தவும் நாவலர் முயன்றார். திருவள்ளுவர் வாழ்ந்து சுமார் இரண்டாயிரம் வருடங்களின் பின் எங்கே எச்சில் உமிழ்வது, எங்கே மலசலம் கழிப்பது, எப்படி உடம்பைச் சுத்தமாக வைத்திருப்பது, எப்படி உண்பது, எப்படி உடுப்பது, எப்படிச் சிரிப்பது, ஏன் பல் துலக்க வேண்டும், களவும், பொய்யும், கொலையும் சூதும் ஏன் ஒழிக்கப்பட வேண்டும் என்பன போன்ற விடயங்கள் விளக்க வேண்டியிருக்கிற தென்றால் சீர்திருத்த முயற்சிகள் எவ்வளவுதூரம் பயனளிக்கவல்லவை என்பதனையும் எண்ணிப்பார்க்க வேண்டும். எப்படியாயினும், நாவலர் சளைக்காமல் அத்தகைய விடயங்களை வற்புறுத்தியும் வாழ்க்கையைச் சீர்திருத்தப் பணியாற்றினார்.[18]

அறிஞர்கள் மனங்களிலும் ஏட்டுச்சுவடிகளிலும் இருந்த அரிய தமிழ் நூல்களை அச்சுவாகனம் ஏற்றி அவை செல்லுக்கிரையாகி அழிந்துபோகாது காத்த பெருமை ஆறுமுகநாவலரையே சாரும். 'நாவலர் பதிப்பு' என்றால் 'சுத்தப்பதிப்பு' என்ற புகழும் பெருமையும் இன்றுவரை ஈழத்திலும் இந்தியா விலும் நிலவுகின்றன.

ஆறுமுகநாவலருக்கு ஏட்டு முறையினை மாற்றி புத்தக முறையினைக் கையாளுவதில் விருப்பம் இருந்தது. அதேநேரத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிராகத் துண்டுப் பிரசுரங்களையும் கண்டனங்களையும் வெளியிடவும் அவர் விரும்பினார். ஆயினும் இதற்கு சைவர்களிடம் அச்சியந்திரம் இல்லாதது ஒரு பெருந்தடையாக இருந்தது. கிறிஸ்தவ அச்சுக்கூடத்தில் சைவ சம்பந்தமான புத்தகங்களை அச்சிட முடியாதிருந்தது. அதிலும் நாவலர் புத்தகமானால் அச்சுக்கூடத்தில் கடமையாற்றுவோர் தொடவும் மாட்டார்கள். எனவே, சொந்தமாக ஓர் அச்சகம் இக்காலத்திலே தேவையாயிருந்தது. இதனை உணர்ந்த நாவலர் 1849 ஆம் ஆண்டு அச்சுக்கூடம் வாங்கி வித்தி யானுபாலன யந்திரசாலை என்று பெயர் சூட்டி வண்ணார்பண்ணையிலே தாபித்தார். இவ்வச்சியந்திரசாலையிலே தன்னால் இயற்றப்பட்ட நூல் களையும், ஏட்டிலிருந்த பரிசோதித்த நூல்களையும் அச்சிட்டு வெளிப் படுத்தினார். நாவலர் காலத்திலே இந்தியாவிற் சில நூல்கள் அச்சுவாகனம் ஏறின. ஆனால் அவை இலக்கண இலக்கியப் பிழைகளும், அச்சுப் பிழைகளும் நிரம்பியனவாய் விளங்கின. அவை மட்டுமன்றி இலக்கண, இலக்கியப் பிழைகளும் காணப்பட்டன. பல பிழைகளோடு பதிக்கப்பட்ட நூல்களே அக்காலத்தில் வழக்கிலிருந்தன. நாவலர் ஏட்டிலிருந்த நூல்களைப் பதிப்பிக்கத் தொடங்கியதும் அச்சுப்பிழைகளும், இலக்கண இலக்கியப் பிழைகளும் அகற்றப்பட்டுச் 'சுத்தப் பதிப்பு' வெளிவரலாயிற்று.

நாவலரவர்கள் வாழ்ந்த காலப்பகுதியிலே பத்திரிகைகள் வெகுஜனத் தொடர்பூடகங்களாக இயங்கின. மக்களுக்கு வேண்டிய பல விடய தானங்கள் இச்சஞ்சிகைகளிலும் எழுதப்பட்டன.

| | |
|---|---|
| **உதயதாரகை** | (1841) |
| **இலங்காபிமானி** | (1864) |
| **இலங்கை காவலன்** | (1868) |
| **புதினாபதி** | (1870) |
| **புதினாலங்காரி** | (1873) |
| **கத்தோலிக்க பாதுகாவலன்** | **(1876)** |

| | |
|---|---|
| **இலங்கை நேசன்** | **(1877)** |
| **சைவ உதயபானு** | **(1880)** |
| **சன்மார்க்க போதினி** | **(1885)** |
| **இலங்கை தினவர்த்த மானி** | **(1886)** |
| **இந்து சாதனம்** | **(1889)** |

எனும் பத்திரிகைகள் இருந்தன.

**நாவலரின் சமயப்பணி**

பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் நாவலரது சமயப்பணி குறித்து எழுதியுள்ளமை கவனிக்கத்தக்கது. மேற்கோள் வருமாறு:

> நாவலராற்றிய பணி சைவத்துடன் மட்டுமே தொடர்புபெற்றது. வைதிகப் பின்னணியில் விளங்குவது. அவர் பேணிக் காத்த சைவம் 'வைதிக சைவம்' என அவர் பரம்பரையினர் ஒப்புவர். அப்பணி யினை அவர் தீவிரமாக ஆற்றிய வேளை அது பன்முகப் பட்டுப் பல அமிசங்களாக விரிந்தது. சமயிகளிடையே சமய அறிவைப் பெருக்கினார். புறச் சமயத்தவர் பரப்பிய விஷமக் கருத்துகளைக் கண்டித்தார். இவ்விரண்டையும் திறம்படச் செய்வதற்காகவே நல்ல நூல்களை எழுதித் தாமே அச்சிட்டு வெளியிட்டார். தமக்கென ஒரு வசனநடையினைத் தோற்றுவித்தார். பிற சமயத்தவரின் பொய்ப் பிரசாரத்தைக் கண்டித்தார். சமய உபந்நியாசங்களை நிகழ்த்தினார். புராணபடன மரபினை ஊக்கமாக வளர்த்தார். சமய அடிப்படையில் கல்வி வழங்க வித்தியாசாலைகளை நிறுவினார். மாணவர்களுக்குரிய நூல்களை எழுதி வெளியிட்டார். நாவலர் தனியனாக நின்று உழைத்த அளவிற்குப் பலர் இணைந்து ஒருமித்துக் கடமையாற்றும் நிறுவனங்கள் கூட இதுவரை செயலாற்றியதில்லை.[19]

நாவலரின் சமயப்பணி குறித்து எழுதிய இக்கட்டுரையாசிரியரின் நல்லா சிரியரும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் உப அதிபரும் சிந்தனையாளருமான, அறிவொளி, மாவை. த. சண்முகசுந்தரம் அவர்கள் மேல்வருமாறு கூறுவார்:

> நாவலர் கண்ணகி வழிபாட்டையும் நல்லூரில் இடம்பெற்று வந்த வேல் வழிபாட்டையும் கண்டித்தார். வேதாகம முறைக்கு முரண் பாடானவற்றைக் கண்டித்தல் நாவலர் நோக்கு.

என்றும்,

தமிழ்நாட்டிலுள்ள ஆதீனங்களுக்கும் நாவலருக்கும் தொடர்பு ஏற்பட்டது. இந்தத் தொடர்பினால் ஆதீனங்களே நன்மை பெற்றன எனக் கொள்ளலாம். திருவண்ணாமலை, திருவாவடுதுறை போன்ற ஆதீனங்கள் நிறுவன அடிப்படையில் கட்டுக்கோப்புடன் இயங்கின. அவை திருவருளையும் தமிழறிவையும் பெற முயன்றன. நாவலரோ திருவருளையும் தமிழ் அறிவையும் ஒருங்கே பெற்ற நடமாடும் பெரும் ஆதீனம். நாவலரின் அறிவு தமக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காகத் திருவாவடுதுறையாதீனம் அவரைத் தனதாக்க முயன்றது. ஆதீனத்திலும் பார்க்கப் பரந்த ஒரு சமூகம் தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் இருப்பதை நாவலர் அறிந்தார். இந்தச் சமூகத்தின் விழிப் புணர்வே நாவலரின் குறிக்கோள். மேலும் நாவலரின் தனித்தன்மை புகழ்பெற்றது. அவரை எவரும் 'ஒரு எல்லைக்குள் நில்' எனப் பணிக்க முடியாது.[20]

சைவசமயத்திலிருப்பதற்கான தகைமைகள் பற்றி நாவலர் கூறுவதாவது:

சிவபெருமானைச் சிவாகம விதிப்படி வழிபடத் தகுதியுடையவர் களாக ஆக்குவது சிவதீக்ஷை ஆகும்.[21]

சிவதீக்ஷை பெற்றவனே சைவனாவான்.[22]

சைவர்களால் நியமமாக ஓதப்படுவதற்குரிய மூலமந்திரம் ஸ்ரீ பஞ்சா ஷரம் ஆகும்.[23]

மதுபானம், மாமிச போசனம், ஆசாரம், சிவதீக்ஷை ஆகிய ஒழுக்கம் உடைய யோக்கியர்களே ஸ்ரீ பஞ்சாஷரம் ஓத யோக்கியவர் களாவார்கள்.[24]

சிவதீக்ஷை பெற்றுக் குருவை அடைந்து ஸ்ரீ பஞ்சாட்ஷரத்தை ஓதல் வேண்டும்.[25]

சைவர்களால் அவசியமாகத் தரிக்கற்பாலனவாகிய சிவசின்னங்கள் விபூதியும் உருத்திராக்ஷமுமேயாகும். விபூதி தரியா நெற்றி சுடுகாடு போல்வது.[26]

உருத்திராக்ஷம் தேவர்கள் திரிபுரத்தசுரர்களாலே தங்களுக்கு நிகழ்ந்த துன்பத்தை விண்ணப்பஞ் செய்து கொண்டபொழுது திருக்கைலாச பதியினுடைய மூன்று திருக்கண்களினின்றும் பொழிந்த நீரிற்றோன்றிய மணியாகும்.[27]

(உருத்திராக்கத்தை) இதனை அணிதற்கு மதுபானம், மாமிச போச னம் போன்றன அற்றவராய் ஆசாரமுடையவர்களே யோக்கியதை உடையவர்கள்.[28]

இவ்வுருத்திராட்ஷம் சிவபெருமானுடைய திருக்கண்களிற் தோன்றுந் திருவருட்பேற்றிற்கு அறிகுறியாகும்.[29]

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் என்னும் இவைகளனைத்தும் அருட்பாக்களாகும். இவை பசுகரணம் நீங்கிச் சிவகரணம் பெற்ற நாயன்மார்களால் அருளிச் செய்தவையாதலால் பசுவாக்கென்றே தெள்ளிதிற்றுணியப்படும். இவர்கள் திருவாக்கு அருட்பாடு என்பதால் வேதத்திலும் பார்க்க இவைகளிற்றானே சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் பிரீதி அதிகம்.[30]

தெய்வத் தமிழைப் பிழை இல்லாமல் பேசுவது எழுதுவது என்பது ஒரு தவம். இந்தத் தவத்திலே சிறந்து விளங்கிய ஒரு சிரேஷ்டர் நல்லைநகர் தந்த ஆறுமுகநாவலர். இலக்கண சுத்தமாக அவர் பேசி னார். எழுத்துப்பிழைகள் இல்லாமல் அவர் நூல்களை எழுதி வெளி யிட்டார்.[31]

கல்வியுடையவர் தாங்கற்றறிந்தபடி நல்வழியிலே ஒழுகுதலும், நன்மாணாக்கர்களுக்குக் கல்வி கற்பித்தலும் எல்லாருக்கும் உறுதி யைப் போதித்தலுமாகிய இம்மூன்றையும் எந்நாளும் தமக்குக் கடனாகக் கொள்ளல் வேண்டும். இவ்வியப்புடையவரே கல்வியாகிய பயனை அடைந்தவராவார். இம்மூன்றுமில்லாதவிடத்துக் கல்வி யினாற் பயனில்லை.[32]

என்பது நாவலர் கூற்று.

சமஸ்கிருதமும் தமிழும் சிவபெருமானாலும் இருடிகளாலும் அருளிச் செய்யப்பட்ட இலக்கணநூல்களை உடைமையாலும், ஆன்றோர் களாலே தழுவப்பட்டமையாலும் தம்முள் சமத்துவமுடையனவேயாம்.[33]

என நாவலர் எழுதியுள்ளார்.

## நாவலர் பரம்பரை

'நாவலர் பரம்பரை' என்றால் என்ன? என்பது பற்றிய விளக்கத்தை பேரா சிரியர் பொ. பூலோகசிங்கம் மேல்வருமாறு விளக்கியெழுதியுள்ளார்.

நாவலர் பரம்பரையினை நோக்கும்போது இலக்கிய, இலக்கண, சாத்திரநூல் புலமை, கல்விப்பணி, நூல்வெளியீடு, சைவசமய பிர சாரம், பிறமத கண்டனம், பிரசங்க முறை, புராண படனம், அருட்பாக் கோட்பாடு என்பனவற்றை முக்கியமானவையாக இனங்காட்ட முடியும்.[34]

'வாழையடி வாழையென' நாவலர் வழி - மரபில் வந்தோரது வரிசையையும் நிரற்படுத்தினால், அது வருமாறு அமையும்:

| | |
|---|---|
| சி. சிவசங்கர பண்டிதர் | (1829 - 1870) |
| சி. வை. தாமோதரம்பிள்ளை | (1832 - 1901) |
| ந. ச. பொன்னம்பலபிள்ளை | (1836 - 1902) |
| சி. செந்திநாதையர் | (1848 - 1924) |
| சு. சபாபதி நாவலர் | (1848 - 1903) |
| அ. குமாரசுவாமிப் புலவர் | (1854 - 19220) |
| த. கைலாசபிள்ளை | (1855 - 1939) |
| ச. சபாரத்தின முதலியார் | (1858 - 1922) |
| ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை | (1858 - 1971) |
| நா. கதிரைவேற்பிள்ளை | (1871 - 1907) |
| க. சோமசுந்தரப் புலவர் | (1878 - 1953) |
| சு. சிவபாதசுந்தரம் | (1878 - 1953) |
| ச. குமாரசுவாமிக் குருக்கள் | (1886 - 1971) |
| சுவாமி விபுலானந்தர் | (1893 - 1947) |
| சி. கணபதிப்பிள்ளை | (1899 -1986) |

என்போராவர்.

நாவலரவர்கள் நாடகமெழுதும் புலமையும் வாய்க்கப் பெற்றிருந்தார் என்ற செய்தி பலருக்குத் தெரியாது. அது குறித்துப் பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் சதாசிவம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

> ஆறுமுக நாவலர் இருபது வயதிலே 1842 ஆம் ஆண்டு தந்தையின் குறைநாடகமாகிய 'இரத்தினவல்லி விலாசத்தை' முற்றுவித்தார்.[35]

> சைவமும் தமிழும் வாழவெனத் தம்மையே அர்ப்பணித்துப் பணிகள் பல புரிந்த நல்லைநகர் நாவலர் புகழ் வாழ்க!

## அடிக்குறிப்புகள்

1. கைலாசபதி, க., (2005), *நாவலர் பற்றி கைலாசபதி*, குமரன் புத்தக இல்லம், சென்னை, பக். 13-14.
2. கணபதிப்பிளளை, க., (1938), *நாவலர் நினைவுமலர்*, ப. 15.
3. கணபதிப்பிள்ளை, சி., (1968), *நாவலர்*. ப. 6.
4. கைலாசபதி, க., (2005), மு.கு.நூ., ப. 42.
5. கைலாசபிள்ளை, த., (1919), *ஆறுமுகநாவலர் சரித்திரம்*, வித்தியாநுபாலா யந்திர சாலை, சென்னை, ப. 18.
6. கைலாசபதி, க., (2005), மு.கு.நூ., ப.15-16.
7. மேலது, ப. 49.
8. மேலது, ப. 50.
9. மேலது, ப. 52.
10. *புதுமை இலக்கியம்*, ஜனவரி, 1974.
11. கைலாசபதி, க., (மு.கு.நூ., ப. 25.
12. சோமசுந்தர பாரதி, எஸ், (1938), 'தமிழகத்தை ஈழநாட்டுக்குக் கடமைப்படுத்திய பேருபகாரி', *நாவலர் விழா மலர்*, ப. 27.
13. முருகையன், இ., (1979), 'கல்வி நோக்கில் நாவலர், *நாவலர் நூற்றாண்டு மலர்*, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், பக். 17-18.
14. மேலது, ப. 18.
15. கைலாசபிள்ளை, த., (1919), *ஆறுமுகநாவலர் சரித்திரம்*, வித்தியானுபாலன யந்திர சாலை, சென்னை, ப. 3.
16. யோகேஸ்வரி கணேசலிங்கம், (2007), *நாவலர் வழியில் தமிழ் அறிஞர்*, விவேகா அச்சகம், சென்னை, ப. 95.
17. (எ+டு) கைலாசபதி, க., (1979), 'நாவலர் இலக்கிய நோக்கும் பணியும்', *நாவலர் நூற்றாண்டு மலர்*, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், பக். 52-53.
18. தில்லைநாதன், சி., (1979), 'சீர்திருத்தவாதி நாவலர்', *நாவலர் நூற்றாண்டு மலர்*, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
19. கைலாசநாதக் குருக்கள், கா., (1970), 'நாவலர் பணியின் வைதிக அடிப்படை', நாவலர் நூற்றாண்டு மலர், திருமகள் அழுத்தகம், சுன்னாகம், ப. 96.
20. சண்முகசுந்தரம், த., (1979), 'நாவலர் சமயப்பணி', *நாவலர் நூற்றாண்டு மலர்*, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

21. ஆறுமுகநாவலர், (1953), *சைவவினாவிடை இரண்டாம் புத்தகம்*, ப. 40.

22. ஆறுமுகநாவலர், (1968), *நித்திய கருமவிதி, 4 ஆம் பதிப்பு*, ப. 1.

23. ஆறுமுகநாவலர், (1953), மு.கு.நூ., ப. 67.

24. மேலது, ப. 67.

25. மேலது, ப. 68.

26. மேலது, ப. 53.

27. மேலது, ப. 57.

28. மேலது, ப. 62.

29. மேலது, ப. 66.

30. கைலாசபிள்ளை, த., (1953), *ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு*, ப. 2.

31. சிவநாயகம், எஸ்.டி., (1989), பாராட்டுரை, *பண்டிதமணி நினைவு மலர்*, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், ப. vi.

32. (எ+டு) *பண்டிதமணி நினைவு மலர்*, (1989), ப. 43.

33. மேலது, ப. 53.

34. மேலது, ப. 97.

35. சதாசிவம்பிள்ளை, (1886), பாவலர் *சரித்திர தீபகம்*, பக். 75 - 76. (எ+டு) பூலோக சிங்கம், பொ., ஈழம் தந்த நாவலர், ப. 46.

# 2

# மேடை நாடக முன்னோடி சங்கரதாஸ் சுவாமிகள்

மேடையிலே நாடகத் தமிழை வளர்த்தவர்களில் முதன்மையாகக் குறிப்பிடத் தகுந்தவர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள். இன்றை தமிழ் மேடை நாடகங் களுக்கு அடிப்படையாக விளங்கத்தக்க சில முறைமைகளை ஏற்படுத்தித் தந்தவர் என்ற வகையில் அவரை நினைவு கூர்வது அவசியமாகிறது. இவர் சுமார் 40 நாடகங்களை எழுதியுள்ளார்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் இவரை நாடக உலகின் இமயமலை என்று புகழ்ந்து குறிப்பிட்டுள்ளார். பல்லாயிரக்கணக்கான மக்களைச் சுவைக்கச் செய்த நாடகங்களை இவர் தயாரித்தளித்தார். பெரும்பாலும் புராண இதிகாசக் கதைகள் தழுவிய வகையிலேயே அக்காலத்தில் பெரும்பாலான நாடகங்கள் அமைந்தன. ஆனால் அத்தனையும் அந்நாளில் மக்களை மகிழ் வித்த நாடகங்களாகவே கணிக்கப்பட்டன. இன்றைய சில நாடகங்களைப் போலல்லாது பெண்கள், மனைவி, குழந்தைகளுடன் கூசாமல் பார்க்கத்தக்க நாடகங்களாக அவை அமைந்தன. தொழில் முறை நாடகங்கள் பலவற்றைத் தோற்றுவித்த பெருமைக்குரியவர் சங்கரதாஸ் சுவாமிகள். 1918 ஆம் ஆண்டு வாக்கில் நாடகமேடையில் பெரும்பகுதி பாடலாகவே இருந்தது. தமிழிசை வல்லலாரே நாடக நடிகர்களாக விளங்கிய காலகட்டம் அது. பாடத் தெரிய வில்லை என்றால் அந்நாளில் நாடகக் குழுவில் எவரையும் சேர்த்துக் கொள்வது வழக்கமில்லை.

நாடக மேடை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் சமாச சன்மார்க்க நாடக சபாவில் பிரதான பங்கு கொண்டு பல பிரபல்யம் மிக்க நடிகர்களை உருவாக் கியவர். எஸ்.ஜி. கிட்டப்பாவும் அதே நாடக சபையில் சுவாமிகளிடம் பயின்றவர் தாம். அவ்வை சண்முகம், சுவாமிகளைப் பற்றிப் மேல்வருமாறு எழுதியிருக்கிறார்:

தமிழ் நாடகமேடையை வளர்த்த தலைமை ஆசான் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள். மகாவித்துவான் கஞ்சிரா மான்பூண்டியாபிள்ளையின் தத்துப் புத்திரர் என்பதை உணரும் போது இசை உலகிற்கும் நாடக உலகிற்கும்

இருந்து வந்த நீண்ட காலத் தொடர்பு நமக்கு நன்கு தெரிகிறது. தமிழிசை இயக்கம் தோன்றுவதற்கு முன்பே நாடக மேடை மூலம் தமிழிசையை வளர்த்த பெரியார்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சீர்காழி அருணாசலக் கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதியார், சங்கரதாஸ் சுவாமிகள், ஏகை சிவசண்முகம்பிள்ளை முதலியோர்.

சங்கரதாஸ் சுவாமிகள் நாடகங்களுக்கு மட்டுமல்லாது தோத்திரப் பாக்களும் ஏராளமாகப் பாடியுள்ளார். 'கருப்புகாமல் கண்பாரையா' 'மதுரை நகர்க்கு வாருங்கள்' 'தாயே மீனாட்சி உன் தனயன் வேலனுக்கென்மேல் தயவுசெய்யச் சொல்லம்மா' என்ற பாடல்களைக் கோனேரி ராஜபுரம் வைத்திய நாத பகவதர் அந்நாளில் பாடிக்கொண்டிருந்ததாக மிருதங்க வித்துவான் பழனி முத்தையாப்பிள்ளை சொல்லக்கேட்டிருக்கிறேன். திருமதி கே.பி. சுந்தராம்பாள் பாடும் 'ஞானப்பழத்தைப் பிழிந்து ரசமன்பினோடு' என்ற பாடல் சங்கரதாஸரின் தண்டபாணிப் பதிகப் பாடலேயாகும். இவ்வாறு இசையரங்குகளில் பாடுவதற்குரிய சுவாமிகளின் எத்தனையோ பாடல்கள் இருக்கின்றன. அவையனைத்தும் சீரிய கருத்துக்கள் நிறைந்த உருக்கமான பக்திப் பாடல்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பக்திரச கீர்த்தனை என்னும் பெயரில் அச்சில் வெளிவந்த சுவாமிகளின் நூலுக்கு அவர்களே எழுதிய முகவுரையில் மேல்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> தற்கால இசைத் தமிழின் இலக்கண நூல் காணக் கிடைக்காதாயினும் ஆங்காங்கே சிதறிப் பல நூல்களிலும் உதாரணமாக எடுத்துக் காட்டப் பட்ட சிற்சில சூத்திரங்களையும் வாக்கியங்களையும் ஆதாரமாகக் கொண்டு இசைத் தமிழின் பாகுபாடு இத்தன்மையது எனச் சங்ககாலப் புலவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனரென்று முன்னூல் உரை யாசிரியர்கள் ஒரு வகையாக நியமித்துச் செல்கின்றனர். அந்நியமங் கொண்டு ஊகிப்பார்க்கு இசைத் தமிழுலகும் தென்படாதிராது. பதங்களென்றும் இதன் பாற்பட்டனவே யாகும். பாடல் என்பதற்குப் பொருள் தெரியாதவரும் பாடும் தலம் இது வாகையாலும் இப்படிப் பாடியதற்கு விதியென்ன என்று கேட்போரில்லாத நிலையுடைமை யினாலும் எவரும் பாடில் பல வழியிலும் வெளிப்படுத்தி, இசைத் தமிழ் என்னும் பகுதியை மிகுதியும் ஆபாசப்படுத்தலாயினர் அறி வறிந்த முதியவரும் அவைகளை அருவருத் தொழித்தனர் அன்றி அவைகளைச் சிக்கறுத்துச் செறிவுபடுத்தப் புகுதலில்லாதவராயினர். அது காரணமாக இக்காலத்தில் கீர்த்தனைகளும் பல தோன்றிச் சந்தவழுவும் தாளச் சோர்வு முடைய பாடல்கள் மலியலாயின.

சுவாமிகளின் இந்த முகவுரை அவரது இசைத் தமிழ்ப் புலமைக்கு ஒரு சான்றாகும். பாடல் மூலம் குறள் நெறியினை எடுத்துக் காட்டி மக்களுக்கு நல்வழி புகட்டும் சுவாமிகள் இறுதியில் எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி,

*சற்றுஞ் சந்தேகமில்லை குறளாகிய*
*சாத்திரமொன்றுமே போதும்*
*சர்வகலாசார ஞானந் தருமது*
*தன்னைப் படிப்பாவெப்போதும்*

என்று பாடுகிறார்.

சங்கீதத்தின் சாரத்தைப் பற்றிய சுவாமிகளின் இன்னொரு பாடலைப் பாருங்கள். '

*சங்கீத சாரமே*
*சாற்றவும் அபாரமாமே*
*அதிகதியை வகை*
*மனமதை ஒரு நிலை*
*துனிலுறவலி - நாட்டும் மதி*
*தரு நிஜமது காட்டும் கிய*
*தலமதில் அருள் கூட்டும் - ஒரு*
*சஞ்சலம் இல்லாமலோடமும்*

தமிழே சிறந்தது என்று தொடங்கும் சுவாமிகளின் மற்றொரு பாடல் தமிழ்மொழிக்குரிய சிறப்பியல்புகளையெல்லாம் உள்ளடக்கியதாகவும் பெரும் புவர்களுடைய போற்றுதலுக்கு உரியதாயும் அமைந்திருக்கிறது.

*தமிழ் தினிற் சிறந்தது*
*ஆரியத் துயர்ந்தது*
*அகத்தியனார் சிவனிடத்தில்*
*அடிசீர் மோனை எதுகை*
*தொடைசேர் தலையின் வகை*
*ஆகும் பாவினம் சந்தமா*
*விரித்தது வண்ணத் தமிழ்!*

திணை பால் காட்டும் விகுதி, சிறப்புப் பொதுப் பகுதி சேர்ந்த விதங்க ளெல்லாம் தென்மொழிக்கே தகுதி.

சுவாமிகளின் இலக்கண, இலக்கியப் புலமைக்கு இப்பாடல் சான்றா கலாம். நாடகத் துறையில் நீங்கா இடம் பெறும் அவ்வை தி.ச. சண்முகம் அவர்களுக்கு ஆசிரியராக வாழ்ந்தவர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்.

***(ஈழநாடு, 13.11.1979)***

# 3

# பொன்றாப் புகழ்படைத்த சேர் பொன். இராமநாதன்

எமது தாயகம் முடியாட்சியின் கீழான குடியேற்ற நாடாக விளங்கிய காலை, பிரிட்டிஷ் ஆட்சியின் உச்சகட்ட ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தபோது எமது தேசத்துக்காகத் தொண்டாற்றியதில் பெரும் பங்கு கொண்ட சேர். பொன்னம் பலம் இராமநாதன் அவர்களைப் பற்றிக் குறிப்பிடாமல் இருப்பின் இலங்கை யின் சரித்திரம் பூரணத்துவம் வாய்க்கப் பெற்றதாகாது. பிரிட்டிஷ் ஆதி பத்தியத்தையும் வெளிநாட்டுச் செல்வாக்கையும் எதிர்த்து இலங்கையருக் காகவும் சுதேச கலாசாரத்துக்காகவும் போராடிய தீரர் அவர்.

**சட்டசபையில் நியாயவாதம்**

இராமநாதன் அவர்கள் 1851 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி கொழும்பில் பிறந்தார். முதலில் குயீன்ஸ் அகடமியிலும் (பின்னர் இதுவே றோயல் கல்லூரியாக மாற்றம் கொண்டது) பின்னர் சென்னையிலுள்ள பிரசி டென்சி கல்லூரியிலும் கல்வி பயின்றார். 1873 ஆம் ஆண்டு கொழும்பில் நியாயவாதியாகத் தொழிலாற்றத் தொடங்கினார்.

இராமநாதன் அவர்களுடைய மாமனாரான சேர்.முத்துக் குமாரசுவாமி அவர்கள் நெடுங்காலமாக இலங்கைச் சட்டசபையிலே தமிழ்ப் பேசும் மக்களின் பிரதிநிதியாக இருந்தவர். அவருக்கு முன் அவரின் தந்தையார் ஆறுமுகத்தாபிள்ளை அங்கத்தவராய் இருந்தார். சேர். முத்துக் குமாரசுவாமி 1879 ஆம் நூற்றாண்டில் இறந்துபோக அவருடைய இடத்தில் இராமநாதன் அவர்களே இருத்தல் வேண்டுமென்று ஆறுமுகநாவலர் முதலான பெரி யோர்கள் செய்த பிரசாரத்தால் இராமநாதன் அவர்கள் இளம் வயதிலேயே சட்டசபை அங்கத்தவராயினர். அவர் 27-8-1879 இல் சட்ட சபையை அலங்கரிக்கத் தொடங்கினார். தமது 80 ஆம் வயதில் 1930 ஆம் ஆண்டில் இயற்கையெய்தும் வரை இலங்கையின் பெருந்தலைவராய் மிளிர்ந்தார்.

**வாக்குவன்மை**

எதிர்காலச் சந்ததியினரின் நன்மை கருதி உயர்நீதிமன்றம் 1820 ஆம் ஆண்டு முதற்கொண்டு மேற்கொண்ட முடிவுகளைச் சேகரித்துப் பேணிக்காத்ததுடன், அவற்றைத் தொகுத்து ''இராமநாதனின் அறிக்கைகள்'' என்ற பெயரில் வெளியிடவுஞ் செய்தார். அதன் பின்னர், இந்நாட்டின் நீதிபதிகளுக்கும், சட்டத்துறையில் பணிபுரியும் ஏனையவர்களுக்கும் மிகவும் இன்றியமை யாதவைகளாக விளங்கிவரும் ''உயர்நீதிமன்றச் சுற்றறிக்கைகள்'', ''புதிய சட்ட அறிக்கைகள்'' ஆகிய உத்தியோக பூர்வ அறிக்கைகளின் பத்திராதிபராக அவர் நியமிக்கப்பட்டார்.

கடினமாக உழைப்பதில் அவருக்கு இருந்த மன ஆற்றலும் தமது கருத்துகளை அழகுறவும் தெளிவுறவும் வன்மையுடனும் கூறுவதில் அவருக்கு இருந்த மொழியாட்சித் திறனும் அவரின் சாந்தமான குணவியல்பும் மிகக் குறுகிய காலத்தில் ஏனைய வழக்கறிஞர்கள் மத்தியில் அவரைத் திறமை மிக்கவராக்கியது. சட்டக் கல்விச் சபையின் அங்கத்துவராக இருந்த வேளை, சட்ட மாணவரின் கல்வி முறைக்கும் பரீட்சை முறைக்கும் தேவையான விரிவான திட்டத்தை முதன் முதலில் தயாரித்தவர் அவரேயாவார். சட்ட மாணவர்களுக்கான போதனை வகுப்புகளில் 1884 இல் முதன் முதலில் விரிவுரைகளையும் நடத்தினார். இராமநாதன் அவர்கள் 1892 இல் சொலி சிட்டர் ஜெனரல் பதவியை ஏற்றுக்கொண்டார். மூன்று தடவையாக பதில் அட்டோர்னி ஜெனரலாகவும் கடமையாற்றினார். 1903 ஆம் ஆண்டில் இலங்கைக்கு இராச வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டபொழுது இராமநாதன் அவர்களது பெயர் முதலாவது பட்டியலில் இடம் பெற்றிருந்தது.

**ஈழத்துக் கிளாட்ஸ்ரோன் பிரபு**

இராமநாதன் அவர்களின் சேவையைப் பாராட்டிய ஆங்கிலேய அரசாங்கம் அவருக்கு 1889 ஆம் ஆண்டில் சீ.எம்.ஜீ. என்னும் பட்டத்தையும், 1903 ஆம் ஆண்டில் கே. சீ. என்னும் பட்டத்தையும் வழங்கிற்று. அக்காலத்தில் அவரொருவரே அப்பட்டத்தைப் பெற்றவராவார்.

சட்டசபையின் சேர். பொன் இராமநாதனின் பேச்சுக்குத் தனிமதிப் பிருந்தது. ஐரோப்பியர் பலர் தமது ஓய்வு நேரங்களில் அவரின் பேச்சை நயப்பதற்காகச் சட்ட சபை மண்டபத்திற்குப் போவது வழக்கமாயிருந்தது. ஐரோப்பிய அங்கத்தவராய கிரிஸ்ரி என்பாருடன் இராமநாதன் அவர்கள் விவாதிப்பது பெரிய இலக்கிய விருந்தாய் இருந்தது என்பர். ஈழத்துக் கிளாட்ஸ்ரோன் பிரபு என்னும் பாராட்டைப் பெற்றவர் இராமநாதன்.

**தேசியத் தலைமை**

அமைப்புகள், திருத்தங்கள், மாற்றங்கள் யாவும் சேவை மனப்பான்மையுடன் செய்யப்பட்டனவாகும்.

சட்டசபைக்கு ''கல்வி பெற்ற இலங்கையருக்கு'' எனப் புதிதாக உருவாக்கப்பட்ட இடத்திற்கு 1911 இல் நடைபெற்ற தேர்தலில் டாக்டர் மாக்கரீஸ் பெர்ணாடோவுடன் போட்டியிட்டு வெற்றி பெற்ற அன்றே சேர் இராமநாதன் அவர்கள் சகல சமூக மக்களாலும் மதிக்கப்படும் ஒரு தேசியத் தலைவர் என்ற ஆகிருதியைப் பெற்றிருந்தார் என்பதற்குப் போதுமான சான்றாகும். அவர் அப்போது பெற்ற வெற்றியானது வாக்காளர்களின் பெரும்பான்மை யினராக விளங்கிய சிங்கள மக்கள் அவர் ஒரு தேசியத் தலைவருக்குரிய தகைமைகளைப் பெற்றிருந்தார் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதைத் தெற்றென எடுத்து விளக்கியுள்ளது.

சேர். பொன் இராமநாதன் அவர்கள் 50 ஆண்டுகளாகச் சட்ட சபையில் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவராயும் நியமன அங்கத்தவராயும் உத்தியோக பூர்வ அங்கத்தவராயும் இருந்தார். அத்தகைய தகுதியும் மேன்மையும் இலங்கையில் வேறெவருக்கும் எக்காலத்திலும் இருந்ததில்லை என்று கூறின் மிகையாகாது. இராமநாதன் அவர்கள் நியமன அங்கத்தவராய் இருந்த காலத்தில் 1921 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் புதுவருடக் கௌரவமாக அவருக்கு 'நைற்' பட்டம் வழங்கப்பட்டது. அன்று முதல் அவர் சேர். இராமநாதப் பிரபு ஆயினார்.

**தோற்றமும் தீட்சண்யமும்**

அறிவு, ஆற்றல், செல்வம், செல்வாக்கு, ஈகை, பெருந்தன்மை யாவும் சேர் இராமநாதன் அவர்களிடம் ஒருங்கேயமைந்திருந்தன. தங்க விக்கிரகம் போன்ற உருவம், தலையிலே தலைப்பாகை, நெற்றியிலே திருநீறும் சந்தனமும், கருணை பொழியும் கண்கள், புன்சிரிப்பு, நெஞ்சை அலங்கரிக்கும் நீண்ட உத்தரியம் ஆகியன இராமநாதன் அவர்களின் அழகுக்கு அழகு செய்தன. அவரின் அறிவும் திருவும் உருவும் எவரையும் அவருக்குப் பணிய வைத்தன.

**சமயப் பிரசாரம்**

இளமைக் காலந் தொடக்கம் இராமநாதன் அவர்களுக்கு கீழைத்தேசக் கலா சாரத்திலும் சைவசித்தாந்த நெறியிலும் பேரபிமானம் இருந்தது. அவர் சைவ

சித்தாந்த அறிவை விருத்தி செய்வதற்கு, ஆகமங்களை நன்கு பயில் வதற்கு வடமொழியைப் பயின்று அருட் பராநந்தர் என்னும் பெரியாரிடம் தம் அறிவை வளம்படுத்திக் கொண்டார். திருவாசகத்தில் அதிக பற்றுள்ளவராய் இருந்தார். அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் சைவசமய தத்துவங் களைப் பேசி அவற்றை நன்கு பரப்பினார். அமெரிக்காவில் சைவ சமயத்தைப் பரப்ப உதவி செய்தவர். 'மைவுன் பெல்பஸ்' என்னும் அமெரிக்கப் பெரியாராவர்.

**கல்வித்துறை முன்னோடி**

சேர். இராமநாதன் அவர்கள் நாட்டின் கல்வி வளர்ச்சிக்காக அரும்பெரும் தொண்டாற்றினார். சுதேச இலட்சியங்களையும் சுதேச நிறுவனங்களையும் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் பற்றி இடைவிடாது வலியுறுத்தி வந்த துடன், மேற்கத்திய நாகரிகத்தின் லோகாயுத மேற்பார்வையில் மயங்கி அவர்களின் நடையுடை பாவனைகளைக் கண்மூடித் தனமாகப் பின்பற்றக் கூடாது எனவும் எச்சரித்தார். 1904 ஆம் ஆண்டில் கேர்ணல் ஒல்கொட்டின் தலைமையில் நடைபெற்ற ஆனந்தாக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் அவர் ஆற்றிய உரை விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்குடன் அமைந்திருந்தது. ஆங்கிலத் தைப் பேசக் கற்றுக் கொண்டவர்கள் சிங்களத்தை உபயோகிப்பதை முற்றாகப் புறக்கணித்து வருவது பற்றி அவர் ஆழ்ந்த கவலை தெரிவித்தார்.

''சிங்களவர்களின் உதடுகள் சிங்களத்தைப் பேசவில்லையெனில் அதனைப் பேசுவதற்கு வேறு யார் உளர்?'' என்று அவர் பெரும் கரகோசத் தின் மத்தியில் கேட்டார். அவர் பௌத்தத்துக்கு ஆற்றிய சேவைகள் அளப் பரியன. அவரது சேவை பற்றி 'சரசவி சந்தரெச' என்ற பத்திரிகை தனது 1889 ஆம் ஆண்டு மே 28 ஆந் திகதி இதழில்,

'வெசாக் விடுமுறை' பௌத்த ஆலயங்கள் மசோதா ஆகியவை சம்பந்த மாக இராமநாதன் அவர்கள் காட்டிய அக்கறைக்காக பௌத்தர்கள் இந்நாட்டின் தேசியப் பிரிவினர் என்ற வகையில், அவருக்கு ஒப்பற்ற நன்றிக்கடன் செலுத்த வேண்டியவர்கள் ஆவர். பாளிக் கல்லூரி, சமயஞான சங்கம், ஆகியவற்றில் இவர் பௌத்த மாணவருக்குக் கூறிய தெம்பூட்டும் வார்த்தை களும் அவர் பௌத்த சமயத்துக்கு வேறு பல வகைகளிலும் பலலாற்றாலும் செய்த உதவிக்கும் அவரை இலங்கை பௌத்தர்களின் மட்டில்லா அன்புக் குரியவர் ஆக்கி விட்டது' என்று உள்ளது. இராமநாதன் அவர்களின் சேவைக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்கு அடையாளமாக சேர் எட்வின் ஆர்னோல்ட் எழுதிய 'ஆசிய ஜோதி' என்ற நூலின் மேற் பிரதியின் பக்கம்

ஒன்றை கேர்ணல் ஓல்கொட் அவருக்கு அனுப்பி வைத்தார். 'சட்ட சபையில் பௌத்த சமூகத்துக்கு அவர் ஆற்றிய பராக்கிரமமான உதவிக்காக இது அவருக்கு மிகப் பொருத்தமான ஒன்றாகும்' என்று ஓல்கொட் குறிப்பிட்டிருந்தார்.

சைவக் கல்வி இலங்கையில் எழுச்சி பெற்று விளங்கக் காலாயிருந்த வர்களுள் சேர். இராமநாதன் அவர்கள் முக்கியமானவர். இலங்கையின் பெருந் தலைவர்களில் ஒருவராகப் போற்றி மதிக்கப்பட்ட அப்பெரியார் அரசியற்றுறையில் ஆற்றிய சேவை கல்வித் துறையில் ஆற்றிய சேவையே இன்றும் எம்மிடையே நிலைத்து நிற்கிறது. கல்விப் பணிக்குப் பொது வாகவும், சைவக் கல்விக்குச் சிறப்பாகவும், அவர் செய்த சேவை ஊழியுள்ள வரை இலங்கையரால் போற்றப்படும் அளவுக்கு சிறப்புப் பெறுகின்றன. சட்டசபையில் அங்கத்தவராகக் கடமையாற்றிய வாய்ப்பினைப் பயன்படுத்தி கிறிஸ்தவ மதகுருமாருடைய சகிப்பின்மை, சைவ மாணவருக்குக் கிறிஸ்தவ தத்துவத்தைக் கட்டாய பாடமாகப் போதித்தல் ஆகிய செயல்களைக் கண்டித்து குரலெழுப்பினார். வடமாகாணக் கல்வியைப் பொறுத்த மட்டில் அரசு அக்கறையில்லாமல் இருப்பதைச் சுட்டிக்காட்டி, ஏனைய மாகாணங்களைப் போல அங்கும் ஆங்கிலப் பள்ளிகளும், ஆங்கில சுயமொழிப் பள்ளிகளும் அமைக்கப்பட வேண்டும் என வற்புறுத்தினார்.

### கல்லூரிப் பணி

பக்தி நிரம்பிய இந்துவாக விளங்கிய இராமநாதன் அவர்கள், இந்து மாணவர்கள் இந்து சமயப் புறச் சூழலிலேயே பயில்வதற்கு வசதி செய்ய வேண்டும் என்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்தார். 1913 ஆம் ஆண்டில் பெண்களுக்கான இராதநாதன் கல்லூரியையும், 1924 ஆம் ஆண்டு ஆண் களுக்கான பரமேஸ்வராக் கல்லூரியையும், மட்டுமல்லாமல் அவை என்றும் தொடர்ந்து செயலாற்றக் கூடியவாறு அவற்றுக்கு வேண்டிய சொத்துக் களையும் தர்மதானஞ் செய்து வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கனவாம்.

### பல்கலைக்கழகப் புகழ்

தமது சகோதரர் சேர். பொன்னம்பலம் அருணாசலம், தமது மைத்துனர் டாக்டர் ஆனந்த கே. குமாரசுவாமி ஆகியோருடன் சேர்ந்து இலங்கையில் பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டும் என்ற இயக்கத்தை முன்னின்று நடத்திய சேர். இராமநாதன் அவர்கள், மூன்று தசாப்தங்களின் பின்னர் 1929ஆம் ஆண்டில் அறிக்கை சமர்ப்பித்த றிடெல் பல்கலைக்கழகக் கமிஷனில்

அங்கத்தவராகப் பதவி வகித்தார். 1974 ஆம் ஆண்டில் பரமேசுவராக் கல்லூரி இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தின் மத்திய நிலையமாக்கப்பட்டது. இன்று முழுமை பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமாக உருவெடுத்துள்ளமை அவரது ஆத்மார்த்தமான சேவையை எடுத்துக் கூறுவதாயுள்ளது. 1923 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சைவ வித்தியா விருத்திச் சபையின் ஸ்தாபகத் தலைவராகவும், அச்சபை நிர்வகித்த பாட சாலைகளின் முதலாவது முகாமையாளராகவும் சேர். இராமநாதன் பணி யாற்றினார். இந்து சமயம் பற்றியும் அதன் தத்துவங்கள் பற்றியும் அவர் ஏராளமாக எழுதியுள்ளார்.

**அழியா ஆலயம்**

கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பல வாணேஸ்வரர் கோயில் பொன்னம் பல முதலியாரால் 1857ஆம் ஆண்டில் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப் பட்டது. அவர் மகனான பொன். இராமநாதனால் தென்னிந்திய திராவிடக் கட்டடச் சிற்ப முறைப்படி கருங்கல்லாற் கட்டப்பட்டு 1912 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. திராவிடக் கட்டடக் கலை வடிவுக்கு இலக்கணமாக அமைந்திருக்கும் கோவில் இதுவொன்றே.

**நீங்கா நினைவலைகள்**

ஆன்மிக அருள் பெற்ற நாயன்மார்களின் சமாதியில் வைக்கப்படுவது போலவே 1930 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆந் திகதி இறைவனடி சேர்ந்த சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் பூதவுடலும் சுன்னா கத்திலுள்ள இராமநாதன் கல்லூரி மைதானத்தில் சமாதி வைக்கப்பட்டது. கொழும்பு காலி முகத்திடல் பழைய பாராளுமன்றக் கட்டட வளவில் அவரது உருவச் சிலை நிறுவப்பட்டுள்ளது. இந்தியாவைச் சேர்ந்த பிரபல கல்வி மானும் இராஜதந்திரியுமான தி. கே. பி. எஸ் மேனன் சேர். இராமநாதன் அவர்களைப் பற்றி ஒருமுறை குறிப்பிடுகையில், அவரது நினைவு எந்த ஒரு குறிப்பிட்ட சமூகத்தினதுமோ அல்லது சாகித்தியத்தினதோ அல்ல என்றார்.

***(ஈழநாடு, வாரமலர், 25.11.1984)***

# 4

# கலாயோகி ஆனந்த குமாரசாமியின் கலைக் கோட்பாடுகள்

> இந்தியாவின் கடந்த மூவாயிரம் ஆண்டுச் சரித்திரத்தை நமது சமயம், தத்துவ சாத்திரம், கலைகள் முதலியவற்றை விளக்கும் சரித்திரத்தை ஆராயும் பொழுது இதனிற் காணப்படுவதிலும் சிறந்த இலட்சியங் களை வேறெங்கும் காணமுடியாதென்ற முடிவுக்கு வருகிறேன். இவ்வுண்மையைப் பலர் உணராதிருக்கின்றனர். தீர்க்காலோசனை செய்யாது மாற்றம் ஏற்படுத்த வேண்டுமென்ற விருப்பினால் போலும் எங்கள் பண்டை முறைகளை மாற்றப்பார்க்கிறார்கள்.

என்று எழுதியவர் கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்கள். கலாயோகியின் தீர்க்கதரிசனமிக்க கருத்துகள் இன்றும் பெரும் பயன் தரவல்லன. கண்டி தலதாமாளிகைக்குப் பக்கத்தில் கிறிஸ்தவ தேவாலயம் அமைக்கக் காணி ஒதுக்கப்பட்டபோது அச்செயலை எதிர்த்தவர் கலாயோகி ஆனந்த குமார சுவாமி அவர்கள். இவ்வெதிர்ப்பு மதக் காழ்ப்பினாலல்லாது 'பொருத்த மற்ற இடம்' என்பதால் எழுந்ததென்பதை இன்றும் உணர்த்தினாலல்லது 'திருக்கேதீச்சரத்தில் புத்தர் சிலையை வைப்பதும் சாலாது' என்பது புரியும். இடப் பொருத்தமின்மையே காரணமல்லாது மதக் காழ்ப்புணர்ச்சியோ துவேஷமோ அன்று என்பதனைப் புரிந்துகொள்வதற்குக் கலாயோகியின் கோட்பாடுகளைப் பலரும் அறிய வேண்டும்; படிக்க வேண்டும்.

கல்வி, கனிப்பொருளாராய்ச்சி, கலைக் கோட்பாட்டு விளக்கங்கள் செய்தல், இந்திய இந்தோனேசியக் கலைகள் பற்றிய ஆய்வு, பௌத்தம் பற்றிய ஆராய்ச்சி, தத்துவ ஆராய்ச்சி, சிவதாண்டவ விளக்கம், இலங்கை இந்திய உறவுகள், கீழைத்தேய மேலைத்தேய வாழ்க்கை முறையும் பண் பாட்டு வேறுபாடுகளும் என்றின்னோரன்ன விடயங்களிலே மிகவும் நுட்ப மான கருத்துகளை வெளியிட்டவர் கலாயோகி ஆனந்த குமாரசாமி என்னும் தமிழர். இலங்கைத் தமிழ்ச் சுடர்மணிகளுள் விதந்து குறிப்பிடத்தக்கவர் கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள்.

**தோற்றம்**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சேர். குமாரசுவாமி முத்துக்குமார சுவாமி (1834-1879) இலங்கையின் புகழ்பெற்ற தமிழ்த் தலைவர். இலங்கைச் சட்ட நிரூபண சபையில் தமிழர் பிரதிநிதியாக விளங்கியதுடன் பல நூல்களை எழுதிய அறிஞராகவும், சமூக அக்கறை கொண்ட மனிதராயும் காணப் பட்டவர். இவர் இங்கிலாந்தைச் சேர்ந்த எலிசபெத் பீபி என்பவரை 1875 இல் திருமணம் செய்தார். இவர்களுக்கு ஒரேயொரு குழந்தையாக ஆனந்த ஹென்றிக் குமாரசுவாமி பிறந்தார். இவரது நாமத்தில் மூன்று பெயர்கள் இருப்பதைக் காணலாம். கடைசியிலுள்ள குமாரசுவாமி என்பது தகப்பனாரின் குடும்பப் பெயர். நடுவிலுள்ள 'கென்றிஷ்' என்பது தாயின் தொடர்பைக் குறிக்கும். தாய் பிரிட்டனிலுள்ள கென்ற் பகுதியில் தோன்றியவர். 'ஆனந்த' என்பதுதான் சிறப்புப் பெயராகக் கொள்ளலாம். 'ஆனந்த' என்பது புத்தரின் பிரதம சீடரின் பெயரைக் குறிக்கும். ஆனால் 'ஆனந்த' என்பது இந்துக் களாலும் கொள்ளப்படுவதாகும். சத் + சித் + ஆனந்தம் = சச்சிதானந்தம். 'ஆனந்தமய பகவான்' என்பது சர்வ உலகத்திற்கும் விபூதியால் மகிமை காட்டிய பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் பெயர் வடிவமுமாம். கலா யோகியின் தகப்பனார் 04.05.1879 அன்று அகால மரணமடைந்தார். லேடி குமாரசுவாமி 27 ஆவது வயதில் தமது கணவனை இழந்து 88 ஆண்டுகள் வாழ்ந்தும் மறுவிவாகஞ் செய்ய விரும்பவில்லை. ஒரு ஐரோப்பிய மாது இப்படியிருப்பது அபூர்வம்; அதிசயம்; அற்புதம். லேடி முத்துக்குமார சுவாமியின் சகோதரியே ஆனந்த குமாரசுவாமிக்கு ஆரம்பக் கல்வியைக் கொடுத்து வந்தார். இரு சகோதரிகளும் விஞ்ஞானத் துறையில் ஈடுபாடுடைய வர்களாய் சில விஞ்ஞானப் புத்தகங்களைப் பெற்றப் படித்ததோடு விஞ் ஞானப் பரிசோதனைகளிலும் ஈடுபட்டனர். ஆனந்தனையும் ஈடுபடுத்தினர். அப்படிப் பரிசோதனைகள் நிகழும் பொழுது பாதுகாப்புக்காக ஆனந்தனைத் தூரத்தேயிருந்து இவற்றைப் பார்வையிடும்படி எச்சரிக்கையுடன் இருந்தனர். இப்பெண்கள் தாவர போசனத்தையே உண்டு வந்தனர். இவர்கள் ஆன்மிகத் துறையிலும், ஆவி உலக ஆராய்ச்சியிலும் நாட்டமுடையவர்களாயுமிருந்தனர்.

**கல்வி வளம்**

ஆனந்தகுமாரசுவாமி 12 ஆம் வயதில், 1889 ஆம் ஆண்டில் 'விக்ளிவ்' (Wycliffe) கல்லூரியில் சேர்க்கப்பட்டார். இக்கல்லூரியைத் தேர்ந்தெடுத்ததன் முக்கிய காரணம் அங்கு தாவர போசனம் கிடைத்ததேயாகும். அவர்

கல்லூரியில் விஞ்ஞான பாடங்களையே பிரதான பாடங்களாகக் கற்று வந்தார். ஆனால் தாயார் இவற்றோடு கிரேக்க, லத்தீன் பாஷைகளையும் கற்கும்படி செய்தார். 'உனக்குப் பிற்காலத்தில் இப்பாஷைகள் தேவைப்படும். அப்பொழுது இவற்றைக் கற்றது பற்றி மகிழ்ச்சி அடைவாய்' என்றார் தாயார். ஆனந்தகுமாரசுவாமி பிற்கால வாழ்க்கையில் மெய்ஞ்ஞானத்தைப் பற்றி ஆராய்ந்தபொழுது இப்பாஷைகள் அவருக்கு உபயோகமாக இருந்தன.

கல்லூரி வாழ்வில் இவர் சிறந்த மாணவராகக் கருதப்பட்டார். முதலில் 1892 ஆம் ஆண்டில் 'மொனிற்றராகவும்' (Monitor) அடுத்தாண்டில் prefect ஆகவும் நியமிக்கப்பட்டார். இப்படியான பதவிகளில் இருப்பவர்களுக்கு நிர்வாகப் பொறுப்பும் கொடுக்கப்படும். இவர் விளையாட்டுத்துறையிலும் சிறந்து விளங்கினார். கால்பந்து விளையாட்டில் இவர் கல்லூரிக் கோஷ்டியில் ஒருவராகவிருந்து, கல்லூரிக்காக விளையாடினார். கல்லூரியில் தாவர சாத்திரத்தையும், புவிச் சரித்திர சாத்திரத்தையும் விசேட பாடங்களாகக் கற்றார். கல்லூரியின் வெளிக்களக் குழுத் (foeld club) தலைவராக நியமிக்கப்பட்டார். கல்லூரிச் சுற்றாடலிலுள்ள நிலங்களையும் இடங்களையும் ஆராய்ந்து அபூர்வமான கற்களையும் உயிர்ச் சுவடுகளையும் சேகரித்து, கல்லூரி நூதன சாலையில் வைத்தார். விஞ்ஞான ஆராய்ச்சியில் இவருக்கிருந்த ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் கல்லூரிப் பகுதியிலிருந்த பிரதேசத்தை ஆராயும்படி கல்லூரி அதிபர் பணித்தார். இந்த ஆராய்ச்சியின் முடிவுகள் 'ஸ்ரார்' என்னும் கல்லூரிச் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டன. களவேலையில் இக்காலத்தில் இவர் பெற்ற அனுபவம் பிற்காலத்தில் இலங்கையில் உலோக ஆராய்ச்சியில் ஈடுபட்டபொழுது பிரயோசனமாயிருந்தது. 'மிருகக்கொலை' தேவையற்றது. நன்மை பயக்காது; பிழையானது என்னும் கொள்கையுடையவர்.

ஆனந்த குமாரசுவாமி 1894 ஆம் ஆண்டில் இலண்டன் மற்றிக்குலேஷன் பரீட்சையில் முதலாம் பிரிவில் சித்தியெய்தினார். மறுபடியும் லண்டன் விக்ளிங் கல்லூரியில் சேர்ந்து படித்து இலண்டன் 'இன்றர் ஆட்ஸ் பரீட் சையில்' சித்தியெய்தினார். இதன்பின் இலண்டன் சர்வகலாசாலையிற் சேர்ந்து தாவர சாத்திரத்தையும், புவிச் சரித்திர சாத்திரத்தையும் கற்று வந்தார். 'இன்ரர் சயன்ஸ்' வகுப்பில் படிக்கும்பொழுது முதலாம் தவணையிலேயே பல தங்கப் பதக்கங்களையும் வெள்ளிப் பதக்கங்களையும் பரிசாகப் பெற்றார். 1900 ஆம் ஆண்டில் பி. எஸ். சி. பரீட்சையில் திறமையான (First Class Honours) சித்தி பெற்றார். 1903 ஆம் ஆண்டில் இலண்டன் சர்வகலாசாலைக் கல்லூரியின் அங்கத்தவரானார். (Fellow University College – London) இதனைத் தொடர்ந்து 1904 ஆம் ஆண்டில் இலண்டன் சர்வகலாசாலை அங்கத்தவ

ரானார். இக்காலத்தில் ஆனந்த குமாரசுவாமி இலங்கையில் கனிப்பொருள் ஆராய்ச்சியிலும் புவிச்சரித்திர ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருந்தார். ஆனந்த குமாரசுாமி கல்வித்துறையில் பெற்ற பேறுகளுக்கெல்லாம் சிகரமாய் அமைந்தது, இவர் 1905 இல் இலண்டன் சர்வகலாசாலையில் புவிச் சரித்திரத் துறையில் ஆற்றிய ஆராய்ச்சிக்காகக் கொடுக்கப்பட்டது.

**இலங்கையில் கனிப்பொருள் ஆராய்ச்சி**

ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் 1903 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இலங் கைக் கனிப்பொருள் ஆராய்ச்சிப் பகுதிக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். இதற்கு முன்பே இவர் இலங்கைப் புவிச்சரித்திர (Geology) ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். 1900 ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் 'இலங்கைப் பாறைகளும் காரீயமும்' என்னும் பொருள் பற்றி இலண்டன் புவிச்சரித்திர சங்கத்தின் சஞ்சிகைக்கு ஒரு கட்டுரை எழுதினார்.

1902 ஆம் ஆண்டு ஆவணி மாதம் இலங்கையில் காணப்படும் சுண்ணாம்புக் கற்கள் என்னும் பொருள் பற்றி ஒரு கட்டுரை சமர்ப்பித்தார். 1902 செப்ரம்பர் மாதத்தில் (Belfast) பெல்பாஸ்ட் என்னுமிடத்தில் நடந்த, பிரிட்டன், விஞ்ஞான சங்கக் கூட்டத்தில் 'இலங்கையின் இயற்கைக் காட்சிகள்' என்னும் பொருள் பற்றி ஒரு கட்டுரை படித்தார். 1904 ஆம் ஆண்டறிக்கையில் இலங்கையில் பாளங்களிலிருந்து இரும்பு எடுக்கும் முறையை விரிவாகக் கூறியுள்ளார். இந்தியாவைப் போல் இலங்கையிலும் இரும்பின் உபயோகம் பண்டைக்காலம் தொடங்கி இருந்து வந்திருக்கிறது. பலாங்கொடையில் பாளங்களைக் காய்ச்சி இரும்பு எடுக்கும் முறையும் அளுத்நுவரையில் உருக்குத் தயார் செய்யும் முறையும் மேற்படி அறிக்கையில் விவரிக்கப் பட்டுள்ளன. பலாங்கொடையும் அளுத்நுவரையும் பாரம்பரியத் தமிழர் பிரதேசங்களில் அமைந்த இடங்களல்ல என்பதனையும் நினைவு படுத்த வேண்டிய தேவை இன்றைய ஆய்வாளர்களுக்கும் சொல்ல வேண்டி யேயுள்ளது. ஆய்விலே நேர்மையைக் கடைப்பிடித்ததுடன் பாரபட்சம், பிரதேசவாதம், இனவாதம் என்பன கலக்காத தமிழாய்வாளர் ஆனந்தகுமார சாமியவர்கள். ஆனந்த குமாரசாமியவர்கள் தோரியனைற் (Thorinite) என்னும் ஒரு புதுக் கனிப்பொருளை 1904 இல் கண்டுபிடித்தார். இதுபோன்ற கண்டு பிடிப்புக்களே இவருக்கு இலண்டன் சர்வகலாசாலையிலிருந்து விஞ்ஞானத் துறையில் டாக்டர் பட்டம் பெறுவதற்கு உதவியாயிருந்தன. கொழும்பு நூதனசாலையில் ஒரு பகுதியில் இலங்கையில் காணப்படும் கனிப்பொருள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

**துடிப்பான கலையார்வ ஈடுபாடு**

1815 ஆம் ஆண்டில் கண்டிப் பிரதேசத்தை ஆங்கிலேயர் கைப்பற்றியதற்கு முன்னும் பின்னும் ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலையில் பல கட்டிடங்கள் பாழடைந்தன. இப்படிப் பாழடைந்து வரும் கட்டிடங்களில் விலை மதிக்க வொண்ணாத சுவர் ஓவியங்களைக் கண்டார். ஓவியங்கள் விழாது காப்பாற்று வதற்கு 1905 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி 'ஒப்சேவர்' பத்திரிகையில் கண்டிப் பிரதேசத்திலுள்ள பிரமுகர்களுக்கு (Kandyan Chiefs) ஒரு பகிரங்கக் கடிதம் எழுதினார். இக்கடிதமே ஆனந்தகுமாரசுவாமி கலை பற்றி எழுதிய முதற் கட்டுரை எனக் கொள்ளலாம். அநேக சுவர் ஓவியங்களின் தனித்தன்மை புனருத்தாரணம் செய்பவரால் பங்கப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டியுள்ளார். போதிய அறிவின்மையினாலும், சரியான வர்ணங்களை உபயோகிக்காத படியினாலுமே இவ்விளைவு ஏற்பட்டுள்ளதெனக் குறிப் பிட்டுள்ளார். 1904 இல் அநகாரிக தர்மபாலரும், கேணல் ஒல்கொல்டும் இலங்கைச் சமூகத்தை விழித்தெழச் செய்யும் முயற்சியாக ஆரம்பித்த இலங்கை சமூக சீர்திருத்தச் சபை இயக்கங்களுக்குத் தமது ஆதரவை ஆனந்த குமாரசுவாமி கொடுத்தார். இக்காலத்தில் கலை சம்பந்தமான விஷயங்களிலும் மொழி, சமூகம் சம்பந்தமான விஷயங்களிலும் நேரடியாக ஈடுபடத் தொடங்கினார். 'ஆர்மோனியம்' இந்திய சங்கீதத்துக்கு சிறப்பாகக் கர்நாடக் சங்கீதத்துக்கு பொருந்தாத வாத்தியமென்பது ஆனந்தகுமாரசுவாமியவர்களின் கருத்து.

சிங்கள மக்கள் மேல்நாட்டு ஆதிக்கத்துக்கு உடந்தையாயிருப்பதை 1905 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். அந்தக் காலத்தில் அரசாங்கமும் மிஷனரிமாரும் நடத்திய கல்லூரிகளில் சிங்களம் போதிக்கப்படவில்லை. அப்படிப்பட்ட கல்லூரிகளுக்கு ஏன் சிங்கள மக்கள் தங்கள் பிள்ளையை அனுப்ப வேண்டுமென்று கேட்கிறார். சிங்கள மக்கள் சம்மதமில்லாமலே எப்படித் தலதா மாளிகைக்கருகில் ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தைக் கட்ட முடியுமென்றும் கேட்கிறார். ஞாயிற்றுக் கிழமைகளில் மாலைநேரத்தில் கிறிஸ்தவ தேவாலயத்தில் நடக்கும் ஆரா தனைக்கு இடை யூறாய் இருக்குமென்பதினால் அந்நேரத்தில் தலதா மாளிகையில் நடக்கும் பூசைக்குத் தடைபோட்டிருப்பதையும் சுட்டிக்காட்டினார். இலங்கை மக்கள் அந்நியர் உடையணிவதில் அதிக மோகமுடையவராக இருப்பதைக் கண்டித்து 'இரவல் புடவை' (Borrowed plumes) என்னும் பிரசுரத்தை வெளியிட்டார். 1905 இல் 'இலங்கை சமூக சீர்திருத்தக் கலை' என்னுஞ் சபைக்கு ஆனந்த குமாரசுவாமி அவர்கள் தலைவரானார் (Ceylon

National Review) சஞ்சிகைக்கு WAD சில்வாவுடன் நெடுங்காலம் ஆசிரிய ராகவிருந்தார். சபையின் நோக்கங்கள் வருமாறு:

1. இலங்கை மக்களிடத்துக் காணப்படும் பழக்கவழக்கங்களில் வேண்டிய மாற்றங்களை ஏற்படுத்தல்: இலங்கையர் தேவையற்ற ஐரோப்பியரின் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுதலைத் தடுத்தல்.
2. இலங்கைவாழ் பல்வேறு இனங்களுக்கிடையில் நல்லெண்ணத்தை வளர்த்தல்.
3. பாளி, சமஸ்கிருதம், சிங்களம், தமிழ் முதலிய பாஷைகளையும் அவற்றிற் காணப்படும் இலக்கியங்களையும் படித்தற்கு ஊக்கு வித்தல்.
4. தேசியக் கலைகள், சாத்திரங்கள் முதலியவற்றுக்குப் புத்துயிர் கொடுத்தல்.
5. பழைய கட்டடங்களையும், கலைப் பொருட்களையும் பாதுகாப்பதற்கு உதவி செய்தல்.

ஆனந்த குமாரசுவாமி கண்டி, திருகோணமலை, யாழ்ப்பாணம் முதலிய இடங்களுக்குச் சென்று அவ்விடங்களில் சமூக சீர்திருத்தச் சபையின் கிளை களைத் தாபித்தார்.

> அவர் (ஆனந்த குமாரசுவாமி) இலங்கை மக்கள் பாராட்டுதலுக்கும் - சிறப்பாக யாழ்ப்பாண மக்களின் பாராட்டுதலுக்குமுரியவர். ஆனால் பிறப்பினால் மாத்திரம் நமது பராட்டுதலுக்குரியவரல்லர். இலங்கை மக்கள் முன்னேற்றத்திற்காக அவர் செய்துவரும் பணிகளை யாவரு மறிவர். அவர் இலங்கைக்கு வந்த காலந் தொடங்கி இலங்கை மக்களின் பொருளாதார, சமூக, கலாசார வளர்ச்சிக்காக இந்நாட்டிற் பிறந்து வளர்ந்தும் இந்நாட்டிலேயே கல்வி பயின்றும் நாட்டு மக்க ளுக்குச் சேவை செய்வதற்கு டாக்டர் குமாரசுவாமி அவர்களுக் கில்லாத பல வசதிகளிருந்தும் ஒருவிதமான சேவையும் செய்யாத இலங்கை வாசிகள் நாணும்படி தொண்டாற்றியுள்ளார். இது நாம் ஒன்றையும் ஒளிக்காதும், மறைக்காதும் கூறும் அபிப்பிராயமாகும். இந்த அபிப்பிராயமே தன்னலமற்ற சகலரின் அபிப்பிராயமுமாகும். மேனாட்டு நாகரிகத்தைப் பின்பற்றுதல் தேசாபிமானத்துக்குப் பங்கம் விளைவிப்பதோடு இலங்கை மக்கள் பொருளாதார நிலைக்கும் பங்கம் விளைப்பதாகும். சிங்களவர், தமிழர் வாழ்க்கை முறையில் மாற்றம் ஏற்பட வேண்டுமென்று முதன்முதற் பிரசாரம் செய்தவர் இவரே. (ச. அம்பிகைபாகன், 2006:24).

எம்மவர் விஞ்ஞானக் கல்வியையும் கைத்தொழிற் கல்வியையும் பெற விரும்புகின்றனர். இவை அவசியமானவையே. ஆனால் இவையெல்லாம் பண்பாடு என்னும் அத்திவாரத்திலிருந்து எழும்ப வேண்டும்

என்பார் ஆனந்த குமாரசுவாமி.

பெண் கல்வி மிக அவசியமாகும். பெண்களை அடக்கியொடுக்கி வைக்கும் வழக்கம் முகமதியர் ஆட்சியின் பின் ஏற்பட்டதாகும். பெண்களே ஒரு நாட்டின் கலாசாரத்தைக் காப்பாற்றக் கூடியவர்கள். சிறுவர் சிறுமியருக்குச் சங்கீதத்தில் நல்ல பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். எங்கள் சங்கீதத்தைக் கல்லாது மேனாட்டுச் சங்கீதத்தைக் கற்பது மிகவும் தவறான காரியமாகும். எங்கள் கல்வி முறையில் மேனாட்டு முறையிற் காணப்படாத ஒரு விசேஷ அம்சமிருக்கிறது. எம்முறை ஞாபகசக்தியை வளர்த்து மனதை ஒருவழிப்படுத்தப் பயிற்றுகிறது. இந்தக் கல்வி அம்சத்தை நாம் கைவிடக்கூடாது.

1906 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 10 ஆம் திகதி காலை 9 மணிக்கு டாக்டர் குமாசாமியவர்களுக்கு வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியா சாலையில் 'வித்தியாவிநோதன்' என்னும் பட்டம் திரு த. கைலாசபிள்ளை தலைமையில் வழங்கப்பட்டது.

1907ஆம் ஆண்டு இலங்கை சீர்திருத்தச் சபையின் ஆண்டுக் கூட்டத்தில் 'இந்தியாவும் இலங்கையும்' என்னும் பொருள் பற்றி ஆனந்த குமாரசுவாமி தலைமையுரை நிகழ்த்தினார்.

இந்திய இலங்கை உறவைப் பற்றி நான் கருதுவது மானசீக ஆத்மிக உறவையாகும். இந்த உறவை இலங்கை, ஐரோப்பாவோடு அல்லது இந்தியாவோடு வைத்திருக்கப் போகிறதா என்பது தான் கேள்வி. இன்றும் இந்தியா நமது தாய்நாடாக விருக்கப் போகிறதா அல்லது நாம் அநாதைகளாக வாழப் போகிறோமா? இந்தக் கேள்விக்கு விடை காண்பதிலேயே நமது எதிர்காலம் தங்கியிருக்கிறது. மேனாட்டுப் பழக்கவழக்கங்களைக் கண்மூடித்தனமாகக் பின்பற்று வதைத் தவிர்க்க வேண்டும். நமது பகுத்தறிவை உபயோகித்து நமது பாரம் பரியத்துக்கு ஏற்ற முறையில் வாழ வேண்டும்.

ஆனந்த குமாரசுவாமி மேலும் எழுதுவதாவது,

நமது பண்டைப் பெருமையில் நமக்கு நம்பிக்கையிருக்க வேண்டும். இந்தியாவும் இலங்கையும் உலக நாகரிக வளர்ச்சிக்கும் பண்பாட் டிற்கும் பெரும் பணியாற்றிவிருக்கிறதென்பதை நாம் உணர

வேண்டும். காலத்துக்குக் காலம் தமது நாடுகளில் பெரியார்கள் தோன்றிக் காலத்துக்கேற்ற மாற்றங்களைச் செய்துள்ளார்கள். இப்பொழுது நம் மத்தியில் காணப்படும் குற்றங்குறைகளை இந்திய முறையிலேயே தீர்த்துக் கொள்ள வேண்டும். நான் வற்புறுத்துவ தென்னவெனில், உலகுக்கு இந்தியா ஆற்ற வேண்டிய பணி இன்னும் முற்றுப்பெறவில்லை. இந்தியா அதனைச் செய்யாவிட்டால் அதனை வேறொருவராலும் செய்ய முடியாது.

ஒவ்வொருவருக்கும் அவர்களின் பூரண வளர்ச்சிக்கு இடம் கொடுப் பதிலேயே அவர்களுடைய அன்பைப் பெறலாம். இவ்வுண்மை தேசங்களுக்கும் பொருந்தும்.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்தியாவிலுள்ள பிரதேசங்களுக் கிடையில் மேலெழுந்த வாரியாகக் காணப்படும் வேற்றுமைகளிலும் பார்க்க அடிப்படையான ஒற்றுமையைக் காண வேண்டும். இந்திய சரித்திரம், கலைகள் முதலிய வற்றைப் படிப்போருக்கு ஐரோப்பாவின் பல பாகங்களுக்குமிடையில் காணப்படும் ஒற்றுமையிலும் பார்க்க இந்திய பிரதேசங்களுக்கிடையில் காணப்படும் ஒற்றுமை கூடியதாகத் தோன்றும்.

இந்தியாவில் யாத்திரை செய்யாவிட்டால் ஓர் இலங்கையரின் கல்வி பூர்த்தியாகாது. இப்படி இந்தியாவில் யாத்திரை செய்வது ஐரோப்பாவுக்குக் கடுகதிப் பிரயாணம் செய்வதிலும் பார்க்கப் பயனுடையது.

கலாயோகி ஆனந்த குமாரசுவாமியவர்கள் இலங்கையிலிருந்த காலத்தில் இந்தியாவில் பெரும் கொந்தளிப்பேற்பட்டது. காரணம் 1906 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வங்காளப் பிரிவினையாகும். இதனால் வங்காளத்தில் குண்டு வீச்சுக்களும் அரசியல் கொலைகளும் பெருமளவில் நடைபெற்றன. ஆங்கில அரசாங்கம் பல தலைவர்களை விசாரணையின்றி நாடுகடத்தியது. மறியலில் போட்டது. இக்கால கட்டத்தில் (1906-1909 களில்) 'கலையும் சுதேசியும்', 'தேசிய இலட்சியங்கள் பற்றிய கட்டுரைகள்' என்னும் நூல்கள் வெளிவந்தன. இவை இந்திய மக்களிடையே பெரும் விழிப்பை ஏற்படுத்தின. தென்னா பிரிக்காவிலிருந்த காந்தியடிகள் இவ்விரு நூல்களையும் படிக்கும்படி தமது தொண்டர்களைத் தூண்டினார். இவ்விரு நூல்களே கலாயோகி அவர்களுக்கு இந்தியத் தலைவர்கள் மத்தியில் சிறந்த இடத்தைத் தேடித் தந்தன.

இந்தியமக்கள் சுயநலத்துக்கல்லாமல் உலக சேமத்துக்குழைக்கும் நோக்கத்துடனேயே சுதந்திரப் போராட்டத்தில் இறங்க வேண்டும்.

> இந்திய சுதந்திரப் போராட்டம் உலகில் ஏகாதிபத்தியத்துக்கும் தேசியத் துக்குமிடையில் நடைபெறும் போராட்டத்தின் ஓர் அம்சமாகும். ஏகாதிபத்தியத்துக்குள் அடங்கியிருக்கும் நாடுகள் பல துறைகளிலும் நசுக்கப்படுகின்றன. எங்கள் தேசியத்துக்கும் சர்வதேச ஒற்றுமைக்கும் ஒரு முரண்பாடுமில்லை. இந்தியா ஒரு தேசமல்லவென்று சிலர் கூறுகின்றனர். பூமிசாத்திர அடிப்படையிலும், கலாசார அடிப்படை யிலும் இந்தியா ஒரு தேசமென்பதை பாரபட்சமின்றி நோக்குவோர் அறிந்து கொள்வர். தெற்கேயுள்ள இராமேஸ்வரமும் வடக்கேயுள்ள காசியும் இந்துக்களை ஒன்றாக இணைக்கின்றன.

இந்துக்கள் எங்கிருந்தாலும் சிராத்தம் செய்யும்போது இந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, சிந்து, காவேரி என்னும் ஏழு புண்ணிய தீர்த்தங்களையும் நினைவுகூரு கிறார்கள். பிதிர்களுக்கு நீர்க்கடன் செய்யும்போது, மேற்கூறப்பட்ட ஏழு நதிகளின் நீரும் வந்து தாமிறைக்கும் நீரோடு கலக்கும்படி பிரார்த்திக்கிறார்கள். நாங்கள் ஆங்கிலேயருக்குக் கூறுவோம். 'நீங்கள் இசைந்தால் உங்களுடைய ஒத்துழைப்போடு சுதந்திரத்தைப் பெறுவோம். அப்படியில்லாவிட்டால் உங்களை எதிர்த்துப் போராடிச் சுதந்திரத்தைப் பெறுவோம்' என்பது கலா யோகி ஆனந்த குமாரசுவாமியின் எழுத்துகள்.

### இந்தியக் கலையின் நோக்கங்களும் செயல்முறைகளும்

இந்தியக் கலைகள் நோக்கங்களும் செயல்முறைகளும் குறித்த கலாயோகி ஆனந்த குமாரசாமியின் ஆங்கிலக் கட்டுரைகளிலேயும், The Dance of Siva என்னும் சிறப்புமிகு நூலிலிருந்தும், தமிழ்ப்படுத்தி எமக்கு இக்கட்டுரை யாளருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே சிறப்பு விரிவுரைகளாற்றி எம்மையும் கலைகளிலே ஈடுபாடு கொள்ளச் செய்தவர் பேராசான் பேரா சிரியர் கலாநிதி கார்த்திகேசு இந்திரபாலா அவர்கள். இக்கட்டுரை தொடர் பிலும் இடம்பெறும் கருத்துகளுக்கும் சிந்தனைகளுக்கும் நுட்பங்களுக்கும் பேராசிரியர் கலாநிதி கா. இந்திரபாலா அவர்களுக்கு எம் பெரு நன்றிகள் உரித்தாகுக.

கலாயோகி அவர்கள் பல்வேறு அறிவுத்துறைகளிலே கடினமாக உழைத்த போதிலும், அவர்கள் இந்தியக் கலைக்காற்றிய சேவையே அவர் களுக்கு நீடித்த, நிலைத்த, பெருமைமிகு அழியாப் புகழைத் தேடிக் கொடுத்தது.

இந்தியக் கலை தெய்வாம்சம் பொருந்தியது. யோக நிலை கைவரப் பெற்ற கலைஞர்களால் படைக்கப்பட்டவை. அதனை விளக்கி கலாயோகி அவர்கள் பெரிதும் சிறிதுமான பல நூல்களைத் திறம்பட எழுதியுள்ளார். ஒரு செயலைத் திறம்படச் செய்பவரை யோகி என்கிறது கீதை. திறம்படவும், உள்ளுணர்வோடும் இந்தியக் கலையை விளக்கி விபரித்துள்ளார் கலாயோகி ஆனந்த குமாரசுவாமியவர்கள். கலை பற்றிய நுண்மான் நுழைபுலத்தோடும், நிரம்பிய தேடலோடும், இந்திய தத்துவமேதாவிலாச முடிபுகளோடும் இந்தியக் கலையை விளக்கியுள்ளதால் ஆனந்தரைக் 'கலாயோகி' என்ற ழைப்பது மிகப் பொருத்தமானதே.

> இந்திய தத்துவக் கொள்கைகள் எல்லாவற்றிலும் உபநிடதத்தில் கூறப்படும் கோட்பாடு எப்படி ஊடுருவி இருக்கிறதோ அப்படியே இந்தியக் கலைகள் எல்லாவற்றுக்குமிடையிலும் ஓர் ஒற்றுமையைக் காணலாம். இந்த ஒருமைப்பாடும் தெய்விகத் தன்மை வாய்ந்த ஒரு கோட்பாட்டை ஆதாரமாகக் கொண்டது. இந்தியாவின் பெருமைக்குக் காரணமென்ன? அது நூல்களிலும் தத்துவக் கொள்கைகளிலும் தங்கியிருக்கவில்லை. அதன் பெருமை ஞானத்தைப் பற்றிக் கூறி யிருப்பதிலும், அதனை அடைவதற்குக் காட்டிய வழியிலும் தங்கி யிருக்கிறது. எல்லா ஞானமும் உண்மைகளும் சாசுவதமானவை. இவற்றைப் புத்தியைக் கொண்டு அறிய முடியாது. இவற்றை அநுபூதி மூலமே உணர்ந்து கொள்ளலாம். இதற்கு உள்ளுணர்வு உதவி செய்யும். இந்த உள்ளுணர்வு கற்பனை வளமும் அதி அற்புத சக்தியும் வாய்ந்த மேதைகளுக்குக் கைவரும். போதிமர நிழலிலிருந்த புத்த ருக்கு இப்படியான ஓர் உள்ளுணர்வினாலேயே பெரும் உண்மை களெல்லாம் கைவரப்பெற்றன. வேதங்களுக்கெல்லாம் ரிஷிகளால் கேட்கப்பட்டவை. காணப்பட்டவை. மனிதரால் எழுதப்பட்டவை யல்ல. ஒரு சிறந்த கவிதையோ ஓவியமோ பாடலோ முதலில் கலைஞனுக்கு முழுமையாக மனக்கண்முன் தோன்றுகிறது. ஒரு திறமையான கலைஞன் இப்படி மனக்கண் முன் கண்டவற்றுக்கு முழுமையான உருவத்தைக் கொடுக்கிறான்.

அரைகுறையாக ஆற்றல் வாய்ந்தவன் அரைகுறையாக உருவம் கொடுக்கிறான். ஒரு கலைஞன் தான் கண்ட காட்சிக்கு உருவம் கொடுக்கும் வரைக்கு அது நிற்குமாவென்று அஞ்சிக்கொண்டேயிருப்பான். மனஞ் சஞ்சலமுடையது. கலகத்தைச் செய்வது. அடக்க முடியாதது. அதனை அடக்குவது காற்றை அடக்குவது போன்றது. ஆனால் பழக்கத்தினாலும் வைராக்கியத்தினாலும் அடக்க முடியும். மனத்தில் ஏற்படும் தோற்றத்தை இடைவிடாது சிந்தித்தலும்,

சிந்தையை அடக்குதலும் இந்திய வழிபாட்டின் சிறந்த அம்சங்களாகும். இங்குதான் இஷ்ட தேவதையின் வழிபாடு முக்கிய இடம்பெறுகிறது. சாதாரண மக்கள் எங்கும் காணப்படுவதும், வழிபாட்டுக்கிலகுவானது மான கணேச மூர்த்தத்தை வழிபடுகின்றனர். இவர்களிலும் பார்க்கப் பக்குவ முடையவர்கள் நடராசரை வழிபடுகின்றனர். நிர்க்குண உபாசனையில் ஈடுபடுபவர்களுக்கு மாத்திரம் விக்கிரகங்கள் தேவையில்லை. இக்கடினமான முறையில் ஈடுபடுபவர் மிகச் சிலரே.

இஷ்ட தேவதையை வழிபடுவோர் முதலில் அத்தெய்வத்தின் தோற றத்தை வர்ணிக்கும் தியான சுலோகத்தை ஓதுவர். பின்னர் அச்சுலோகத்தில் வர்ணிக்கப்பட்ட தோற்றத்தை மன்தில் அமைதியாகச் சிந்திப்பர். இதே போலத்தான் கலைஞன் தான் செய்யப்போகும் உருவங்களை மனத்தில் தோன்றச் செய்கிறான். இதுபற்றிச் சுக்கிரநீதி மேல்வருமாறு கூறுகிறது.

> வழிபடுவோருக்குத் தியானம் சிந்தித்தற் பொருட்டு தெய்வத் திருவுருவ இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன. ஆதலின் அத்திரு வுருவங்களை இயற்றும் சிற்பிகள் அத்திருவுருவ இலக்கணங்களைத் தியானிப்பதில் மிகவும் பற்றுடையவராகி இருத்தல் வேண்டும். அத்தியான நெறியாலன்றிக் காட்சி முதலிய வேறெவ் வழியாலும் அத்திருவுருவ இலக்கணங்கள் அமையா.

> இயற்கையை வர்ணிப்பது இந்தியக் கலைகளின் நோக்கமல்ல. ஓர் இந்திய சிற்பியாவது ஒருவரை மாதிரிக்கு வைத்துச் செய்யப்பட்ட தாகக் கூறமுடியாது. இந்தியக் கலைஞன் இயற்கைக்குப் பின்னால் இருக்கும் நிலையான பொருளையே உருவாக்க முயன்றான். இயற் கையை பரம்பொருளை மறைக்கும் திரையாகவே கருதுகிறான். இந்த மாயையை நித்தியப் பொருளெனக் கருதுவது பிழையாகும்.

> என்னுடைய அழிவற்ற உயர்வற்ற பரசொரூபத்தை அறியாத அறி விலிகள் புலன்களுக்கு எட்டாத என்னைப் புலன்களுக்குத் தென்படும் இயல்பை அடைந்தவனாக எண்ணுகின்றான். யோக மாயையினால் நன்கு மூடப்பட்டுள்ள நான் எல்லோருடைய அறிவுக்கும் எட்டுகிற தில்லை. பிறவாத இறவாத என்னை இந்த மூட உலகம் அறிவதில்லை (பகவத்கீதை 7.25,25).

> இயற்கை தன் பல்வேறு சிறப்புகளையெல்லாம் நமக்குப் பிரத்தி யட்சமாகக் காட்டுகிறாள். ஏன் கலைஞன் அவளை அரைகுறையாக சித்திரிக்க முன்வர வேண்டும்?

ஆதியில் சிற்பக்கலை சம்பந்தமான சாத்திரங்கள் வாய்மொழி மூலமே கற்பிக்கப்பட்டன. பின்னர் ஞாபகத்தில் எளிதில் வைத்துக் கொள்ள உதவும் முறையில் இவை சிறுசிறு செய்யுட்களாக எழுதப்பட்டன. சிலவேளைகளில் இந்தச் செய்யுள்களோடு சிற்பம் சம்பந்தமான வரைபடங்களும் வழக்கிலிருந்தன. செய்யுள்களில் சமூக்கமாகக் கூறப்பட்ட விஷயங்களின் விபரங்களை மாணவன் ஆசிரியரிட மிருந்து கற்றுக் கொள்வான். சிற்பம் குலத்தொழிலாகவிருந்தபடியால் பெரும்பாலும் தந்தையே மகனுக்கு ஆசிரியனாகவிருந்தான். வேலைத் தலமே பாடசாலையாக அமைந்திருந்தது. மாணவன் ஆசிரியனுக்குப் பணி செய்வதன் மூலமும் தொண்டாற்றுவதன் மூலமும் அவனைத் திருப்திப்படுத்தித் தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டும். வேலைத் தலத்தில் சிற்பிக்கு வேண்டிய நல்லொழுக்கம், கடவுட்பக்தி முதலி யனவும் போதிக்கப்படும். ஆசிரியனே இவற்றுக்கு முன்மாதிரியாக விளங்குவான்.

ஒரு சிற்பத்தைச் செய்யப்போகும் சிற்பிக்கு முன்கூறிய செய்யுள் களோடு அது சம்பந்தமான பரம்பரையான கதைகள், புராணக் கதைகளின் அறிவும் அவசியம். உதாரணமாக நடராச வடிவத்தைச் செய்யப்போகும் சிற்பிக்கு அவ்வடிவம் சம்பந்தமான புராணக் கதையை அறிந்திருப்பது அவசியம்.

சிவபெருமான் எப்பொழுது, ஏன் நடனமாடினார் என்பது கோயிற் புராணத்தில் மேல்வருமாறு கூறப்பட்டுள்ளது:

தாருகாவனத்து முனிவரின் அகந்தையை அடக்கி அருளும் பொருட்டுச் சிவபெருமான் தாம் பிக்ஷாடனர் உருவம் கொண்டதோடு விஷ்ணுவை மோகினி வடிவம் கொள்ளச் செய்தார். இவ்விருவர்களாலும் மானபங்க மடைந்த முனிவர்கள் சிவபெருமானைக் கொல்லும் பொருட்டு ஒரு யாகத்தைச் செய்தனர். அந்த யாகத்திலிருந்து வெளிவந்த புலியையும் பாம்பையும் அக்கினியையும் தடியையும் சிவபெருமானக் கொல்லும்படி ஏவினர். சிவபெருமான் புலியைப் பிடித்து அதன் தோலைத் தனது சிறுவிரல் நகத்தால் கிழித்துப் போர்வையாகப் போர்த்துக்கொண்டார். பாம்பை மாலையாக அணிந்து கொண்டார். அக்கினியையும் தடியையும் தனது கைகளில் ஏந்திக் கொண்டார். கடைசியாக முயலகனைச் சிவபெருமான் மீது ஏவினர். சிவ பெருமான் அவனைக் காலால் மிதித்து நடனஞ் செய்யத் தொடங்கினார். இந்நடனம் சிவபெருமான் செய்யும் பஞ்சகிருத்தியங்களைப் பிரதிபலிக்கிறது. சிற்பி எப்பொழுதும் தெய்வங்களின் உருவங்களையே செய்தல் வேண்டும். மனித உருவங்களைச் செய்வது பிழையானது. புனிதமற்றது. அழகான

மனித உருவத்திலும், செப்பமாக அமையாவிட்டாலும் தெய்வ உருவம் சிறந்தது. சாத்திரங்களில் கூறப்பட்ட பிரமாணங்களின்படி செய்யப்பட்ட உறுப்புக்களை உடைய உருவங்களே அழகுடையவை. சிலர் தமக்குப் பிடித்த உருவங்களே சிறந்தவையென்பர். ஆனால் அறிவுடையோர் சாத்திரத் துக்கு முரணான சிற்பங்களை அழகுடையவை எனக் கொள்ளமாட்டார்கள். சிற்பத்தில் கை கால்களின் நரம்புகளும் பொருத்துக்களும் தோற்றாமலிருத்தல் வேண்டும். சிற்ப அளவில் அரை அங்குலம் பிழைத்தாலும் அவனுக்கு பொருள் நஷ்டமோ அல்லது மரணமோ ஏற்படுமென்று இன்னுமொரு நூல் கூறுகிறது. இப்படிப் பிரமாணங்களுக்கமையச் செய்யப்பட்ட உருவங்க ளெல்லாம் ஒரே மாதிரி இருக்குமென்று சிலர் கூறுவர். இது அறியாதார் கூற்று. சிற்பங்கள் செய்வோரின் திறமைக்கேற்பவும் காலத்துக்கேற்பவும் வித்தியாசப்படும். சிற்பங்களை பல்லவர் காலச் சிற்பம், சோழர் காலச் சிற்பம், பாண்டியர் காலச் சிற்பம், விஜயநகர மன்னர் காலச் சிற்பம் எனக் சிற்ப நூல் வல்லோர் வகுத்துக் கூறுவதைக் காணலாம். புத்தர் உருவம் கிரேக்க சிற்ப முறையைத்தழுவிச் செய்யப்பட்டதெனச் சிலர் கூறுவர். இவர்கள் கிரேக்க சிற்பமுறைக்கும் இந்தியச் சிற்பமுறைக்குமுள்ள வித்தியா சங்களை அறியாதவர்களாவர். கிரேக்கத் தெய்வங்களின் உருவங்கள் சிறந்த இலட்சணங்கள் பொருந்திய மனித உருவத்தைப் போல் செய்யப்பட்டவை. அவ்வுருவங்களின் தசை, நரம்பு, விலா முதலிய உறுப்புக்கள் பார்ப்பவர் மனத்தைக் கவரத்தக்க முறையில் அமைக்கப்பெற்றவை. இந்திய உருவங்கள் அப்படி அமைக்கப் பெறவில்லை. இந்திய உருவங்கள் கை, கால்களின் நரம்புகள், பொருத்துக்கள் தோன்றப் பெறாமல் அமைக்கப்பட்டவை. இந்திய உருவங்கள் சடத்தன்மையை வெளிப்படுத்தாமல் தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவன. கிரேக்கக் கடவுளான அப்பலோவின் உருவம் ஒரு விளையாட்டு வீரன் உருவம் போல் அமைக்கப் பெற்றுள்ளது. புத்தரின் உருவம் ஒரு யோகியின் உருவம் போல் அமைக்கப் பெற்றுள்ளது. ஒரு யோகி முதலில் தனக்கு வசதியான ஆசனத்தில் அமர்ந்து கொள்ளுகின்றான். இது பெரும்பாலும் பத்மாசனமாகவிருக்கும. பின்னர் மனத்தை ஒருவழிப் படுத்துவதற்கும் சமநோக்குடையதாக்குவதற்கும் பழக்குவான். இப்படிப் பழக்கப்பட்டவனின் மனம் காற்றில்லாத இடத்தில் எரியும் விளக்குப்போல் ஆடாமல் அசையாமலிருக்கும்.

> தேகம், தலை, கழுத்து இவைகளை நேராக அசையாது வைத்துக் கொண்டு உறுதியாயிருந்து கண் மூக்கு நுனியைப் பார்ப்பவன் போன்று திசைகளைப் பாராதிருத்தல் வேண்டும். உள்ளம் அமைதி

> பெற்று அச்சத்தை அகற்றி, பிரமச்சரிய விரதம் காத்து, மனத்தை அடக்கி, சித்தத்தை என்பால் இசைத்து என்னை குறியாகக் கொண்டு, யோகத்தில் அமைந்திருக்க வேண்டும். இங்ஙனம் யாண்டும் மனத் தைத் தியானத்தில் நிறுத்தி உள்ளத்தை அடக்கிய யோகி என்னிடத் துள்ள முத்தியிலே (நிர்வாணத்திலே) முற்று பெறுகிற சாந்தி யெய்து கிறான். இத்தகு தியானத்திலிருந்தே புத்தர் போதிமர நிழலில் நிர்வாண நிலையெய்தினார்.

கலாயோகியும் அவர் மனைவி எதெலும் 'நோர்மன் சப்பலைச்' சேர்ந்த சில தினங்களில் சகோதரி நிவேதிகை அங்கு சென்று, 'இந்தியப் பெண்களின் இலட்சியங்கள்' என்னும் பொருள் பற்றிப் பேசினர். சகோதரி நிவேதிதை சுவாமி விவேகானந்தரின் உத்தம சிஷ்யை. கலாயோகியைப் போல் இவர் இந்தியக்கலை, பண்பாடு முதலியவற்றில் ஆர்வம் கொண்டவர். பின்னர் இருவரும் சேர்ந்து 'இந்து பௌத்த புராணக் கதைகள்' என்னும் நூலை எழுதினர்.

கலாயோகி தனது 'மத்தியகாலச் சிங்களக் கலை' என்னும் நூலை அச்சிடுவதற்கு ஆஷ்பி என்பவருக்குச் சொந்தமான கையால் இயங்கும் யந்திரத்தை 1907 ஆம் ஆண்டில் வாங்கினார். 1907 செப்டம்பர் மாதம் இந்நூலை அச்சிடத் தொடங்கினார். 1908 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அச்சிட்டு முடித்தார். சிங்களக் கலையையும் மத்திய காலச் சிங்கள சமூகத்தின் அமைப்பையும் இந்நூல் நன்கு விளக்குகிறது. இவ்விஷயங்களை விளக்கி இது போன்ற நூல் முன்னும் பின்னும் வெளிவரவில்லை. கலாயோகி 1909 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இந்தியா சென்று அவனீந்திரநாத் தாகூர், ரவிந்திரநாத் தாகூர் என்போரது விருந்தாளியாய்த் தங்கினர். அவனீந்திரநாத் தாகூர் பாரம்பரியமான இந்திய ஓவிய முறையைப் பின்பற்றி ஓவியங்கள் வரைந்து இந்திய ஓவியம் சம்பந்தப்பட்ட வரையில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத் தினார். இவர் நந்தலால் போஸ் முதலியவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கி யவர். இவரது ஓவியங்களைப் பாராட்டி 'மொடேன் ரிவியு' முதலிய சஞ்சிகை களில் கலாயோகி பல கட்டுரைகளை எழுதினார். இவரும் இவர் மாணவர் நந்தலால் போசும் பின்னர் கலாயோகி எழுதிய 'புத்தரும் புத்தர் கொள்கைகளும்' என்னும் நூலுக்குப் பல ஓவியங்கள் வரைந்து கொடுத்தனர். இக் காலத்தில் கலாயோகி கல்கத்தாவில் பல இடங்களிலும் கலை சம்பந்தமான சொற்பொழிவுகளை ஒளிப்படங்களின் உதவியோடு (Lantern lectures) ஆற்றினார். இச்சொற்பொழிவுகள் கலை சம்பந்தமாகப் பெரும் விழிப்பை ஏற்படுத்தியதாகச் சிறந்த கலா விமர்சகரான ஓ.சி. கங்குலி கூறியுள்ளார்.

அக்காலத்தில் மிகப் பிரபல்யமாயிருந்த இரவிவர்மாவின் ஓவியங்களை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும். இவர் கேரளத்தைச் சேர்ந்தவர். இவர் வரைந்த இலட்சுமி, சரஸ்வதி படங்கள் இந்துக்களின் வீடுகளை யெல்லாம் அலங்கரித்தன. ஆனால் இவை இந்தியக் கலைப் பரம்பரைக்கு மாறானவை என்பது கலாயோகியின் கருத்து. இலட்சுமி, சரஸ்வதி படங்களில் பல கைகள் காணப்பட்டபோதிலும் தேவியரின் தோற்றம் ஒரு அழகான பெண்ணின் தோற்றத்தையே பிரதிபலிக்கின்றதென்றும், இவற்றில் தெய்வாம் சத்தைக் காணமுடியாதென்றும் சுட்டிக்காட்டினர்.

1912 ஆம் ஆண்டில் சில மாதங்கள் சாந்தினிகேதனில் தாகூர் அவர் களோடு தங்கினார். தாகூரின் கவிதைகள் சிலவற்றை மொழிபெயர்த்து வெளியிட்டார். இம்மொழிபெயர்ப்பே ஆங்கிலத்தில் வெளிவந்த முதல் மொழிபெயர்ப்பாகும். பிற்காலத்தில் தாகூரின் ஓவியங்களை உலகுக்கு அறிமுகம் செய்து வைத்தவரும் கலாயோகியே.

| | |
|---|---|
| இந்தியக் கலைகளும் கைத்தொழில்களும் | (1913) |
| இந்து பௌத்த புராணக் கதைகள் | (1914) |
| புத்தரும் புத்தரின் கொள்கைகளும் | (1916) |
| ராஜபுத்திர ஓவியங்கள் | (1916) |

''யாழ்ப்பாணத்தில் காணப்படும் ஆபரணங்களைப் போல் வேறெங்கும் காணமுடியாது'' (1913:155) என்கிறார். 'புத்தரும் புத்தர் போதனைகளும்' என்னும் நூலில் முக்கிய விஷயங்களில் இந்துசமயமும் பௌத்தமும் ஒத்திருக்கின்றனவென்று இவர் கூறியிருப்பது (ப. 219) சாதாரண மக்கள் பௌத்தத்தைப் பற்றிக் கொண்டுள்ள கருத்துக்கு மாறுபட்டதாகும். 'இராஜ புத்திர ஓவியங்கள்' என்னும் நூலில் அவை இந்து ஓவிய மரபைப் பின்பற்றி எழுந்தனவென்றும், முகலாயர் காலத்து ஓவியங்களுக்கு மாறுபட்டவை யென்றும் ஐயந்திரிபற விளக்கியுள்ளார். சரோஜினிதேவி ஒரு சந்தர்ப்பத்தில் கலாயோகியை இந்தியாவின் தலையாய தூதுவர் (supreme Ambasador) எனக் கூறியது குறிப்பிடத்தக்கது.

கலாயோகி ஆங்கிலத்தில் ஒரு கவிஞராகவுமிருந்தார். இவர் எழுதிய கவிதைகளுக்கு இவருடைய நண்பர் எரிக்ஜில் (Eric Gill) எழுதிய சித்திரங்கள் அழகூட்டுபவையாகக் காணப்படுகின்றன. இவர் வரைதலிலும் ஓவியந் தீட்டுவதிலும் திறமை பெற்றிருந்தார். யக்ஷரைப் பற்றிய இவரின் நூலுக்கு இவரே திறம்படச் சித்திரம் வரைந்துள்ளார்.

'கலாயோகி' தமது கடைசி பதினைந்தாண்டுகளில் ஒப்பியல் முறையில் சமயங்களை ஆராய்வதில் ஈடுபட்டிருந்தாரென அவரது மனைவி கூறி யுள்ளார். ஆனால் ஒப்பியல் ஆராய்ச்சிக்கு வேண்டிய மனப்பான்மை இலங்கையில் இருந்த காலத்திலிருந்தே அவரிடம் காணப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்த காலத்தில், தலதா மாளிகைக்கு அருகில் ஒரு கிறிஸ்தவ ஆலயம் கட்டப்படவிருப்பதைக் கண்டித்துப் பத்திரிகைக்கு ஒரு கடிதமெழுதினார். அக்கடிதத்தில் தாம் மதக் காழ்ப்புக் கொண்டு அக்கடிதத்தை எழுதவில்லையென்றும் இடப் பொருத்தமின்மை பற்றியே எழுதியிருப்ப தாகவும் குறிப்பிட்டிருந்தார். மேலும், மதவெறி காரணமாகவும் அறியாமை காரணமாகவும் மதங்களுக்குள் ஏற்றத்தாழ்வு சான்றோரிடத்து, அமெரிக்க அறிஞரான தோரோ, (Thoreau) வைப் போல் தமக்கும் அனுதாபமில்லை யெனக் கூறியுள்ளார். தோரோவுக்கு நவநாகரிக வாழ்வு பிடிக்காததினால் காட்டுப்புறத்தில் வாழ்ந்து வந்தார். எமர்ஸன் என்னும் அறிஞரைப் போல் தோரோவும் இந்துசமய நூல்களான உபநிடதங்கள், கீதை முதலியவற்றில் ஈடுபாடு கொண்டிருந்தார். வால்டன் (Walden) என்னும் நூலையும் காந்தி யடிகளின் சர்வோதயக் கொள்கைக்கு வித்திட்ட ரஸ்கின் (Ruskin) என்னும் அறிஞரின் நூல்களையும் கலாயோகி படித்திருந்தாரென்பது அவர் இலங்கைப் பத்திரிகைக்கு எழுதிய கடிதங்களிலிருந்து அறியக்கிடக்கிறது.

'புத்தரும் புத்தர் கொள்கைகளும்' என்னும் நூலில் புத்தர் சரித்திரத்தையும் புத்த சமயத்தின் பல்வேறு பிரிவுகளான ஹீனயானம், மகாயானம், சென் (zen) பௌத்தம் முதலியவற்றைப் பற்றி விரிவாக ஆராய்ந்திருப்பதோடு பௌத்தத்துக்கும் இந்து சமயத்துக்கும் உள்ள தொடர்பை எடுத்துக்காட்டி யுள்ளார். இந்து சமயத்துக்கும் பௌத்தத்துக்குமுள்ள தொடர்பு கத்தோலிக்க மதத்துக்கும் புரொட்டஸ்தாந்து மதத்துக்கும் உள்ள தொடர்பு போன்றதெனக் கூறியுள்ளார். பிற்காலத்துப் பௌத்தர் அதுவும் தேரவாத பௌத்தர் கூறுவது போல் பௌத்தத்தில் அநாத்மக் கொள்கைக்கு இடமில்லையென்பது கலாயோகி கருத்து. இவர் கருத்தை பௌத்தத்தை ஆராய்ந்த மேல்நாட்டு அறிஞரும் ஆதரித்துள்ளனர். டாக்டர் இராதாகிருஷ்ணன் இலங்கையில் புத்தரைப் பற்றி ஒரு விசேட சொற்பொழிவு நிகழ்த்தியபொழுது, புத்தர் இந்து சமயத்தைச் சீர்திருத்த வந்தவரேயொழிய புதுச் சமயத்தைத் தாபிக்க வரவில்லையென்று கூறினார். இவர் கருத்துக்களை மறுத்து, முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்கா இலங்கைப் பத்திரிகைகளுக்கு ஒரு கடிதம் எழுதினார். (zen) சென் பௌத்தத்தைச் சீன தேசத்துக்குக் கொண்டு சென்றவர் காஞ்சியைச் சேர்ந்த போதிதர்மர் என்னும் புத்தபிக்கு என்பர்.

(zen) சென் பௌத்தத்துக்கும் சித்தர் மார்க்கத்துக்கும் ஒற்றுமையுண்டு. போர் என்னும் சித்தர் சீனாவைச் சேர்ந்தவரென்பர்.

கலாயோகி இந்துசமய, இந்து சமய பௌத்த நூல்களைப் படித்தது போல் மறுசமய நூல்களையும் சிறப்பாக அநுபூதிமான்களின் நூல்களையும் படித்துள்ளார். கிரேக்க தத்துவஞானிகளான பிளாட்டோ, அரிஸ்டோட்டில் முதலியவர்களின் நூல்களைக் கிரேக்க மொழியிலும், புளோற்றினசுடையதும் (Plosinys), அவர் வழிவந்த ரோமன் கத்தோலிக்க அநுபூதிமான்களினதும் நூல்களை லத்தீன் மொழியிலும், எக்காட் (Veister Eckhart) என்பவரின் நூல்களை ஜெர்மன் மொழியிலும், அவரின் சமகாலத்தவரும் நண்பருமான கெனோன் (Guernon) நூல்களைப் பிரெஞ்சு மொழியிலும் றூமி (Rumi) என்னும் சூபியின் நூல்களை அரபுமொழியிலும் படித்தார்.

எனவே கிரேக்க, இலத்தீன், ஜெர்மன், அரபு மொழிகளிலும் பாண்டித்திய மிக்கவர் கலாயோகி. 'ஆனந்த குமாரசுவாமி அவர்களை அதிமேதை அல்லது வித்தகர் என்றழைப்பது பொருத்தமாயிருக்கும். அவர் தனது அபாரமூளையின் சக்தியை மெய்ப்பொருள் காண்பதில் செலுத்தினார். இதுவே அவரின் வாழ்க்கை இலட்சியமாகவிருந்தது. அவர் தனது அயராத உழைப்பையும் பலநூற் கல்வியையும் பயிற்றப்பட்ட மூளையின் ஆற்றலையும் இந்த நோக்கத் துக்கே பயன்படுத்தினார். அவர் தானறிந்த விஷயங்களைத் தேவைக் கேற்றபடி பிரித்தும் ஒன்றுசேர்த்தும் பார்க்கப் பழகியுமிருந்தார். அவர் பல விஷயங்களையும் பல நூல்களையும் படித்தபோதிலும், அவர் மனதில் குழப்பத்திற் கிடமேயில்லை. எல்லாவற்றையும் சீர்ப்படுத்தி வைத்திருந்தார். இதனால் அவர் ஒரு நடமாடும் கலைக்களஞ்சியமாக விளங்கினார். அவரைப் போல் பல்துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவரைக் காணமுடியாது' என்று எழுதியுள்ளார் அறிஞர் ஐ.பி. ஹோணர் (I.P. Horner).

இப்பொழுது இந்தியாவிலும் இலங்கையிலும் சமயத்துறையில் ஹரே கிருஷ்ணா, ஆழ்நிலைத் தியானம், யோகா, பாபா அம்மா பகவான் போன்ற பல புதிய இயக்கங்கள் காணப்படுகின்றன. கலாயோகி சமயம் பற்றிப் பல நூல்களைப் படித்தும் பலவாறு சிந்தித்திருந்தும் ஒரு புதிய சித்தாந்தத்தை ஏற்படுத்த விரும்பவில்லை. அவர் கூறுகிறார்:

> கலைத்துறையிலோ, சமயத்துறையிலோ சொல்ல வேண்டியதெல் லாம் சொல்லியாய் விட்டது. புதுக்கச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. நமது கடமை, சொல்லப்பட்டவற்றைச் சிந்தித்து, தெளிந்து அதன்படி வாழ்வதே என்பர்.

# 5

# முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள்

இலக்கியம், இசை, விஞ்ஞானம், நாடகம், துறவு, ஆய்வியல், பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வரலாறு என்றின்னோரன்னவற்றினை ஆய்வு செய்ய முற்படு மொருவர் முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளது பெரும்பணிகளினைக் கவனத்திற் கொள்ளவே வேண்டும். மட்டக்களப்பின் வரலாறும் அதன் தனித்துவப் பண்புகளும் விபுலானந்த அடிகளது பணிகளின் வீச்சினால் துலங்கி நிற்கின்றன. கவிதை இலக்கியத்தில் தனித்துவமிக்க ஆற்றல் கைவந்த போராசிரியர் விபுலானந்தர் இல்லற வாழ்வை வெறுத்துத் தூய துறவற வாழ்க்கையை வாழ்ந்து தமிழ் நாட்டிலும், ஈழத்திலும் சிரஞ்சீவியான ஓர் இடத்தைப் பெற்றுள்ளார். மதுரைத் தமிழ்ச் சங்கத்துத் திங்கள் இதழான 'செந்தமிழ்' இதழில் 1922 ஆம் ஆண்டு முதல் பல கட்டுரைகள், கவிதைகள், எழுதி வந்தார். 'யாழ் நூல்' சுவாமிகளது 'இறவாப் புகழ்' பெற்ற ஆராய்ச்சி நூல்.

**தமிழுக்கு இயலும்**

'விபுலானந்த செல்வம்' என்பது சுவாமிகளது கட்டுரைகளின் தொகுப்பு நூல். சொல்லாராய்ச்சியிலும், விஞ்ஞானத்தில் ஆங்கிலச் சொற்களைத் தமிழ் மயமாக்க எடுத்த முயற்சியின் போதும் கண்டுபிடித்த தமிழ்ப் பிரயோகங் களும் போற்றப்படும் பெரும் பணிகள் எனலாம். தனித்துவமான 'உரைநடை' யினைக் கொண்டிருந்த சுவாமிகள் தமது கண்டுபிடிப்புகளை எவ் வெவ்வாறு பிறருக்கு வெளிப்படுத்தினார் என்பதற்கு அவரது கட்டுரைப் பகுதிகளி லிருந்தே ஒரு சில உதாரணங்களைப் பார்ப்போம்.

சில சொற்களின் பொருளை வரையறுத்துக் கொண்டு அப்பாற் செல் வோம். நிலத்தின் மேற்பரப்பிலுள்ள உயிரியற் பொருட்களின் அமைப்பைப் பொதுவாக ஆராயும் நூலைப் படவியல், பிருதிவி சாஸ்திரம் (Geology) என்போம். கற்பாறைகளைச் சிறப்பாக ஆராயும் நூலைச் சிலை நூல், பருப்பத சாஸ்திரம், (Petrology) என்போம். சுரங்கத்துள்ள பொருட்களைச் சிறப்பாக

ஆராயும் நூலினைப் பிலப் பொருள் நூல், சுரங்க வஸ்து சாஸ்திரம் (Minera logy) என்போம். இதன் ஒரு பகுதியதாய் நவமணிகளை யாராயும் நூலினை மணிநூல், அரதன சாஸ்திரம் (Study of Gems) என்போம். பூகம்ப அசைவை ஆராயும் நூலினைப் பூகம்ப நூல் (Seismology) என்போம். பூமியின் மேற் பரப்பைத் தலம் (Crust) என்போம். தலத்தின் கீழுள்ளது அதலம் (Subterranean), ஓங்கல் (Elevation), ஞெள்ளல் (Reppression), பிளப்பு (Cleavage), சுருக்கம், (Serinkage), அழுத்தம் (Pressure), அதோமுகம் (Delta), கழிமுகம் (Mouth), பூமி (Sediment), அறல் (Find sand), முருகைக்கல் (Coral), சுண்ணக்கல் (Lime stone), பருக்கைக்கல் (Sand stone), ஒரு நீர்மை (Homogeneous), பல நீர்மை (Heterogenous), கலந்தொன்றாதல் (Aggregation).

| | | |
|---|---|---|
| Gold oxide | - | பொன்மதி |
| Silver oxide | - | வெண்மதி |
| Copper oxides | - | செம்மதி |

'Hydroxides' என்னும் பதார்த்தங்களை 'மதியம்' என்னும் விகுதி தந்து வழங்கலாகும். பொன்மதியம். வெண்மதியம், நாகமதியம், வங்கமதியம், தவமதியம், லவமதியம் என வருவன.

| | | |
|---|---|---|
| Carbonic acid | - | கரிக்காடி |
| Sulphuric acid | - | சிலைக்காடி |
| Nirtic acid | - | சடக்காடி |
| Cholric acid | - | நிறக்காடி |
| Hidrohcloric acid | - | அணிநிறக்காடி |

பெருவழக்கிலுள்ள காரங்கள்: லவக்காரம் (NaOH), உரக்காரம் (KOH), சுண்ணக்காரம், ஈயக்காரம் முதலியன.

**வசனநடை வண்ணம்**

சுவாமி விபுலானந்தரது தமிழ் 'உரை நடைக்கு அவரது, நிலவும் பொழிலும்' என்ற கட்டுரையிலிருந்து ஒரு பகுதி;

> 'பவளமால் வரையில் நிலவெறிப்பது போற் பரந்த நீற்றழகு பச் சுடம்பில் திவளமாதுடனின்றாடிய பரமன்' எனப்பாடிய புலவனது கண்களுக்குப் பவளம் சிவபிரானது திருமேனியின் வண்ணமாகக் காணப்படுகிறது. பொன் வண்ண மெவ்வண்ணம் அவ்வண்ணம்

> மேனி எனப் பாடிய கவிஞர் அத்திரு மேனியைச் செம்பொன்னின் வண்ணமாகக் காண்கிறார். 'சருமுகில் தாமரைக் காடு பூத்து' எனப் பாடிய பாவாணர் கருமுகிலினையும் தாமரையையும் காவற் கடவுளது திருமேனியாகவும், அவயவங்களாகவும் தரிசிக்கிறார். 'கறை மிடறணியலு மணிந்தன்று' என்றார். செம்மேனிக்கு அழகு செய்யும் நீலக் கரையினை இறைவனுருவிற் பார்க்கின்றான். 'பிறைநுதல் வண்ணமாகின்றது. அப்பிறை பதினென் கண்ணுமேத்தவும் படுமே' என்புழிப் பிறையினுயர்வுக்குக் காரணம் இறைவன் திருமுடி மேலிருத்தலென்பது குறிக்கப்பட்டது.

இலங்கை வானொலியின் முன்னாள் தமிழ் நிகழ்ச்சி அதிகாரி கலாநிதி க. செ. நடராசா தமது மதிப்புரையில் (விபுலானந்த செல்வம் 1963),

> முத்தமிழ் வித்தகரான அடிகளாரின் ஆராய்வுகளில் குற்றம் இராது. ஆமாம் பல மொழிகளிலும் பெற்ற பல துறைகளிலும் தேர்ச்சி பெற்ற அடிகளாரின் ஆராய்வுகளுக்குத் தனியொரு மதிப்பு எங்கும் என்றும் எப்பொழுதும் உண்டு எனக் கூறியுள்ளார்.

**பிறப்பும் பின்னரும்**

27-3-1892 அன்று சாமித்தம்பிக்கும் கண்ணம்மைக்கும் மகனாகப் பிறந்தார். 1916 இல் மதுரைத் தமிழ்சங்கத்தால் நடத்திய பண்டிதர் தேர்வில் தேறினார். 1922 இல் துறவியராகித் தூய்மையான வாழ்வைக் கடைப்பிடித்துப் பணி செய்யும் பொருட்டுச் சென்னை ஸ்ரீ இராமகிருஷ்ண மடாலயத்தினுக்குச் சென்றார். 1924 ஆம் ஆண்டு சுவாமி சிவானந்தா அவர்கள் பிரபோத சைதன்யருக்கு ஞான உபதேசம் செய்து துறவறப் பெயரான சுவாமி விபுலானந்தர் என்பதை வழங்கினார். 1927 ஆம் ஆண்டு சிதம்பரத்திலே ஒரு பல்கலைக்கழகம் நிறுவும் பொருட்டு இராமநாதபுரத்து அரசர் தலைமையில் ஓர் விசாரணைக்குழு ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவினர் முன்னர் பல்கலைக் கழகம் அவசியம் நிறுவப்பட வேண்டுமென்று சான்று பகரும்படி அடிகளாரைச் சென்னைப் பல்கலைக்கழகத்தார் வேண்டினர். அதற்கியைந்த அடிகள் 'சிதம்பரத்திலே ஓர் பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும்' என்று விசாரணைக் குழுவில் முதன்முதலாகச் சான்று பகன்றார்.

1927 இல் மகாத்மா காந்தியடிகள் இலங்கைக்கு வருகைதந்த போது அடிகளார் அவரை வரவேற்றார். சிதம்பரம் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் பதவியினை ஏற்கும்படி அடிகளாரை அண்ணாமலைச் செட்டியார் வேண்ட அவரும் இசைந்து பேராசிரியர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

1937 இல் கைலாயம் வரை சென்றதுடன் திபெத் நாட்டுக்கும் விஜயம் செய்தார். 1939 இல் இமாலயத்திற்குச் சென்றார்.

**யாழ்நூல் அரங்கேறியது**

பத்து ஆண்டுகள் ஆராய்ந்து கண்டுணர்ந்த இசை நூலான யாழ். நூலினைச் கரந்தைத் தமிழ்ச்சங்கத்து ஆதரவில் திருக்கொள்ளம்பூதூர்த் திருக்கோயிலில் (20, 21- 06-47) இல் அரங்கேற்றினார். விபுலானந்த இலக்கியம் மலர்ந்து விட்டது. விபுலானந்த அடிகளாரது பெயர் நிலைத்து விட்டது.

*இசையிடை நுணுகி யாய்ந்து*
*இசை பெறு யாழ்.நூல் யாத்து*
*இசைத்தமிழரசனாகி*
*இன்கலைக்கழகந் தன்னில்*
*இசைவார் விபுலானந்தர்*
*இம்பரி னீங்க வானின் இசை*
*பொழி அமரராகி*
*என்றென்றும் வாழ்கின்றாரே*

**நவீன இலக்கியத்தின் நுழைவாயில்**

விமர்சகர் எஸ். பொன்னுத்துரை சுவாமிகளைப் பற்றிக் கூறுமிடத்தில்,

இளைஞர் மத்தியில் தற்கால இலக்கியத்தில் ஒரு வகைக் கவர்ச்சியை ஏற்படுத்தியவர் விபுலானந்த அடிகளே ஆவார். அவர் பழைய பண்டித வர்க்கத்தின் பிரதிநிதியாகவே தமிழ் செய்த போதிலும் தற்கால இலக்கியத்துக்குச் சுப்பிரமணிய பாரதியார் இயற்றிய நிறைபங்களிப்பினை முதலிலே இனங்கண்டு எடுத்துரைத்தார்.

**பக்திப் பாடல்கள்**

விபுலானந்தக் கவித்தேனில் விளைந்த பக்தி அமுதம் என்ற நூலில் வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்),

அடிகளாரும் சமகாலப் பக்திப் பாவாணர்களும் என்ற தொடர்பில் பாரதி (1882 - 1921), கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை (1876 - 1934), நாவலியூர் சோமசுந்தரப் புலவர் (1878 - 1953) ஆகியோரையும் அதன் பின்னர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, நவநீதகிருஷ்ண பாரதியார், சூரியநாராண சாஸ்திரியார், இளமுருகனார் முதலியோர் பெயர்களும் இடம் பெற்றுள்ளன.

விபுலானந்தரது பக்திக் கவிதைகளை, பாடல்களைச் சுவைத்த சொக்கனது சுவைநயம்,

> (சுவாமிகளது) பக்திப் பாடல்களைப் படிக்கும் போது சங்ககாலந் தொட்டு அண்மைக்காலம் வரையுள்ள தமிழின் பக்திப் பாடல்கள் யாவற்றையும் படித்து விட்டதாகிய இன்ப அனுபவம் ஏற்படுவது உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை என்று உரைக்கத் தூண்டியது.

**வித்தகரின் எச்சம்**

சுவாமி விபுலானந்தரது மாணவர்களிலே ஒருவர் தற்போதைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன். பேராசிரிய ரவர்கள் தமது குருவில் திறன்களையெல்லாம் தாம் சென்று உரை நிகழ்த்தும் இடங்களில் சொல்லத்தவறுவதில்லை. 'எனது நினைவலைகள்' என்ற தொடரிலே வானொலியில் நிகழ்த்திய உரை உள்ளத்தைத் தொடுவதாகும். மட்டக் களப்பிலே நிகழ்ந்த தமிழாராய்ச்சி மகாநாட்டில் (19, 20, 21, மார்ச் 1976) 'நாவலர் இருவர் - ஒப்பாய்வு' என்ற பொருளில் எழுதிப் படித்த கட்டுரை இரு பெரியார்களதும் பெரும்பணியினைச் செம்மையாக விளக்கு வதாகும்.

> .... நாவலர் என்பது ஆறுமுக நாவலரையே குறித்து வந்தது. நாவலரை முன்மாதிரியாகக் கொண்டு அவருடைய வாழ்வை அடியொற்றித் துறவு பூண்டு தமிழுக்கும் இந்து சமயத்துக்கும் தொண்டாற்றியவர் விபுலானந்த அடிகள். இதனால் இவரைக் கிழக்கிலங்கையின் ஆறுமுக நாவலரின் மறுபிறவியாகக் கொண்டு விபுலானந்த நாவலர் என்று அழைப்பதுமுண்டு.

**விபுலானந்த நாவலரது கல்விப் பணி**

நாவலர் வழியிலே விபுலானந்த அடிகள் கிழக்கிலங்கையிற் பல பல பாட சாலைகளை நிறுவினர். திருகோணமலை இந்துக் கல்லூரியும், கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாசாலையும் இவரது முயற்சியிற் சிறந்த கல்வி நிலையங்களாகத் திகழ்ந்தன. காரைதீவு, கல்முனை, ஆரையம்பதி, கொக்கட்டிச்சோலை முதலிய இடங்களில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

1943 இல் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கு முதன் முதலாகப் பேராசிரியர் பதவியை அமைத்தபோது அதனை ஏற்கும்படி விடுக்கப்பட்ட அழைப்பினை அடிகளார் ஏற்றுக்கொண்டார்.

***(நன்றி: ஈழநாடு, 19.07.1985)***

## 6

# தமிழ்த் தூதர், பேராசிரியர் வண. தனிநாயகம் அடிகள் (1913 – 1980)

இளமைப்பெயர் சேவியர். ஊர்காவற்றுறையில் நடுத்தரக் குடும்பத்திற் பிறந்தார். தந்தையார் நெடுந்தீவைச் சேர்ந்தவர். ஊர்காவற்றுறையிலும், யாழ். பத்திரிசியார் கல்லூரி என அழைக்கப்படும் St. Patricki's College இலும் கல்வி கற்றார். குரு மாணவராகச் சேர்ந்து கொழும்பிலும் ரோமாபுரியிலும் சமயக் கல்வியைக் கற்றுத் தேறிக் குருவானார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கலைமாணி, முதுமாணிப் பட்டங்களைப் பெற்றார். தூத்துக்குடியில் ஆசிரியராகப் பணிபுரிந்தபோது தனிநாயகமெனப் பெயர் புனைந்து கொண்டார். தமிழறிவும், தமிழ்ப்பற்றும் நிரம்பியவராய்ப் பிறநாடுகளுக்குச் சென்று தமிழின் சிறப்புகளையிட்டு உரைகள் நிகழ்த்தினார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றிய பின்னர் மலேசியப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று **இந்தியக் கலைகளின் பேராசிரியராகப்** பணிபுரிந்தார். உலகில் பல நாடுகளுக்கும் சென்று அங்குள்ள பல்கலைக் கழகங்களில் விரிவுரை ஆற்றினார். தமிழ்த்தூது ஒன்றே உலகம் என்ற தமிழ் நூல்களையும் சில ஆங்கில நூல்களையும் எழுதியதோடு இருநூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதினார். **'தமிழ்ப் பண்பாடு'** என்ற ஆங்கில சஞ்சிகையை நடத்தி வந்தார். **'தமிழாராய்ச்சி மாநாட்டுச்'** சிந்தனை இவரது அரிய பணியாகும்.

> கடந்த ஆயிரம் ஆண்டுகளில் தமிழுக்காக அளவிடற்கரிய
> பணியாற்றியவர்களில் தனிநாயகம் அடிகளை விஞ்சியோர்
> எவருமில்லை.

என்கிறார் பேரறிஞர் குலேந்திரன்.

தனிநாயக அடிகளார் சமயகுரு, பேராசிரியர், ஆராய்ச்சியாளர் திட்ட மிட்டுச் செயலாற்றும் சொல் வீரன், உயர்ந்த இடத்தை அளிக்கும் அன்பான நட்பாளன்.

> என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
> தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

என்ற திருமூலர் வாக்கிற் சிந்தையைப் பறி கொடுத்தவர். உரோமாபுரியில் சமய உயர் படிப்பைப் படித்தபோது அங்கு; வீரமா முனிவர் கழகத்தை நிறுவி, தமிழோசை செய்தவர் தனிநாயக அடிகள். 43 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுடன் அவர் பயின்றபோது பரந்த உலக மனப்பான்மையும் குறையாத மொழிப்பற்றும் தமக்கு ஏற்பட்டதாய் அவரே குறிப்பிட்டுள்ளார். இன, மொழி, மத, தேச வேறுபாடுகளின்றித் தமிழையும் தமிழர் பண்பாடு களையும் போற்றி அனைத்துலகிலும் அந்த நிதியங்களை அள்ளிச் சொரிந்தார். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது அவருடைய சிந்தையிற் பூத்த செந்தாமரையாகும். அவர் எங்கு சென்றாலும் அங்கு இந்த அமுத வாக்கை உரைக்கத் தவறியதில்லை.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்த 'ஆயர்றோச்' ஆண்டகை, தூத்துக்குடியில் துறவியாகப் பணிபுரிந்த தனிநாயகம் அவர்களை அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பயிலச் செய்து ஊக்கமும் ஆக்கமும் அளித்தார். தூத்துக்குடியில், 'தமிழ் இலக்கியக் கழகம்' ஒன்றை அமைத்துப் பல நூல்களை அச்சேற்றி வந்தார்.

தமிழ், ஆங்கிலம், இலத்தீன், சிங்களம், இத்தாலியம், பிரான்சியம், ஸ்பானியம், ஜேர்மன், ஹீப்று, கிரேக்கம், சமஸ்கிருதம், போர்த்துக்கேயம், உரூஷியம், மலாய் முதலான மொழிகளில் வல்லவர் தனிநாயகம் அடிகளார். இப்புலமை நலனாலே தமிழிலக்கியங்களையும் கருத்துக் குவியல்களையும் பிறமொழிச் செல்வங்களோடு ஒப்புநோக்குவது அவருக்கு இலகுவாயிற்று. 1951 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழாவில் அவர் ஆற்றிய கன்னிப் பேச்சில் அவருடைய பன்மொழி ஞானம் புலனாயிற்று. அவர் பேசியதாவது,

> ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், இலத்தீன் சட்டத்தின் மொழி என்றும், கிரேக்கம் இசையின் மொழி என்றும், இத்தாலியம் காதலின் மொழி என்றும், பிரெஞ்சு தூதின் மொழி என்றும் கூறுவது ஒரு புடையொக்குமெனின் தமிழ் இரக்கத்தின் மொழி - பக்தியின் மொழி - எனக் கூறுவதும் இனிது பொருந்தும்.

என்று பேச்சில் அவர் குறிப்பிட்டார்.

1950 ஆம் ஆண்டு அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளுக்குச் சென்று கல்விச் சுற்றுலாச் சொற்பெருக்குகளை நடாத்தினார். தமிழ்ப் பண்பாடு Tamil Culture என்ற ஆங்கில முத்திங்கள் வெளியீடு ஒன்றை 1952 இல்

வெளியிட்டார். முதலாவது இதழில் பேராசிரியர்கள் மீனாட்சி சுந்தரனார், வையாபுரிப்பிள்ளை, சிதம்பரநாதச் செட்டியார் முதலிய பேரறிஞர்கள் எழுதியிருந்தனர். இவ்வெளியீடு 15 ஆண்டு காலம் வெளிவந்து பெரும்பணி புரிந்தது. அமெரிக்கா, தென்னமெரிக்கா, ஜப்பான், இங்கிலாந்து, போர்த்துக்கல், கனடா, இத்தாலி, சோவியத் ஒன்றியம், ஜேர்மனி, வியட்நாம், மேற்கிந்தியத் தீவுகள் என்பவற்றுக்குச் சென்று திரும்பினார். இதனால் அவரைத் தமிழ்த்தூதர் தனிநாயகம் அடிகள் எனச் சிறப்புப் பெயர் கொண்டு அன்பர்கள் அழைப்பரா யினர். தமிழர் பண்பாட்டின் குறிக்கோள்களை அவர் நிகழ்த்திய பேருரை யொன்றில் கூறுகிறார்.

> தமிழர் பண்பாடுகள் பலவற்றை நம்மிலக்கியங்களில் தெளிவாகக் காணலாம். பரந்த உலக மனப்பான்மை ஒரு கொள்கை. அதனால் தான் புறநானூற்றில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றும், வள்ளுவத்தில் 'யாதானும் நாடாமால் ஊராமால்' என்றும் குறிப் பிடப்பட்டுள்ளன. விருந்தோம்பல் சிறந்த ஒரு கொள்கை. பிறரன்பு, ஈகை, தமக்கென வாழாப் பிறர்குரியான் எனும் கோட்பாடு என்கடன் பணி செய்து கிடப்பதே எனும் கருத்து, அகத்திணை, புறத்திணை மரபு, மானமென்றால் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை, மனத்தூய்மை, விடாது முயலல் 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற மனநிலை, 'உள்ளுருவதெல்லாம் உயர்வுள்ளல்' எனும் உயர்ந்த இலட்சியம் என்பன தமிழர் பண்பாட்டில் அரிய சில கோட்பாடுகளெனக் கூறலாம்.

தனிநாயக அடிகளார் உலகிலுள்ள 40 க்கு மேற்பட்ட பல்கலைக்கழகங் களில் தமிழின் சிறப்பியல்புகளையும் தமிழர் பண்பாட்டின் சால்புகளையும் எடுத்துச் சொற்பெருக்காற்றியுள்ளார். வேறு நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களில் இந்திய ஆய்வுகள் (Indian Studies) என்றால் சமஸ்கிருதம் பற்றிய அறிவினையே குறிக்கும். தமிழ் இடம்பெறவில்லை. அடிகளின் அயராத முயற்சியால் உலகின் பல பல்கலைக்கழகங்களில் திராவிடஇயல் கற்பிக்கப்படுவதோடு தமிழியல் துறையை அனைத்துலக அறிவுத்துறை யாக்கிய பெருமையும் அடிகளாருக்கே உரியதாகும்.

'திருவாசகம் எனுந்தேன்' எனப் போற்றப்பெறும் திருவாசகத்தில் அடிகளாருக்கு அளவற்ற ஈடுபாடுண்டு. திருக்குறள் போன்ற ஒழுக்க நூல் உலகில் எங்கணும் தோன்றியதில்லை என்பது அவருடைய உறுதியான முடிபு. இறைவனின் கைவண்ணத்தை இயற்கையிலும், மலர்களிலும் கண்டு மகிழ்ந்தார்.

மலர்களைத் தமிழ் மக்கள் தங்கள் வாழ்க்கையில் பயன்படுத்தியது போல் வேறெந்த இனமும் பயன்படுத்தவில்லை என அவர் கூறியுள்ளார். தன்னந்தனியாளாய் இருக்கும் போது தமிழ் நூல்களையே விரும்பிப் படிப்பார். அமெரிக்காவிலும் அவ்வாறே தாம் செய்ததாகக் குறிப்பிடுகிறார்.

அடிகளாரின் கட்டுரைகளில்,

i. சங்க இலக்கியத்தில் இயற்கையின் இடம்

ii. திருவள்ளுவர்

iii. தமிழர் பண்பாடும் நாகரிகமும்

iv. தமிழரின் மானிடவியற் கொள்கை

v. தமிழ் இலக்கிய வரலாற்று ஆய்வுகள்

என்பன குறிப்பிடற்பாலன. செக்கோசிலவாக்கியா, சோவியத் நாடு என்னும் நாடுகளுக்குச் சென்றபோது. **செம்பியன், கண்ணன்** என்ற தமிழ்ப் பெயர்களைக் கூடச் சிலர் தம் பிள்ளைகளுக்கு இட்டு அழைப்பதைக் கண்டு வியப்புற்றார். தென்கிழக்கு ஆசிய நாடுகள் சிலவற்றில் தமிழரின் பூர்விக மரபுகள் இழையோடிக் கொண்டிருப்பதைக் கண்டு கொண்டார். தமிழ்ச் சொற்கள் சிதைந்தும், சிதையாமலும் இன்றும் வழக்கிலிருப்பதை அறிந்து நயந்தார்.

லிஸ்பன் பல்கலைக்கழகத்தில் மறைந்திருந்த தம்பிரான் வளாகம், போர்த்துக்கீச தமிழ் அகராதி என்பவற்றைக் கண்டறிந்து முதல் நூலை அச் சேற்றுவித்தார். வத்திக்கான் நூற்கூடத்தை ஆராய்ந்து **'திருத்தொண்டர், திருமூலர்'** என்னும் பழைய நூலைக் கண்டறிந்தார். பஹிஸ்பட்டன நூற் கூடத்தில் அச்சேறாத பழைய தமிழ் நூல்களும், ஏடுகளும் இருப்பதையறிந்து தமிழுலகுக்கு அறிவித்தார். 1544 இல் அச்சேறிய முதலாவது தமிழ் நூலைப் போர்த்துக்கேய பொருட்காட்சி நிலையத்தில் கண்டறிந்தார். அந்நாட்டில் ஐரோப்பியர் ஒருவரால் எழுதப் பெற்ற முதலாவது இலக்கண நூல் கையெழுத் துப் பிரதியாகவே இன்னும் இருப்பதையும் எடுத்துரைத்தார்.

1964 இல் தனிநாயக அடிகள் மலேஷியப் பல்கலைக்கழகத்தில் இந்திய இயல் பகுதியில் விரிவுரையாளராய் இருந்தபோது இந்தியத் தலைநகரில் கலை, பண்பாட்டியல் ஆய்வாளர்களின் 22 ஆவது மாநாடு நடைபெற்றது. அங்கு உலகு தழுவிய தமிழமைப்பு **'உலகத் தமிழாராய்ச்சி மன்றம்'** உருவாயிற்று. தனிநாயகம் அடிகளாரே அதன் செயலாளர் நாயகமாகப் பொறுப்பேற்க வேண்டுமென்று எல்லோரும் கேட்டுக் கொண்டனர்.

1966 இல் உலகு தழுவிய தமிழாராய்ச்சி மாநாடு கோலாம்பூரிலே நடத்தி முடித்தமை ஓரரிய சாதனை என்றே கூறலாம். 1968 இல் தமிழ் நாட்டில் சென்னையிலும் 1970 இல் பிரான்சு தேசத்தில் பாரிசிலும் அனைத் துலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெற்றன. **நான்காவது மாநாடு 1974** இல் பெரிய புள்ளிகளின் எதிர்ப்பையும் அரசாங்கத் தடைகளையும் தாண்டி யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்குத் தலைமை வகித்த பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன்,

> தமிழ் இலக்கியம் பற்றியோ மொழி பற்றியோ ஆராயும் உரிமை, தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்க்கே உரியது என்ற கொள்கையை இவர் தகர்த்தெறிந்து விட்டார். இப்போது தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ் வரலாறு, தமிழர் பண்பாடு முதலியன பற்றியும் ஆராய்ச்சி செய்கின்ற நிலை பல்கலைக்கழகங்களில் உருவாகி வளர்ச்சி பெற்று வருகிறது.

எனக் குறிப்பிட்டார்.

தமிழியலாய்வில் புதிய மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தும் பிறநாடுகளில் தமிழின் சிறப்பையும் பண்பாடுகளின் உயர்வையும் அறிய வைத்தும், பன்மொழி அறிவால் ஒப்பியற் கருத்துக்களை உரைத்தும் அன்புடனும், பண்புடனும் அறிஞர்களை அணுகியும் இடைவிடா முயற்சியில் ஈடுபட்டும் எழுதியும் உரையாற்றியும் அடிகளார் செய்த பணிகளால் அவர் திருவுருவம் தமிழ் மக்கள் நெஞ்சில் நிலைபெற்றுவிட்டது.

## 7

# ‘செஞ்சொற்கொண்டல்’ சிங்காரவேலன் அவர்கள்

### இளமையில் கவர்ந்தவர்

தருமையாதீனப் புலவர், செஞ்சொற் கொண்டல், கலாநிதி சொ.சிங்கார வேலன் எம். ஏ. பி. எச். டி. அவர்கள், ஈழத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலே பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் 21.05.1973 அன்று காலை பத்து மணிக்குப் ‘‘பக்தி இலக்கியம்’’ என்னும் பொருளிலே சிறப்புச் சொற்பொழிவாற்றினார். அன்றைய உரையினை உள்ளூர்ப் பத்திரிகைகளிலே பிரசுரிக்கவென அப்போது பல்கலைக்கழக புகுமுக வகுப்பிற் பயின்று கொண்டிருந்த என்னை எழுதித் தரும்படி வகுப்பாசிரியர் அறிவொளி த. சண்முகசுந்தரம் கட்டளை பிறப்பித்தார். கலாநிதி சொ.சிங்காரவேலனார் உரையாற்றிக் கொண்டிருந்த போதே நானும் அவரது பேச்சின் சாராம் சத்தைக் குறிப்பெடுத்துக் கொண்டேன். அரிய பல தத்துவங்களை மாணவர் களுக்கு எடுத்து விளக்கிய அவரது உரையில் அன்று கிடைத்த இரண்டு கடவுட் சிந்தனைகளை மட்டும் குறிப்பிட்டுச் சொல்வாம்.

‘தாம் அமுதுண்டு வாழக்கூடிய தேவர்களைப் போலல்லாமல், தான் நஞ்சுண்டும் உலகம் வாழ வேண்டும் என்று வாழ்வித்த பெருங்கருணை இறைவன் கொள்கை’ என்ற கூற்று ஒன்று.

‘தமிழ்மொழியில் பக்தி என்னும் பண்பை நீக்கிவிட்டால் அது ஜடமாகும்; உயிர்த் தன்மையை இழந்துவிடும். பக்திதான் தெளிவு தரும். பக்தித் துறையில் கிடந்து ஆனந்த வாரிதியிற் படிந்தால் புத்தித்துறை தெளியும், வளரும்’ என்பது மற்றையது.

இக்கருத்துக்கள் என் நெஞ்சிலே - இளம் பிராயத்திலே பசுமரத்தாணி போற் பதிந்துவிட்டன. அன்றைய தினம் சிங்காரவேலனாரைக் கண்ட என் கண்கள் இன்று வரை மானசீகமாகக் கண்டு கொண்டே இருக்கின்றன. மனமும் அறிவும் அவரது கருத்துக்களிலே பெரிதும் ஈடுபாடு கொள்ள விழைகின்றன. பின்பு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் (இலங்கை வானொலி)

தமிழ்ச் சேவையில், இந்து சமய நிகழ்ச்சிகள் தயாரிப்பாளராக இருந்தபோது சொற்பொழிவு நிகழ்த்துவதற்குக் கொழும்புக்கு வந்திருந்த சிங்காரவேலனாரைக் காணும் பேறுபெற்றேன். உள்ளம் களி கொண்டேன். என் பால்யப் பருவத்திலேயே அந்த அறிஞர் பெருந்தகையை அறிந்து கொண்டமையினை எண்ணியெண்ணி ஆனந்தம் கொள்கிறேன்.

**வாழ்வுச் சுருக்கமும் வளமார் படைப்புகளும்**

கலாநிதி சொ. சிங்காரவேலன் அவர்கள், 25.11.1933 ஆம் ஆண்டு மா. சொக்கலிங்க தேசிகருக்கும், கயாம்பூ அம்மையாருக்கும் தமிழகத்தில் தஞ்சை மாவட்டம் சார்ந்த திருச்சிற்றம்பலத்தில் ஆறாவது ஆண்மகனாகத் தோன்றினார்; 1953 இல் தமிழில் வித்துவான் ஆனார். 1964 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், மொழியியல் 'டிப்ளோமா' பட்டம் பெற்றார்; 1972 இல் அப்பர் தேவாரத்தில் ஆய்வு செய்து கலாநிதிப் பட்டம் பெற்றார். இவரை மதுரையாதீனம் தருமபுர ஆதீனம், குன்றக்குடி ஆதீனம், காஞ்சிபுரம் தொண்டை மண்டல் ஆதீனம், காஞ்சி காமகோடி பீடம் என்பன சிறப்புப் பட்டங்கள் வழங்கிக் கௌரவித்துள்ளன.

மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் தொடர்புளையும் ஆராய்ச்சித்துறைச் சேவைகளையும் வளர்த்துக் கொண்டுள்ள கலாநிதி சொ.சிங்காரவேலனார், பேச்சுத் துறையில் மட்டுமன்றி எழுத்துத் துறையிலும் காத்திரமான பங்களிப்பினைச் செய்துள்ளார். இவர் 'ஞான சம்பந்தம்' என்ற சமயத் திங்கள் இதழின் முன்னாள் துணையாசிரியர்; 'செந்தமிழிச் செல்வி' ஆசிரியர் குழுவின் உறுப்பினர்; தமிழ், மொழியியல், இலக்கணம், இலக்கியம், சமயத் துறைகள் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் 300 க்கு மேல் எழுதியவர். 22 க்கு மேற்பட்ட நூல்களின் ஆசிரியர் இவர். இவரது ஆய்வுத் துறைகள் இவையெனினும், இவரையே ஆய்வுத்துறையாகக் கொண்டு இவரது படைப்புகள் குறித்து நிகழ்த்தப்பட்டுள்ள பல்கலைக்கழக ஆராய்ச்சி முயற்சிகளால் இவரது புகழும் பணியும் மேலோங்கி நிற்கின்றன எனலாம். 'ஊமைக்குயில்' என்ற இலக்கிய நாடகத்தை ஆராய்ந்து மதுரை அரசினர் பெண்கள் கல்லூரிப் பேராசிரியை பா. பன்னீர் செல்வி, எம். பிஃல் பட்டத்திற்கு (சென்னைப் பல்கலைக்கழகம்) ஆய்வேடு படைத்துப் பட்டம் பெற்றிருக்கிறார். கலாநிதி சொ. சிங்காரவேலனாரின் ஆய்வடங்கல் என்ற தலைப்பில் கும்பகோணம் அரசினர் கல்லூரி எம். ஏ. மாணவர் தி. அசோக் என்பவர், பல்கலைக்கழகத்துக்கு ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்துள்ளார்.

நேர்முக வர்ணனையாளராக இருந்து இவர் இந்திய வானொலியில், திருச்சி, திருநெல்வேலி, பாண்டிச்சேரி வழியாகப் புகழ்பெற்ற திருத்தலங்களில் நடைபெற்ற கும்பாபிஷேக வைபவங்களை நேர்முக வர்ணனை செய்துள்ளார். சபரிமலை ஐய்யப்பன் திருக்கோயில் மகரஜோதி நேர்முக வர்ணனையாளராகத் திருவனந்தபுரம் நிலைய வழி இவர் தொண்டாற்றியிருக்கிறார். (1984) இவரது ஆழ்ந்த சமய, தத்துவ அறிவும், இயற்கையை நோக்கும் பண்பும், இறையுண்மையை எடுத்து விளக்கும் திறனும் தமிழகத்தில் மட்டுமன்றி, ஈழத்திலும் இன்னும் கடல் கடந்த நாடுகளிலும் நன்கு உணரப்பட்டுள்ளன. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் D. Litt. ஆய்வுப் பட்டத்திற்குரிய கண் காணிப்புப் பேராசிரியராக (Supervising Professor) இவரை நியமித்துள்ளது. மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில், ராய.சொ. அறக்கட்டளை விரிவுரை யாற்றிய இவரது சொற்பொழிவு நூல், ''மூவர் தேவாரம்: இரண்டு பார்வைகள்'' என்ற தலைப்புடன் அண்மையில் வெளிவந்துள்ளது.

கலாநிதி சொ. சிங்காரவேலானார் இயற்றியுள்ள நூல்களும் கட்டுரை களும்; பிரபந்தங்களும் நுண்மாண் நுழைபுலத்தினையும் சான்றாண்மை யையும் தெய்வநல ஈடுபாட்டினையும் வெளிப்படுத்துவனவாயமைவன. இவர் அப்பர் அருட் செய்தி (ஆராய்ச்சிக் கட்டுரை), அபிராமி அந்தாதி (உரை), இக்காலத் தமிழியல் (கையெழுத்துப் பிரதி), ஊமைக்குயில் (செய்யுள் இலக்கிய நாடகம், மனோன்மணியம் போன்றது. பாரதிதாசன் பல்கலைக் கழக எம்.ஏ.பாடநூல், (1985 - 86), எட்டுக்குடி முருகன் அந்தாதி, கதிரேச சதகம், கவிதை இன்பம் (இலக்கியக் கட்டுரைகள்), காவிரி வளம் (உரைநடை நூல்) கோடிக்கரைக் கந்தர் கலித்துறை அந்தாதி, சௌந்தரநாயகி அந்தாதி, தமிழ் விடுதூது, திருஞான சம்பந்தர் வரலாற்று ஆராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும், திருமந்திரத் திருமாலை (தொகுப்பு), திருநாவுக்கரசர் தேவராம் (5 ஆம் திருமுறை - உரை), தெய்வம் (கவிதைகள் - தொகுப்பு), புதுமைக்கு (கடிதக் கட்டுரைகள்), புதுமைக்குறள் (110 அதிகாரங்கள், 1110 குறட்பாக்கள்), புள்ளிருக்கு வேளூர் மும்மணிக்கோவை, பெரியபுராணச் சரித்திர வெண்பா மாலை (உரை), மூவர் தமிழ் (ஆராய்ச்சிக் கட்டுரைகள்), வள்ளுவன் என் தோழன் (கவிதைகள்), A Linguistic and Critical Study of Appar Thevaram (Hymns) (தட்டெழுத்துப்படி) அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (1972) சங்கரர் அநுபூதி (ஸ்ரீ காஞ்சி காம கோடி பீடம் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரசுவதி களின் மீது பாடப் பெற்ற - விருத்தயாப்பில் அமைந்த நூல்; (51 பாடல்களைக் கொண்டது) என்பவற்றுடன் ஈழத்துச் சிவத்தலமான காரை நகர்த் திண்ண புரத்தில் உறையும் இறைவன் மீது கார்த்திகேயப் புலவராற் (1819 - 1898)

பாடப்பட்டுள்ள திண்ணபுர அந்தாதிச் செய்யுள்களுக்கு அரியதொரு சித்தாந்த உரையினையும் ''செஞ்சொல் விளக்கம்'' என்ற பெயரில் ஆக்கியுள்ளார்.

**பக்தி இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெறுபவர் 'செஞ்சொற் கொண்டல்'**

'இறையனார் களவியல் உரை' என்னும் நூல், தமிழில் உரைநடை வாய் மொழியாகவும் வரலாறு ரீதியிலும் வளர்ந்து வந்த வரலாற்றினை எடுத்து விளக்குவது. தொல்காப்பியத்திற்கு உரை வகுத்த இளம் பூரணர், பேராசிரியர் நச்சினார்க்கினியர், சேனாவரையர் என்னும் உரையாசிரியர்களும் திருக் குறளுக்கு உரை செய்த பன்னிருவரும் தமிழுரை வளர்ச்சிக்குப் பெருந் தொண்டு புரிந்துள்ளனர். இவர்களது மரபினைத் தழுவியும் பின்பற்றியும் பிற்கால உரையாசிரியர் பலர் இலக்கிய, இலக்கண, சாத்திர நூல்களுக்கு அரிய உரைகளை வகுத்துள்ளனர். 'உரைநடைத் தமிழ்' என்பதும் இன்று வளர்ந்துவரும் நவீன தமிழிலக்கிய ஆய்வுத் துறைகளுக்கு மிகவும் பிரதான மானதாக அமைகிறது. நவீன இலக்கியங்களென அழைக்கப்படும் நாவல், சிறுகதை போன்ற புனைகதைத்துறை முற்றிலும் உரைநடையினா லானவையே.

இலக்கிய விமர்சனம் என்னும் நவீன துறைக்கான பங்களிப்புகளை உரையாசிரியர்கள் பலரும் செய்துள்ளனர். தத்தம் கருத்துக்களை மூலநூற் சார்போடும், துணை நூல் மேற்கோள்களுடனும் எடுத்து விளக்கும் ஒரு நெறி இலக்கிய விமர்சனத்துறையிற் சிறப்புப் பெறும் ஒன்றாகும். அந்த வகையில் பக்தி இலக்கிய உரைவரலாற்றில் கலாநிதி சொ.சிங்கார வேலனார் அவர்களுக்கு முதன்மையானதோர் இடமுண்டு.

**வைத்தீசுவரக் குருக்கள் வழியே வந்த வாய்ப்பு**

ஈழத்துச் சிவத்தலம் ஒன்றின் பேரில் எழுந்துள்ள 'திண்ணபுர அந்தாதி' என்னும் நூலுக்குத் தமிழக அறிஞரும் ஆய்வாளரும் உரையாசிரியருமான கலாநிதி சிங்காரவேலனார் உரை வகுத்துள்ளார் என்ற செய்தி, காரைநகர் க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்களது வாய்மொழியாக எனக்கு எட்டியது. ஈழநாட்டிலுள்ள (வடபுல) முருகத் தலங்களான நல்லூர், மாவிட்டபுரம் கந்தசுவாமி பேரில் எழுந்துள்ள பிரபந்தங்களை எனது முதுகலைமாணிப் பட்டத்திற்கான (எம்.ஏ) ஆராய்சிக் கட்டுரைப் பொருளாக எடுத்து யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர் கலாநிதி

ஆ. வேலுப்பிள்ளை அவர்களது மேற்பார்வையில் ஆய்வு செய்து கொண்டிருந்த வேளையில், குருக்களின் நற்செய்தி பேரானந்தத்தை ஏற்படுத்தியது. பெரிதும் மனம் மகிழ்ந்தேன். எனக்கு அவரளித்த ஊக்கம் என் ஆய்வின் பாதையில் புதியதொரு புத்துணர்ச்சியை ஏற்படுத்திற்று. 'திண்ணபுர அந்தாதி' உரைநூல் ஒன்றினையும் என்னிடம் தந்தார்கள் வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள். முருகப் பிரபந்தங்களில் மூழ்கியிருந்த எனக்குச் சிவன் மீது எழுந்துள்ள அந்தாதியையும் அதன் அற்புத நலங்கனிந்த உரையினையும் படிக்கத் தந்த குருமூர்த்திக்கு என்ன கைம்மாறு செய்வேன்? இறைவன் திருவடிகளை மனம், மொழி, மெய்களாற் தியானித்து, உள்ளக்கிளியில் சிங்காரவேலனாரையும், வைத்தீசுவரரையும் உரு எழுதிப் பூரித்தேன்.

**ஈழத்துப் புலவர் இனிய பணிகள்**

சிவராத்திரி புராணம் (1878) (வரத பண்டிதர், சிவசுப்பிரமணிய சிவாசாரியார்), சிதம்பரசபாநாதபுராணம் (சபாபதி நாவலர்), தட்சிணகைலாச புராணம் (1887) (செகராசசேகரன், பண்டிதர்), திரிகோணாசல புராணம் (1909) (மா.முத்துக்குமாரு), புலியூர்ப்புராணம் (சிவானந்தையர்), புலியூரந்தாதி (1882) (சிவானந்தையார்), புலியூர்யமகஅந்தாதி (மயில்வாகனப் புலவர்), திருச்சிற்றம்பலயமகஅந்தாதி (சபாபதி நாவலர்), திருவிடைமருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி (சபாபதி நாவலர்), திருத்தில்லை நீரோட்டக யமகவந்தாதி (1891) (வேலுசாமிப் பிள்ளை), புலோலிப் பசுபதீசுவரர் பதிற்றுப்பத்தந்தாதி (பத்மாசனியம்மாள்), சிவமாலை (மட்டக்களப்புப் பூபால பிள்ளை), வேதாரணியேசுரர் ஊஞ்சல் (அ.குமாரசுவாமிப் புலவர்), நகுலகிரிப் புராணம் (கா. அப்பாசாமி ஐயர்), ஈழத்துச் சிதம்பர புராணம் (1970) (இளமுருகனார்) முதலியன ஈழத்துச் சிவத்தலங்கள் மீதும் இந்தியச் சிவத் தலங்கள் மீதும் ஈழத்துப் புலவர் பெருமக்களாற் பாடப்பட்டுள்ளவை.

புராணம், அந்தாதி, மாலை, பதிகம், ஊஞ்சல், அம்மானை என்பன பொதுவாகப் பிரபந்த வகைகளுள் அடங்குவன. இவை குறிக்கும் இலக்கண அமைதிகளை விரிக்கிற் பெருகுமென்றஞ்சிப் பக்தியலக்கிய நூல்களுக்கான உரையின் வளர்ச்சி நிலைக்கட்டங்களைச் சுருக்கமாக நோக்கித் திண்ணபுர அந்தாதி உரை வளத்தினைக் கூற விழைவோம்.

வடமொழியில் பாஷ்யங்கள் தமிழில் உரை என வழங்கும் அர்த்தத்திலும் அமைந்து வருவன. 14 சித்தாந்த சாத்திரங்களுக்கான (மெய்கண்ட சாத்திரங் களுக்கு) உரைகள், மூலநூல்களைப் பற்றியறிய உதவும் வழிகாட்டிகளாக வுள்ளன. உரைகள், மூலநூலின் பொருளை வெளிப்படுத்தும் கருவியாகவும்,

மூலநூற் சொற்கள், வாக்கியங்கள் குறிக்கும் உண்மையான கருத்தினைப் புலப்படுத்துவனவாகவும் அமைவதோடு, உரையாசிரியர் கொண்டுள்ள அத்துறை சார்ந்த தெளிந்த புலமையினையும் வெளிப்படுத்தி நிற்பன எனலாம்.

உரையில், தத்துவநூல் ஒன்றினை அதன் கருத்தியல் ரீதியான முதன்மைத் துவம் கருதி அப்படியே பின்பற்றி வருவது ஒரு முறைமை. அதுபோலவே மூலநூல் உரையைத் தழுவியும் எடுத்தாண்டும் உரை வகுக்கப்படலாம். இன்னும் மூலநூலாசிரியரது மேற்கோளையே இட்டும் விளங்கப்படுத்தலாம்.

**திண்ணபுர அந்தாதி உரைத்திறன்**

மூலநூற் கருத்துக்களுக்குப் பிற்காலத்தில் ஆய்வுலகம், அறிஞருலகம் கண்டுள்ள புதிய விளக்கங்களையும், நோக்குநிலைகளையும் வகுத்து உரை யமைக்கும் நெறியும் ஒன்றுண்டு. கற்போனும் உரைவகுப்போனும் ஒன்று படும் நிலையும் பயனடையும் தன்மையும் பிற்கூறிய உரைநெறியினால் உண்டாகின்றன. பின்னைய உரைநெறிக்கு (மூலபாடற் பகுதிகளுக்குத் தமது காலக்கருத்துக்களைக் கொண்டு உரை வகுத்த நெறிக்கு) உதாரணமாகத் திகழ்வது திண்ணபுர அந்தாதி உரை. சமகால ஆய்வுக் கோட்பாடுகள் பொதுளிய புதுமையும் பழமையும் கலந்த செந்தமிழ் உரையாக அமை கிறது. அவ்வுரை ''செஞ்சொல் விளக்கம்'' என்ற உரையின் பெயரில் ஆழமும் நுட்பமும் கனிகின்றன. ஆம்; 'செஞ்சொற் கொண்டல்' தந்த விளக்கம் என்று இரட்டுற மொழிதலாகவும் இதனைக் கொள்ள இடமுண்டு.

அந்தாதி இலக்கியங்கள் பக்தி இலக்கியத் தடத்தில் மிகுந்த சிறப்புள்ள தாய் அமையும் பிரபந்தவடிவமாகும். விஷேடமாக அபிராமி அந்தாதி, அம்பாள் மீதெழுந்த சிறப்பு நூல், அபிராமிபட்டரது கவித்துவம், சக்தி தத்துவத்துடன் இணைந்து செந்தமிழ்ச் சொற்சுவையுடன் மிளிருவது அபிராமி அந்தாதி, இந்நூலுக்கும் கலாநிதி சொ.சிங்கார வேலனார் கருத்துரை ஒன்று செய்துள்ளார். முதற் செய்யுளின் அந்தம் அடுத்த செய்யுள்களின் தொடக்க மாக - ஆதியாக வருவது அந்தாதிப் பிரபந்தங்களின் இலக்கண விதியாகும். இறைவனையோ இறைவியையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அவரைத் துதித்துப் போற்றுதலே இவ்வந்தாதி இலக்கியங்களின் பொதுவான பண்பாகும்.

**இலக்கிய வரலாற்றில் அந்தாதி**

சங்க இலக்கியங்களிலே காணப்பட்ட அந்தாதி கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் முதிர்ச்சி அடைந்துவிட்டது என்று அறிஞர் கருதுவர். காலப்போக்கில் அந்தாதி இலக்கியம் பல்சந்தமாலை, ஒலியலந்தாதி, பதிற்றந்தாதி, நூற்றந்தாதி எனப் பல வடிவங்களில் வளரலாயிற்று. இவற்றைவிட கலியந்தாதி, சிலேடை யந்தாதி, திரிபந்தாதி, யமகவந்தாதி, நிரோட்டக யமக அந்தாதி என்ற வடிவங்களும் அந்தாதி வகையில் எழுந்தன. இவையனைத்தும் அந்தாதி முறையில் அமைந்த செய்யுட்களைக் கொண்ட இலக்கியங்களாகையால் அந்தாதிப் பெயர் பெற்றவை ஆகும். ஆயின், அந்தாதி முறையிற் செய்யுள் களைக் கொண்டு ஒழுகிய போதும் வெவ்வேறு பொருளமைதி காரணமாக வெவ்வேறு பெயர்களால் வழங்கப்படும் இலக்கியங்களும் உள. அவை அட்டமங்கலம், இரட்டை மணிமாலை, இணைமணிமாலை, நவமணிமாலை, நான் மணிமாலை, மும்மணி மாலை, மும்மணிக்கோவை, ஒருபா ஒருபஃது, இருபா இருபஃது, அலங்கார பஞ்சகம் முதலிய பல்வேறு வகையினவாம்.

**தாமே அந்தாதி ஆசிரியர்**

எட்டுக்குடி முருகன் அந்தாதி, கதிரேச சதகம், கோடிக் கரைக் கந்தர் கலித்துறை அந்தாதி, சௌந்தரநாயகி அந்தாதி, தமிழ்விடு தூது, புள்ளிருக்கு வேளூர் மும்மணிக் கோவை, சங்கரர் அநுபூதி என்று, அந்தாதி, சதகம், தூது, கோவை என்ற வடிவங்களைக் கையாண்டு பிரபந்தங்களை இயற்றியுள்ள பேராசிரியர் சிங்கார வேலனார் அபிராமி அந்தாதி, திருநாவுக்கரசு தேவாரம், பெரிய புராண சரித்திர வெண்பாமாலை என்பவற்றுடன் திண்ணபுர அந்தாதிக்கும் பேருரை எழுதியுள்ளார் என்றறியும் போது பேரானந்தம் உண்டாகிறது.

**உரைத்திறன் ஆய்வு**

திண்ணபுர அந்தாதி நூலக்கு உரை எழுதியுள்ள கலாநிதி சொ. சிங்கார வேலனார் செய்யுளுக்கு நேர்ப்பொருளை எடுத்துரைத்தும், அதற்கு விளக்கம் எழுதியும் தமது பணியினைத் திறம்பட நிறைவு செய்துள்ளார். விஷேடமாக, வேண்டிய விடத்துத் தத்துவ மரபினை விரித்துரைத்தும், கடவுட் பண்பினை ஆதாரபூர்வமாக நிலைநிறுத்தியும் எழுதும் உரைப்பாங்கு படிப்போர்க்குப் பெருவிருந்தாயமைகிறது. சொ.சிங்காரவேலனார் இறைவனுண்மையினை மெய்ப்பிக்கும் திறன் மிகுந்த உயர் நெறியுடன் அமைத்துள்ளார். தமது கொள்கைக்கு அனுசரணையாக எடுத்தாண்டுள்ள உயர் தனிப் பக்தி நூல் களிலிருந்து அவரது ஆய்வுக் கண்ணோட்டத்தின் விசாலம் புலப்படுகிறது.

சான்றுகள் காட்டி நிற்கும் தெய்வ தத்துவ விசாரங்களையே ஒவ்வொரு பாடலின் உரையிலும் விவரிக்கிறார். 'திண்ணபுர அந்தாதி உரைவளம்' என்ற கடலிலே ஆழ மூழ்கினால் அரும்பெரும் முத்துக்களை வாரி எடுத்துக் கொண்டு வந்துவிடலாம். ஆயினும், வேலனாரின் கைவண்ணமும். கருத்து நயமும், எடுத்துக் காட்டுமிடமும் குறித்து மூன்று நான்கு இடங்களை மட்டும் மாதிரி உரைப் போக்கினுக்குச் சான்றாக எடுத்துக் காட்டுவோம்.

திண்ணபுர அந்தாதி உரைநூலில் 22 ஆம் பக்கத்தில் இடம்பெறும் இறைவன் பெயரைக் கூறும் முறைமை பற்றிய விளக்கம் மனங்கொள்ளத் தக்கது. சிவபிரான் திருப்பெயரைக் கூறுதல் பக்தியோடு நிகழ்தல் வேண்டும். நெஞ்சொன்று நினைக்க நாவொன்று கூற என்ற நிலை மெய்ப்பயன் தாராது. நெஞ்சொன்று நினைக்க நா நவிலலே மெய்ப்பயன் தரும் என்பது, 'பெருகும் அன்பின் அறைவார்' என்பதனால் விளக்கப்பட்டது என்று உரை வகுக்கிறார் கலாநிதி சொ.சிங்காரவேலனார்.

அருணகிரி நாதப்பெருமான், மானுடர்களது குற்றங்களையும், அவர் தம் இச்சைகளையும், இயல்புகளையும் தம்மீது ஏற்றிப்பாடியுள்ள மரபினை அழுத்தியுரைக்கும் உரையாசிரியர், அருள் நூல்கள் பலவற்றிலும் இத்தகு எண்ணற்ற இடங்களைக் காணமுடியும் என்று உணர்த்துகிறார். 'தற்சிறுமை காட்டி அருள் வேண்டல்' என்னும் தலையங்கத்துடன் வரும் பாடலின் விளக்கவுரை கூர்ந்து அவதானித்தற்குரிய நுண்மைத் தத்துவத்தை விளக்கி நிற்பது.

'உலகத்தில், பெரும்பாலானோரின் குற்றங்களைத் தம் மீது ஏறிட்டுக் கொண்டு வருந்துவது மெய்மைச் சான்றோர் இயல்பு. நம் அருள் நூல்களில் இத்தகைய எண்ணற்ற இடங்களைக் காணலாம். அருணகிரிநாதரின் திருப் புகழிலும், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், முதலிய நூல்களிலும் இத்தகைய பகுதிகள் பல உள. இவற்றை அகச்சான்று என்று கொண்டு மயக்குவோர் உண்மை உணரத் தவறியவராவர்' 'வேனிலார் மலர்க்கணைக்கும் வெண் ணகைச் செவ்வாய்க்கினிய பானலார் பனிமொழிக்கும் பதைத்துருகும் பாழ் நெஞ்சே' என வரும் திருவாசகத்தினால் மணிவாசகர் பெண் விருப்பினர் என்று கூறும் இக்காலத்தில், கலாநிதி சொ. சிங்காரவேலனாரின் திண்ணபுர அந்தாதியின் 17 ஆவது பாடலுக்கான உரையின் விளக்கம், பக்தியிலக்கியம் படைத்த அருளாளரது பேரியல்பையும், பரோபகார சிந்தனையையும் புலப்படுத்துவதற்கான மெய்மைச் சான்றாக மிளிர்கிறது. திண்ணபுர அந்தாதிச் செய்யுளிலே 'தையல் நல்லார் மயல் தங்கி மிகத்திரிதரும் எதற்கருள் செய்கு வையோ' என்று பாடியுள்ளமைக்குப் பொருள் விரிக்கின்றபோது,

*சிங்கார மடந்தையர் தீநெறி போய்*
*மங்காம லெனக்கு வரந்தருவாய்* *(கந்தரனுபூதி - 34)*

என்பதனையும்,

*கட்டுண்ட சொல்லியர் மெல்லியர்காமக்கலவிக் கள்ளை*
*மொட்டுண் டயர்கினும் வேல் மறவேன்* *(கந்.அல.37)*

என்பதனையும்,

எடுத்துக்காட்டித் திருப்புகழில் பெரும்பாலான பாடல்களில் வரும் இத்தகு குறிப்புகளையும் ஒத்து நோக்கி, இவை உலகத்தார் குறைகளைத் தம்முடைய பெருங்கருணைத் திருவுள்ளத்தினாலே தம்மேலிட்டுக் கொண்டு பேசியவை என்று கொள்க. இவ்வாறே இந்நூலாசிரியரும் 'தையல் நல்லார் மயல் தங்கி மிகத்திரிதரும் ஏற்கருள் செய்குவையோ, என்று கூறியதைப் பொருள் கொள்க எனக் காட்டியுள்ளார்.

**உரைநடைத் தமிழ் வரிசையில்**

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், காசிவாசி செந்திநாதையர், திரு.மு.திருவிளங்க தேசிகர், சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர், மகாவித்துவான் சி.கணே சையர், பண்டிதர், தென்கோவை ச.கந்தையபிள்ளை, சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம், சுவாமி விபுலானந்தர், பண்டிதமணி க. சு. நவநீதகிருஷ்ண பாரதியார், நாவலியூர் க. சோமசுந்தரப் புலவர், வித்துவான் ந. சுப்பையா பிள்ளை, இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை, சங்கநூற் செல்வர் க. அருளம்பலவனார், பேராசிரியர் க. கைலாசநாதக் குருக்கள், ஆத்மஜோதி நா. முத்தையா, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் மு. கந்தையா முதலான ஈழத்து அறிஞர்களும் வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயக்கர், திருப்பாதிரிப் புலியூர் ஞானியர் சுவாமிகள், மறைமலையடிகள், பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார், சிவக்கவிமணி சி. கே. சுப்பிமணிய முதலியார், சைவப் பெரியார் க. வெள்ளைவாரணனார், புலவர் முருகவேள், மகா வித்துவான் ச. தண்டபாணி தேசிகர், திருமுருக கிருபானந்தவாரியார், குன்றக்குடி அடிகளார் முதலான தமிழக அறிஞர்களும் சமய உரைநடை வளர்ச்சிக்குப் பெரிதும் பங்களிப்புக் களைச் செய்துள்ளனர். ''திண்ணபுர அந்தாதி'' உரை ஆசிரியரின் பணியையும் இந்தப் பட்டியலில் இணைக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது.

மறைமலையடிகள், மகாவித்துவான் ச.தண்டபாணி தேசிகர் முதலானோர் வழிவந்த உரைநடைச் சிறப்பு கலாநிதி சொ. சிங்காரவேலனாருக்குண்டு

என்பது மட்டுமன்று, அவருக்கு வாய்த்த ஆசிரியர்களது ஆளுமை வீச்சும், அவரது எழுத்துப் பாணியில் படித்துள்ளதென்பது ஒரு சிறிதும் மிகையாகாது. மகாவித்துவான் ச.தண்டபாணிதேசிகர், பன்மொழிப்புலவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், முத்து மாணிக்கவாசக முதலியார், இரட்டைக் கலாநிதி ச. அகத்தியலிங்கனார் முதலியோரிடம் கலாநிதி வேலனார் கல்வி பயின் றுள்ளார்: அவர்கள் ஆசிரியர்கள்.

**புலமை நலம்**

உரையாசிரியர் சொ. சிங்காரவேலனாரது புலமை நலன் வெளிப்பாடு, திண்ணபுர அந்தாதியின் உரை மூலம் புலப்படுகிறது. இலக்கிய, இலக்கண, சமய, தத்துவ நூல்களைக் கசடறக் கற்ற தன்மையும், சாதாரண மக்கள் வாழ்வியலில் வழங்கும் உண்மைகளை விளக்கங்களாகக் கையாளுந் தன்மையும் பேராசிரியர் சிங்காரவேலனாரைச் சான்றோன் நிலைக்கு உயர்த்தி விட்டுள்ளன. அவரது திண்ணபுர அந்தாதியுரை அறிவுலகிற்கும் ஆத்மீக உலகிற்கும் கிடைத்த பெருநிதியம்; சைவ இலக்கியத்திற் பின்பற்றத் தக்க சிறப்பிடம் பெறும் முன்மாதிரிப் பணி, திண்ணபுர அந்தாதி உரையில் செய்யுள்நயம், கவிதை வளம் என்பவற்றைக்கு விவரிக்கும் கலாநிதி சொ. சிங்காரவேலனார் அந்நூலைப் படிப்போரது சிந்தனைச் சுதந்திரத்தை அங்கீகரித்துத் 'தமது குறிப்புரைகளுக்கும் மேலாக ஆய்வு செய்ய வல்லோர் கண்டுணர்ந்து ஓர்க' என்று திறந்த மனத் திண்ணியராய் உரைத்திருப்பது தன்னடக்கத்துடனான இவரது பெருமைக் குணங்களை வெளிப்படுத்திக் காட்டுவதாகும். 'சமய நூற் கருத்துக்களை ஆங்காங்கு வைத்து இழைத்த வைர மணிமாலை போல இவ்வந்தாதி நூல் விளக்குதலை, மேலும் நுண்ணிதின் ஆய்ந்து நோக்கி இன்புறுக. அதற்கு நெறிகாட்டுவதே இவ்வுரைக் குறிப்பு என்பதை ஓர்க' (பக்.70) என்பது அவரது வாசகங்கள்.

தமிழிலக்கியத்தில் - குறிப்பாகச் சங்க இலக்கியங்களிற் பேசப்படும் 'நெல்லிக்கனி' சமய இலக்கியங்களிலும் பரவி இடங்கொண்ட நயத்தினைக் கலாநிதி சொ.சிங்காரவேலனார் அழகுற எடுத்துக் காட்டுகிறார். ''நீடு வாழலாம்'' என்னும் பொருளுடன் அதியமான் ஔவையார் வரலாற்றுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ள 'நெல்லிக்கனி' மணிவாசகர், சுந்தரர், திருமூலர் போன்றவர்களாலும் உணர்ந்து உணர்த்தப்பட்டுள்ளது என்றதை உரை யாசிரியர் கண்டு காட்டுகிறார். 'நெல்லிக்கனி' என்ற தமிழ் பதத்திற்குரிய வடசொல்லான 'ஆமலகம்' என்பதனைத் திண்ணபுர அந்தாதி (87 ஆவது செய்யுள்) குறித்துள்ளது.

'ஆமலகம்' என்ற பொருளிலே சிவனைச் சுட்டிய மூல நூலாசிரியரது வடமொழிப் புலமையும், அதன் பின் உரை வகுத்த சிங்காரவேலனாரின் நுண்ணிய கூர்த்த மெய்ஞ்ஞானமென விளங்கும் தோக்கலாற் பெற்றதும், பின்னர் தமிழ் விளக்கமுற்றதுமான அருமையான எடுத்துக்காட்டுகளையும் நோக்கும்போது, நூலின் அருமையில் பெருமிதங் கொள்ளும் அளவிற்கு உயர்ந்து நிற்கின்ற தன்மையைக் காணமுடிகிறது. இப்படியான எடுத்துக் காட்டுகளினால் பேராசிரியர் கலாநிதி சொ.சிங்காரவேலனார் அவர்களது நோக்கிய கண் இமையாத நோக்குத் தெரிய வருகிறது. உரை (பக்.145) எழுதும்போது மணிவாசகர், 'நெல்லிக்கனி' என்று இறைவனைப் பாடியமை காண்க. இவ்வாசிரியர் (திண்ணபுர அந்தாதி ஆசிரியர்), 'ஆமலகம்' என இதனையே வட சொல்லாற் குறித்தனர். 'தடக்கையின் நெல்லிக்கனி காயினர்' (அண்டப்பகுதி - 162) என்று மணிவாசகரே அங்கையுள் நெல்லியாகத் தமக்கு ஆண்டவன் ஆயினர் என்று பாடியமையும் ஒப்பு நோக்குக.

*சிந்தித் தெழுவார்க்கு நெல்லிக்கனியே* *(சுந்தரர் தேவா. 4:3)*

*அங்கை நெல்லியின் பழத்திடை யமுதே* *(மேலது, 54:3)*

*மெய்த்தவத் தானை விரும்பும் ஒருவர்க்குக்*
*கைத்தலஞ் சேர்தரு நெல்லிக்கனி யொக்கும்*
*சுத்தனை* *(திருமந்திரம் - 2992)*

என வருவனவற்றையும் நோக்கியுணர்க. இறைவனின் இனிமை இவ்வாறு உருவகத்தான் அருளாளர்களால் விளக்கப்பட்டமை காண்க'' என்று குறிப்பிட்டுள்ளார்.

**அகத்திணை மரபு விளக்கத்திறன்**

திண்ணபுர அந்தாதியின் உரைநயத்தில் மற்றுமோர் சிறப்பம்சம், சங்க அகத் தினை மரபும், கோவை இலக்கியத்தின் அகப்பொருள் மரபும் பக்தி இலக்கி யத்தின் அகப் பொருள் மரபும், சங்கமித்துள்ள அகப்பொருட் கற்பனை களை எடுத்துரைத்துள்ளமையாகும். பாடல்கள் ஒவ்வொன்றினுக்கும் இடப் பட்டுள்ள தலையங்கங்கள் உரையாசிரியருடைய சைவப் பற்றையும் அகத் திணை இலக்கிய ஆட்சியையும் பறைசாற்றி நிற்கின்றன. அன்னம் விடுதூது (செய்.7), தூது அனுப்பியமை நவின்றிரங்கல் (செய்.23), நாணிக் கண் புதைத்தாளைக் கண்டு தலைவன் நவிலல் (செய்.47), வண்டோச்சி மருங் கணை(த்)தல் (செய்.96) என்பன அவற்றுட் சிலவாகும்.

**மேற்கோளாட்சி**

திண்ணபுர அந்தாதி உரைச்சிறப்புகளில் மேற்கோட் செய்யுள்களுக்கு வழங்கப் பட்டுள்ள இடம் குறிப்பிடற்பாலது. கந்தபுராணம், திருப்பரங்கிரிப் புராணம், கூர்மபுராணம், திருவிளையாடற்புராணம், பெரியபுராணம் என்ற புராணங் களிலிருந்து மேற்கோள்கள் காட்டியதுமன்றி, திருவாசகம், திருமந்திரம், திருக்கோவையார், திருக்குறள், திருமுறைகள், கல்லாடம், சிவஞான சித்தியார், நம்பியகப் பொருள், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், திருவருட்பயன், தாயுமானவர் பாடல்கள், காசிரகசியம், திராவிடப் பிரகாசை என்பவற்றிலிருந்து பாடற் பகுதிகளும் உரைப் பகுதிகளும் எடுத்தாளப் பட்டுள்ளமை கவனிக்கப்பட வேண்டிய அம்சம்.

திண்ணபுர அந்தாதிக்குக் கலாநிதி சொ.சிங்காரவேலனார் எழுதிய உரையின் மூலம் பழஞ் செய்யுட்கள் பேணல் (Preservation) போற்றப் பட்டுள்ளது. செய்யுள்களைச் சிறப்பாக எடுத்தாண்டு, தமது கருத்துகளை அழுத்தி வலியுறுத்துவதனால் அவை காலத்தாற் பேணப்படுவனவாயும் விளங்குகின்றன. அடிப்படையான தத்துவங்களை விளக்குவதற்கு எடுத் தாளப் பட்டிருக்கும் மேற்கோள்கள், மிகவும் ஒத்திசைத் தன்மை கொண்டன வாய் அமைந்துள்ளன. பொது மேற்கோள், சிறப்பு மேற்கோள், ஒப்பியலறிவை நல்கும் மேற்கோள் என மூன்று வகையாகப் பாகுபடுத்தி இந்நூரையிலுள்ள மேற்கோள்களை ஆராயவும், உரையாசிரியரது உள்ளக்கிடக்கையில் உரு வான கருத்துக்களை முழுமையான உணர்வுடன் புலப்படுத்திக் காட்டும் நடையோட்டம், மொழிநடை, சொல்லாட்சி, தொட ராக்கம், வாக்கியக் கட்டமைப்புகள் என்பனவற்றில் ஆசிரியருக்குள்ள மேதைமைப் பண்புகளை அறியவும் திண்ணபுர அந்தாதியின் உரை வகை செய்கிறது.

திருநாவுக்கரசர் அருளிய ஐந்தாந் திருமுறைக்குக் கலாநிதி சொ.சிங்கார வேலன் அவர்கள் வரைந்துள்ள உரை வளத்தையும் ''அப்பர் தேவாரத்திறன்'' ''திருஞானசம்பந்தர் தேவாரத் திறனாய்வு'' பற்றிய ஆய்வு வளத்தையும், அப்பர் தேவாரத்துக்கு ஆங்கிலத்தில் அவர் தீட்டியுள்ள, பி. எச். டி. பட்டத் திற் கான ஆழ்ந்த ஆய்வேட்டின் நுட்பத்தையுங் கருதியே, காஞ்சிப் பரமா சாரியார் ''திருமுறை உரைமணி'' என்ற விருதினை அவருக்கு வழங்கியுள்ளார் என்று இவ்விடத்துக் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

**தோற்றமும் ஏற்றமும்**

'செஞ்சொற்கொண்டல்', 'தருமையாதீனப் புலவர்', 'தமிழாகரர்', 'திருமுறை உரைமணி', 'திருமுறைச்செம்மல்' என்ற சிறப்புப் பட்டங்களைப் பெற்ற கலாநிதி சிங்கார வேலன் சாதாரண உயரமானவர்; பொது நிறம் உடையவர் நடு உச்சி வார்ந்து தலையை வாரிவிட்டுக் கொள்பவர். பரந்த முகமும், விரிந்த அகன்ற நெற்றியும் அவரை அறிஞருலகில் தண்மதி என விளங்கச் செய்து கொண்டிருக்கும், பேசுவது போலவே எழுதுபவர் கலாநிதி சிங்காரவேலன்.

*உள்ளத்தாற் போற்றி உரையாற் பரவிநிதம்*
*உள்ளொளியால் வாழ்க உலகு*

என்பது தொடங்கி 1100 குறட்பாக்களில் 20 ஆம் நூற்றாண்டின் கலை, இலக்கிய வாழ்வியலைக் குறளோவியமாக்கியவர் இவ்வாசிரியர்.

இவர் படைத்துள்ள இலக்கிய நாடகம் - ''ஊமைக் குயில்'', 20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ் நாடகக் காப்பியங்களுள் ஒன்று. சேக்ஸ்பியர் பாணியில், மனோன்மணியம் போன்று ஐந்து அங்கங்களில் அமைக்கப்பட் டுள்ள இந்நாடகம், இலக்கிய நயம் பொதிந்தது; தமிழக அறிஞர்கள் பலரும் வியந்து பாராட்டும் நலம் உடையது. பேரறிஞராக விளங்கும் கலாநிதியை ஒரு சிறந்த கவிஞர் என்னும் அடையாளங் காட்டுவது இவ்விலக்கியப் படைப்பு எனலாம்.

நூல், உரை, போதகாசிரியர் ஆகிய மூவகை ஆசிரியராகவும் நம் பேராசிரியர் விளங்குகிறார். ஆயிரக்கணக்கான மாணவர்களையும் நூற்றுக் கணக்கான ஆய்வு மாணவர்களையும் உருவாக்கி வரும் கலாநிதி சிறந்த உரையாசிரியர் என்று உற்றுணரத் திண்ணபுர அந்தாதி உரை, தக்க சான்று ஆகும் என்று கூறிட விழைகிறேன்.

அகவாழ்வினுக்கும் புறவாழ்வினுக்கும் வழிகாட்டியாய் மிளிரும் பேராசிரியர், கலாநிதி சொ.சிங்காரவேலனார், இறைபணியில் பீடெய்திப் புகழும், சிறப்பும் வளமும் பெற்றுப் பல்லாண்டு வாழ ஈழத்துச் சிதம்பர நடராஜன் திருவடிகளை மன, மொழி, மெய்களால் வழுத்துகிறேன்.

*தருமையெனுந் தவச்சுனையின் பாலைமாந்தித்*
*தண்டரளத் தமிழமுதக் கடலையுண்டு*
*பெருமைதிகழ் திருமுறையாஞ் சோலைமேவிப்*
*பேசரிய மெய்கண்டார் மலையும்ஏறி*
*ஒருமையுடன் ஈழநாட்டுப் பெருமைகண்டே*
*உள்ளமெல்லாம் ஒளிவெள்ளம் பாய்ச்சுங்கொண்டல்*
*திருவருள்சேர் சொன்மாரி வாரி நல்குஞ்*
*சீர்மைதிகழ் சிங்காரவேலாய் வாழி!*

# 8

## பக்கம் சாராத திறனாய்வாளர்கள்

வாழ்க்கையைப் பற்றிய நுண்ணறிவு வாய்க்கப் பெற்றவர்கள் சித்தர்கள். 'பாம்பின் கால் பாம்பறியும்' என்பார்கள். யோகியை யோகியே உணருவான். சிவன் யோகி. அவனது தன்மைகளுடன் இரண்டறக் கலந்தவர்கள் சிவ யோகிகளே. சிவ தத்துவம் என்ற செழும் பொருளைத் துருவியாராய்ந்து மெருகு கொடுத்துப் புரிய வைத்தார்கள். மறை மொழி எனத்தகும் உட் கிடையான கருத்துப் புலனாகாத சொற்களால் ஆணையிடும் நிறைமொழி மாந்தர்கள் சித்தர்கள்.

நாம் இவர்களை ஏளனம் செய்து இழிவுபடுத்துகிறோம். ஆனால் அவர்கள் அதனையும் கண்டு சிரித்து விட்டுச் செல்கிறார்கள். முற்றுமுணர்ந்த நிலையில் ஆனந்தம் பிறப்பதுதான் சித்தர்களது புன்முறுவலுக்குக் காரணம் என்பதனை நாம் புரிந்தொழுகுதல் வேண்டும்.

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் அடங்கிய நினைப்பிலேயே சித்துக் கைகூடும்.

சாயுச்சிய நிலையிலேயே சித்துக் கைகூடும் என்பார்கள். சித்தாந்திகள். சித்ததேஸ்வரன் என்று சிவன் அழைக்கப்பட்டான். நற்பேறு என்பது சித்தி என வழங்கப்படும். விழுமிய நல்வாய்ப்பினைப் பெற்றவர்கள் சித்தர்கள்.

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம் வித்திகி ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களும் தொழிற்பட யோகசாதனை பெற்றுச் சித்தியடைந்த ஞான வான்கள் சித்தர்கள். எனவே, 'பக்தர் சித்தராதல் உண்டு. சித்தர் பக்தராதல் இல்லை' என்ற தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரது கருத்துச் சிந்திக்கத் தக்க தொன்று.

கடவுளைக் காண முயல்பவர்களைப் பக்தர்கள் என்றும் கண்டு தெரிந் தவர்களைச் சித்தர்கள் என்றும் குறிக்கலாம். ஞானம் என்பது பேரறிவு. பேரறிவுடையவனே ஞானி. பக்தர் ஞானி ஆதலும் சித்தர் ஞானி ஆதலும் கூடும்.

**தமிழ்நாட்டுச் சித்தர்கள் சிலர்**

| | |
|---|---|
| அகத்தியர் | கருவூரார் |
| போகர் | தேரையர் |
| கோரக்கர் | குதம்பை |
| கைலாசநாதர் | பாம்பாட்டி |
| சட்டை முனி | தன்வந்திரி |
| திருமூலர் | பதஞ்சலி |
| கொக்கணர் | வியாக்ரபாதர் |
| வாசமுனி | குக்குடநாதர் |
| கூர்மமுனி | சனகர் |
| ரோமரிஷி | சனாதனர் |
| சட்டைநாதர் | சனந்தனர் |
| இடைக்காடர் | சனற்குமாரர் |
| புண்ணாக்கீசர் | |

**ஈழத்துச் சித்தர்கள்**

| | |
|---|---|
| கடையிற் சுவாமிகள் | சடைவாத சுவாமிகள் |
| பரமகுரு சுவாமிகள் | ஆனந்த சடாட்சர குரு |
| குழந்தைவேற் சுவாமிகள் | செல்லாச்சி அம்மையார் |
| அருளம்பல சுவாமிகள் | தாளையான் சுவாமிகள் |
| யோகர் சுவாமிகள் | மாகாதேவா சுவாமிகள் |
| நவநாத சித்தர் | சடையம்மா |
| பெரியானைக் குட்டி சுவாமிகள் | நவநாதசித்தர் |
| சித்தானைக் குட்டி சுவாமிகள் | நயினாதீவுச் சுவாமிகள் |

சித்தர்கள் அட்டமா சித்திகளில் வல்லவர்கள், அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம், என்பன எண் வகைச் சித்திகள்.

தமிழ்ப் புலமையில் ஈடுபட்டவர்கள் சித்தர்கள். அவர்களது பணிகளை மறவாது காப்போம்.

சித்தர்கள் மனத்தினையடக்கிய முனிவர்கள், சித்து எனும் படியான அற்புதம் வாய்க்கப் பெற்றவர்கள். புலனடக்கத்தின் பாடப்பட்ட ஒடுங்கு தலைப் பயிற்சி செய்து அதனை அடிப்படையாகவொரு அற்புத நிலையை எய்திய பழுத்த ஞானிகள் அவர்கள்.

சித்து என்னும் மந்திர வித்தை சித்தர்களது நடைமுறை வாழ்வை இயக்குவதாகிறது. விசரர்களாகவும் மூளையற்றவர்களாகவும் பிறரால் கணிக்கப்படும் இயல்பினர்.

உலகியலின் செயல்கள் அனைத்தும் சித்தர்களது இயக்கத்திற்கும் உட்பட் டிருப்பதனைக் காணலாம்.

சித்தர்களது தத்துவம் தமிழ் நாட்டுக்குத் தனித்துவச் சிறப்பினைக் கொடுப்பது. சித்தால் வித்தை செய்து பெரிய பெரிய தத்துவங்களையெல்லாம் சுருங்கிய வாக்கியங்களில் சித்தர் பரிபாஷைகளில் சமூகத்துக்குத் தந்த தத்துவ மேதைகள் சித்தர்கள்.

சித்தர்களது நடைமுறையில் காணாத பொருள்கள் இல்லை. உலகியற் சார்பான சகல காரியங்களையும் ஈடுபாடு கொண்டு இயங்கிய சித்தர்கள் அருளியல் காரியங்களான தியானம், (யோகம்) சமாதி, வைத்தியம், சித்தாந்தம் போன்றவற்றிலும் கைதேர்ந்து பாண்டித்தியம் பெற்றவர்களாகத் திகழுகின்றனர்.

சித்தர்கள் புறவுலக வாழ்வு வாழ்வதோடு அகவுலக ஈடுபாடு கொண்டு அடங்கியவர்கள்.

புறச் சீர்திருத்தமே சித்தர்களது பெருநோக்கமாகவிருந்த போதிலும் அச்சீர்திருத்தத்தின் அவசியத்தையும் அமைதித் தன்மையின் திவ்ய பயன் பாடுகளையும் அழுத்தியுரைத்த பெருமை சித்தர்களுக்கேயுண்டு.

யோகிகள், ரிஷிகள், முனிவர்கள், சாமியார், மகான்கள் எனப் பல்வேறு நாமங் கொண்டழைக்கப்படும் ஞானவான்களான சித்தர்கள் தொடாததுறையே இல்லை எனலாம்.

**அவர்களது அனுபவத்தின் தொகுப்புகளை**

விதி அனுபவம்

உயிர் அனுபவம்

அருள் அனுபவம்

மரண அனுபவம்

ஆத்மானுபவம்

ஞானனுபவம்

இறைக்காட்சி அனுபவம்

இறைவனோடு ஐக்கியமாகும். சச்சிதானந்த அனுபவம் எனப் பாகுபாடு செய்து ஆராயலாம்.

ஆத்ம சாதனையால் ஆன்மீக அனுபவம் பெறுபவர்கள் சித்தர்கள். நெருங்கியிருப்பவர்களது குறைகளைக் களைந்து புனிதப்படுத்தும் வல்லமை சித்தர்களிடமுண்டு.

**சித்தர்கள் விட்டுச் சென்ற அருநிதியங்கள்**

சித்த வைத்தியம்

இரச வாதம்

மாந்திரிகம்

சாமுத்திரிகா இலட்சணம்

***(நன்றி: தினகரன், 13.08.1985)***

# 9

# ஏழாலையும் ஈழத்திலக்கிய வித்துவப்புலமை நெறியும்

**முகவுரை**

ஏழாலையோடு தொடர்புடைய ஈழத்திலக்கிய வித்துவப் புலமைநெறியானது பல்துறை சார்ந்ததாயும், பன்முகப்பட்டதாயும் பக்குவமுடையதாயும் கணிப் பிடத்தக்கதாயுள்ளது. 'ஏழாலை' என்னும் (2003) நூலிலே இக்கட்டுரை யாளரின் ஆசிரியரும் 'ஆத்மஜோதி' எனும் பெயரால் உலகெங்கும் அறியப் பட்டவரும், ஞான வள்ளலும் அதிபருமான நாகமணி முத்தையா அவர்கள் எழுதும் குறிப்புகள் அறிமுகவுரையாக அமைவது முற்றிலும் பொருந்து வதாகும். இக்கட்டுரையாளர் நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தி யாலயத்தில் படித்தபோது வகுப்பாசிரியராகக் கற்பித்த பேராசான் 'ஆத்ம ஜோதி' நா. முத்தையா அவர்கள்.

> ஏழாலை 15 சதுரமைல் பரப்புடையது. 8 பாடசாலைகள் உள. மேற்கு எல்லை மல்லாகம் புகையிரத நிலையமாகும். தெற்கு எல்லை சுன்னாகம் புகையிரதநிலையம். 2 மைல் பலாலி விமான நிலையம். பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அண்மையில் உண்டு. இரு மகான்களின் சமாதிகள் உள்ளன. தெளிந்த அறிவுடையோர் வாழும் ஊர்; பாமர மக்களும் பண்டிதத் திறமை பெற்றிருந்தனர். சுருட்டுத் தொழிற்சாலைகளிலேயே பாரதமும், இராமாயணமும் வாசிக்கப் பட்டன. அழுக்கு நெஞ்சமற்ற மக்கள் வாழும் ஊர். ஒரு கமக் காரனுக்கு உதவியாக எந்தெந்தத் தொழிலாளிகள் அத்தியாவசியமோ அத்தனை தொழிலாளரும் கமக்காரரைச் சூழ வாழ்ந்த பெருமை ஏழாலைக்கு உண்டு. தச்ச ஒழுங்கை, கொல்ல ஒழுங்கை, வண்ணா கடவை போன்ற பெயர்களே அவற்றை இன்றும் மெய்ப்பித்துக் கொண்டிருக்கின்றன. பழக்கத்தைப் போன்று நல்லதும் இல்லை. பழக்கத்தைப் போன்று கெட்டதும் இல்லை.

(2006:15) என்கிறார். மெய்யியல், இலக்கணம், இலக்கியம். கணிதம், விஞ்ஞானம், மறை ஞானம், வைத்தியம், தத்துவம், வடமொழிப் பாண்டித்தியம்

- விற்பன்னம்; அகராதி; பதிப்புத்துறை, உரைவளம், கவித்துவம், மனனம், ஆங்கிலப் புலமை நலன், திறனாய்வு, ஆக்க இலக்கியம், பிரபந்தமியற்றும் புலமை, பிரசங்க மரபு, சொற்பொழிவாற்றுந் திறன், ஆசிரியத்துவம், செபம், தியானம் என்னுந் துறைகளிலே துறைபோன வித்துவப் புலமையாளர்களைத் தன்னகத்தே கொண்ட மண் ஏழாலையும் அதன் பின்னணியிலுள்ள கிராமங் களுமாகும். சுருங்கக்கூறின் யாழ். குடாநாடு முழுவதும் உள்ள புலவர்கள், கல்வியாளர்கள், தமிழறிஞர்கள், பதிப்பாசிரியர்கள். உரையாசிரியர்கள், பேராசிரியர்கள், வித்துவான்கள், பண்டிதர்கள், பிரசங்கிகள், கண்டனக் காரர்கள், தத்துவஞானிகள், ஆக்க இலக்கியகர்த்தாக்கள் அனைவர்க்கும் வழிகாட்டிய - நெறிப்படுத்திய ஊற்றுக்காலாய் விளங்கிய மண் ஏழாலையும் அதன் சூழவுள்ள மருதநிலக் கிராமங்களுமாகும். இப்பெருமையும் புகழும் இன்றும் இனியும் ஏழாலை மண்ணுக்கு உளதாகும்.

தமிழ்நாடு பாராட்டிய ஈழத்துப் புலவர்களைக் கொண்டது யாழ்ப்பாணம். பேரறிஞர் க. சி. குலரத்தினம் அவர்கள் தாம் எழுதிய செந்தமிழ் வளர்த்த செம்மல்கள், பாகம் 1 இல் எழுதும் பன்முகப்பட்ட செய்திகள் ஈண்டு நோக்கற் பாலன. எடுத்துக்காட்டுகள் வருமாறு:

> யாழ்ப்பாணத்தின் பண்பாட்டுநெறியில் ஊறிய இலக்கண இலக்கிய ஊற்றுக்களைச் செம்பாட்டு ஊற்றுக்கள் என்று கலாநிதி கா. சிவத்தம்பி அவர்கள் செம்மையாகக் கூறியுள்ளார்: (1989:11).
>
> என்றோ, எப்பவோ ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை அவர்கள் கூறினாற் போல் தமிழ்மொழியில் கணிதம், மறைஞானம், வைத்தியம், தத்துவம், இரசாயனம், அகராதி முதலியன யாவும் எங்கள் புலவர் களால் எழுதப்பெற்றிருக்கின்றன. (1989:11)
>
> பொதுவாக அக்காலத்தில் யாழ்ப்பாண வாசிகளே தமிழில் நன்றாகக் கற்றவர்கள் என்று மதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்குள்ளும் தாமோதரம்பிள்ளை அவர்கள் சிறந்த புலமையுள்ளவர்கள் என்று மதிக்கப்பட்டார். பேசும்போதும் ஏறக்குறையத் தமிழ்ச் சொற்களையே கையாளுவார். (1989:13)
>
> பண்டிதரும் பட்டதாரியுமான சைவம் மு. கந்தையா (1989:14) என்று ஓரிடத்திற் கூறுகிறார் பேரறிஞர் க. சி குலரத்தினம்.

ஈழத்து வித்துவப்புலமை நலனை வெளிப்படுத்தும் பிறிதொரு மேற்கோள் யாழ்ப்பாணத்துக் கல்வி மேம்பாட்டைப் பாராட்டுவதாயமைவது:

1857 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள், சென்னை, கல்கத்தா ஆகிய முப்பெருநகரங்களில் முதன்முதலாக (1857 இல்) அமைக்கப்பெற்றன. சென்னைப் பல்கலைக்கழகத்திலே 1954 ஆம் ஆண்டின் பட்டமளிப்புப் பேருரை நிகழ்த்திய கலாநிதி அழகப்பா செட்டியார் அவர்கள் தமதுரையில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் பாரம்பரியம் பற்றிப் பேசியபோது, அங்கே முதலிற் பட்டம் பெற்ற வர்களுள் இருவர் யாழ்ப்பாணத்தவர் என்றும் அவர்கள் வைரவநாதர் விசுவநாதர், வைரவநாதர் தாமோதரம்பிள்ளை என்னும் அறிஞர் என்றும் அடுத்து மூன்றாமவராகப் பின்னர் பட்டம் பெற்ற வரும் மோசேஸ் வேலுப்பிள்ளை என்னும் யாழ்ப்பாணத்தவரேயாவர் என்றும் குறிப்பிட்டுள்ளார் (1989:101).

**ஏழாலையின் கல்விப் பின்புலம்**

ஏழாலை தமிழ், இலக்கணம், இலக்கியம், மருத்துவம், கணிதம், விஞ்ஞானம், தத்துவம், சைவசித்தாந்தம், புலமையாற்றல் (கவியாற்றல்), உரைநடைவளம் என்பனவற்றையுடைய ஆசிரியர்களையும் ஆய்வறிஞர்களையும் விற்பன்னர் களையும் தன்னகத்தே கொண்டது. ஈழத் தமிழர் வரிசையெனக் கொள்ளத் தகுந்தோரை 'ஆத்மஜோதி' முத்தையா அவர்கள் குறிப்பிட்டுள்ளார். (2003)

சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதற்பட்டதாரி (B.A) ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களின் தாய் திருவாட்டி மயில்வாகனம் பெருந்தேவி. பண்டிதமணி கலாநிதி மு. கந்தையா, B.A, சித்தாந்த வித்தகர் மு. ஞானப்பிரகாசம், B.Sc, திரு. நா. முருகையா, சடைவரத சுவாமிகள், அருளானந்த சிவம், கணிதவியற் பேராசிரியர் பேரம்பலம் கனகசபாபதி, ஆனந்த சடாட்சர குரு, மாணிக்கம் அம்மா, திரு. கார்த்திகேசர் ஆறுமுகம், சி. முருகேசு உபாத்தியாயர், திரு. சி. கந்தசாமி, திரு.சி. இரத்தினம், சூராவத்தை சிவசிதம்பரம், திரு ச. சச்சிதானந்தம், குப்பிழான் கலாநிதி க. கணேசலிங்கம், திரு. செ. சொர்ணலிங்கம் B.Sc, புலவர் விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி, திரு. த. தர்மலிங்கம், காசிவாசி செந்திநாதையர், பௌதிகவியற்றுறைப் பேராசிரியர் குணரத்தினம், புவியியற்றுறைப் பேராசிரியர் லூதர் ஜெய சிங்கம், நட்டுவச் சுப்பையனார், சிறுகதையாசிரியர்கள் சி. வைத்திலிங்கம், ந. சிவஞானசுந்தரம் (இலங்கையர் கோன்), கிங்ஸ்பெரி (அழக சுந்தரனார்), முருகேச பண்டிதர், சிவ. மகாலிங்கம், திருநெல்வேலி அருளானந்தம், சுன்னாகம் வித்துவான் முத்துக்குமார கவிராயர், சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் என்போரை 'ஏழாலை' என்ற நூல் குறிப்பிடுகிறது. ஆயினும் மிக

நீண்ட வித்துவப் புலமையாளர் பட்டியல் ஏழாலைக் கல்வியாளர் தொடர்பில் அறியப்பட வேண்டியதாகும்.

சங்கர சுப்பையர், நாகலிங்கப் பரதேசியார், ஏழாலை மேற்கு சின்னத்தம்பி எமோசன், கார்த்திகேசர் சின்னாச்சி, சடைவரத சுவாமிகள், கொல்லங்கலட்டி சுப்பிரமணியம், சுன்னாகம் விச்சுவர், கந்தரோடை தமிழ்க் கந்தையர், வித்தகர் கந்தையா, டாக்டர் ஐயம்பிள்ளை பொன்னையா, ஆத்மஜோதி முத்தையா (அவர்களின் தந்தையார் நாகமணி அவர்களுக்கு கந்தரலங்காரம் 100 செய்யுட்களும் மனப்பாடம்.)

அளவெட்டி உப அதிபர் பொ. கைலாசபதி, B.Sc, புன்னாலைகட்டுவன் வித்துவசிரோமணி மகாவித்துவான் சி. கணேசையர், மயிலிட்டி சுவாமிநாதன், வண்ணார்பண்ணை த. கைலாசபிள்ளை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, பண்ணிசை வல்லாளர் குப்பிளான் செல்லத்துரை, பிற்பாட்டாளர் வேலையா, கட்டுவன் சட்டம்பியார் விசுவநாதர், சுன்னாகம் முருகேச பண்டிதர் (இலக்கணத் தொடர்), இணுவில் அம்பிகை பாகர், புன்னை கதிர்காமையர், இணுவில் நடராசையர், ஊரெழு சரணவண முத்துப்பிள்ளை, நயினை நாகமணிப் புலவர், வித்துவான் சிவானந்தையர், தெல்லிப்பழை வ. சுப்பிரமணியபிள்ளை, இளவாலை க. சங்கரப்பிள்ளை, தெல்லிப்பழை நா. மயில்வாகனம்பிள்ளை, விழிதீட்டி சி. கதிர்த்தம்பி, பண்டிதர் உமாமகேஸ்வரம்பிள்ளை, பி. நடராசன், மாவிட்டபுரம் சி. விசுவநாத முதலியார், தையிட்டி பொன்னையா, சுன்னாகம் மாணிக்க தியாகராஜ பண்டிதர், இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர், வித்துவான் வேந்தனார், ஏழாலை வி. தம்பையா உபாத்தியாயர், கொக்குவில் இளையதம்பிப்பிள்ளை, இரசிகமணி கனக. செந்திநாதன், வித்துவான் சொக்கலிங்கம், டாக்டர் செ. சிவசண்முகராசா, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, பேராசிரியர்கள் சு. வித்தியானந்தன், க. கைலாபதி, கா. கைலாசநாதக் குருக்கள், செ. சிவஞானசுந்தரம் (நந்தி), கலாநிதி கவிஞர் இ. முருகையன், கவிநாயகர் வி. கந்தவனம், கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, ஆங்கிலப் போதனா சிரியர் ச. விநாயகமூர்த்தி, ஈழகேசரி நா. பொன்னையா, வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன், சங்கராச்சாரிய சுவாமிகள், சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம், ஊரெழு முருகவேள் பரமநாதன் (கனடா) பல்கலைக்கழக நூலகர் சி. முருகவேள் ஆகியோர் ஏதோவொரு வகையில் ஏழாலையறிஞர் களோடு தொடர்புடையவர்களாவர்.

ஏழாலையின் ஆத்மஞானப் பரிமளிப்புக் குறித்து ஆத்மஜோதி முத்தையா அவர்கள் மேல்வருமாறு குறிப்பிடுவர்:

> கடையிற் சுவாமிகளுடைய சீடர் முருகேசுச் சுவாமிகள். முருகேசுச் சுவாமிகளுடைய சிஷ்யை பொன்னம்மா அம்மா. பொன்னம்மா அம்மாவினுடைய சீடர் சடைவரத சுவாமிகள், சடைவரத சுவாமி களுடைய சீடர் அருளாந்த சிவம். அருளாந்த சிவம் அவர்களுடைய சீடர் ஞானப்பிரகாசம் அவர்கள்.

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட 'சைவக்காவலர்' சிவசண்முக வடிவேல்.

பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலை, வண்ணார் பண்ணை நாவலர் பாடசாலை என்பனவற்றோடும் ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை, உப அதிபர் பொ. கைலாசபதி, சுண்ணாகம் ம. குமார சுவாமிப் புலவர், வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை (நாவலர் மருகர்), த. கைலாசபிள்ளை, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, காசிவாசி செந்திநாதையர், மகா வித்துவான் சி. கணேசையர் பண்டிதர், இ. நமசிவாய தேசிகர், பேராசிரியர் பேரம்பலம் கனகசபாபதி, ஆத்மஜோதி நா. முத்தையா, பண்டிதர் கலாநிதி. மு. கந்தயைா B.A, சித்தாந்த வித்தகர் மு. ஞானப்பிரகாசம், புலவர் விசாலாட்சி மாதாஜி, சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம், சைவப் பெரியார் சிவசண்முக வடிவேல், நூலகர் ஆகியோர் பணிகள் நாமறிய வேண்டியன.

இத்தொடர்பிலே சுன்னாகம், மல்லாகம், மயிலணி, வசந்தபுரம், கோட்டைக் காடு, மயிலிட்டி, மயிலங்காடு, பலாலி, கட்டுவன், குரும்பசிட்டி, புன்னாலைக் கட்டுவன், குப்பிளான், மயிலிட்டி தெற்கு, வர்த்தலை விளான், இணுவில், கோப்பாய், ஊரெழு, மருதனார்மடம், உரும்பிராய், கந்தரோடை, தெல்லிப்பழை, உடுவில், நீர்வேலி என்னும் ஊர்களும் வித்துவப் புலமை யாளர்களும் தொடர்புபட்டுள்ளனர்.

### பேராசிரியர், கலாநிதி க. அருணாசலம் (இந்து தருமம். 2007) குறிப்பிடும் கருத்துகள்

#### அ. மரபு முறையிலான ஆய்வு முயற்சிகள்

மரபு முறையிலான ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டவர்களது வரிசையில் சி. வை. தாமோதரம்பிள்ளை, மகாவித்துவான் கணேசையர், சுன்னாகம்,

அ. குமாரசுவாமிப் புலவர், இ. நமசிவாய தேசிகர் என்போர் குறிப்பிடத் தக்கவர்கள்.

இலங்கையின் வித்துவப் பரம்பரையின் முக்கியஸ்தருள் ஒருவரும் தொல்காப்பியக் கடல் எனப் போற்றப்படுபவருமான வித்துவசிரோமணி சி. கணேசையரது தொல்காப்பிய உரை விளக்கக் குறிப்புகள் பல்வேறு இலக்கியங்களுக்கும் எழுதியுள்ள உரைகள் 'ஈழநாட்டுப் புலவர் சரிதம்', 'குமாரசுவாமிப் புலவர் சரிதம்' முதலியவை பாராட்டத்தக்கவை (இந்து தருமம், 2007:8).

> நாவலர் சி.வை. தாமோரம்பிள்ளை முதலியோர் தாம் பதிப்பித்த நூல்களுக்கு எழுதியுள்ள முன்னுரைகள் விளக்கக் குறிப்புகள் மூல பாடத்திறனாய்வு முதலியவை தமிழியல் ஆய்வு முயற்சிகளுக்கு வழிகாட்டியாக அமைந்தன. சி.வை. தாமோதரம்பிள்ளையின் முன்னுரைகளது முக்கியத்துவம் கருதியே அவை தொகுக்கப்பட்டுத் 'தாமோதரம்' என்னும் பெயரில் வெளிவந்தமையும் குறிப்பிடத் தக்கது.

### ஆ. தமிழ் இலக்கிய வரலாறு

1916 இல் **தமிழ் புலவர் சரித்திரம்** சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் எழுதினார். 1939 இல் ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரத்தை வித்துவ சிரோமணி மகா வித்துவான் கணேசையர் எழுதி வெளியிட்டார். இம் முயற்சிகள் தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பான ஆய்வு முயற்சிகளுக்கு ஏற்றதொரு பலம் வாய்ந்த அத்திவாரத்தை இட்டன என்பதையும் நாம் மனங்கொள்ளல் வேண்டும். இவர்களது முயற்சிகளை அடியொற்றி இருப தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வெளிவந்த கனக. செந்திநாதன் அவர் களின் ஈழத்து இலக்கிய வளர்ச்சி (1964) போன்ற புலமைகள் ஆய்வாளர் களின் முயற்சிகளுக்குப் பல வகையிலும் முன்னோடி முயற்சிகளாக அமைந் தன. தமிழக இலக்கிய வரலாறு தொடர்பாக இலங்கைத் தமிழர்களால் மேற்கொள்ளப்பட்ட காலத்தால் முந்திய ஆய்வு முயற்சிகளுள் சி. வை. தாமோதரம்பிள்ளையின் 'தமிழ்ப்பாஷையின் கால வருத்தமானம்' (வீர சோழியப் பதிப்புரையில் இடம்பெற்றுள்ளது) முக்கியமாகக் குறிப்பிடத் தக்கது.

## இ. தமிழ் மரபிலக்கணமும் மொழியியலும்

சி. வை. தாமோதரம்பிள்ளை, அ. குமாரசுவாமிப் புலவர், வித்துவ சிரோமணி கணேசையர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகர், பேராசிரியர்கள் சுவாமி விபுலானந்தர், சு. வித்தியானந்தன், புலவர் நா. சிவபாதசுந்தரனார் என்போர் பயன்மிக்க ஆய்வுகளைச் செய் துள்ளார் (க. அருணாசலம், 2007/2008, இந்து தருமம் :10). தமிழ் மரபிலக் கணம், மொழியியல் ஆகியன தொடர்பாகப் பல ஆய்வுகளைப் பேராசிரியர் சி. தில்லைநாதன், கலாநிதிகள் பார்வதி கந்தசாமி, சுபதினி, பேராசிரியர் சு. சுசீந்திரராசா, கலாநிதி இரத்தினமலர் கயிலைநாதன் முதலியோரும், மரபிலக்கணம், மொழியியல் ஆகியன தொடர்பாக ஆய்வுகள் பலவற்றைச் செய்துள்ளனர். தமிழகத்தின் பண்டைய, இடைக்கால இலக்கியங்கள் பற்றி இலங்கையர்கள் பலர் மிகவும் காத்திரமான ஆய்வுகள் பலவற்றைச் செய் துள்ளனர். சைமன் காசிச்செட்டி, சி. வை. தாமோதரம்பிள்ளை, வி. கனக சபைப்பிள்ளை முதலியோர் தொடக்கம் பேராசிரியர்கள் சுவாமி விபுலாநந்தர், செல்வநாயகம், வித்தியானந்தன், வேலுப்பிள்ளை, கைலாசபதி, சிவத்தம்பி முதலியோர் வரை அவர்கள் மேற்கொண்ட நிலைகளையும் பாரிய முன்னேற் றங்களையும் தமிழகத்திற்கே பலவகையிலும் முன்மாதிரியாகி விளங்கிய வற்றையும் கண்டு தெளியலாம் (2007.8.11).

### ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை (1832-1901)

சிறுப்பிட்டி வேளாண் குலத்தில் 1832 இல் பிறந்தார். தந்தை வைரவநாத பிள்ளை. தாயார் ஏழாலை பெருந்தேவி அம்மையார். இவர் தமது தந்தை யாரிடம் ஆத்திசூடி, வாக்குண்டாம் முதலிய நீதிநூல்களையும் சூடாமணி நிகண்டு முதலியவற்றையும கற்றுணர்ந்தபின் சுன்னாகத்திலிருந்து முத்துக் குமார கவிராயரிடம் சென்று இலக்கிய இலக்கணங்களையும் கற்றுணர்ந்தார். கோப்பாயிலிருந்த போதனா வித்தியாசாலையில் சிலகாலம் ஆசிரியராக இருந்து பின்பு சென்னையில் பார்சிவல் துரையால் கடத்தப்பட்ட 'தினவர்த்த மானி'ப் பத்திரிகைக்கு அதிபராய் அங்கு சென்று சிலகாலம் அதனை நடத்தினார். சென்னைச் சர்வகலாசாலையிலே பி. ஏ. பரீட்சையிற் சித்தி யெய்தியபின் கள்ளிக்கோட்டையிலுள்ள இராசாங்க வித்தியாலையிலே ஆசிரியராக இருந்தார். சென்னை அரசாட்சியரால் அளிக்கப்பட்ட 'ராவ் பகதூர்' என்னும் சிறப்புப் பெயரும் பெற்றார். புதுக்கோட்டையில் பெரு மன்றத்து நீதிபதி உத்தியோகமும் வகித்து நடத்தியவர். சென்னைப் பல்கலைக்

கழக பரீட்சகராகவுமிருந்தார். இவர் பரிசோதித்து அச்சிட்ட தமிழ் நூல்க ளாவன: தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியருரை) ஐந்தியல் (நச்சினார்க்கினியருரையும் ஏனைய பேராசிரியருரையுமாயுள்ள பொருள திகாரவுரை).

**இறையனாரகப் பொருளுரை**

**இலக்கண விளக்கவுரை**

**வீரசோழியவுரை** என்னும் இலக்கண நூல்களும், **சூளாமணி, தணிகைப் புராணம்** முதலிய இலக்கிய நூல்களும், ஆறுமுகநாவலரால் பரிசோதிக்கப் பட்ட தொல்காப்பியச் சொல்லதிகாரம் சேனாவரையருரையும் இவராலே பதிப்பிக்கப்பட்டன. இவரியற்றிய நூல்கள் **சைவமகத்துவம், கட்டளைக் கலித்துறை, சூளாமணி** வசனம் என்பனவாகும். இவர் தமிழ்மொழியை வளர்க்குமாறு புத்தகங்களை அச்சிட்டமையேயன்றி ஏழாலை என்னும் ஊரிலே ஒரு தமிழ்வித்தியாசாலையையும் தாபித்தார். அவ்வித்தியாசாலை ஆசிரியராக இருந்தவர்கள் முருகேச பண்டிதரும், குமாரசாமிப் புலவருமே. அதிற் கற்றுச் சிறந்தவர்கள் வித்துவான் சிவானந்தையர், மாணிக்கத் தியாகராஜ பண்டிதர் முதலாயினோர்.

'இலக்கணக் கொட்டர்' எனப்படும் சுன்னாகம் முருகேச பண்டிதர், இணுவில் அம்பிகைபாகர் ஆகியோர் சி.வை. தாமோதரம்பிள்ளைக்கு மிகுந்த நட்புக்குரியராயினர். இலக்கணத்திற் பெரிதும் சாமர்த்தியம் வாய்ந்த சுன்னாகம் முருகேச பண்டிதர் இலக்கணத்திற் பெரிதும் சாமர்த்தியம் வாய்ந்தவராதலால், 'இலக்கணக் கொட்டர்' என்று அழைக்கப்பட்டார். யாழ்ப்பாணத்திலும் இந்தியாவிலே சிதம்பரம், கும்பகோணம், சென்னை, திருப்பத்தூர் முதலிய இடங்களில் தமிழாசிரியராக இருந்தார். இவர் குமாரசுவாமிப் புலவர்க்கும் வண்ணார்பண்ணை நாவலர் கோட்டத்து முத்துத்தம்பிப்பிள்ளைக்கும் பிறருக்குந் தமிழாசிரியர். சி.வை. தாமோதரம்பிள்ளை எழுதிய **'சைவ மகத்துவம்'** என்னும் நூலுக்கு மாறாக அக்காலத்தில் சென்னையிலிருந்த ஸ்ரீ அருளப்ப முதலியார் எழுதிய 'சைவ மகத்துவதிக்காரம்' என்னும் கண்டனத் திற்கு எதிராக முருகேச பண்டிதர் 'சைவமகத்துவதிக்கார நிக்கிரகம்' என ஒரு கண்டனமெழுதி முதலியார் வாயை அடக்கினார். அதனால் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களும் சென்னையிலுள்ள மற்றும் அறிஞர்களும் இவரைப் போற்றி இவர்க்கு 'இயற்றமிழ்ப் போதகாசிரியர்' என்னும் பட்டப் பெயரை அளித்தனர் என்பர். இணுவில் அம்பிகைபாகர், இணுவையந்தாதி,

தணிகைப் புராணத்திற்கு நகர்ப்படலம் வரையுமுரை, **சூளாமணி வசனம்** முதலியன இயற்றி அச்சிட்டு வெளிப்படுத்தியவர். **தணிகைப்புராணம்** முழுவதற்கும் ஒரு பொழிப்புரை எழுதியுள்ளார். இவருக்கும் சி. வை. தாமோதரம்பிள்ளைக்கும் மிகுந்த நட்புண்டு.

உடுவில் முத்துக்குமார கவிராயர்: சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் இவருக்கும் பௌத்திரர். ஆங்கில, திராவிட பண்டிதராய் அதிகார புருடராய்ப் பிரசித்திபெற்று விளங்கிய சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களுக்குத் தமிழாசிரியரே. பிள்ளையவர்கள் தமது நூற்பதிப்புரைகள் எல்லாவற்றிலும் குரு வணக்கமாக இவருக்குக் கூறியிருக்குந்துதியே அதற்குச் சான்றாகும். சுன்னாகம் வரதபண்டிதர், சங்கர பண்டிதர் என்போர் வித்துவப்புலமை யுள்ளவர்களாவர்.

**சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் (1850 - 1922)**

வேளாண் குலதிலகர். இலக்கணக் கல்வியில் நுண்மதி படைத்தவருமாகிய சுன்னாகம் முருகேச பண்டிதரிடம் இலக்கிய இலக்கணம் கற்றவர். கவிபாடும் வன்மையுடையவர். சுன்னாகம் நாகநாத பண்டிதரிடம் வடமொழி கற்றவர். **இரகுவம்சம்** முதலிய காவியங்களையும் **சாகுந்தலம்** முதலிய நாடகங் களையும் கற்று சமஸ்கிருத நூல்களைத் தமிழிலே மொழிபெயர்க்கத்தகும் வன்மையும் உடையவராயினர். **மேகதூதக் காரிகை, இராமோதந்தம், சாணக் கிய நீதிவெண்பா** என்பவற்றையும் மொழிபெயர்த்துப் பாடினார். **சிசுபால சரிதம்** இவர் மொழிபெயர்த்தெழுதிய சிறந்த வசன நூலாகும். 1878.08.10 ஆந் திகதியளவில் ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை ஏழாலையிலே ஒரு தமிழ் வித்தியசாலையைத் தாபித்து அதில் குமாரசுவாமிப் புலவரையும் முருகேச பண்டிதரையுமே ஆசிரியர்களாக நியோகித்தனர். அப்போது புலவருக்கு வயது 22. ஏழாலை அத்தியடி விநாயகர் பதிகம் பாடினார். மட்டுவில் சி. கணபதிப்பிள்ளை, மட்டக்களப்பு ஏ. பெரியதம்பிப்பிள்ளை ஆகியோருக்கு ஆசிரியர். மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திரி கைக்கு விடயதானஞ் செய்தார். புலவரவர்கள் சங்கர பண்டிதரிடத்தும், ஆறுமுகநாவலரிடத்தும் தென்கோவை அம்பலவாண பண்டிதரிடத்தும் சில நூல்களில் ஐயங்களை வினவித் தெரிந்துள்ளனர் என்பர். உடன் கற்றார் ஊரெழு சரவணமுத்துப்பிள்ளை.

**காசிவாசி செந்திநாதையர்**

ஏழாலையிற் பிறந்தார். புன்னாலைக் கட்டுவனில் கதிர்காமையரிடம் தமிழும் சமஸ்கிருதமும் கற்றார். 1872 இல் வண்ணார்பண்ணையில் ஆறுமுக நாவலரவர்களால் தாபிக்கப்பட்ட சைவவித்தியாசாலையிலே ஆறுவருடமும், நாவலருடைய ஆங்கில வித்தியாசாலையில் ஒருவருடமும் ஆசிரியராக விருந்து கற்பித்தார். நாவலருடைய சமயப் பிரசங்கங்களை இவர் தவறாது கேட்டு வந்தார். நாவலர் எழுதிய **'விவிலிய குற்சிதம்'** என்னும் நூலையும் இவரேயச்சிட்டு வெளிப்படுத்தினார். 1888-1898 வரை காசியிலே வசித்தமையால் இவரைக் 'காசிவாசி' என்று அழைப்பர். காசிவாசி செந்தி நாதையருக்கும் ஊரெழு சரவணமுத்துப் புலவருக்கும் குரு மகாவித்துவான் வித்துவ சிரோமணி கணேசையரின் பெரிய தந்தையார் புன்னைக் கதிர் காமையர். 1897 இல் இந்து சாதனத்தில் வெளிவந்த காசிவாசி செந்திநாதை யரின் கட்டுரைகள் சிலவற்றையும் தொகுத்தளித்தவர் த. கைலாசபிள்ளை (1929:25).

**வித்துவசிரோமணி மகாவித்துவான் சி. கணேசையர் (1878-1958)**

கணேசையர், நயினை நாகமணிப் புலவர், இல்லறஞானி நயினை இராமச் சந்திரர், ஆத்மஜோதி நா. முத்தையா, கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், ஏழாலை வசந்தபுரம் ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் அவதாரநாயகி, நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத் தொடர்புகள் என்பன நாம் எதிர்பார்த்து அமைந்தவையல்ல. பூர்வ புண்ணியப் பெரும்பேறு என்றே நுவலலாம். மகாவித்துவான் கணேசையர் 'மணிபல்லவம்' எனப்படும் நயினாதீவிலே கல்வி கற்பித்துள்ளார் என்ற செய்தி முதலிலே அறியத்தக்கது. ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம் (2006: 282) என்னும் நூலிலே மகாவித்து வான் கணேசையரே எழுதுகிறார்.

> மணிபல்லவம் என்று மணிமேகலையிற் குறிக்கப்பட்டுள்ள தீவகம் இதுவேயாகும் என்பது ஆராய்ச்சியாளர் கருதும் நயினாதீவெனும் நீர் சூழ்ந்த திருநாட்டில் தமது வாழ்க்கைத் துணைவியாருடன் சென் றிருந்து ஏழாண்டுகள் வரை கல்வி கற்பித்து வந்தார்கள். இக்காலத்தில் நூல்களை ஆய்வதும் மாணவர்களுக்குக் கற்பிப்பதுமாக இன்பகர மாகவே இவர்கள் வாழ்க்கை கழியலாயிற்று.

என வருகிறது. எனது முன்னோரான நயினை நாகமணிப் புலவர் குறித்து மகாவித்துவான் கணேசையரவர்கள் எழுதியுள்ளவை முக்கியம் பெறுவதாகும்.

> நயினை நாகமணிப் புலவர் நயினாதீவில் 1815 க்கும் 1891 க்கும் சரியான விக்கிரம வருடம் மார்கழி மாதம் 10 ஆந் தேதியிற் பிறந்தார். நயினாதீவிலே ஐந்து வருடங் கிராமசங்கத் தலைவராக இருந்து அவ்வுத்தியோகத்தை நடத்தி வந்தார். இக்காலத்தில் நயினை நீரோட்ட கயமகவந்தாதி. நயினை மான்மியமும் இவராலியற்றப்பட்டன. அந்தாதி 1930 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது. இளமைக்காலந் தொட்டு பாடுஞ் சக்தி இவருக்குத் தானேயுண்டானமையால் இவரை 'வரகவி'யென்று அழைப்பர்.

இத்தொடர்பில் 2009 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்திருந்த தஞ்சைப் பல்கலைக்கழகத்து வரலாற்றுத் துறைப் பேராசிரியர் சுப்பராயலு அவர்களிடம் இக்கட்டுரையாளரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மாரிமுத்து வேதநாதனும் மணிபல்லவம் என்ற பெயர் இந்தியாவில் எங்காயினும் வழக்கிலுண்டா? என்று வினவியபொழுது 'இல்லை' என்று பதிலிறுத்தமையும் பதிவாக வேண்டியதே.

அடுத்து இல்லறஞானி நயினை இராமச்சந்திரா, ஆத்மஜோதி நா. முத்தையா தொடர்பு கவனிக்கத்தக்கது.

'இந்துசாதனம்' பத்திரிகையிலே நா. முத்தையா அவர்கள் எழுதிய 'நாவலர்' பற்றிய கட்டுரையைப் படித்த இராமச்சந்திரா அவர்கள் ஏழாலை நா. முத்தையா அவர்களை 1948 இல் தாபிக்கப்பட்ட 'ஆத்மஜோதி' சஞ்சிகையின் ஆசிரியராக நியமித்தார். அப்போது இராமச்சந்திரா புகையிரத இலாகாவில் நாவலப்பிட்டியிலே பணிபுரிந்து வந்தார். நயினை - ஏழாலைத் தொடர்பு இறுக்கமாயிற்று. மேலும் இத்தொடர்பின் ஆழம் வலுவானது. 'ஆத்மஜோதி' அச்சுக்கூடம் 1960 ஆம் ஆண்டு நாவலப்பிட்டியிலே தொடங்கப்பட்டது. முத்தையா ஆசிரியரும் அவரது தம்பியார் திரு. நா. அருமைநாயகம் அவர்களும் அச்சுக்கூடத்தையும் மாணவர் விடுதியையும் நடத்தினார்கள். இக்கட்டுரையாளரின் தந்தையார் கனகசபாபதியவர்கள் நாவலப்பிட்டியி லிருந்து 16 மைல் தொலைவிலுள்ள கந்தலோயாத் தோட்ட அரசின் தமிழ்க் கலவன் பாடசாலையிலே ஆசிரியப் பணிபுரிந்தார். நான் ஐந்தாம் வகுப்பிலே ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களது வகுப்பிலே மாணவனாகப் பயின்றேன். நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியா சாலையில் 1963 ஆம் ஆண்டு 5 ஆம் ஆண்டுப் பரீட்சையில் வகுப்பேற்றப் பட்டுள்ளார் என்று ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களாற் கையெழுத் திடப்பட்ட மாணவர் குறிப்பேடு இன்றும் என்னிடமுண்டு. திரு. திருமதி அருமைநாயகம் அவர்களது அரவணைப்பில் வளர்ந்தவன் யான். இதுவும்

ஏழாலை நயினைத் தொடர்பேயாம். எம் குலதெய்வம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன். அடியேன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையிலே விரிவுரையாளர் பதவியிலிருந்தபோது ஏழாலை களபாவோடை வசந்தபுரம் ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் உபாசகியின் ஆலயத்திலே சமயச் சொற் பொழிவு, தேவாரம் பாடுவது, பஜனை செய்வது சொற்பொழிவு என்னும் தொடர்புகளுண்டாயின. நயினையும் ஏழாலை வசந்தபுரமும் தொடர்புடைய சங்கமிப்பை அம்மன் அருளெனவே உணர்ந்து கொண்டேன்.

இன்று தான் உணருகிறேன் பூர்வபுண்ணியத்தின் பயனை. இலக்கியம், இலக்கணம், சமயம், தத்துவம், கணிதம், மருத்துவம் குறித்த அடிப்படைகளின் மேதாவிலாசமே 'சமயம்' என்பதேதான். இம்முடிவுக்குக் காரணம் அள வெட்டி உபஅதிபர் பொ. கைலாசபதி B.Sc, ஏழாலை, ஐயம்பிள்ளை பேரம் பலம் கனகசபாபதி, பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை, ஆத்மஜோதி நா. முத்தையா, மகாவித்துவான் சி. கணேசையர், பண்டிதமணி, இலக்கிய கலாநிதி மு. கந்தையா B. A, சிவத்தமிழ்ச் செல்வி, பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகர், இரசிகமணி கனக. செந்திநாதன், கட்டுவன் நாகலிங்கம் ஆசிரியர் (மகாஜனக் கல்லூரி), பண்டிதர் உமாமகேஸ்வரன், திரு.ச. விநாயகமூர்த்தி, சி. கந்தசாமி, சிவ மகாலிங்கம், சிவசண்முக வடிவேல், ஏழாலை டாக்டர் நா. பொன்னையா ஆகியோரது வித்துவப் புலமைக் கற்கும் பேறு வாய்க்கப் பெற்றதென்பதே தெளிவு. இக்கட்டுரையை எழுதும்படி என்னை வற்பறுத்திக் கேட்டுக் கொண்டவர் எம்மிடம் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலே தமிழ் படித்த பட்டதாரி ஆசிரியை ஏழாலை மேற்கைச் சேர்ந்த திருமதி சத்தியா தனஞ்செயன் B. A (மொழிச் சிறப்பு) அவர்கள்.

இனி, கணேசையரவர்கள் ஆறுமுகநாவலரின் மருகரும் மாணாக்கருமான வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களது மாணாக்கராய் விளங்கியவர். வித்துவசிரோமணியின் மறைவையடுத்துச் சுன்னாகம் குமார சுவாமிப் புலவரிடத்துப் பாடங்கேட்டவர். பின் அவருக்கு உசாத்துணை வராகவும் விளங்கினார். உரையாசிரியர் மட்டுவில் க. வேற்பிள்ளை, காசி வாசி செந்திநாதையர் ஆகியோரும் இவருக்கு ஆசிரிய நிலையில் இருந்தவர்களே.

> தொல்காப்பிய முனிவன் சொல் நூலின் துகள் தீர்த்து தூய்மைகண்ட
> வெல்காப்பியமான ராமாவதார இயல் விளங்கச் செய்தான். ஒல்காப்
> பொருள் இரகுவம்சத்திற்கு ஓர் அரிய உரையும் கண்டான்; ஆறாகு
> வதன் இயல்பும் ஆகுபெயர் இலக்கணமும் முதலா ஆன்றோர்

> வேறாக உரை கண்ட பல அரிய இலக்கணத்தின் மெய்ம்மை நாடிப் பாறாமை நிலைநாட்டிப் பண்டிதர்கள் முடிமணியாய்ப் பகர வாழ்ந் தான்; நீறாடி முதற்பிள்ளை நீங்காது தங்க நெகிழ் நெஞ்சம் தந்தான்.
> (இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகர்)

பிரமஸ்ரீ சி. கணேசையரால் எழுதப்பட்ட **ஈழநாட்டுப் புலவர் சரிதம்** (1939) எனும் நூலை 'ஈழகேசரி' அதிபர் நா. பொன்னையா பதிப்பித்தார். 'ஈழத்துப் பூதந்தேவனார் முதல் மயில்வாகனப் புலவர் வரை 101 புலவர்களின் சரிதங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. மகாவித்துவான் கணேசையரின் வித்துவப் புலமை இதன் மூலம் வெளியாகியுள்ளது.' (2006: வெளியீட்டுரை, பதிப். க. இரகுபரன்)

நூலறிவிலும், நுண்ணறிவிலும் மிக்கவரான கணேசையரின் புலமையின் புகழ் அவரது இளமைக்காலத்திலே ஈழம் கடந்து தமிழகத்திலும் மிகப் பரந்து - பரவி நிலைபெற்றது. மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடான 'செந்தமிழ்ப்' பத்திரிகையில் அவர் அவ்வப்போது எழுதி வந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளால் - குறிப்பாக இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகளால் அக்காலத்து அறிஞர் மத்தியில் அதிகம் வியந்து பேசப்படுபவராயினர். பின் முன்னைய உரை யாசிரியர்களின் உரைகளோடும் தமது ஆராய்ச்சிக் குறிப்புகளோடும் பாகம் பாகமாய் வெளியிட்ட தொல்காப்பியப் பதிப்புகள் அவர்க்கு அழியாப் புகழை உருவாக்கின. மிகக் கடினநடையில் அமைந்ததும் ஈழத்துப் புலவர் அரசகேசரியினாற் பாடப்பட்டதுமான 'இரகுவம்ச' காவியத்துக்கு உரை யெழுதியதும் அத்தகையதே. கம்பராமாயண பாடபேத ஆய்விலும் கணி சமான அளவில் அவர் ஈடுபட்டிருக்கிறார். சுன்னாகம் பிராசீன பாடசாலை யூடாகவும் தமது திண்ணைப் பள்ளிக்கூடத்திலும் கற்பித்து நல்ல மாணவ பரம்பரையையும் உருவாக்கினார்.

''மகா வித்துவான் கணேசையரவர்களோடு நெருங்கிய தொடர்புடைய மற்றோர் அறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்களாவர். இவர் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் தமிழ்ப் பேராசிரியராகப் பல்லாண்டுகள் கடமையாற்றினார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரால் நடத்தப்படும் பண்டித பரீட்சையில் மிகப் பழங்காலத்திலேயே சித்தியெய்தினார். சுன்னாகம், அ. குமாரசுவாமிப் புலவரிடத்தும் சைவத் திருவாளர் த. கைலாசபிள்ளையவர் களிடமும் கல்வி கற்றார். பலருக்குக் கல்வி கற்பித்து அவர்களைப் பண்டிதர் களாக்கியவர். இவர் தம் நண்பர்களும், மற்றைய அறிஞர்களும் இவருக்கு அளித்த பட்டமே 'பண்டிதமணி' என்னும் பட்டமாம். இவர்கள் மகாவித்து வான் கணேசையரவர்களுக்கு நெடுங்காலமாக நல்ல உசாத்துணையாகி

இருந்து வந்தவர்கள் (2006:288). பிரம்மஸ்ரீ கணேசையருக்கு 22.12.1938 இல் தாக்ஷிணாத்திய கலாநிதி உ. வே. சாமிநாதையர் கடிதம் எழுதியுள்ளார். (**தமிழ்ப் புலவர் சரிதம்**, 2006:294). கணேசையரது இலக்கணச் சிந்தனைகளை அலசியாராய்நது பேராசிரியர் கலாநிதி ஆ. வேலுப்பிள்ளையவர்கள் '**ஈழத்து அறிஞர் ஆளுமைகள்**' என்னும் நூலில் (2010: பக். 19-64 வரை) விரிவாக ஆராய்ந்தெழுதியுள்ளதுடன், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை குறித்தும் (2010:65-105) பேராசிரியர் வேலுப்பிள்ளை எழுதியுள்ளார்.

**'சிந்தனைச் செல்வர்' பொ. கைலாசபதி**, B.Sc (**உப அதிபர்**)

அளவெட்டி பொ. கைலாசபதி முதல் ஏழாலை மு. கந்தையா வரை (இன்னும் சிவசண்முக வடிவேல் அவர்கள் வரை) 'யாழ்ப்பாணச் சமயநிலை'யில் தளர்ச்சி நிலை கிடையாது. 'நவீன இலக்கியக் கோட்பாடுகள்' என்னும் தற்காலப் பல்கலைக்கழக உயராராய்ச்சி 'யாழ்ப்பாணச் சமயநிலை', 'இலக்கிய நிலை' என்பனவற்றைச் சீண்ட முடியாது. ஏனெனில் ஆசிரியத்துவம் தடம் மாற முடியாதது. மனிதர் பற்றியதல்லாது மகான்கள் பற்றியது. செந்தமிழ் மொழி, தமிழால் இணைவதைவிடவும் சமயத்தால் இணைவது பயனுடையதாகும். தமிழ் உடல்; சமயம் அதன் உயிர். இலக்கியம் (புத்திலக்கியம்) மனித மனத்தின் அழுக்குகளைப் பற்றி பேசவல்லது. சமயம் (சைவம்) மனத்தகத்தழுக்குறாத மௌன ஞான யோகிகள் பற்றிப் பேசுவது. சமயமற்ற இலக்கியம் எதுவானாலும் உயிரற்ற சவம்; துர்நாற்றம் வீசுவது.

> மனத்தகத்தழுக்குறாத மௌன ஞானயோகி உபஅதிபர் பொ. கைலாசபதி B.Sc.

பேராசிரியர் சுவாமிநாதன் சுசீந்திரராசா சைவாசிரிய கலாசாலை மூலமும், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை மூலமும், பண்டித பரம்பரை மூலமும் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை மூலமும், ஆத்மஜோதி மூலமும், பண்டிதர், இலக்கிய கலாநிதி மு. கந்தையா பீ. ஏ. மூலமும், ஏழாலை மு. ஞானப்பிரகாசம் பீ. எஸ்சி., மூலமும், பேராசிரியர் பேரம்பலம் கனகசாபதி மூலமும் கல்வியும் சிந்தனையும், ஆசிரியத்துவமும் ஈற்றிலே சமயத்துடன் சங்கமமாக வேண்டும் என்பதே சரியானது. இக்கட்டுரை வரலாறுகளே இதனை மெய்ப்பிக்கும்.

> பேராசிரியர் சு. சுசீந்திரராசா அவர்கள் தமது தந்தையாரும் உப அதிபர் அவர்களின் ஆசிரியரும் அதிபருமான திரு. சி. சுவாமிநாதன் அவர்கள் மூலம், உபஅதிபர் பற்றி இளமைக் காலத்திலேயே அறிந்துள்ளார். 1994 ஆம் ஆண்டு பேராசிரியர் சு. சுசீந்திரராசாவும், திரு.

ஆ. சபாரத்தினமும் இணைந்து வெளியிட்ட 'பொ. கைலாசபதி அவர்களின் சிந்தனைகள்' என்ற நூல் மூலம் உபஅதிபரின் சிந்தனை ஊற்றுக்களை அறிய முடிகிறது.

மயிலங்கூடலூர் பி. நடராசன் அவர்கள் தொகுத்துள்ள ''சிந்தனைச் செல்வர் பொ. கைலாசபதி - ஆளுமையும் ஆக்கமும்'' (2002) என்ற நூல் பொ. கைலாசபதி நூற்றாண்டு விழாக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூற் பணிகளை 1994 இல் நடராசன் தொகுப்பு முயற்சியை மேற் கொண்டார் என்கிறார் வாழ்நாட் பேராசிரியர் சு. சுசீந்திரராசா (2002: பாயிரம்).

பண்டிதமணி அவர்களைத் தனி மாணவனாகக் கற்பித்த உபஅதிபர் அவர்கள் அளவெட்டி திரு. ச. பரநிருபசிங்கம் அவர்களையும் தனி மாணவனாகக் கற்பித்திருக்கிறார் என்ற செய்தியையும் அறிய முடி கிறது (பி. நடராசன், 2002: முகவுரை).

1928 ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் சைவாசிரிய கலாசாலை ஆரம்பமானது. அப்பொழுது கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நான் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தேன். 1929 இல் சைவாசிரிய கலாசாலையில் நியமனம் பெற்றேன். அடுத்து திரு.சி. சுவாமிநாதன் அதிபரானார். 1930 இல் உப அதிபரானார் என்கிறார் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை (பி. நடராசன், 2002:03).

1937-38 ஆம் ஆண்டுகளில் ஆசிரிய மாணவனாயிருந்து கல்வி கற்றேன் என்கிறார் இரசிகமணி கனக. செந்திநாதன் (பி. நடராசன், 2002:07).

பண்டிதமணியை மெல்லமெல்லச் சமயமாகிய துறைக்குக் கைலாசபதி யாகிய காந்தம் இழுத்தது. வெறும் இலக்கியம் ஒரு பிரயோசனத் தையும் கொடாது. அது சமயமாகிய துறையில் போய்ச் சங்கமமாக வேண்டும் (2002:09).

''கைலாசபதி ஸ்மிருதி'' எழுதியவர் பண்டிதமணி இலக்கிய கலாநிதி மு. கந்தையா.

பல்கலைக்கழக ஆய்வுகள் தகவற்றிரட்டுகளே; ஆவணவாக்கமே யொழிய அனுபவ உசாவலல்ல. பண்டிதமணியவர்கட்கே 'கைலாசபதி சித்த சுவாதீனமுள்ளவர் என்றால் பிறருக்கு என்னதான் புரியும்!?

**பேராதனைப் பல்கலைக்கழகக் கணிதவியற்றுறைப் பேராசிரியர் பேரம்பலம் கனகசபாபதி**

ஏழாலையைச் சேர்ந்த பேராசிரியர் பே. கனகசபாபதியவர்கள் உலகக் கணிதமேதையெனக் கணிக்கத்தக்க வித்துவப் புலமையும, நுண்மதியும் நுண்மான் நுழைபுலமும் மிக்கவர். பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர் வரிசையில் பேராசிரியவர்கள் 1966 தொடக்கம் 1975 வரை 9 ஆண்டுகள் பெருந்தலைவர் பதவியை வகித்தார். ஐயம்பிள்ளை பேரம்பலம் கனகசபாபதி அவர்கள் பற்றி என் ஞான குரு 'ஆத்மீக வள்ளல்' 'ஞானசுரபி' ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் மேல்வருமாறு எழுதுகிறார்:

> ஒரு குடும்பத்தில் மூன்று தலைமுறைகள் சிறப்புற்று விளங்குகின்றன என்றால் அதற்கொரு தனி மகத்துவம் இருக்கத்தான் வேண்டும். வைத்தியத் துறையில் யாழ்ப்பாணத்துப் பொதுமக்களைக் கவர்ந்த தோடு ஆத்மீகத் துறையிலும் ஒளிவிட்டுப் பிரகாசித்தவர்கள் ஐயம் பிள்ளை அவர்கள். அவருடைய இளைய மகனார் பேரம்பலம் அவர்களுடைய மருந்துக் கடையும் வைத்தியத்துறையும் குடாநாடு முழுவதும் பிரகாசித்ததோடு சடைவரத சுவாமிகளுடைய சீடனாக இருந்த பெருமையும் அவருக்கு உண்டு. குரு இவருக்கிட்ட ஞானப் பெயர் மகாலிங்கம் என்பதாகும். திரு. பேரம்பலம் அவர்களுடைய மூத்த திருமகனார் தான் பேராசிரியர் கனகசபாபதி அவர்களாவார். உலகப் பிரசித்தி பெற்றவர்களுள் ஒருவராக விளங்கிய கனகசபாபதி அவர்களுடைய ஞாபகமாக விளங்குவது பேராதனைப் பல்கலைக் கழகத்தினுள் விளங்கும் 'குறிஞ்சிக் குமரன்' திருக்கோயிலாகும். பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் ஓய்வு நேரமெல்லாம் கோவி லிலே தொண்டு செய்தார் என்றால் அது பே. கனகசபாபதி அவர் களைத் தவிர வேறு யாராயும் இருக்க முடியாது என்பதைத் துணிந்து கூறலாம் (2003:62). 'அபூர்வ கற்பக தரு' என்கிறார் பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை. நல்லவர்கள் மிதித்த இடத்தில் புல்லுஞ் சாகாது என்று போற்றுவது மரபு. இதற்கு இலக்கிய மாக வாழ்ந்து வந்தவர் அமரர் பேராசிரியர் பே. கனகசபாபதி அவர்கள்.

கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் பண்டிதர் கலாநிதி மு. கந்தையா பற்றி மேல்வருமாறு புகழ்ந்து எழுதியுள்ளார்:

கலாநிதி மு. கந்தையா அவர்கள் தமிழில் புலமைமிக்க பண்டிதர்; சமஸ்கிருதத்தில் கலைமாணிப் பட்டம் பெற்றவர்; ஆங்கில அறிவும் கைவரப் பெற்றவர். சைவசமய தத்துவ ஆராய்ச்சியிலேயே தம் வாழ்க்கையை ஈடுபடுத்தி வருபவர். சைவசித்தாந்தத்தின் உயர் மாண்பை உலகம் நன்கு உணரல் வேண்டும் என்ற நோக்குடையவர். உயிரின் ஈடேற்றத்திற்கு உறுதுணையாக நின்று உதவவல்லது சைவ சித்தாந்தம் என்ற கருத்துடையவர். சைவ ஆராய்ச்சித்துறை நம் மத்தியில் சிறந்து விளங்க வேண்டும் என்பது இவ்வாசிரியரின் வேணவா.

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் கணிப்பீடு வருமாறு:

பண்டிதர் மு. கந்தையா, பி. ஏ. அவர்கள் மும்மொழி வல்லவர். சித்தாந்த சாத்திரங்களிலும் திருமுறைகளிலும் முழுகித் திளைப்பவர். அவர் பொழுது தவப்பொழுது. அவர் வாழ்க்கை சமய வாழ்க்கை; அவருடைய அறிவுச் செல்வம் 'பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்று'. பல்வேறு இடங்களில் சித்தாந்த வகுப்பும் புராண வகுப்பும் நடாத்தி வருபவர். இவ்வாறாயதோர் 'ஊருணி'யைக் காண்டல் அரிது! அரிது!'' அடியேன் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்திலே பண்டிதர் இலக்கிய கலாநிதி மு. கந்தையா அவர்களது சைவ சித்தாந்தச் சொற் பொழிவுகளைக் கேட்டுள்ளேன். அவரின் பாண்டித்தியமும், விற்பன்னமும் வித்துவப் புலமை நலனும், ஈடிணையற்றவை. கண்டன காரராயும் விளங்கி சைவத்தமிழ்ச்சுடர் கொளுத்தியவர்: 'அமரர்கள் செய்வதும் உன் பணியேயாம்.

கணிதப் பேராசிரியர் கனகசபாபதி என் உள்ளத்தைக் கவர்ந்த பெரு மகன். அவரைப் பண்பின் சொரூபமாகவே எப்பொழுதும் கண்டேன்.

- பேராசிரியர் அ. சின்னத்தம்பி அவர்கள்

நிலத்தில் நடக்கும் போதும் கால் கூசி மெல்ல ஒதுங்குவதன்றிப் பெலத்து மிதிக்கும் தன்மை அவர்பால் இல்லை.

- வித்துவான், பண்டிதமணி, கலாநிதி மு. கந்தையா

**பண்டிர் இலக்கிய கலாநிதி மு. கந்தையா B. A**

'பாஷாபிமானம் சமயாபிமானம் இல்லாதவர் வாழ்வும் ஒரு வாழ்வா' என்று வினவியவர் ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை. இவ்விலக்கணத்திற்கு உதாரண புருஷர்கள் பலரை ஏழாலையிலே இன்றுங் காணலாம்.

ஏழாலையூர் இலக்கிய கலாநிதி, பண்டிதர் மு. கந்தையா அவர்கள் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியமுடைய மும்மொழி அறிஞர். சிவஞானசித்தியாருக்கு விளக்கவுரை எழுதிச் 'சிவ ஞான சித்தித் திறவுகோல்' என்ற நூலை வெளியிட்டார். சித்தாந்தச் செ ழும் புதையல், சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள், பெரியபுராணச் சிந்தனைகள், திருக்கேதீச்சர மான்மியம் முதலிய பல சைவசித்தாந்த நூல்களை வெளியிட்ட சைவசித்தாந்த தத்துவஞானி ஆவார்.

குழந்தைவேற் சுவாமிகளும் குரு பரம்பரையும், மாவை பிள்ளைத்தமிழ் (உரையுடன்); திருக்குறிப்புத் தொண்டர் புராண உரை விளக்கக் குறிப்பு: சநாதன சைவவிளக்கம்; அரியவும் பெரியவும் - முதலாம் பாகம், நாவலர் பிள்ளைத் தமிழ், பெரியபுராணச் சிந்தனைகள், சேக்கிழார் பிள்ளைத் தமிழ் (விளக்கவுரையுடன்); சிவாலய பூசையில் தமிழ் வேதம்; சிவாலய சேவை ஏன்? எப்படி? சிவஞான சித்தியார், இலகு போதம் என்னும் நூல்களை எழுதியுள்ளார்.

> 'பண்டிதரும் பட்டதாரியுமான சைவம் மு. கந்தையா' என்று அழைக் கிறார் பேரறிஞர் க.சி குலரத்தினம் ஐயா - (க.சி குலரத்தினம், 1989:14)

**ஆத்மஜோதி நாகமணி முத்தையா (1918-1993)**

ஏழாலை கிழக்கிலுள்ள இலந்தை கட்டியில் வாழ்ந்த நாகமணி பொன்னப் பிள்ளை தம்பதியின் இரண்டாவது புத்திரன். தமையன் திரு. கந்தையா. அக்காமார் செல்லமுத்து, சின்னம்மா: தம்பி அருமைநாயகம்.

> ஈழநாட்டில் சைவம் தழைக்கத் தளராது உழைத்த சுவாமி ஞானப்பிர காசர், ஆறுமுகநாவலர் பெருமான் அவரது மாணாக்கர் காசிவாசி செந்தி நாதையர், நீர்வேலி சங்கர பண்டிதர், சேர். பொன். இராமநாதன், மேலைப் புலோலி நா. கதிரைவேற்பிள்ளை ஆகியோரின் வரலாறுகள் முத்தையா அவர்களுக்கு மறைமுகச் சத்சங்கமாயின. சடைவரதர் செல்லாச்சி அம்மையார், மகாதேவ சுவாமிகள் யோகர் சுவாமிகள், சித்தானைக்குட்டி சுவாமிகள் போன்ற ஞானிகளின் தரிசனங்களும் விபுலானந்த அடிகள் த. கைலாசபிள்ளை பண்டிதமணி சி. கணபதிப் பிளமளை தி. சு. சிவபாதசுந்தரம் ஆகிய சிந்தனா மேதைகளின் செல் வாக்கும் துர்க்கா துரந்தரி, கலாநிதி, பண்டிதை தங்கம்மா அப்பாக் குட்டி முதலாகப் பல்வகைச் சமயப் பணிகளில் ஈடுபட்டு வரும்

> திருத்தொண்டர் கூட்டத்தோடு இணங்கியிருக்கும் சிறப்பும் பெற்றவர் முத்தையா அவர்கள் என்று எழுதுகிறார் கவிநாயகர் வி. கந்தவனம்.
> 'முத்தான தொண்டர்'. (1995:64)

என் ஆசிரிய பிரான் - ஞானகுரு - முத்தையாவுக்கு நாவலரின் தமை யனாரின் மகன், த. கைலாசபிள்ளை சமயம் படிப்பித்தார். வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களுக்கு மைத்துனர் கைலாசபிள்ளை; பண்டித மணியின் ஆசிரியர் முத்தையா 1937 இல் திருநெல்வேலி சைவாசிரியப் பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவுசெய்யப்பட்டார். பண்டிதமணியின் மாணவ ரானார். 1939 இல் பயிற்சி முடித்து வெளியேறினார். பண்டிதமணி போன்றே இல்லற ஈர்ப்பு அற்றவராக வாழ்ந்தார். 15.10.1939 இல் நாவலப்பிட்டி சென். மேரிஸ் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகப் பதவியேற்றார். 1948 இல் நாவலப்பிட்டி கதிரேசன் குமார மகாவித்தியாலயத்துக்கு மாற்றம் பெற்று 1976 இல் ஓய்வு பெறும்வரை கடமையாற்றினார். 1942 இல் நாவலப்பிட்டி ஆசிரியர் சங்கச் செயலாளரானார். 1945 இல் மத்திய மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளர் பதவியேற்றார். 1950 இல் அகில இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்க உபகாரியதரிசியானார். 1960-1976 வரை நாவலப்பிட்டி கதிரேசன் குமார மகாவித்தியாலயத்தின் அதிபராகக் கடமை புரிந்தார்.

1940 இல் நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்கச் செயலாளர் பதவி யேற்றார். 1965 இல் இலந்தைக் கட்டி ஞான வைரவர் ஆலயத்தில் உயிர்ப்பலி யிடுவதைத் தடுத்து நிறுத்திய பெருமை முத்தையா அவர்களுக்குரியது. 1983 இல் இனக்கலவரம், சாவகச்சேரியில் 'அகதிமுகாம்' அமைத்தார். தாமே அனைத்தையும் நாவலப்பிட்டியில் இழந்து அகதியானார். 'ஆத்ம ஜோதி' முத்தையா 'அகதி' முத்தையாவானார். இக்காலங்களிலே கூட்டுப் பிரார்த்தனைகளையும் பாதயாத்திரைகளையும் மேற்கொண்டார். கதிர்காமம், திருக்கோணேஸ்வரம், முனீஸ்வரம், திருக்கேதீச்சரம், மாமாங்கம், நல்லூர், மாவிட்டபுரம், கீரிமலை, செல்வச்சந்நிதி, நயினாதீவு, பாதயாத்திரைகள் குறிப்பிடற்பாலன. வீதிகள், ஆலயங்கள் தோறும் மகரதோரணங்களும் வரவேற்புக் கும்பங்களும் வைத்து மக்கள் வரவேற்றனர். 1948 இல் திரு வண்ணாமலையில் அருணகிரிநாதர் விழாவிற் கலந்து கொண்டார். 1954 இல் ஏழாலை இலந்தைக் கட்டி ஞானவைரவர் ஆலயத்திலிருந்து நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாப் பாதயாத்திரை நடத்தினார். 1964 இல் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி - நல்லூர்ப் பாதயாத்திரை. 1984 இல் செருக்கற் பிள்ளையார் கோயிலிலிருந்து கச்சாய் வீரபத்திரர் கோயிலுக்குப் பாதயாத்திரை. 1987 இல் நெடுந்தூரப் பாதயாத்திரை. 14 நாட்களின் பின்

கச்சாய் வீரபத்திரர் கோயிலை வந்தடைந்தது. ஏழாலையில் 'ஆத்மஜோதி வீதி' என்றுண்டு. 1927 இல் மகாத்மா காந்தி இலங்கைக்கு வருகை தந்தபோது நாவலப்பிட்டியில் நயினாதீவைச் சேர்ந்தவரும் இலங்கை புகையிரத இலாகாவில் வேலைபார்த்தவருமாகிய பெரியார் க. இராமச்சந்திராவின் இல்லத்தில் தங்கினார். 1948.08.15 அன்று 'ஆத்மஜோதி' எனும் சமய சஞ்சிகை (மாத வெளியீடாக) தொடங்கப்பட்டது. ஆறு விளம்பரங்கள் இடம்பெறத் பத்திரிகை 'ஆத்மஜோதி'யின் கௌரவ ஆசிரியர் திரு. இராமச் சந்திரா; இதழாசிரியர் முத்தையா. 1965 வரை இராமச்சந்திரா உதவினார். மாதாமாதம் 2000 பிரதிகள் அச்சிடப்பட்டன. 1960 இல் அச்சுக்கூடத்தை நாவலப்பிட்டியில் ஆரம்பித்தார். ஆத்மஜோதி அச்சுக்கூடம் முத்தையா அவர்களின் தம்பியார் ஆசிரியர் நா. அருமைநாயகத்தின் நிர்வாகத்தில் - மேற்பார்வையில் சிறப்புற இயங்கி வந்தது. 1983 இல் முழு அச்சுக்கூடமும் கலவரத்தின்போது சாம்பராக்கப்பட்டது.

'ஆத்மஜோதி' முத்தையா அவர்கள் பல நூல்களை எழுதியுள்ளார்.

1. **ஈழத்துச் சித்தர்கள் (சாகித்தியப் பரிசு -1980)**
2. **தத்துவக் கதைகள் (சாகித்தியப் பரிசு - 1975)**
3. **நிழலின் பின்னே மனிதன் (1982)**
4. **திருமுறைச் செல்வம் (1978)**
5. **பன்னிருமாத நினைவுகள் (1978)**
6. **திருமுறைக் காட்சிகள் (1960)**
7. **இந்தோனேசியாவில் இரண்டு வருடங்கள் (1986)**
8. **ஏழாலை (சாகித்திய மண்டலப் பரிசு - 2003)**
9. **இலங்கையிலே ஓர் இல்லறஞானி**
10. **இளைஞர்க்கு ஏற்ற இந்தோனேசியக் கதைகள்**
11. **கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் (சாகித்தியப் பரிசு)**
12. **சிவபாலயோகேஸ்வரர்**
13. **தரிசனம்**
14. **மாணவர்க்கு ஏற்ற மாண்புறு கதைகள்**

**15. முப்பெருஞ் சித்தர் என்பன 'ஆத்மஜோதி' முத்தையா அவர்கள் எழுதி வெளியிட்ட நூல்களாகும்.**

**16. 1994 இல் ஜுலையில் கனடாவில் நடைபெற்ற 8 ஆவது அனைத்துலகச் சைவசித்தாந்த மாநாட்டிங் பங்கேற்றல்.**

''தெய்வப் பற்று, ஒழுக்கப்பற்று, தருமப்பற்று, சமூகப்பற்று, அனாதைப் பற்று, தமிழ்ப்பற்று எனும் பற்றுக்கள் மிகுந்த துறவி'' என்கிறார். கவிஞர் வி. கந்தவனம் (1995:46). 1954 இல் புத்தகாயாவில் சர்வோதய மாநாட்டிற் பங்கேற்றார். 1965 இல் கம்பர் விழா (செட்டிநாட்டு நாட்டரசங்கோட்டை அம்பிகை கோயிலில்) பங்கேற்பு. 1979 இல் சங்கராச்சாரியார் நடத்திய அகில உலக இந்துசமய மாநாடு. 1980 இல் மலேஷியாவில் அகில உலக இந்து சமயமாநாடு. மலேசியாவில் பத்துமலை, தைப்பூச விழாவில் இருமுறை சொற்பொழிவு. பினாங் பல்கலைக்கழகத்தில் இந்து மாணவருக்கு 'உபநிஷத்துக்கள்' பற்றி உரை. இந்தோனேஷியாவில் சொற்பொழிவு, சிங்கப்பூர் திருவிடம் செண்பகவிநாயகர் ஆலயத்தில் சொற்பொழிவு. 1984-1986 வரை இந்தோனேஷியாவில் சமய, கல்விப் பணிகள். 1945 இல் பகவான் ரமண மகரிஷியினதும், 1958 இல் பகவான் அரவிந்தரினதும் தரிசனங்கள் கிடைத்தன. சுவாமி சுத்தானந்த பாரதியார், பகவான் சத்யசாயி பாபா, சுவாமி இராமதாசர், அன்னை கிருஷ்ணாபாய், காட்டுச் சாமியார், பித்துக்குளி முருகதாஸ், தரிசனங்கள். 1955 இல் இமயமலை யாத்திரை. 1973 இல் 'ஆத்மஜோதி' வெள்ளிவிழா மலர் வெளியீடாக வெளிவந்த 'நவராத்திரிப் பாமாலை' தொகுப்பாசிரியர். 1988 இல் வல்வெட்டித்துறை அறங்காவலர் பொன். வல்லிபுரம் திருமதி ரூபசௌந்தரி வல்லிபுரம் வெளியிட்ட 'அமுத கலசம்' (தெய்வீகப் பாமாலை பக். 552 கொண்ட கவிதை நூல்) என்பதன் தொகுப்பாசிரியர். என் ஆசிரியர் பிரான் முத்தையா அவர்களின் தந்தையார் நாகமணி சிவராத்திரி தினத்தில் சிவபதமெய்தினார்.

''முத்தையா அவர்களுடைய அழகான தோற்றம், புன்முறுவல் பூத்த முகமும். கருணைமிகு பார்வையும், அன்பு பாராட்டும் பண்பும் ஆதரித்தணைக்கும் ஆர்வமும், அதிர்வறியா அடக்கமும், அமைதிமிகு சாந்தமும் காந்தம் போல மக்களைக் கவர்கின்றன'' என வர்ணிக்கிறார் கவிஞர் வி. கந்தவனம் (1995:57). பேராசிரியர்கள் கலாநிதிகள் சு. வித்தியானந்தன், க. கைலாசபதி, நந்தி, சா. கைலாசநாதக் குருக்கள், ஸ்ரீ சங்கராச்சாரியார், வாகீசகலாநிதி கி.வா. ஜகந்நாதன், பண்டிதமணி, இலக்கியகலாநிதி சி. கணபதிப்பிள்ளை, கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி, பண்டிதை, துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் இலக்கிய கலாநிதி மு. கந்தையா, பி.

ஏ. ஆகியோர் முத்தையார் அவர்களுடைய நூல்களோடு தொடர்பு கொண்டவர்கள். 'ஆத்ம ஜோதி' நா. முத்தையா அவர்கள் எனக்களித்த தமிழ், சைவம், உளமாண்பு இவற்றாலே என் பணியும் தொடர்கிறது என்பேன். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சிகள் தயாரிப்பாளராகப் பணியாற்றிய வேளை சைவநற்சிந்தனைகள் வழங்கினார். 'பாதயாத்திரை' பற்றி ஆத்மஜோதி முத்தையா அவர்கள் கொண்டிருந்த பதிப்புரையில் சாமி அப்பாத்துரை (நூல்: முத்தான தொண்டர்) விவரிக்கிறார். ஆத்மஜோதியின் கூற்று.

> பாதயாத்திரையிற் பல ஊரார்கள் பங்குபற்றலாம். கோயில் தரிசனங் களுக்கும் இது வழி வகுக்கின்றது. யாத்திரிகர் மத்தியில் சமய உணர்வு, இறைபக்தி என்பவற்றுடன் இடர்பாடுகளை பொறுத்துக் கொள்ளும் இயல்பினையும் ஒருவர்க்கொருவர் உதவும் பண்பினை யும் நல்லுறவையும் ஒற்றுமையையும் வளர்க்கப் பாதயாத்திரை வழிபாட்டு முறை உதவுகிறது (1995:07).

### இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகர் அவர்கள்

கட்டுவன், மயிலிட்டி, தெற்கு வருத்தலைவிளான் இலக்கண வித்தகர், பண்டிதர், இ. நமசிவாய தேசிகர் நான்கு வருடங்கள் வித்துவ சிரோமணி, மகாவித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்களிடம் பாடங் கேட்டவர். நகுலேசர் **திருவந்தாதி** நகுலேஸ்வரர் **திருப்பதிகம், மாவைக்கந்தன்** பதிகம், **சந்நிதிக் கந்தர்** சதகம் என்பனவற்றைப் பாடினார். தமது ஆசிரியர் பற்றிக் கூறுமிடத்து, 'அதிவிவேகமும் நுண்மான் நுழைபுலமும் பெற்றவர் கணே சையர்' என்றும் 'எப்பற்றுமற்று அறக்கனிந்த கனி கணேசையர்' என்றும் 'தமிழ் முனி கணேசையர்' என்றும் கூறுவர்.

### புலவர், சைவநன்மணி சிவமயச் செல்வி ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி

1931 இல் பிறந்தார். 17 நூல்களுக்கு மேல் எழுதி வெளியிட்டுள்ளார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே புலவர் பட்டம் பெற்றார். நாவலப் பிட்டி, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் தமிழ், சைவசமய சிறப்பாசிரியராகக் கடமையாற்றினார். வானொலியிலே சைவநற்சிந்தனைகள் செய்தார். இலங்கையின் பலபாகங்களிலும் சைவப்பிரசங்கம் செய்தார். காரைநகர் வர்த்தகக் கல்வி நிலைய குருகுலம், கிளிநொச்சிக் குருகுலம்

(ஆதரவற்ற பிள்ளைகள் வாழிடம்) இவர்களின் பாதுகாவலராகக் கடமை புரிந்தார். திருச்சி மாவட்ட திரு ஈங்கோய் மலை ஸ்ரீலலிதா சமாஜத்தில் சந்நியாசம், ஸ்ரீ வித்யா மந்திரம் ஆதியன பெற்று 'ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி' என்ற சந்நியாச நாமம் பெற்றுப் பாராட்டுப் பெற்றார். இந்தியா விலுள்ள கன்னியாகுமரி தொடக்கம் ரிஷிகேசம் வரையும் சபரிமலையிலுள்ள திருத்தலங்களைத் தரிசித்தமை குறிப்பிடத்தக்கது.

புலவர், சைவநான்மணி, சிவமயச் செல்வி என்னும் பட்டங்களைப் பெற்றுள்ளார். '1964 முதல் 1990 வரை திருக்கேதீச்சரத்திலுள்ள திருவாசக மடத்தில் சைவப்பெரியார் தவத்திரு. சரவணமுத்துச் சுவாமிகள் திருவாச கம் முற்றோதலுடன் திருவாதவூரடிகள் புராண படனம் நிகழ்விப்பதையும் அனுபவித்தோம்.'' (2001: xvi) 1983 ஆம் ஆண்டு இனக்கலவரம் நிகழ்ந்த போது அடியேனும் மனைவியுமாகக் கிளிநொச்சிக் குருகுலத்தில் 'மாதாஜி' அவர்களாலே வரவேற்கப்பட்டோம். கொழும்பிலிருந்து உயிரைக் கையிலே பிடித்தவாறு கிளிநொச்சிக்குச் சென்று குருகுலத்திலே வாழ்ந்த குழந்தை களுடன் இரவுச்சாப்பாடு இடியப்பமும் சுடச்சுடச் சொதியும் சாப்பிட்டோம். அன்று கிளிநொச்சியிலே எமக்கு 'உயிர்ப்பிச்சை'யளித்தவர். மாதாஜி அவர்கள் காரணம் ஊரடங்குச் சட்டம் - நேர வரையறையின்றி - அமுல் நடத்தப்பட்ட வேளை அது.

இன்னொரு சங்கமம் குயின்ஸ்பரியிலே நிகழ்ந்தது. ஸ்ரீ நவநாதச் சித்தர் சிவாலயத்திற்கு எமது குடும்பம் சென்ற வேளை 'மாதாஜி' அவர்களும் எங்களுடன் கூடவே குயின்ஸ்பரிக்கும் வருகை தந்தார்.

பின்னர் பேலியகொடை, தெல்லிப்பழை துர்க்கா மகளிர் இல்லம் என்று பணிபுரிந்தார். 'மாதாஜி' எழுதி வெளியிட்ட நூல்கள் 16. அச்சிலிருப்பவை; வெளிவரவுள்ள நூல்கள் என்று 13 நூல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**எழுதி வெளியிட்ட நூல்கள்**

1. 1984 - மாணவர் மாதிரிக் கட்டுரைகள்
2. 1986 - கிளிநொச்சி ஜெயந்திநகர் ஸ்ரீ மீனாட்சி அம்மன் திருவூஞ்சல்
3. 1986 - உடற்பிணி, பகைமை நீக்கும் மருந்து (திருஞானசம்பந்த சுவாமிகளின் தேவாரங்கள்)
4. 1987 - கர்மயோகி அமரர் தீ.வே. கதிரவேலு

5. 1989 - நல்லூர்க் கந்தன் நான்மணிக் கோவை
6. 1991 - சிந்தனைத்தேன் துளிகள் (திருவாசகம் நீத்தல் விண்ணப்பம்)
7. 1992 - சைவநற்பாதங்கள் காட்டும் ஆலயவழிபாடு
8. 1993 - யாழ். தெல்லிநகர் ஸ்ரீ துர்க்காம்பாள் நான்மணிமாலை
9. 1995 - சிவவிரதமான்மியக் கதைகள்
10. கொழும்பு பேலியகோடை ஸ்ரீ பூபாலவிநாயகர் மும்மணிக் கோவை
11. செக்கடித்தெரு ஸ்ரீ கதிரேசன் ஆலயக் குடமுழுக்குப் பதிகம்
12. அவுஸ்திரேலியா சுபதகர் பத்திரகாளியம்மன் திருவூஞ்சல்
13. 1997 - சிறுவர் ஞானத் தமிழ் (நாடகம்)
14. 1999 - ஸ்ரீ நவராத்திரி நாயகியும் தோத்திரமாலையும்
15. 2000 - ஸ்ரீ சிவனுக்குரிய பஞ்சதோத்திரமாலை
16. 2001 - திருவாதவூரடிகள் புராணம் (உரையுடன்)

**அச்சிலிருப்பவை**

1. சைவசமய குரவர் நால்வர்
2. சிறுவர் இராமாயணக் கதைகள்
3. சிறுவர் பாரதக் கதைகள்
4. சிறுவர் கந்தபுராண அமுதம்
5. குழல் ஊதும் கண்ணன் (ஸ்ரீ இராதாகிருஷ்ணன்)

**வெளிவர இருப்பவை**

1. கொழும்பு பேலியகொடை ஸ்ரீ பூபாலவிநாயகர் தலபுராணம்
2. சிறுவர் ஞானத்தமிழ்க் கதைகள்
3. சிறுவர் ஞானத்தமிழ் நாடகம்
4. பெரிய புராண வசனச் சுருக்கம்

5. கந்தபுராணம் (சூரன் போர்)
6. தெய்வமணிப் பிரபந்தமாலை
7. பெண் உலகம்
8. சைவநற்சிந்தனைக் கட்டுரைகள்

மாதாஜி 1965, 1984, 1992 ஆம் ஆண்டுகளில் வானொலியிலே சைவ நற்சிந்தனை நிகழ்த்தினார். இன்று குப்பிளானில் சோதி விநாயகர் திருமடத்தில் வாழ்ந்து வருகிறார்.

**சுதேச வைத்தியர் ஏழாலை ஐயம்பிள்ளை பொன்னையா**

இவர் தமிழுக்கும் மருத்துவத்துறைக்கும் செய்த மகத்தான பாரிய தொண்டு ஈழத்து முதலாவது தமிழ் மருத்துவ நூலான 'பரராசசேகரம்' என்ற நூலை 1928 -1936 வரை அச்சிட்டு வெளிப்படுத்தியமையாகும். 1934 ஆம் ஆண்டு மல்லாகம் திருஞானசம்பந்தர் அச்சியந்திரசாலையிலே 7 பாகங் களாகப் 'பரராசசேகரம்' நூல் அச்சிடப்பட்டது. 1932 இலேயே இவரது பதிப்புப்பணி வைத்திய சிந்தாமணி (ஏட்டுப் பிரதியிலுள்ள வசன நூல்) என்ற நூலை வெளியிட்டதால் பெருமை பெற்றது. வைத்திய விளக்கம் பதார்த்த சூளாமணியுடன், அங்காதிபாதம், சொக்கநாதர் - தன்வந்திரியம், வாகடதத்துவம், நாடி தீபிகை என்னும் நூல்களையும் ஐ. பொன்னையா வெளியிட்டுள்ளார். இவரது பணிகள் குறித்து டாக்டர் பா. சிவகடாட்சம் மருத்துவ கலாநிதி சே. சிவசண்முகராசா: பேராசிரியர் பூலோகசிங்கம், பேராசிரியர் கலாநிதி இ. பாலசுந்தரம், பேராசிரியர் டாக்டர் பவானி, மருத்துவ கலாநிதி கே. ரி. எஸ். சபாநாதன், கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் ஆகியோர் எழுதியுள்ளனர். 'சுதேச மருத்துவ இலக்கியமான பரராசசேகரம் - மொழி இலக்கிய ஆய்வு' என்னும் விடயம் பற்றித் தமது கலாநிதிப் பட்ட ஆய்வேடாகப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையிலே இக்கட்டுரை யாளர் நுண்ணாய்வு செய்து சமர்ப்பித்து 2008 இல் கலாநிதி பட்டம் பெற்றுள்ளார்.

இத்தொடர்பிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகராக இருந்த திரு. சி. முருகவேள் அவர்கள் குறிப்பிடப்பட வேண்டியவராகிறார். 28.12.2006 ஆம் ஆண்டு இக்கட்டுரையாளர் மீண்டும் அவரைச் சந்தித்த வேளை, 'பதிப்பாசிரியர் டாக்டர் ஐயம்பிள்ளை பொன்னையா அவர்கட்குச் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவருடனும் மகாவித்துவான் சி. கணேசையருடனும் நெருங்கிய தொடர்புண்டு' என்று விளக்கி விவரித்தார். இவர் 'ஏட்டுப்

பிரதிகள் குறித்தும் விரிவாக விளக்கவல்லவராவார். 1992 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திலுள்ள தமிழ் வைத்திய ஏட்டுச் சுவடிகளின் பெயர்ப் பட்டியலொன்றை அப்போதைய பிரதம நூலகராக இருந்தபோது வெளியிட்டார்.

**மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் ந. சிவஞானசுந்தரமும் (இலங்கையர் கோன்) சி. வைத்தியலிங்கமும்**

'கலைமகள்', 'சூறாவளி', 'மணிக்கொடி' முதலிய தமிழ்நாட்டுப் பத்திரிகைகளில் ந. சிவஞானசுந்தரம் என்னும் இயற்பெயர் கொண்ட இலங்கையர் கோனின் ஆரம்பகாலக் கதைகள் வெளிவந்தன. ஆரம்பகாலக் கதைகள் கதை எழுத வேண்டும் என்ற அவாவினால் தூண்டப்பட்ட படைப்புகளாகி இருந்தமையால் அவற்றின் தரமான சிறுகதையொன்றுக்கு இருக்க வேண்டிய பண்புகள் பலவற்றையும் இனங்காண முடியவில்லை. பின்னாளில் கு. ப. ரா; புதுமைப்பித்தன் போன்றோரின் பாதிப்பினால் முதிர்ச்சியடைந்த இவர் தன் சிறுகதைகளில் உருவவமைதியையும், அதனால் தனக்கென ஒரு தனித்தன்மை யையும் பேணத் தொடங்கினார். இத்தகைய முயற்சி இவரது கதைகளில் தமிழ்ச் சிறுகதை இலங்கையிற் கண்டுவந்த மாற்றங்களைப் புலப்படுத்திய தோடு அவை இலங்கையின் யாழ்ப்பாண மண்வாசைன வீசும் கதைகளாகவும் வெளிவரத் தொடங்கின. 'ஈழகேசரி', 'ஈழநாடு', 'தினகரன்', 'வீரகேசரி' போன்ற பத்திரிகைகளில் வெளிவந்த இவரது கதைகள் இவரது அனுபவ முயற்சியினை வெளிக்கொணருகின்றன. இலங்கையர் கோனின் சிறுகதைகளை 1. வரலாற்றுக் கதைகள் 2. சமூகக் கதைகள் 3. புராணக் கதைகள் எனப் பாகுபடுத்தலாம்.

'மரியா மதலேனா', 'கடற்கோட்டை', 'மணப்பரிசு', 'சிகிரியா', 'அனுலா', 'யாழ்பாடி' என்பன வரலாற்றுக் கதைகளாகும்.

'வெள்ளிப்பாதசரம்', 'மச்சாள்', 'ஒருநாள்', 'துறவியின் துறவு', 'சதிர்க்காரி', 'தாய்', 'ஓரிரவு', 'தாழைமர நிழலிலே', 'தந்தி வந்தது', 'முதற் சம்பளம்', 'வஞ்சம்' என்பன சமூகக் கதைகள்.

'மேனகை' என்பது புராணக்கதை.

பழைய வரலாற்றுச் சம்பவங்கள் புராண இதிகாசங்களில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் மனிதனின் மென்மையான உணர்வுகள், மன உணர்வுப் போராட்டங்கள், ஆண் பெண் உறவு, கிராமியப் பண்புகள் இலங்கையர்கோனின் சிறுகதைகளில் முக்கியம் பெற்றுள்ளன. 'வஞ்சம்' என்னும் சிறுகதை ஆண் - பெண் உறவு பற்றிய மிகச் சிறந்த சிறுகதை. இரண்டு சேவல்களையும்

ஒரு கோழியையும் வைத்துச் சமூகத்திற் காணப்படும் ஆண் பெண் பாலுறவு பற்றிச் சிறப்பாக வெளிக்கொண்டு வந்துள்ளார்.

சி. வைத்தியலிங்கம் இலங்கையர்கோனின் உறவினர். இலங்கையர் கோனைப் போலவே ஆங்கிலக் கல்வி கற்று உயர் உத்தியோகம் பார்த்தவர். இதனால் சிறுகதை பற்றியும் அதன் தன்மை பற்றியும் நன்கு தெரிந்திருந்தார். உத்தியோக ரீதியாக 1930 களிற் கொழும்புக்கு வந்து தன்னை இலக்கிய ரீதியான சூழலுக்குப் புடம்போட வைத்தார். 'ஆனந்தவிகடன்', 'மணிக்கொடி', 'கலைமகள்', 'திரிவேணி', 'கிராமஊழியன்' போன்ற பத்திரிகைகளை வாசிக்கும் வாய்ப்பு அங்கு அவருக்கு ஏற்பட்டது. இதனால் அன்றைய இலக்கியவான்களான புதுமைப்பித்தன், கு. ப. ரா., ந. பிச்சமூர்த்தி, க. ரா. சு., சிதம்பரசுப்பிரமணியம் போன்றோரின் எழுத்துக்களின் பரிச்சயம் கிட்டியது. அத்தோடு கொழும்பில் வசித்த சோ. சிவபாதசுந்தரம், சோ. நடராசா, குல சபாநாதன், ஆ. குருசாமி போன்றோருடனான தொடர்பும் ஏற்பட்டது. இசை பல்வேறு வகைகளிலே அவருக்கு இலக்கிய உத்வேகத்தைக் கொடுத்தது. கொழும்பிலிருந்து நகரவாழ்க்கையை இவர் அனுபவித்தபோதும், தான் சிறுவயதில் கொஞ்சிக் குலாவிய தனது சொந்த ஊரான ஏழாலையை அவரது மனம் நாடியது. அத்தகைய ஒரு கிராமப் பின்னணியை வைத்தே இவரது 'பாற்கஞ்சி' படைக்கப்பட்டுள்ளது. மற்றும் இவர் யாழ்ப்பாணப் பிரதேசங்களை மட்டும் கதை நிகழ்வுக் களமாகக் கொள்ளாது, சிங்களக் கிராமங்களையும் கதை நிகழ்வுக் களமாகக் கொண்டுள்ளார். இதற்கு இவரின் 'நெடுவழி' என்ற சிறுகதையை உதாரணமாகக் கொள்ளலாம் என்று கலாநிதி எஸ். சிவநிர்த்தானந்தா (1998:5-6) எழுதியுள்ளார்.

**ஏழாலை வசந்தபுரம் - களபாவோடை வசந்தகுமாரி அம்மன் உபாசகி**

ஏழாலை களபாவோடை வசந்தபுரம் ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் எனப் போற்றப்படுபவர். தாயினுடைய உதரத்திலே 11 மாதங்கள் இருந்து உலகைப் பதற்றத்திலிருந்து உய்விக்க அவதரித்த அவதாரநாயகி. பலாலி, யாழ்ப்பாணக் குடாநாட்டு ஊரடங்கு வேளையிலேயும். பகற்பொழுதிலேயும் 'ஷெல்'வீச்சு விமானக் குண்டுவீச்சு நிகழ்ந்தபோது ஏழாலையிலே வசந்தபுரத்திலே சைவத் தமிழ் மக்களுக்கு 'பக்தி வைராக்கியம்' என்னும் உணர்ச்சியை ஊட்டி 'மரணம்' எந்த வேளையிலும் நிகழலாம் எனினும் 'கடவுளையே அடைக் கலமாகக் கொண்டு வேண்டுதல் செய்வோம்', 'அம்பாளையே பாடுவோம்' என்று தாமே அம்மனின் திருவுருவாக எமக்கெல்லாம் அடைக்கலம் தந்தவர் ஆதீனகர்த்தா அவதாரநாயகி வசந்தகுமாரி அம்மனாவார். அவர் தமது

பரம்பரையினரை அடியொற்றிச் 'சிறுவர் இல்லம்'. இன்றும் நடந்து வருகிறது. ஆர்மோனிய, தாளவாத்திய இசையுடன் தமிழில்,

*ஏழாலை வசந்த நாகபூஷணியம்மா - உனைத்*
*துதிப்போர்க்குத் துன்பமெல்லாம் தீருமம்மா*

என்று ஒலிக்கும் அம்மன் பாடல் மரணம் வரை ஒவ்வொருவரின் வாயிலும் ஒலிக்கும். அத்தகு நாதகானம் ஏழாலையில் உண்டு. அம்மனடியார்கள் உலகெங்கும் வாழ்கின்றனர்.

அவதாரநாயகியவர்கள் தமது வாழ்வையே திருப்புமுனையாகக் கொண்டவர். சங்கீதப் பேராசான், தமிழிசை வேந்தர், பண்ணிசையரசு கலாநிதி, நயினை நா. வி. மு. நவரத்தினம், இசைவாணர்கள் ஆனந்தராசா, சிவத்தமிழ் வித்தகர், சிவ. மகாலிங்கம், வவுனியாத் தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழருவி த. சிவகுமாரன் பீ.ஏ. (சிறப்பு), கதாப்பிரசங்க பூஷணம் எம். எஸ், ஸ்ரீ தயாளன், புராண வித்தகர் வ. குமாரசாமி சர்மா, 'விடகவி' நீ தியரசர் திருநாவுக்கரசு, பேராசிரியர் கலாநிதி சபா. ஜெயராசா, பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ், கலாநிதி மனோண்மணி சண்முகதாஸ், பேராசிரியர், கலாநிதி வி. சிவசாமி, முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ், முன்னாள் அமைச்சர் அமரர் தியாகராசா மகேஸ்வரன் ஆகியோர் ஏழாலை வசந்தபுரம் அம்மன் ஆலயத்திலே சமயச் சொற் பொழிவுகளையாற்றியுள்ளனர். தமிழிலே இயற்றப்பட்ட ஏழாலையம்மன் பாடல்களை ஆர்மோனியம், மிருதங்கம், சல்லரிகள் சகிதம் பின்னணியிசை முழங்க இசைநாத இன்ப வெள்ளம் பெருக்கெடுத்தோடப் பாடும் அடியார் களின் 'பக்தி மெய்ப்பாடு' புளகாங்கிதமும் வியப்பும் தரவல்லது. இதை நேரிலே அனுபவித்தவர்களே அறிவர்; உணர்வர்; புரிவர்; தெளிவர். பனை மரங்களும், வாழை கமுகஞ் சோலைகளும் செம்மண் மருதநிலஞ் சூழவுள்ள கிராமியம் சார்ந்த பிணி தீர்க்கும் ஆலயம் வசந்தபுரம் ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் ஆலயம் என்பது எம் அனுபவ உண்மை.

### திருமுறைப் பாராயணச் செம்மல் ஏழாலை சிவசண்முகவடிவேல்

'ஈழத்துச் சித்தர்கள்' (2004:136-140) என்னும் நூலிலே 'ஞானசுரபி', 'ஆத்ம ஜோதி' நா. முத்தையா அவர்கள், பெரியார் சித்தர் சிவசண்முகவடிவேல் அவர்களைக் குறித்து அறிமுகஞ் செய்கிறார்.

> 09.11.1940 இல் சிவசண்முக வடிவேல் பிறந்தார். இவர் இலங்கையர் கோனின் வளர்ப்புப் பிள்ளையானார். மூதூர், ஏறாவூர், உடுவில்,

கல்ஆனை, நெடுங்கேணி (டி. ஆர். ஓ., இறைவரி உத்தியோகத்தர்) போன்ற ஊர்களுக்கும் சென்றபோது சண்முகவடிவேல் உடன் செல்ல வேண்டியவரானார்.

இன்றும் ஏழாலையிலே வாழ்ந்து யாழ்க்குடா நாடெங்கும் சைவாலயங் களுக்குச் சென்று திருமுறைப் பாராயணஞ் செய்யும் குறிக்கோளோடு ஆன்மிகத் தொண்டு புரிந்து வாழ்கிறார். அடியேன் அவரை ஆலயங்களிலே கண்டிருக்கிறேன். குறுமுனி - அகத்தியத் தோற்றமுடைய 'ஞானச்செல்வர்' ஆவர். பரமசாது; புராணேதிகாசக் கருத்துகளையும் திருமுறைக் கருத்து களையும் சிலாகித்துக் கட்டுரைகளாக எழுதவும். வல்லவரிவர்; பல கட்டுரை களை எழுதியுள்ளார்.

**உலகளாவிய ஏழாலைச் சமய நம்பிக்கையும் டென்மார்க் பிரண்டாபதி அம்மன் உபாசகியும்**

உலகளாவிய வியாபகமுடையது ஏழாலைச் சமய நம்பிக்கை. இன்று டென் மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அம்மன் உபாசகியின் அருளும் மகிமையும் கீர்த்தியும் அற்புதங்களும் தெய்விக அவதாரங்களும் விகசித்துப் பரவிச் சுகமும் - இன்பமும் - நலமுஞ் செய்வதனை உலகறியும். சைவ - இந்துசமய மக்களுக்கு மட்டுமன்றி - உலக மக்களனைவர்க்கும் (உயிர் வர்க்கமனைத் திற்கும் அருள்புரிந்து வழிபடும் ஆலயமாகவும் நிலையமாகவும் டென்மார்க் ஆலயம் இலங்குகிறது.) உபாசகியின் அவதாரமகிமை இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில் ஞாயிறு தினங்களில் பி.ப. 4.30 முதல் 5.30 மணி நிகழ்வாக ஒலிபரப்பாகிறது. இணையத்திலும் இடம்பெறும். பக்திக்கு ஆண் - பெண் பேதம் கிடையாது. கடவுளிடத்து உயிரினங்களெல்லாம் பக்தி செய்யலாம் என்பதே சைவப் பேருண்மை.

# பின்னிணைப்புகள்

I

**'மதுரகவி' காரை முருகேசு பாலசிங்கம் அருளானந்தன்**
**(சமாதான நீதிவான்)**

கல்வியிலும் கலைகளிலேயும் ஊறிச் சிறந்த யாழ்ப்பாணத்துக் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் (Stanly College) பன்முக ஆளுமைகளைக் கொண்ட நல்லாசிரியராகத் தற்போது பணிபுரிந்துவரும் என்னருமைமிகு அன்பன் மாணவன், 'மதுரகவி' காரை எம். பி. அருளானந்தன், J.P. அவர்கள் தமது 40 ஆவது அகவையிலே 'நூல் ஒன்றை வெளியீடு செய்கிறேன்' என்று தொலைபேசி மூலம் தெரிவித்தபோது யான் மிகமிக அகமகிழ்வுற்றேன். காரணம், யாழ்ப்பாணத்திலே பிறந்து இன்று உலகளாவிய ரீதியிலே எழுத்தையே தொழிலாகவும், 'மல்லிகை' யெனும் கலை இலக்கிய சஞ்சிகையை அரை நூற்றாண்டுக்காலம் வெளியிட்டு வருபவருமான ஈழத்துச் சிரேஷ்ட இலக்கிய கர்த்தா டொமினிக் ஜீவா அவர்கள், எப்போதும் என்னைக் காணும்போதெல்லாம், ''பேச்சுக் காற்றோடு போய்விடும். விஷயங்களை எழுத்திற் போடும்; எழுத்திற் போடும்; எழுத்திற் போடும்'' என்று உரத்துக் கூறுவார். அவரது குரல் இப்போதும் என் காதிலே ரீங்காரமிடுகிறது. முற்றிலும் உண்மை. அன்ப, நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டேன். 'பிற எவரையும் நான் கேட்கவில்லை, Sir, நீங்களே என்னைப் பற்றிக் கட்டுரை எழுதித் தரவேண்டும்' என்று அன்புரிமையுடன் கோரினார். அவரிட்ட பணியை என்னாலியன்றவரை இவ்வறிமுகக் கட்டுரை மூலம் நிறைவேற்றி வைப்பதிலே பெரிதும் மனநிறைவடைகிறேன். இவ்விடயத்திலே 'மதுரகவி' அடியேனை நெஞ்சிலிருத்திக் கேட்டுக்கொண்ட கெழுதகை நட்புணர்ச்சியையும், தீவகத் தொடர்பையும் எண்ணி மகிழ்கிறேன்.

''மதுரகவி காரை எம்.பி.'' என்று இனி இவரை இக்கட்டுரை குறிப்பிடும். இவர் பல் வளங்களுடனும், பண்பாட்டுப் பெருமையுடனும், பொருளாதாரத் தன்னிறைவுடனும் மிளிரும் காரைநகர் என்னுமூரில் பெருநற்றாழ்வு, சந்தம்

புளியடியில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த பாலசிங்கம் யோகமலர் தம்பதியின் தலைமகன். 'மதுரகவி காரை எம்.பி.' புண்ணிய தினமும், தமிழ்ச் சைவமக்களின் விரததினமுமென விளங்கும் விஜயதசமித் தினத்திலே பிறந்தார். இவருக்கு இரு சகோதரிகளும் ஐந்து சகோதரர்களும் உள்ளனர்.

கருவிலே திருவுடையவராயும், தமது பெயரிலேயே அருளையும், ஆனந்தத்தையும், 'எம்.பி.' என்ற முதலெழுத்துக்களையும் (Member of Parliament) திருவருட் சிறப்பினாலேயே வரித்துக் கொண்டமையினாலும், சக்தி விரத தினங்களுள் மேன்மையும் மகிமையும் கொண்ட மானம்பூ (மகா நோன்பு) விஜயதசமியிலன்று பிறந்தமையினாலும் இயல்பாகவே இயற்கை யாகவே பூர்வ புண்ணியவசத்தால் தெய்விகக் குணநலன்களுடையவராகவே விளங்கினார். திருவருட் கருணை மேலோங்கி வழிநடத்த பெருஞானச் செல்வராகவே சிறுபருவத்திலே பக்குவப்படுத்தி வளர்க்கப்பட்டவரென்பது இவரது வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்களாலே உறுதிப்படுகிறது.

**வளர்ப்பும் வார்ப்பும்**

'வளரும் பயிரை முளையிலே தெரியும்' என்னும் முதுமொழிக்கிணங்க வளரும் இளமைப் பருவத்தில் தமது பிறந்தகமாகிய - சொந்த மண்ணில் - மணற்காட்டில் - காரை, திருமணற்காடு அருள்மிகு ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அம்பாளையே தமது வாழ்வின் எல்லாமாகக் கொண்டு (ஆதாரசக்தியாக எண்ணி) 'அகண்டநாமப் பஜனையை, பஜனைக் குழுவின் தலைவராக விருந்து பௌர்ணமி நாட்கள் தோறும் காலை 5 மணி முதல் மாலை 5 மணிவரை மிகுந்த பயபக்தியுடனும் ஆசார சீலத்துடனும் நிறைவேற்றுவார். எப்பொழுதும் சக்தி உபாசகராகவே அம்பாள் மீது அளப்பரும் பக்தி கொண்டு சமயம், கல்வி, கலை, கவிதை, கட்டுரை, உரை என்பவற்றில் நிரம்பிய ஈடுபாடும், அறிவும், புலமையும் ஆற்றலும் தனித்துவதும் வித்துவமும் மேதாவிலாசமும் பெற்று வளர்ந்தார்; இவை தெய்வத்தின் பரிந்துரை களேயாம். காரைநகர் மக்களின் சமய, கல்வி, ஒழுக்க பண்பாட்டுச் சூழலிலே கல்விமான்கள், சான்றோர், ஒழுக்கசீலர்கள் மத்தியில் வாழக் கிடைத்த பெருவாய்ப்பினால் - பெரும் பேற்றினால் - துடிப்புமிக்க தமது வளரிளமைக் காலத்திலேயே புடம் போடப்பட்ட, மாற்றுக் குறையாத 'தங்கமாக' உரு வாக்கப்பட்டார். இச்சந்தர்ப்பத்திலே அந்தண சிரேஷ்டரும், முதுபெரும் கல்விமானும் கலாநிதியுமான சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்கள், வித்துவான் சபாரத்தினம், பேராசிரியர் சொ. சிங்காரவேலனார், பேராசிரியர் கலாநிதி இரா. செல்வகணபதி, 'ஆசிரியமணி' எம். ஏ. கந்தையா மாஸ்டர், ஈழத்து

மணிவாசகசபையினர், வாரிவளவு நல்லியக்க சபையினர், வேதரடைப்பு கிராம முன்னேற்றச் சங்கம், சடையாளி ஜனசக்தி சனசமூக நிலையத்தினர், பேராசிரியர் கலாநிதி எஸ். இராமகிருஷ்ணன், பேராசிரியர் தர்மரத்தினம், பேராசிரியர் கலாநிதி பொ. இரகுபதி, 'தமிழருவி' த. சிவகுமாரன், B.A. (Hons), இன்னும் பல பண்டிதர்கள், கணவான்கள், குறிப்பாக மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் ஆலய ஆதீன குரு ஸ்ரீ திருஞானசம்பந்தக் குருக்கள் (குருமணி) இவர்கள் மத்தியில் விழாக்கள், வைபவங்கள், கவியரங்குகள், கருத்தரங்குகள், சொற்பொழிவுகள் நிகழும்போதெல்லாம் (மதுரகவி காரை எம்.பி.) பெரும் பங்களிப்புக்களைச் செய்தார்.

**வானொலியில் நேர்முக வர்ணனை**

1980 ஆம் ஆண்டு யான் கொழும்பில் உள்ள இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்திலே நிகழ்ச்சிகள் தயாரிப்பாளராகவும், நேர்முக வர்ணனையாள ராகவும் பகுதி நேர அறிவிப்பாளராகவும் இணைந்துகொண்டபோதும், அதற்கு முன்னர் யாழ். 'ஈழநாடு' தின ஏட்டிலே உதவியாசிரியராகப் பணி புரிந்த போதும் இவரது கவிதையாக்கங்கள், யாழ்ப்பாணத்துப் பிரபல சைவாலயங்களில் நடைபெற்ற தேர், தீர்த்தத் திருவிழா வைபவங்களிலே நேர்முக அஞ்சல் நிகழ்ச்சிகளைச் செய்யும் வேளைகளில் மதுரகவி காரை எம்.பி யையும் அழைத்து இலங்கை வானொலியிலே அஞ்சல் நிகழ்ச்சிகளிற் பங்கேற்றுச் செய்யுமாறு கேட்பேன். அப்போதெல்லாம் அவர் தமது இயல் பான தமிழ்வளமும், பொருட்சிறப்பு நலனும் கொழிக்கும் பக்திக்கவிதை களையும், திருமுறைப்பாடல்களின் சிறப்புப் பொருள்களையும் நாயன்மாரது தனித்துவ பக்தி நல ஈடுபாடுகளையும், அற்புதங்களையும் இலக்கிய மேற் கோள்களையும், தத்துவ சிந்தனைகளையும், தெய்வ வேண்டுதல்களையும் வசனமாகவும் கவிதையாகவும் ஆற்றொழுக்கான நடையுடைய பேச்சாலும் கவர்ச்சி பொங்கவும், பக்திரசம் உண்டாகும்படியும், கேட்போர் வியக்கும்படி அற்புதமாகவே நேர்முக வர்ணனைகளை நிகழ்த்தினார். இத்துறையிலே அறிஞர் ச. விநாயகமூர்த்தி, திரு அருள்தியாகராசா, சிவஸ்ரீ ஹரிஹர சர்மா, அறிவிப்பாளர்கள் நடேச சர்மா, நடராஜன், 'அருள்மொழியரசி' வித்துவான் வசந்தா வைத்தியநாதன், பேரறிஞர் கலாநிதி குமாரசாமி சோமசுந்தம், செஞ் சொற் செல்வர் ஆறு. திருமுருகன், தமிழருவி த. சிவகுமாரன், பிரசங்க பூஷணம், அருட்கலை அரசு கலாபூஷணம் எம். எஸ். ஸ்ரீதயாளன், 'செஞ் சொற்செல்வன்' இரா. செல்வவடிவேல், 'சிவநெறிக் கலாநிதி' இராசையா சிறீதரன், பிரசங்க பூஷணம் சிவசண்முக மூர்த்தி, ஸ்ரீமதி ஹேமா சண்முக

சர்மா என்போர் தொடர்பும் நட்பும் பழக்கமும் 'காரை எம்.பி.'க்குக் கிடைத்தன. இப்பெரியார்களது கட்புலனால் கேள்விஞானம் வாய்க்கப் பெற்றவராகவும் மதுரகவி விளங்கினார். வர்ணனைகளை வானொலியிலே கேட்கும் பழக்கமும், விருப்பமும், ஈடுபாடும் உடையவர் மதுரகவி. இவ்வழக்கத்தினால் மிகவுயரிய கருத்துவளவாளராகவும் சொற்பெருக்காற்றலுள்ளவராகவும், மொழித்தாகம் உடையவராகவும் ஒருவர் முகிழ்த்து எழலாம். அத்தகு சிறப்புடையவர் 'மதுரகவி காரை எம்.பி.' அவர்கள். இப்பயிற்சியை என்னுட் புகுத்திய இரு பேராசான்களை இவ்விடத்திலே குறிப்பிட விரும்புகிறேன். ஒருவர் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிலே எனக்குக் கற்பித்த அறிவொளி த. சண்முகசுந்தரம் அவர்கள். இரண்டாமவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே எனக்குக் கற்பித்த பேராசான் பேராசிரியர், கலாநிதி அருணாசலம் சண்முகதாஸ் அவர்கள். இவர்களிருவரும் என்னைக் கொழும்பிலுள்ள இலங்கை வானொலியில் இலக்கியப் பேச்சு நிகழ்ச்சிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்து வந்த கல்விமான்கள். என் நெஞ்சிலே இன்று போலுள்ளது இவர்களது பேருபகாரம். இதேபாங்கிலே நானும் 'மதுரகவி காரை எம்.பி' க்குச் சந்தர்ப்பம், வாய்ப்பு வழங்கினேன் என்க. இப்பண்பு நலன் நல்லாசிரியத் தொடர்பு என்றும் விளக்கலாமல்லவா?

**காரைநகர் மக்களின் மாண்பு நலன்**

காரை களபூமி. ஊரி. அமெரிக்க மிசன் பாடசாலையில் தொண்டராசிரியராகப் பணிபுரியத் தொடங்கினார். இதே உரிக்காட்டுப் பாடசாலையில் ஒரு கருத்தரங்கு நிகழ்ச்சி 1979 இல் நடைபெற்ற போது அவர்கள் விளம்பர நோட்டீசில் கலாநிதி அ. சண்முகதாஸ் என்றும், பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன் என்றும் அச்சிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுழைவாயில் மதிற்சுவரில் ஒட்டினார்கள்.

மறுநாட் காலை பல்கலைக்கழகத்தில் நான் பேராசிரியர் கலாநிதி சண்முகதாஸ் Sir ஐச் சந்தித்து, 'Sir எனது பெயருக்கு முன்னால் பேராசிரியர் பட்டமும், உங்கள் பெயருக்கு முன்னால் கலாநிதிப் பட்டமும் போட்டு அச்சிட்டு நோட்டீஸ் ஒட்டியிருக்கிறார்கள்'' என்றேன். அவர் பதிலுக்குச் சொன்னது என்னவெனில், ''நீர் ஒரு காலத்தில் பேராசிரியராக வருவீர்'' என்பது தான். 'Take it easy' என்றும் கூறினார். 1979 இல் நிகழ்ந்த இச்சம்பவம் இறக்கும் வரை நினைவில் இருப்பதுதானே! இவ்விடத்தில் இன்னுமொரு குறிப்புக் கூறவேண்டும். 'சிவத்தமிழ்ச் செல்வி' என்ற பட்டத்தைத் துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு அளித்துக் கௌரவங் கொண்டதும்

காரைநகர் மணிவாசகர் சபையினரேயாவர். கலாநிதி தங்கம்மா அம்மையாரது திருப்பெயருடன் பிரிக்கமுடியாத சிறப்புப் பட்டம் இச் 'சிவத்தமிழ்ச் செல்வி' என்பதுதான் மிகப் பெரும் பேருண்மை. காரை மண்ணின் மாண்பு இத்தகையது.

### ஊரில் ஆசிரியப்பணி

'மதுரகவி காரை எம்.பி.' 1989 இல் தமது 28 ஆவது வயதிலே ஆசிரிய நியமத்திற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தி அரசாங்க ஆசிரிய நியமனம் பெற்று கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வி. என்றழைக்கப்படும் பாடசாலையில் ஆசிரியரானார். அக்காலத்தில் காரை/வலந்தலை வடக்கு அமெரிக்கமிஷன் பாடசாலை என இப்பாடசாலை அழைக்கப்பட்டது.

'காரை எம்.பி.' அருளானந்தன் 1991 இல் பல்வேறு நெருக்குவாரங் களினால், உயிர் பாதுகாப்புத் தேடி - மனத்திருப்திக்காக குடும்பத்தாருடன் இடம்பெயர்ந்து யாழ். நகரிலே வசிக்கத் தொடங்கினார்.

இளமையான - கற்கும் பருவத்திலும், ஆசிரியரான பின்னரும் தனக்குட் பீறிட்டெழுந்த சமயம், கலை, வெகுஜன தொடர்பூடக விருப்பு என்னும் இவற்றால் உந்தியீர்க்கப்பட்ட 'மதுரகவி காரை எம்.பி.' அவ்வப்போது தமது படைப்பாக்கங்களையும் சொற்பொழிவுகளையும் ஆலய நிகழ்ச்சிகள் நேர்முக அஞ்சல் நிகழ்ச்சி வர்ணனைகளையும் ஈடுபாட்டுடன் செய்வதில் போரார்வங் கொண்டிருந்தார்.

### புனைபெயர்களும் தமிழ் உணர்ச்சியும்

உள்ளுணர்வு மேலெழும்பிய நிலையிலே, தமிழானந்த பாரதி; ஈழத்தாசன்; தமிழிளம்பரிதி; சங்குநாதன் என்னும் பொருத்தமான புனைபெயர்களையுந் தாங்கியவராய்ப் பத்திரிகைகளிலும், வானொலியிலும் ஆலய மலர்களிலும் கவிதை, சமயக் கட்டுரைகள், தமிழ்மொழி பற்றிய கட்டுரைகள், சொற் பொழிவுகள், விமர்சனங்கள் என்பவற்றை எழுதினார். புதுக்கவிதை, பழங் கவிதை மரபு தாங்கிப் பொலிகவிதை, வசனகவிதை எனத் தெய்விகக் கவிதை களையும், தேசியக் கவிதைகளையும் இனமுழக்கக் கவிதைகளையும் தமிழின இடுக்கண் தீர்க்க வேண்டிய தெய்விகக் கவிதைகளையும் எழுதினார். பாடினார். தமிழை - தமிழ்மொழியை - தமிழுணர்ச்சியை - சமய ஈடுபாட்டை - பக்தியை மேம்படுத்தி வளர்த்தெடுக்கும் பணியில் தம்மைப் பெரிதும் ஈடுபடுத்திக் கொண்டார்.

**ஆங்கிலச் சான்றிதழ்**

1993 இல் பண்டத்தரிப்புப் பிரதேச வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் தீ. எஸ். வி. மகேசவேல் (M.A.,Dip. in. Edu. SLEAS Class II; Divisional Deputy Director of Education in charge of the Divisional Office, Pandaterippu) அவர்கள் ஆசிரியர் மதுரகவி காரை எம். பி. அருளானந்தனுக்கு ஆங்கிலமொழியிலே வழங்கியுள்ள நற்சாட்சிப் பத்திரத்தில் மேல்வருமாறு வெகுவாகப் பாராட்டிப் பரிந்துரைத்துள்ளமை அவரது சிறப்பான ஆசிரிய, நிர்வாக வாண்மைத் துவங்களுக்குச் சான்றாகும். அவை இக்கட்டுரையிலேயும் இடம்பெற வேண்டியவையாகும்.

"Mr. Murugesu Palasingham Arulanandan is an erudite Scholar and a born teacher, His expectional talents in composing Tamil poetry and verses in commendable, He is a voracious reader and versatile writer, Further more he us a pions gentleman. The poems and verses composed by him have contributed a great deal in promoting the talents of the students in Tamil language and literature, He has proved himself to be an excellent guide for those who were trained for school drama and music competitions, Due to his intrinsic talents and untiring efforts several of his students have won first prizes in the Drama and music competitions conducted by the department of education.

I am confident his service as a talent teacher would enhance the educational standard of his Pupils to a great extent.

I appreciate his amaiable relationship with the staff, students and parents of his alma matter. Mr. Arulananthan bears excellent character and his conduct is commendable.

**'மதுரகவி' பட்டமும் மக்கள் மன்றத் தொடர்புகளும்**

1994 இல் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சி நெறியை மேற்கொண்டிருந்தபோது, சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ சர்வமத மகாசபைப் பிரசங்க நூற்றாண்டு விழா மாநாட்டில் திருநெல்வேலியில் கவியரங்கு நிகழ்ச்சியிலே பங்கு பற்றினார். யாழ். குடாநாட்டின் பல பிரதேசங்களிலும் தமது தமிழ், சமயப் பணிகளாலே மக்கள் மத்தியில் நன்கறியப்பட்ட கலைஞராகவும், கவிஞராகவும், கல்வி மானாகவும், தொண்டனாகவும், ஆசிரியராயும் பெயரெடுத்துப் புகழோங்கும் நிலை இவரது வாழ்க்கையிலே உதயமாயிற்று. தக்க அங்கீகாரம் என்பதில்லா விடில் யாழ்ப்பாணத்திலே சமூக, சமய பிரபல்யம் பெறுவது மகா கடினம்.

'அங்கீகாரம்', 'கௌரவம்', 'தகைமை', 'பொருத்தமனாவர்' என்ற நிலையில்லையெனில் எவருமே அணுகவும் மாட்டார்கள் என்பது என் சொந்த அனுபவம். ஊருக்கு வெளியே வந்ததாலும் இவரது வாழ்வில் மறுமலர்ச்சி - வளர்ச்சி தோன்றிற்று. 'பொய்மையாளரும் - பொறாமையாளர்களும் உறவினர்களிடத்தே தான் மிகமிக மலிவான யாழ்ப்பாணம்' என்பது முழுவதும் உண்மை. அத்தகு நிலைமையின் (மேலோங்கும் நிலையில்) ஆரம்ப வைபவமாகவும், நிகழ்வாகவும் யாழ். இந்து இளைஞர் பேரவையினர் எடுத்த முடிவு அமைந்தது. இளைஞர் பேரவையின் தலைவர் பழுத்த ஞானச் செல்வர், 'அருட்கவி' அளவெட்டி ஸ்ரீ நாகேஸ்வரன் கோயில் தர்மகர்த்தா புலவர், அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள் வாலாயமிக்க பெருங்கவிஞர்; புகழ் பூத்த சோதிட நிபுணர்.

**வாகீச கலாநிதியும் மதுரகவியும்**

1995 ஆம் ஆண்டு யாழ். இந்து இளைஞர் பேரவையினர் 'காரை எம்.பி.'க்கு 'மதுரகவி' என்னுஞ் சிறப்புப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர். 'மதுரகவி' எனும் பெயரை 'அருட்கவி' வழங்கியதால் இவர் 'மக்கள் கவி'யாக முகிழ்த்து எழலானார். 'காரை எம்.பி.' யின் புகழ், மதிப்பு, அந்தஸ்து, கௌரவம் என்பதை மக்கள் மத்தியிலும் அறிஞர், தர்மகர்த்தாக்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மத்தியிலும், ஊரிலும் பரவத்தொடங்கியது. 'வசிஷ்டர் வாயால் ரிஷிப் பட்டம்' என்பார்களல்லவா? 'மதுரகவி' என்னும் சிறப்புப் பட்டத்தால் யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தினாலும் உலகளாவிய தமிழ்கூறு நல்லுலகத்தினாலும் தனித்துவமானதோர் அங்கீகாரம் கிடைக்கத் தொடங்கியது. இஃது, எதுபோலவெனில், அடியேனுக்கு கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் ஐயா அவர்கள் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியாகவிருந்த மாண்புமிகு ஜே.ஆர். ஜயவர்தன அவர்களைக் கொண்டு 'வாகீச கலாநிதி' எனும் பட்டம் வழங்கியதற்கு ஒப்பானதாகும். ஈழத்தில் அடியேன் மட்டுமே 'வாகீச கலாநிதி'. அதுபோல, இலங்கையில் காரை எம்.பி. அருளானந்தனும் கவிஞர் இ. நாகராஜனும் 'மதுரகவி' எனும் பட்டம் உடையவர்கள். தமிழகத்துப் பேரறிஞர் கி.வா. ஜகந்நாதன் 'வாகீச கலாநிதி' என்பது பலரும் அறிந்ததே.

**காரை காமாட்சி அம்மனின் மகிமை**

அன்பும் அருளும் உபகாரமும் நயத்தக்க நாகரிகமும் இன்சொல்லும் அருளும் உடைய அருளானந்தன் வாழும் மண் (யாழ். மண்) கல்வி, கலை, ஞானச்

செருக்குடைய செம்மையாளர்களும் வள்ளண்மையுடையவர்களும் நல்லறிஞர் களும் ஒழுக்கசீலமுடையவர்களும் ஞானானுபூதியாளர்களும், சான்றோரும் உடைய தேசம். நாவலர் அவதரித்த நல்லூர் உடைய பூமி. திறமையும் புலமையும் ஆற்றலும் ஆர்வமும் நம்பிக்கையும் பக்தியும் ஆளுமையுங் கண்டபோதெல்லாம் 'மதுரகவி காரை எம்.பி.' க்கு சந்தர்ப்பங்களும் வாய்ப்புக் களும் சிறப்புப் பட்டங்களும் கிடைத்தன. நல்ல பேச்சாளர், கவிஞன் என்ற நிலையிலும் நல்லறிஞர் பலரது தொடர்பினாலும் இவரது பொதுவாழ்வில் 'நல்லன எல்லாவற்றையும்' அம்பாள் அள்ளி வழங்கினாள். தன் புதல்வனை - அருளானந்தனை ஆசீர்வதித்துப் புகழேணியில் உயர்த்தி இன்பமுற்றிருந் தாள். தனது தொண்டனுக்கு அருளும் ஆதரவும் பாதுகாப்பும் கொடுத்து மேன்மேலும் புகழடையுமாறு கடாட்சித்தாள் அம்பிகை கும்பநாயகித் தாய்.

### அறிவார்ந்த பேச்சாளர்

'மதுரகவி' என்னுடன் 1980 வரை யாழிலே யான் வசித்து வந்த காலத்தில் பல பட்டிமன்றங்களிலும், கவியரங்குகளிலும் ஆலயச் சொற்பொழிவு களிலும், வானொலி நேர்முக வர்ணனைகளிலும் பங்கெடுத்த ஒருவராக விளங்குகிறார். எனது வீட்டிலேயே வந்து இளங்கலைமாணி (GAQ ; B.A) பரீட்சைக்கென தமிழையும் இந்துநாகரிகத்தையும் கற்றார். என்மீது அளவற்ற பாசமும், நேசமும், மதிப்பும், ஆசான் என்ற மரியாதையையுங் கொண்டவர். இவரது பண்பு, பணிவு கூடிய பக்தி வைராக்கியத்தையும் கவியியற்றி அவற்றைக் கவியரங்குகளிலே உணர்ச்சி பொங்க எடுத்தியம்பும் பாங்கையும் யான் நேரிலே கண்டும், கேட்டும் அனுபவித்திருக்கிறேன். வியந்துமுள்ளேன். சில வேளைகளிலே அடர்ந்த கருமுடித் தாடியுடைய காரை எம்.பி. யாகவும் கண்டுள்ளேன். பட்டிமன்றங்களிலேயும், கம்பன் விழாக்களிலும் கருத்துக் களை நெறிபிசகாது ஒழுங்குபடுத்தி விவாதிக்குந் திறனையும் அறிவாற் றலையும் புலமையையும் சாணக்கியத்தையும் கண்டுள்ளேன்.

### முதுநிலைத் தமிழ் விரிவுரையாளரது பாராட்டு

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்து முதுநிலை விரிவுரையாளராக யான் நியமனஞ் செய்யப்பட்டமையை அறிந்த அன்புநெஞ்சன் அருளானந்தன் என்னோடு கடித மூலம் தொடர்புகொண்டு தமது பணிகள் குறித்து ஒரு அன்பான 'வாழ்த்து' அனுப்புமாறு எழுதினார். அவரது கட்டளையை ஏற்றவனாக, 1998 இல் 'மதுரகவி வாழ்க! வளர்க! என வாழ்த்தி எழுதிய

வரிகள் இன்றும் அவரிடம் கைவசம் உண்டு. என் வாழ்த்துக் கவிதையால் மதுரகவியின் பணிகள் மேலும் கீர்த்தி பெற்றன என்பது வெற்றுரையன்று. அக்கவிதை வருமாறு:

*காரைக் கவிஞன் 'மதுரகவி' யெனுஞ் சிறப்பால்*
*பாரைக் கனியவைக்கும் பாவலனாம் - தேசுதிகழ்*
*சொல்லின்பத்தோடு சுவை புதிதாய்க் காணுமிவன்*
*வெல்லல் தான் சக்தி யருள்*

என்பது ஒன்று, மற்றது,

*முத்தமிழில் ஈடுபாடு முறுக்கான பக்தி நலன்*
*தத்துவங்கள் காணும் தனிவிருப்பு! மேலான*
*பக்தி நலநாட்டம்! பணிவுடைமை! பண்புநலன்*
*வித்தகர்பால் தூண்டும சித்த வொடுக்கம்!*
*இவை நிறைந்த மாணவனாய்த்*
*தமிழ் நாடி நின்ற தனயன்! இவன்*
*என்னில் தமிழ் கற்றான் இனிது!*
*வாழ்க! வளர்க!!*

(வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், முதுநிலை விரிவுரையாளர், 1998).

## இணுவில் வீரமணி ஐயாவின் பாராட்டு

20.09.1999 இல் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் ரதோற்சவ நிகழ்ச்சி நேர்முக வர்ணனையை வானொலியிலே அஞ்சல் செய்தார் மதுரகவி.

2000 ஆம் ஆண்டிலே 'சாஹித்திய ஸாகரம்' மகா வித்துவான் இணுவில் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்கள் 'மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்' அகில உலக ரீதியாக ஜேர்மன் நாட்டில் 'மண்' சஞ்சிகை கலையகம் நடத்திய கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றமையைப் பாராட்டி வழங்கிய வாழ்த்துக் கவியில்,

........
*மதிநுட்பம் சேர்ந்திடவே யாப்பணிகள் மாந்திடவே*
*கனிக் கவிதை இனிக்கத் தந்தான்*
*பூந்தமிழால் இலங்கைக்கே பெருமை சேர்த்த*
*பதிக்கவி மதுரகவி அருளானந்தன்*

என்று பாராட்டியுள்ளார்.

**'செந்தமிழ்த் திலகம்' பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்களின் மணிவிழா**

'மதுரகவி' 2001 ஆம் ஆண்டு மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த உயர் திருவிழாவில் தொடர் தெய்விகப் பேருரையை நிகழ்த்தினார். இதே ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உயர் கல்விப் பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதியாயிருந்தவரும், எனக்குப் பல்கலைக்கழகத்தில் முதுநிலைப் பேராசிரியராயும், கலாநிதியாயுமிருந்து தமிழ், ஆங்கில விரிவுரைகள் நிகழ்த்தியவரும். உலகத் தமிழியலாய்வாளர் வரிசையிலே விரல் விட்டு எண்ணத்தக்க ஆய்வறிவு மேதாவிலாசமிக்க கல்விமானும், இரட்டைக் கலாநிதியுமான தற்போதைய வாழ்நாட் பேராசிரியர் பேராசான் அ. சண்முகதாஸ் அவர்களின் மணிவிழாப் பிறந்தநாளை, 'பிறந்த நாள் பெருமங்கள வாழ்த்துக்கள்', 'தமிழ்மொழிக்கு மணிவிழா' என்னும் மகுடத்தில் பேராசிரியரை 'ஈழத்து அகத்தியனே' என்று முற்றிலும் பொருத்த மாக விழித்துக் கவிதை எழுதினார். அக்கவிதையின் முழுவடிவமும் வருமாறு:

*தாய் நிலத்தின் தமிழினத்தின் தமிழ்மொழியின் காவலனே*
*தாளாத கீர்த்தியுடன் உயர்கல்வி நெறிக் காவலனே*
*ஓயாத தமிழ்த் தொண்டால் உலகத்தை வென்றவனே*
*உரிமையுடன் தமிழ் மண்ணுக்காய் உழைப்பவனே*
*தூய தமிழ்ப் பண்பாட்டின் தொன்மைத் தலைமகனே*
*தொட்டபணிகளிலே தொல்லறத்தைக் காண்பவனே*
*ஆய கலைத் தமிழ் வளர்க்கும் ஈழத்து அகத்தியனே*
*அன்னைத் தமிழ் நிலத்தில் மணிவிழாக் காண்போம், மகிழ்ந்து''*

என்று நிறைவுறுகிறது.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் மணிவிழா அமைப்புச் செயலாளர் எனப் பணியாற்றிய 'மதுரகவி காரை எம்.பி.' மணிவிழா நாயகருக்குச் 'செந்தமிழ்த் திலகம்' என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவித்ததுடன், சண்முக தரிசனம் I, II என்னும் மணிவிழா மலர்களையும் வெளியீடு செய்து வைத்தார். இந்நிகழ்வு பற்றிப் பேராசிரியரது யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலை மாணவனான எனக்கு எதுவிதத் தகவலும் கிடைக்கவில்லை என்ப துடன், 'மதுரகவி காரை எம்.பி.'கூட இது தொடர்பில் என்னைப் புறங்காட்டி, முற்றிலும் ஒதுக்கி வைத்து விட்ட செயலை என்னென்பது! எனினும், பேராசிரியர் மீதும் என் மாணவன் 'மதுரகவி காரை எம்.பி.' மீதும் இன்றும் இனி இறக்கும் வரையும் என் பாசம், மதிப்பு ஒரு போதும் வற்றாது. இது

உறுதி. மணிவிழாவின் போதும் பல்துறைக் கல்விமான்கள், அறிஞர்கள், பிரமுகர்கள், நிர்வாகிகள் தொடர்பும், நட்பும் பாராட்டும் 'மதுரகவி' க்குக் கிடைத்தன. இத்தொடர்பாலும் யாழ். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் தமிழ்விழாவின் போதும், யாழில் பல்லின மாணவர்கள் கூடிய மாகாணத் தமிழ்மொழித் தினவிழாவிலும் மதுரகவியுடன் அறிமுகமானோர் விவரம் ஒரு நீண்ட பெயர்ப்பட்டியலாகும்.

சிவத்தமிழ்ச் செல்வி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாட் பேராசிரியருமான பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ். மாவட்ட நீதிபதியும், 'விகடகவி' மு. திருநாவுக்கரசு, நல்லை ஆதீன குருமகாசன்னிதானம், பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன், அரச அதிபர் க. சண்முகநாதன், மூதறிஞர் வித்துவான் கலாநிதி க. சொக்கலிங்கம் (சொக்கன்), பேராசிரியர், கலாநிதி சபா. ஜெய ராசா, திரு. பா. தனபாலன், கவிஞர் இராசையா குகதாசன் வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டுத்துறை அமைச்சின் முன்னாட் செயலாளர் சுந்தரம் டிவகலாலா, பலாலி ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபர் கவிஞர் சோ. பத்மநாதன், கல்விப் பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம்பிள்ளை, உதவிக் கல்விப் பணிப்பாளர், அருட்கலை, அரசு எம். எஸ். ஸ்ரீதயாளன், 'பிரசங்க பூஷணம்' சிவசண்முக மூர்த்தி, பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன், முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளரும், தலைசிறந்த சொற்பொழி வாளருமான கோ. சி. வேலாயுதம், கல்வியமைச்சின் செயலாளர் ச. தியாக லிங்கம், MIM இஸ்ஸடீன், திரு.எஸ். கிருஷ்ணகுமார், திரு. இராஜேஸ்வரன், கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. மகேந்திரன், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் இ. முருகுப்பிள்ளை, ந. அனந்தராஜ், திருமதி. பி. செல்வின் இரேனியஸ், திரு. ஏ. வித்தியானந்த மூர்த்தி, ARM ராபி, திரு, அ. கனகசூரியர், திருமதி எஸ். கணேசலிங்கநாதன், செ. மகேஸ், மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் இன்னும் பலராவர்.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, கல்முனை மாவட்ட அறிஞர்கள், கலைஞர்கள், கல்விமான்கள், மாணவர்கள் ஒன்றுகூடிய யாழ். தமிழ்மொழித் தினவிழாச் செய்திகளை வலம்புரிப் பத்திரிகையில் 'மதுரகவி' எழுதியுள்ளார்.

**சிவத்தமிழ்ச் செல்விக்கு வாழ்த்து**

சொந்த மண்ணான யாழ். தமிழ் மண்ணுக்கு உழைத்த தெய்வம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது பணிகளை வாழ்த்தியும், போற்றியும் 'மதுரகவி' பாடிய பாடல் வருமாறு:

*'நிலத்தினைப் பிரியாது வாழ்ந்தீர்கள்*
*நினைத்ததைச் செய்து முடித்தீர்கள்*
*தலங்களின் உயர்வுக்கு உழைத்தீர்கள்*
*தமிழரின் நிலத்தினைக் காத்தீர்கள்*
*கலங்கிய ஏழையை வளர்த்தீர்கள்*
*கல்வியை அள்ளிக் கொடுத்தீர்கள்*
*இலங்கட்டும் உங்கள் பணி ஈழத்தில்*
*இந்தமண் உங்களை வணங்கட்டும்'*

என்பது வாழ்த்துக் கவிதை.

**ஆலய நிகழ்ச்சிகளும் பட்டங்களும்**

'மதுரகவி காரை எம்.பி.' 24.03.2010 அன்று 'ஈழத்து இராமேஸ்வரம்' எனப்படும் புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் தேவஸ்தானத்தில் நடைபெற்ற மகாகும்பாபிஷேக நிகழ்ச்சியை இலங்கை வானொலியில் நேர்முகவஞ்சல் வர்ணனை செய்தார்.

2003 இல் யாழில் நடைபெற்ற மாகாணத் தமிழ்மொழித் தினவிழாக் குறித்து 27.07.2003 இல் வெளியான 'வலம்புரி' நாளிதழில் விமர்சனம் எழுதினார்.

03.08.2003 தொடக்கம் 28.03.2003 வரை நடைபெற்ற நல்லைக் கந்தன் மகோற்சவத்தில் பூங்காவனத் திருவிழா வரை 27 தினங்களும் உலகத் தமிழர் வானொலியில் தினமும் 6.30 முதல் 7.30 வரை www. world tamilar.com என்ற முகவரியூடாக நேர்முக அஞ்சல் செய்த மதுரகவியுடன் இணைந்த வர்ணனையாளர்களாகத் 'திருமுருகமாமணி' கா. ஆ. தியாகராசா (அறங் காவலர் சபைத் தலைவர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம், நயினாதீவு), வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் பிரசாந் இணைந்து எடுத்த புகைப்படம் யாழ். தினக்குரல் பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளது.

09.02.2004 இல் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தனுக்குத் திருமண விழா இனிதே நிறைவேறியது. மனைவி பெயர் அனுசூயா. மகள்மார் அ. கலாநிதி, அ. மதுகலா, வித்தியா என்னும் பெயரினர்.

2005 இல் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் அகில இலங்கைச் சமாதான நீதிவானாக அரசால் நியமிக்கப்பட்டார்.

31.07.2005 இல் 'கவியரசு' என்னும் பட்டத்தை காரைநகர் கலாசார சபையினர் வழங்கிக் கௌரவித்தனர்.

2007 ஆம் ஆண்டு யாழ். வீதியில் அமைந்துள்ள வேப்பங்காளி அம்மன் ஆலயத்தின் மகாகும்பாபிஷேக விழாவில் 'கவிச்சாகரம்' என்னுஞ் சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது.

2008 இல் உரும்பராய் ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக பத்து நாட்களும் தொடர் சொற்பொழி வாற்றிச் 'சிவநெறித் தொண்டர்' என்னும் பட்டம் வழங்கப்பட்டுக் கௌர விக்கப்பட்டார். இதேயாண்டு, நல்லைக் கந்தனின் தேர்த்திருவிழா நிகழ்ச்சி களை அவுஸ்திரேலிய இன்பத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பி நேர்முக வர்ணனை அஞ்சல் நிகழ்த்தினார்.

11.09.2008 இல் கந்தர்மடம் கண்ணகி அம்மன் ஆலய மகாகும்பாபி ஷேகத்தன்று பன்னிரு தினங்களும் ஆன்மிகத் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தியமையால் 'செஞ்சொல் ஞானவாரிதி' என்னுஞ் சிறப்புப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

15.01.2009 இல் நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினர் வண்ணை ஸ்ரீ காமாட்சியம்மன் ஆலய மண்டபத்தில் நடத்திய பொங்கல் விழாவில் கவியரங்கு நிகழ்ச்சியைச் சிறப்புற நடத்தினார்.

காரைநகர் கம்பன் கழகச் செயலாளராகவும் பணிபுரிந்தார்.

மகாகவியின் கோடை நாடகத்தில் பிரதான கதாபாத்திரமான 'மாணிக்கம்' பாத்திரமேற்றுச் சிறப்பாக நடித்துப் பாராட்டுப் பெற்றார். ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேக நிகழ்வின் போது வானொலியில் நேர்முக வர்ணனையாளராகப் பணிபுரிந்த புகைப்படம் (Head Phone உடன்) மகாகும்பாபிஷேக மலரிலே உண்டு.

என்றும் துடிப்புடனும் உற்சாகத்துடனும் ஈடுபாட்டுடனும் நேரந்தவறாது பக்தி நலனுடன் தொழிற்படுந் தமிழ்த்தொண்டனான காரை எம்.பி.க்கு 'கவிமாமணி', 'மகாகவி சாகரம்', 'கவிச்சாகரம்', 'வர்ணனைக் கலாநிதி', 'கவிச் சக்கரம்' என்னும் சிறப்புப் பட்டங்களும் உள்ளன.

**மதுரகவியும் உலக வானொலிகளும்**

தொடர்பூடகத் தொடர்பில், இலங்கை வானொலி, யாழ். F. M. வானொலி, உலகத் தமிழர் வானொலி, அகில உலக வானொலி, கனேடியத் தமிழ்

வானொலி, அவுஸ்திரேலிய இன்பத் தமிழ் வானொலி என்பனவற்றில் ஆலய அஞ்சல் நிகழ்ச்சிகளை அள்ளி வழங்குகிறார் 'மதுரகவி'. தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானம், தொண்டைமானாறு செல்வச்சந்நிதிக் கந்தனாலயம், நல்லைக் கந்தன் ஆலயம், நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம், துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் என்ற திருத்தலங்களிலே ஆண்டு தோறும் நிகழும் தேர், தீர்த்தத் திருவிழாக்களின் நேர்முக அஞ்சல் நிகழ்ச்சியிலே நேர்முக வர்ணனை செய்யும் ஒலிபரப்பாளர் இவர் என்பது உலகப் பிரசித்தம்.

**மதுரகவியின் தனித்த மாண்பு**

எழுத்தாளரும் கவிஞரும் கல்விமானுமான இவர் சைவத் தமிழ்ப்பண்பாட்டுக் கழகப் பணிப்பாளருமாவார். அறிவும், அனுபவமும் அன்பும் அருளும் ஆளுமையும் பண்பும் பணிவும் தெய்வநம்பிக்கையும் கொண்ட என் அருமை நண்பர் மதுரகவி காரை எம். பி. அருளானந்தன் 'நல்லார் தொடர்பும் நின்பூசை நேசமுங்' கொண்ட உருவினர். குடும்பத்தின் நல்ல தலைவர். நல்லாசான். 'பணியுமாம் என்றும் பெருமை' என்னும் குறள்மொழிக்கு இலக்கணமானவர். 'அன்பர்பணி செய்ய என்னை ஆளாக்கிவிட்டுவிட்டால்; இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே' என்னும் தாயுமானாரது கொள்கையில் அதீத அலாதியான பெரு நம்பிக்கையுடையவர். நல்லனவற்றையே நினைவிற் கொண்டிருப்பவர். அல்லாதனவற்றை அக்கணமே மறந்துவிடும் மாண்பினர்.

**சம்பவங்களை மதிப்பிடக் காலம் வேண்டும்**

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலே உயர் கலை வகுப்பில் எனக்குக் கற்பித்த பேராசான் 'அறிவொளி' மாவை 'தசம்' (த. சண்முகசுந்தரம்) அவர்கள் அடிக்கடி தாம் கற்பித்த அரசறிவியல் (Government) பாட வகுப்பிலே மறவாமற் கூறும் வரிகள் மதுரகவி பற்றி எழுதும் போது ஆவணப்படுத்தி வைக்க வேண்டியதொன்றாகும். அதாவது,

*மலையைக் காண்பதற்குத் தூரம் வேண்டும்*
*சம்பவங்களை மதிப்பிடுவதற்குக் காலம் வேண்டும்*

என்பதே அம்மகா மந்திரமாகும். இதுதான் நிதர்சன நிலை.

**தமிழ் செய்யும் தண்ணளியாளர்**

பெருக்கெடுத்துப் பிரவகித்தோடும் ஆற்றிலே பாரிய கற்கள் உருண்டு, புரண்டு, மோதி, மொத்துண்டு 'சிவலிங்கமென' மாறுவது போலவே காரை மண்ணின் புதல்வர் 'மதுரகவி காரை எம்.பி.'யும் தொடர்ந்து நிலைபெறும் இனவாதமெனும் மாற்றமுடியாத கொடிய இன்னலாலும் நடவடிக்கைகளாலும் படாத துயரப்பட்டும் அல்லோலகல்லோலப்பட்டும், அகதி வாழ்வு வாழ்ந்தும் உயிரைப் பணயம் வைத்தும் சோதனைகளையும் வன்முறைகளையும் இழி சொற்களையும் குண்டடிகளையும் மரணபயத்தையும் வென்று (தெய்வத்தின் அருளால் வென்று) இன்றும் தம் தமிழ் மண்ணிலே அருளுணர்ச்சியோடும், ஆனந்த மேலீட்டுடனும் ஆசிரிய ஊழியம் செய்தும் சமயப்பணி, கல்விப் பணி, பத்திரிகைப்பணி என்பன புரிந்து வாழ்கின்றாரென்றால் அவரது கொள்கையில் திருமந்திர வரிகளான,

*என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே*

என்ற உறுதியை - பேருண்மையின் அசையாத பிடிப்பில் துணிந்து நிற்கும் வல்லபமாகும். இவரது அனுபவமும் அநுபூதியும் காண்போர் வியப்பனவாகவே உள்ளன.

**நீடுவாழப் பிரார்த்தனை**

இனியும் 'மதுரகவி காரை எம்.பி.' நல்லவற்றை நன்றே செய்து நானிலத்தில் மனைவி, மக்களுடன் பல்வளமும் நீடாயுளும் பெற்று வாழுவதுடன் இனி யெதிர் காலத்திலே உயரிய எழுத்துத்துறையில் ஈடுபாடு காட்டி நூல்கள் பலவற்றை ஆக்கும் பணிகளிலும் முயல வேண்டும் என்று பணிவுடன் வேண்டி, எம்குல தெய்வமான நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திரு வருளைச் சிந்தித்து வந்தித்து வாழ்த்துகிறேன்.

***(28.03.2011)***

II

## பேராசிரியர் இ. க. வைத்திலிங்கம் நந்தகுமார்

பௌதிகப் புவியியல் I என்னும் இவ்வரிய நூலைத் தமிழ்மொழியிலே எழுதி வெளியிட்டுள்ள பேராசான் இரத்தினதீப, மணிப் பேராசிரியர் வைத்தி லிங்கம் நந்தகுமார் அவர்கள் யாழ்ப்பாணத்து வடமராட்சியிலுள்ள பல்வளமும் நிறைந்த வியாபாரிமூலையில் ஸ்ரீமான் வைத்திலிங்கம் சரஸ்வதி தம்பதியின் ஏகபுத்திரனாகப் பிறந்தார்.

தமது ஆரம்பக் கல்வியையும் இடைநிலைக் கல்வியையும் பருத்தித்துறை யிலே புகழ்பெற்ற கல்விமான்களை உருவாக்கும் ஹாட்லிக் கல்லூரியிலே கற்றார். 1970 ஆம் ஆண்டு முதல் பேராதனைப் பல்கலைக்கழகப் புவியியற் றுறையிலே முதற்றரச் சித்தி பெற்றுப் புவியியலிலே சிறப்புப் பட்ட தாரியானார்.

1974 - 1975 வரை இலங்கை மத்திய வங்கியில் ஆராய்ச்சி உத்தி யோகத்தராகப் பணிபுரிந்தார். 1976 - 1981இல் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நிரந்தர உதவி விரிவுரையாளராகக் கடமையேற்றார். 1985 - 1986 வரை சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II இலும், 1986 - 1996 வரை சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I இலும் பணி புரிந்தார். 1990 இல் முதுநிலை மாணவ ஆலோசகர்களின் தலைவரானார்.

1991 முதல் 1994 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து இடம்பெயர்ந்து பேராதனைப் பல்கலைக்கழகப் புவியியற்றுறையில் சேர்ந்து கொண்ட மாணவர்களுக்கு வருகைதரு விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

1996 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே புவியியற்றுறையில், இணைப் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்றார். இன்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்து புவியியற்றுறையிலே அதன் தலைவராகப் பணி புரிகின்றார்.

1993 - 1998 இல் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் வருகைதரு விரிவுரையாளராக் கடமையாற்றினார். அதேகாலப் பகுதியில் புவியியற்றுறை ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார்.

1997-2001 வரை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞானத் துறையில் வருகைதரு பேராசிரியராகக் கடமையாற்றியுள்ளார். 2002 முதல் 2004 வரை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞானத் துறையில் முதுநிலை ஆலோசகராகக் கடமையாற்றியுள்ளார்.

1985 இல் M.Sc பட்டப்பின் ஆய்வு பொருட்டு ஜப்பான் நாட்டில் 'சுகுவா' பல்கலைக்கழகத்தில் சுற்றாடல் அறிவியல், தரைக்கீழ் நீரின் தரம் என்னும் விடயம் தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.

1993 இல் குஜராத்திலுள்ள காந்தி வித்யாபீடத்திற்கு ஆய்வாளராகச் சென்றார்.

1997-1999 வரை தொடர் ஆய்வரங்குகளில் பங்குபற்றினார்.

2000 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா பவுண்டேசனில் பணிப்பாளரானார். தேசிய கல்விக் கூடத்தில் வளவாளராகப் பணிபுரிந்தார். இனை விவகார அமைச்சின் ஆலோசகராகவும் பணிபுரிந்துள்ளார்.

2002 இல் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் ஆலோசகர் பதவி வகித்தார். தேசிய ஒருங்கிணைப்புத் திட்டத்தில் சிரேஷ்ட ஆலோசகராய் அமர்ந்தார்.

2002 இல் கண்டியில் நிகழ்ந்த தமிழ் சாகித்திய விழாவிலும், 2003 இல் நுவரெலியாவில் நடந்த தமிழ் சாகித்திய விழாவிலும் கௌரவிக்கப்பட்டார். 2001 ஆம் ஆண்டு கண்டி கலை, கலாசார ஒன்றியத்தினால் 'இரத்தின தீப' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

பேராசிரியர் வை. நந்தகுமார் அவர்கள் அகில இலங்கைச் சமாதான நீதிவான் ஆனார்.

2003.05.24 அன்று மணிவிழாக் கண்ட பேராசிரியர் நந்தகுமார் அவர்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம். ஜப்பானிய மொழிகளிலே சரளமாகப் பேசும் வல்லமை உடையவர். இலங்கையின் மூவினங்கள் மத்தியிலும் செல்வாக்குப் பெற்றவர். பல்கலைக்கழக மாணவர்கள், துணைவேந்தர், பீடாதிபதிகள், துறைத் தலைவர், சிற்றூழியர் முதல் மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் வரை அனைத்துத் தரத்தினர்கள் மத்தியிலும் செல்வாக்குப் பெற்றவர்.

புவியியற் பாடத்தில் க.பொ.த. (உயர்தரம்), பல்கலைக்கழக முதற் பட்டப்படிப்பு, முதுகலைமாணி, முதுதத்துவமாணி, கலாநிதி முதலிய பட்டப் படிப்புகளை மேற்கொள்ளும் மாணாக்கர்களுக்கு விரிவுரையாளராகவும் ஆய்வு மேற்பார்வையாளராகவும் வளவாளராகவும் கடமையாற்றி வருமிவர், இந்தியப் பல்கலைக்கழகங்கள் சிலவற்றிலும் இலண்டன் பல்கலைக்கழகத் திலும் பரீட்சகராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். இலங்கைத் தென்

கிழக்குப் பல்கலைக்கழகத்திலும், கிழக்குப் பல்கலைக்கழகத்திலும், இந்தியச் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் வருகைதரு பேராசிரியராகவும் ஆலோசகராவும் கடமையாற்றி வருகிறார்.

இன்றும், என்றும், என்றென்றும் மிக வியப்பையும் விழிப்புணர்ச்சியையும் ஆய்வு மகிழ்ச்சியையும் சிந்தனையையும் தரும் ஒரு நல்ல பாடமாகவும் துறையாகவும் விளங்கும் புவியியலின் திறன்களையெல்லாம் விண்டுரைக்கவல்ல சாணக்கியம் மிக்க அறிவுத்திறன் நுண்மான் நுழைபுலம் கொண்ட அதி மகோன்னத மேதாவிலாசம் மிக்க நிபுணத்துவ ஆலோசகர் பேராசிரியர் வை. நந்தகுமார் அவர்கள் என்பது வெறும் புகழுரையல்ல. பேராசிரியப் பெருந்தகை அவர்கள் நடமாடும் மனித நேயமிக்க மாமனிதர். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்; உதவுங் கரங்களால் உயர்ந்த மகத்தான மனிதர்; பேராதனைப் பல்கலைக்கழகத்துக் குறிஞ்சிக்குமரன் ஆலயப் பொறுப்பாண்மைக் குழுவின் தலைவராயிருந்து அண்மையில் வெகு விமரிசையாக மகா கும்பாபிஷேகத்தை நிகழ்த்தி முடித்தார். பேராதனைப் பல்கலைக்கழகத்துக் கலை, கலாசார, நடன நாடக மன்றங்களின் சிறப்புப் பேராளராவார்.

'விபாஷா' மொழிபெயர்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் இணை ஆலோசனைக் குழு உறுப்பினர்.

பல்கலைக்கழகத்திலே பட்டதாரி மாணவனாகப் பயின்ற காலத்தில், கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா போன்ற கல்விமான்களின் சிங்களமொழி உரைகளை நேரடி மொழிபெயர்ப்புச் செய்து பாராட்டுக்களைப் பெற்றார். இவரது சரளமான விடயக் கனதி நிரம்பிய மொழிபெயர்ப்பு ஆற்றல் - மொழிவளம் என்பன முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ, பேராசிரியர் கலாநிதி ஜி. எல். பீரிஸ் போன்ற பல சிங்களத் தலைவர்களின் புருவங்களை உயர்த்தியிருக்கின்றன.

செயல்வீரர், சளைக்காத உடம்பினர், சளைக்காத உழைப்பினர், அசையாத தன்னம்பிக்கையினர், தளம்பாத அறிவினர், உயர்ந்த நகைச்சுவையுணர்வினர், கொப்பளிக்கும் உற்சாகமிக்கவர், நேரந் தவறாதவர், வினைத்திறன் மாண்புடையவர், பன்முக ஆளுமையினர், விதந்துரைக்கும் பாங்கினர், பண்பாட்டுணர்ச்சியாளர், மனிதாபிமானச் சிகரம் என்பன பேராசிரியர் நந்தகுமாரது தகைமைத் தனிச் சொத்துக்கள்.

சர்வதேசரீதியில் இணை வெளியீடுகளாக பத்துக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். சுற்றாடல், நிலக்கீழ் நீர், நிலக்கீழ் நீருக்கும்

புவியின் மேற்பரப்புக்குமிடையிலான தொடர்புகள், யாழ்ப்பாண குடா நாட்டின் நிலக்கீழ் நீர்ப்பிரச்சினைகள், மண்வளம், நிலக்கீழ் நீரைப் பயன் படுத்தும் பொழுது நில உபயோகத்தில் ஏற்படும் முன்னேற்றமும் விளைவு களும், இலங்கையின் சனத்தொகையும் விருத்தியும், நிலக்கீழ் உபயோகமும் சுற்றாடல் பாதிப்பும், போன்றவற்றின் காலநிலைப் பாகுபாடு, காற்று மாசடைதலும் அதன் விளைவுகளும் வளிமண்டலத்தில் பச்சை வீட்டு வாயுவும் அதன் விளைவுகளும் முதலிய விடயங்கள் தொடர்பாகச் சிறு நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

பேராசிரியர் வை. நந்தகுமார் அவர்கள் தரைக்கீழ் நீர், பனை, ஆய்வு முறையியல் முறைகளும் நுட்பங்களும் (2008) எனும் நூல்களை வெளி யிட்டுள்ளார்.

பேராசிரியரது சிந்தனைத் திறனையும், தமிழ்மொழி வளத்தையும் விடயத் தெளிவையும் இந்நூல் மெய்ப்பிக்கிறது. தகைசார் பேராசிரியராயும் இன்னும் பல நூல்களைத் தமிழுலகிற்கு உவந்தளிக்க வேண்டும் என்று வேண்டுவதுடன் என்றும் பாசமிகு அன்பு மனையாள் இராஜேஸ்வரி (ஓய்வு நிலை அதிபர்) அருமைப் பிள்ளைகள் ஜெயன் (B.Sc. Enginner, England) ஜீவா (மருத்துவ கலாநிதி), தருஷன் (Enginner, Student) ஜனனி மற்றும் பேரக் குழந்தைகளுடன் நீடு சுகமே வளம்பெற்று வாழ வேண்டிக் குறிஞ்சிக்குமரன் திருவடிகளைச் சிந்தித்து வந்தித்துப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

## III

## விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி

**''சைவநன்மணி புலவர்மணி சிவமயச் செல்வி விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி அவர்களின் 80 ஆவது அகவையையொட்டிய வாழ்வும் பணிகளும்'' ஒரு கண்ணோட்டம்**

கல்வி கேள்வி ஒழுக்கங்களிலே சிறந்து விளங்கும் பேரறிஞர்களைக் கொண்ட பிரதேசம் யாழ்ப்பாணமாகும். 'வையத்துயர்ந்தது யாழ்ப்பாணம்' என்பார் மகாகவி து. உருத்திரமூர்த்தி. யாழ்ப்பாணத்திலே நிலவும் மகாவிசேட மென்னவெனில் காசி, இராமேஸ்வரம், சிதம்பரம், கைலாயம், படை வீடுகள், திருச்சி, சென்னைக் கந்த கோட்டம், ஆதீனங்கள் என்பனவற்றிலுள்ள அதீத ஈடுபாடு என்பதாகும். 'குப்பிளான்' என்னும் ஊரிலே பிறந்த செந்திநாதையர் 'காசிவாசி செந்திநாதையர்' என்று புகழப்படுபவர். காசிவாசி செந்திநாதையர் அவர்கள் அவதரித்த குப்பிளானிலே 1931 ஆம் ஆண்டு பிறந்து இன்று 'தொண்டுபடுகிழவி' என எண்பது ஆண்டு அகவையிலே குப்பிளான் பதியிலே வாழ்பவர் புலவர் விசாலாட்சி மாதாஜி அவர்கள்.

நீண்டதோர் சைவப் பாரம்பரியமும், தமிழ்க் கல்வி மரபும், கொண்ட இடங்களாகக் குப்பிளான், ஏழாலை, கட்டுவன், குரும்பசிட்டி, மல்லாகம், தெல்லிப்பழை, சுன்னாகம், ஊரெழு, பலாலி, புன்னாலைக்கட்டுவன், உரும்பராய் என்பனவற்றைக் குறிப்பிடலாம். நாவலர் பெருமானால் உருவாக்கப் பட்ட சைவத்தமிழ்க் கல்விச் சிந்தனை மரபு இப்பிரதேசங்களில் செழுமையும் வளப்பமும் பெற்றுத் திகழலாயிற்று. சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய புன்னாலைக் கட்டுவன் மகா வித்து வான் சி. கணேசையர், ஏழாலையிலே சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தாபித்த ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை, காசிவாசி செந்திநாதையர் என்போர் இவ்வகையிலே குறிக்கத்தக்கோராவர். அம்மரபின் வளர்ச்சியுந் தொடர்ச்சியுமாக இன்றும் நம் மத்தியிலே வாழ்பவர் புலவர் விசுவாம்மா விசாலாட்சி மாதாஜி அவர்களாவர்.

காசிவாசி செந்திநாதையர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் மாணவர். நாவலர் பெருமானும் காசிவாசியும் தமது வாழ்நாள் முழுவதும் சைவசமயம் செழித்தோங்கி, செழித்து வளரப் பணிகள் பலவாற்றிய மகா சிரேட்டர்கள்.

நாவலர் பெருமான் சைவத்தையுந் தமிழையும் தமதிருகண்ணெனப் போற்றி வாழ்ந்தவர். சைவப்பிரசங்கம், தமிழ் சைவநூல் வெளியீடுகளையும் புராணேதிகாசங்களையும் வசனநடை நூல்களையும் எழுதியும் பதிப்பித்தும் கல்விப்பணி புரிந்தவர். நாவலர் நைட்டிகப் பிரமச்சாரிய ஒழுக்கநெறி நின்றவர். நாவலர் வழியிலே வந்த இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சிவத்தமிழ்ச் செல்வி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, புலவர் சிவமயச் செல்வி விசுவாம்மா விசாலாட்சி மாதாஜி ஆகியோரும் நைட்டிகப் பிரமச்சரிய விரதம் கைக்கொண்ட பெருந்தகைகளே.

சைவமும் தமிழும் தமதிருகண்களெனக் கொண்டு வாழ்ந்து வந்த நாவலர் பெருமானின் மரபினை அடியொற்றி இன்றும் சமயப் பிரசாரகராகவும் சைவநன்மணிகளாகவும் சிவவேடச் செல்வியாகவும் எம்மத்தியிலே ஆன்மிகம், அனுபூதி, தியானம், பஜனை, திருமுறை விளக்கப் பணிகள் எனத் தமது பொழுதைச் சிவப்பொழுதாகவும், தவப்பொழுதாகவும் ஆக்கிக் கொண்டு - மனமகிழ்வுடன் குப்பிளான் சோதிவிநாயகர் ஆலய ஆச்சிரம ஞானியாக வாழ்ந்துவருகிறார் மாதாஜி அவர்கள். சைவநன்மணி மாதாஜி யவர்களின் சிவபொலிவுடனான அநுபூதிச் சிறப்பு, நலனையும் தருவதாகும். சிவனை விடவும் 'சிவனடியார்கள்' பெருமைக்குரியவர்கள்; போற்றத் தக்கவர்கள் என்பது சைவப் பேருண்மை. இதற்கான இலக்கியச் சான்று திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணமாகும்.

இந்திய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே புலவர் பட்டம் பெற்ற கல்வி மேன்மைச்சிறப்புடையவர் புலவர் மாதாஜி அவர்கள். தமது அளப்பரிய முயற்சியின் பயனாக இதுவரை பதினாறு நூல்களைச் சைவத்தமிழ் உலகுக்கு எழுதி வெளியீடு செய்து உபகரித்துள்ளார். நாவலர் மரபின் சுவடு மாதாஜி.

நாவலப்பிட்டி, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலே தமிழ், சைவ சமயபாடங்களின் சிறப்பாசிரியராகக் கடமையாற்றியுள்ளார். 1965, 1984, 1992 ஆம் ஆண்டுகளிலே இலங்கை வானொலியிலே (SLBC, Tamil National Service) சைவநற்சிந்தனைகள் நிகழ்த்தினார். சைவப் பேருண்மை களைத் தமது மென்மையான மழலைக் குரலிலே நிகழ்த்தும் தனித்துவச் சிறப்பு வியந்து பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். சைவத்தைத் தோற்று வித்தோர் வரிசையிலே முதன்மையும், தலைமையும் பெற்றுத் திகழ்பவர் காரைக்காலம்மையாராவார். அம்மையாரும் பிரபந்தங்களை இயற்றிச் சிவன் புகழையும் பெருமையையும் நிலைநாட்டினார். புலவர் மாதாஜியும் பிரபந்த மியற்றுவதிலும் தமது திருக்கோலப் பொலிவினாலே சிவன் பெருமை களை நிலைநிறுத்தித் தொண்டுப் பணிகள் புரிகிறார். இவ்வகையிலே காரைக்

காலம்மை மரபு யாழ்ப்பாணத்திலே குப்பிளானிலே வேரூன்றியுள்ளமை கண்டின்புறற்பாலது. மாதாஜியவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் சைவப்பிரசங்கங்கள் செய்தார். சைவசமய சிந்தனைகளைப் பட்டி தொட்டி யெங்கும் பறையறைந்தார். ஆலயங்கள் பலவற்றுக்கும் யாத்திரை செய்து அருள்வளம் பெற்றார்.

காரைநகர் கல்வி நிலையக் குருகுலம், கிளிநொச்சி ஆதரவற்ற பிள்ளைகள் குருகுலம் ஆகிய நிறுவனங்களில் பாதுகாவலராகக் கடமை புரிந்தார். இவருடைய சைவசமயஞ்சார் நூல் வெளியீட்டுப் பணியைக் கௌரவித்து இந்து கலாசாரத் திணைக்களம், அகில உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை என்பன பாராட்டி விருதும் சிறப்புப் பட்டங்களும் அளித்துள்ளன.

மாதாஜி அவர்கள் தமது பூர்வ புண்ணியத்தால், இலங்கை இந்திய அச்சிரம் தொடர்புடையவர். திருச்சி மாவட்டத்திலுள்ள திருவீங்கோய் மலை ஸ்ரீ லலிதா சமாசத்தினால் சந்நியாசம் ஸ்ரீ வித்யா மந்திரம் ஆதியன பெற்று, 'ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி' என்ற சந்நியாச நாமம் பெற்றுப் பாராட்டும் பெற்றார். அத்துடன் இந்தியாவிலுள்ள கன்னியாகுமரி தொடக்கம் ரிஷிகேஷ் வரையும் சபரிமலையிலுள்ள திருத்தலங்களையும் தரிசித்தமை குறிப்பிடத்தக்கது. இவர் புலவர்பட்டத்துடன், சிவமயச் செல்வி, சைவ நன்மணி என்னும் கௌரவப் பட்டங்களையும் பெற்றுள்ளார். மாதாஜியின் சமய அனுபவம் எது என்று கேட்போருக்கு அவரே 2001 ஆம் ஆண்டில் மேல்வருமாறு எழுதித் தகுந்த விடையளித்துள்ளார். அதாவது,

''1964 முதல் 1990 வரை திருக்கேதீச்சரத்திலுள்ள திருவாசக மடத்தில் சைவப்பெரியார் தவத்திரு சரவணமுத்துச் சுவாமிகளின் திருவாசகம் முற்றோதலுடன் திருவாதவூரடிகள் புராண படனம் நிகழ்விப்பதனையும் அனுபவித்தோம்'' (2001: xvi).

மாதாஜியின் சுகானந்த அனுபவம் திருமுறைகளும், புராணபடனமும். சிவத்தியானமுமேயெனலாம்.

1983 ஆம் ஆண்டு கொழும்பிலே தமிழருக்கெதிரான இனஅழிப்புக் கலவரத்தை அப்போதிருந்த சிங்கள அரசு வெகுண்டெழுந்து நிகழ்த்திய போது இக்கட்டுரையாளரும் மனைவியும் கொழும்பு ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா மகாவித்தியாலய அகதி முகாமிலிருந்து, யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் வழியிலே கிளிநொச்சிக் குருகுலத்தில் மாதாஜி அவர்களாலும், குருகுலத்திலே பராமரிக்கப்பட்டு வந்த குருகுலப் பிள்ளைகளாலும் சிறப்பாக வரவேற்று உபசரிக்கப்பட்டோம். கொழும்பிலே அகதி முகாமில் உணவின்றியும், உறவினரைப் பிரிந்தும் நாம் தவித்திருந்த வேளையிலே

யாழ்ப்பாணத்துக்கு விமானம் செல்கிறது, புகைவண்டி செல்லகிறது என்றெல்லாம் அகதிகளாகிய எங்களை ஏமாற்றிப் பின் ஒருவாறு பஸ்வண்டி மூலம் - தரை வழியாக - கொழும்பிலிருந்து யாழ்ப்பாணஞ் செல்லும் ஏற்பாட்டை இராணுவம் செய்து தந்தது. அப்பொழுது 5 தினங்களுக்கு மேல் ஒருவித உணவும் உட்கொள்ள முடியாத பயப்பீதி நிலையில் - உயிரைக் கையிலே பிடித்தவண்ணம் - கிளிநொச்சி சென்றிறங்கி னோம். கிளிநொச்சியில் அவ்வேளை முன்னறிவித்தலில்லாத ஊரடங்குச் சட்டம். கண்ட இடத்தில் தமிழரைச் சுடுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (பயங்கரவாதிகளை ஒழிப்பதற்காக) அத்தருணத்திலே எனக்குத் 'தொல்லை யோர் இருவர் தேடும் சோதியே யாது செய்வேன்' என்ற திருவாதவூரடிகள் புராணத்து வரிகளே நினைவுக்கு வந்தன. தெளிவேற்பட்டது. எனக்கு மாதாஜியின் திருவுருவமே முதலில் என் மனக் கண்ணிலே தென்பட்டது. என்னையும் என் மனைவியையும் அரவணைக்கவும், வரவேற்கவும் கிளிநொச்சிக் குருகுலம் உண்டு தானே'' என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு குருகுலத்தினுட் பிரவேசித்தவேளை குருகுலத்திலிருந்த மாதாஜியும் பிள்ளைகளும் இன்முகங்காட்டி எம்மை வரவேற்று, ''முதலிலே தண்ணீர்த் தொட்டிக்குச் சென்று நன்றாகத் தலையிலே அள்ளித் தோய்ந்துவிட்டு வாருங்கள் தம்பி'' என்று மாதாஜித் தாய் உத்தர விட்டார். நாங்களும் தெய்வந்தான் எங்களைக் காப்பாற்றியது என்று கருதக் கொண்டு நல்ல நீர் நிரம்பிய நாற்சதுரத் தொட்டியில் நிரம்பிய நீரிலே அள்ளித் தோய்ந்துவிட்டுத் திரும்பிவந்தவேளை திருநீறு பூசியபின் உடன் அவித்த சுடச்சுட உள்ள இடியப்பத்தையும் நல்ல தேசிக்காய்ச் சொதியையும் பரிமாறு மாறு கூறி, குருகுலக் குழந்தைகளுடன் நாமும் இரவுச் சாப்பாட்டை முடித் தோம். அதன் பின் என் மனைவியிடம் குருகுலந் குழந்தைகள் கொழும்பில் என்ன நடந்தது என்று குசலம் விசாரிக்கத் தொடங்கி விட்டனர். என் மனைவி கொழும்பில் நாம் பட்ட அவலங்களையும், அல்லோகல்லோலங்களையும், பயப்பீதியையும் அப்பிள்ளைகளுக்கு எடுத்து விளக்கினார். அதன் பின் தான் என்னைப் பார்த்துக் கேட்டார். உங்களுக்கு எப்படி விசாலாட்சி மாதாஜியைத் தெரியும் என்று? அவ்வேளை, நான் இலங்கை வானொலியில் சமய நிகழ்ச்சிகள் தயாரிப்பாளராக இருந்தபோது, மாதாஜியும் சைவநற் சிந்தனைகள் செய்வதற்காக வானொலி நிலையத்திற்கு வருவார். அவர் எனது நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் அறிஞர், கலைஞர் என்று பதில் சொன்னேன். அன்றைய திடீர் ஊரடங்கு வேளையில் உயிர்ப்பிச்சை அளித்தவர் மாதாஜி அவர்கள் தான்.

அதன்பின் உக்கிரமான கொடிய யுத்தம் 1996 இல் யாழ்ப்பாணத்தி லேற்பட்டது. குடும்பத்துடன் இடம்பெயர்ந்து, தொழிலின்றி, வருமானமு மின்றி மிகுந்த பயத்துடன் நாவலப்பிட்டிக்கு இடம்பெயர்ந்து அகதி வாழ்வு வாழவேண்டிய இடர்நிலை ஏற்பட்டது. யாழ்ப்பாணத்தில் கடும் யுத்தம் நடைபெற்ற காலம். கண்மண் தெரியாமல் ஆகாயத்திலிருந்து விமானக் குண்டு வீச்சுகள், சீ பிளேன் நோட்டம், பீரங்கித் தாக்குதல்கள், ஹெலித் தாக்குதல்கள், ஷெல் வீச்சுகள் சகடையிலிருந்து பீப்பாய்க் குண்டு மழைகளைப் பொதுமக்கள் வாழிடங்களிலே அழிந்து சாம்பராகட்டும் என்று எவ்வித இரக்கமுமின்றி ஆகாயத்திலிருந்து வீசினர். ஹெலியிலிருந்து சுட்டனர். பேரவலத்துடன் உயிர்தப்பி ஒருவாறு நாவலப்பிட்டிக்கு வந்து சேர்ந்தோம். நாவலப்பிட்டியில் வசிக்கும் எனது சகோதரியின் குடும்பத்தினர் புகை வண்டியில் வவுனியாவுக்கு வந்து எம்மை அழைத்துக்கொண்டு நாவலப் பிட்டிக்குச் சென்றனர்.

நாவலப்பிட்டியில் ஆத்மஜோதி நா. முத்தையா ஆசிரியர் அவர்கள் அதிபராகவிருந்த கதிரேசன் கனிஷ்ட வித்தியாசாலையில் நான் அவரிடம் 5 ஆம் ஆண்டிற் கல்வி கற்றேன். அத்தொடர்பும் என்னை மகிழ்வூட்டியது. நாவலப்பிட்டியிலிருந்து சற்றுத் தொலைவில் நுவரெலியா றோட்டில் 'குயின்ஸ்பரி' என்னும் தோட்டம் உள்ளது. அங்கு ஸ்ரீ நவநாதச் சித்தர் சிவாலயம் உள்ளது. அது இன்று 'நவநாதேஸ்வரம்' என்று அழைக்கப் படுகிறது. சித்தர் சமாதியிலிருந்து சிவலிங்கம் வளர்ந்து வருகிறது.

குயின்ஸ்பரி ஸ்ரீநவநாதச் சித்தர் சிவாலயத்தின் அறங்காவலர் திரு. ஆர். இராஜகோபால் அவர்கள். அவரது தொடர்பாலும், புரவலர் 'ஸ்ரீ லங்கா ஸ்ரோர்ஸ்' அதிபர் ஸ்ரீ முத்தையாபிள்ளையவர்களின் நட்பாலும், இன்னும் இணுவில் எஸ். தில்லைநாதன், நா. சிதம்பரநாதர், சுவாமி தந்திரதேவா, திருமதி சந்திரபவானி மற்றும் குயின்ஸ்பரி அறங்காவலர்கள், பூசாரியார் நட்பாலும் குவின்ஸ்பரி ஸ்ரீ நவநாதச் சித்தர் சிவாலயத்திலே மகா கும்பாபி ஷேகம் செய்யும் வேளை எமது குடும்பமும் அங்கு சென்று வழிபட்ட போது மாதாஜி அவர்களும் எம்முடன் கூடவே குயின்ஸ்பரிக்கு வந்ததுடன் 'வன வழிபாடு' நிகழ்விலும் - மலையேறி வந்து எம்மை ஆசீர்வதித்தார். மலையேறும் களைப்பையும், இளைப்பையும் பொருட்படுத்தாது, அட்டைக் கடியையும் சகித்துக்கொண்டு அருள்வழி காட்டி எம்முடன் தாமும் மலையேறி வந்து ஆத்மதாகத்தைத் தீர்த்தருளினார். 'பாம்பின் கால் பாம்பறியும்' என்பார் களே. 'ஞானிகளுக்குத் தானே தெரியும் ஞானானுபவம்'. இத்தொடர்பும் ஒரு தெய்வசங்கற்பமே என்பது சிறியேனது நம்பிக்கை. சிவயோக சுவாமிகள்

பரிபாஷையிற் சொன்னால் 'ஒரு பொல்லாப்புமில்லை', 'எப்பவோ முடிந்த காரியம்' என்றாகிவிட்டது. ஞானச்செல்வி, சிவமயச் செல்வி மாதாஜியின் துணை என்பது . எமக்கு மனத்தெம்மையும், துன்ப நீக்கத்தையுந் தந்தன.

இதன் பின்னர் மாதாஜி அவர்கள் கொழும்பில் பேலியகொடை, தெல்லிப்பழை துர்க்கா மகளிர் இல்லம் என்று சைவத் தமிழ்ப்பணிகள் புரிந்தார். சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியும், புலவர் விசாலாட்சி மாதாஜியும் ஒரே இடத்தில் இணைந்து நின்று - தெல்லிப் பழையில் - வாழும் அற்புதக் காட்சி - அருமையான சந்தர்ப்ப சூழ்நிலை நாம் வாழும் காலத்திலே நிகழ்ந்தமையைக் கண்டு அடியேன் பெரிதும் மகிழ்வும், மனநிறைவுங் கொண்டதுண்டு. இரு ஆன்மிகத் தோன்றல்களான கல்விவல்ல நிறைகுடச் செல்விகளும் மிகப்பெரிய - பாரிய - தன்னம்பிக்கை வாழ்வைத் துர்க்காபுர மகளிர் இல்லத்துக் குழந்தைகளுக்கு நல்கினர்.

மாதாஜியவர்கள் பதின்மூன்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதித் தம்வசம் வைத்துள்ளார். அவற்றையெல்லாம் அச்சுவாகனம் ஏற்றி வெளிக்கொணர வேண்டும் என்பது அவரது வேணவாவாகவுள்ளது. பதின்மூன்று நூல்களின் பெயர்கள் இனி வெளிவரவுள்ள நூல்களாகக் குறிக்கப்பட்டுள்ளன. மாதாஜியின் நூல் வெளியீடுகளுக்கு முதலிடவெனப் பணம் வேண்டும் என்பது அவரது தினசரிப் பிரார்த்தனை. பன்றிக் குட்டிகளின் குரலையே - அழுகையையே கேட்டுத் தாய்ப்பன்றி வடிவிலே உருவெடுத்து வந்த சிவபெருமான் மாதாஜியின் குரலுக்கும் இரங்குவான் என்பது தெளிவு. இச்சந்தர்ப்பத்திலே அன்புள்ளங்கள், புரவலர்கள், வள்ளல்கள், சைவாபி மானிகள், நிறுவனங்கள், வெளிநாட்டு பரோபகாரிகள் ஆன்மிகச் செல்வர்கள் மாதாஜிக்கு நூல்களை வெளியிட்டு வைக்க மனமுவந்து பண உதவி செய்ய முன்வரவேண்டும் என்பதே எமது கோரிக்கையும், வேண்டுதலுமாகும்.

மாதாஜியின் நூல்கள், எதிர்காலத்தில் நம் சைவச்சிறார்களுக்கும் இளைய வர்க்கும் பெரியோர்க்கும் பெரிதும் அறிவுணர்ச்சி தரவல்லன. இச்சந்தர்ப் பத்திலே அவரது புலமையும் வித்துவமுஞ் சார்ந்த மனம் குளிர சைவத் தமிழுலகம் - தமிழ் மக்கள் - சைவசமயஞ் சார்ந்த வள்ளல்கள் நிரம்பிய பணவுதவி செய்வதே அவர் மனம் நிறைடைவதற்கான ஒரே வழி. தனக்கென வாழாத மாதாஜியின் புகழ் அறிவுத்திறன் - சிந்தனைகள் நூல்களால் மேன் மேலும் பெருமைபெற வேண்டாமா? மாதாஜியின் தன்னடக்கம் அவரின் மகத்துவத்தை மூடி மறைத்துவிடக்கூடாது என்பதே என் விருப்பம். அனை வரும் பேதமற மாரிபோலுதவி புரிக. உதவி புரிக.

**மாதாஜி எழுதி வெளியிட்டுள்ள நூல்கள் வருமாறு:**

1. 1984 - மாணவர் மாதிரிக் கட்டுரைகள்
2. 1986 - கிளிநொச்சி, ஜெயந்திநகர் ஸ்ரீ மீனாட்சியம்மன் திருவூஞ்சல்
3. 1986 - உடற்பிணி: பகைமை தீர்க்கும் மருந்து (திருஞானசம்பந்த சுவாமிகளின் தேவாரங்கள்)
4. 1987 - கர்மயோகி அமரர் வே. கதிரவேலு
5. 1989 - நல்லூர்க் கந்தன் நான்மணிக்கோவை
6. 1991 - சிந்தனைத் தேன் துளிகள் (திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம்)
7. 1992 - சைவநாற்பாதங்கள் காட்டும் ஆலய வழிபாடு
8. 1993 - யாழ். தெல்லிநகர் ஸ்ரீ துர்க்காம்பாள் நான்மணிமாலை
9. 1995 - சிவவிரத மான்மியக் கதைகள்
10. 1997 - சிறுவர் ஞானத் தமிழ் (நாடகம்)
11. 1997 - ஸ்ரீ நவராத்திரி நாயகியும் தோத்திரமாலையும்
12. 2000 - சிவனுக்குரிய பஞ்ச தோத்திரமாலை
13. 2001 - திருவாதவூரடிகள் புராணம் (உரையுடன்)
14. கொழும்பு பேலியகொடை ஸ்ரீ பூபால விநாயகர் மும்மணிக்கோவை
15. செக்கடித்தெரு ஸ்ரீ கதிரேசன் ஆலயக் குடமுழுக்குப் பதிகம்
16. அவுஸ்திரேலியா சுபநகர் பத்திரகாளியம்மன் திருவூஞ்சல்

**அச்சிலிருப்பவை:**

1. சைவசமய குரவர் நால்வர்
2. சிறுவர் இராமாயணக் கதைகள்
3. சிறுவர் கந்தபுராண அமுதம்
4. குழல் ஊதும் கண்ணன் (ஸ்ரீ இராதாகிருஷ்ணன்)

**வெளிவர இருப்பவை:**

1. கொழும்பு பேலியகொடை ஸ்ரீ பூபாலவிநாயகர் தலபுராணம்
2. சிறுவர் ஞானத் தமிழ்க் கதைகள்
3. சிறுவர் ஞானத் தமிழ் நாடகம்
4. பெரியபுராண வசனச் சுருக்கம்
5. கந்தபுராணம் (சூரன் போர்)
6. தெய்வமணிப் பிரபந்த மாலை
7. பெண் உலகம்
8. சைவநற்சிந்தனைக் கட்டுரைகள்

மாதாஜியின் தமிழ் வசனநடை மிகவும் எளிமையானது. எவரும் வாசித்துப் பொருளையறிந்து கொள்ளக்கூடிய வகையில் ஆற்றொழுக்கான பாங்கினது. கடுமையான சொற்கள் எதுவும் கையாளமாட்டார். மிகமிக விளக்கமான முறையிலே வசனங்களைக் கையாண்டு - சிறு குழந்தைகளும் புரிந்து கொள்ளத்தக்க முறையில் எழுதுவார். இவரது வசனத்தில் இலக்கண வழுக்கள் கிடையா. தன்னடக்க சீலம் ததும்பி வழியும் உருவினர்.

மாதாஜி எழுதி வெளியிட்டுள்ள சைவசமய நூல்களுள் 'சிவ விரதமான்மியக் கதைகள்' என்னும் நூல் குறிப்பிடற்பாலது. 'பிரமோத்திர காண்டம்' என்னும் பழைமையான தமிழ் நூலில் அடங்கியுள்ள செய்யுட்களை உரை நடைப்படுத்தி எழுதிக் கதைகளாகச் செந்தமிழ் வசன வளம் கொப்பளிக்க எழுதி வெளியிட்டுள்ளார்.

இந்நூலுக்கென சுவாமி ஆத்மகனானந்த மகராஜ் அவர்கள் நல்கிய வாழ்த்துரையில் மேல்வருமாறு பாராட்டியெழுதியுள்ளார்.

> சமய வாழ்க்கையின் அடிப்படையாக விளங்குவது இறை பக்தியாகும். இந்த இறை பக்தியை பூசை, ஜபம், தியானம், ஆலய வழிபாடு, விரதம், திருத்தொண்டு முதலானவற்றின் மூலம் வளர்க்கலாம் என்னும் கருத்தை வலியுறுத்தியே இந்நூல் எழுதப்பட்டுள்ளது. எனவே, ஆஸ்திக அன்பர்கள் இந்நூலை வரவேற்பர் என்பதில் ஐயமில்லை. புலவர் சி. விசாலாட்சி அவர்கள் ஆன்மிக நாட்டங் கொண்ட சிறந்த சமயப் பணியாளர்; சிறந்த எழுத்தாளருங்கூட

என்று எழுதியுள்ளார்.

'சிவகாமசிரோமணி' சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள் தமது ஆசியுரையில்,

> வரதுங்கராம பாண்டியரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட பிரமோத்திர காண்டச் செய்யுளிலிருந்து மேற்கூறிய மகிமைகளை விளக்கிக் கூறும் சைவசமயக் கதைகளைச் சுருக்கமாகவும் யாரும் விளங்கத்தக்க முறையில் வசனரூபமாகவும் வசனரூபமாக வெளியிட்ட செயல் மிகவும் பாராட்டுக்குரியது.

என்று எழுதியுள்ளார்.

குருக்கள் குறிப்பிடும் மேற்கூறிய மகிமைகள் வருமாறு:

> விபூதி, ருத்ராட்சம், ஸ்ரீ பஞ்சாட்சரம் என்பனவற்றின் மகிமைகளும் வழிபடற்குரிய சோமாவாரம், பிரதோஷம் போன்ற முக்கிய விவரங்களை அனுட்டிக்கும் முறைகள், உலகின் தோற்றம் ஒடுக்கம், மன்வந்தரம், அரசர் முனிவர்களின் சரித்திரம், முத்திநெறி, கடவுள் மகத்துவம் முதலிய இலக்கணப் பணிகளை எழுதப்படும் சரித்திரங்கள் வழிபடுபவர்கட்குப் பக்தியை உண்டாக்கும்.

என்பனவே அம்மகிமைகளாம். கொழும்பு விவேகானந்த சபையின் முன்னாள் பொதுச் செயலாளரும், சமாதான நீதிவானுமாகிய 'சிவநெறிச் செல்வர்' க. இராஜபுவனீஸ்வரன் அவர்கள் ஆங்கில மொழி மூலம் அளித்த Preface இலிருந்து ஒரு பகுதியை நோக்கலாம்.

'Saiva Poolavar Visalachchi Ammayar has associated with our society in recent time. She is a devout Saivaite, who has been the author of few books on Saivaism.

I knew Visalachchi Ammayar as a socialworker from Kilinochichi Gurugulam associated with the orphanage at Kilinochchi in the Jaffna Peninsula.

Now she has ventured to reduce the Versus in 'Pramothra Kandam' into simple prose. So that any Saivaite could read and assimilate same without difficulty. The basic tenth of religion life is the worship of god, and this book speaker in detail the wonderful power of the Namasivaya Manthra or the Sacredfire letters, and the various 'Kiriyas; such as observing vigil during Maha Sivarathri, performing 'Sivapooja' and other allied observances.

I am sure that, this work of Visaladchi with benefit considerate by all Saivaits. I take this opportunity to recommended this book to all students and adults to read and practice what they have learned from this book in their day to day life.

May the grace of God Ganesha bless her with success.

என்பது பெரியார் இராஜபுவனீஸ்வரனது அணிந்துரையாகும்.

மாதாஜியின் பழைய மாணவியும் சங்கீத ஆசிரியையுமான செல்வி கணபதிப்பிள்ளை சரோ அவர்கள் மாதாஜி பற்றி எழுதும்போது வருமாறு குறிப்பிடுகிறார்.

> ... இவரை (மாதாஜியை) எனக்கு முப்பதாண்டுகளாகத் தெரியும். இவரிடம் கல்வி பயிலும் வாய்ப்பு நமக்குக் கிடைத்தது. பேச்சுத் தமிழாகவும், சைவசமயம் மூச்சாகவும் கொண்ட இந்நூலாசிரியர் சிறந்த சிவபக்தர்; நைஷ்டிகப் பிரமச்சாரி. சைவசமய பாடத்தையும் தமிழையும் சிறப்புப் பாடங்களாக இவர் பலகாலம் கிளிநொச்சி இந்துமகா வித்தியாலயத்தில் கற்பித்து வந்தவர். குருகுல அநாதைப் பிள்ளைகளை அன்புடன் அணைத்து ஆதரவுகள் செய்து இன்மொழி பேசுவார். கல்வி பயிலும் சிறார்கள் நற்பிரசைகளாக எதிர்காலத்தில் மிளிர வேண்டும் என்ற காரணத்தால் காலைப் பிரார்த்தனையில் நல்ல சிந்தனைகள் மாணவர் சிந்தனையில் பதியக்கூடியதாகப் பேசுவார். தமிழ் இலக்கணம், இலக்கியம் படிப்பதில் கட்டுரைகள் எழுதுவிப்பதில் சிறந்த வல்லமை உடையவர். இலக்கணம் கற்பித்தல் திறமைகளை அறிந்த கத்தோலிக்க சமயப் போதகர் ஒருவர் குரு குலத்தில் வந்து இவரிடம் தமிழிலக்கணங் கற்றார். இப்போதகர் குருகுலத்தின் அருகிலுள்ள கிறிஸ்தவ ஆண்கள் விடுதியின் நிர்வாகி களில் ஒருவராவார்

என்று எழுதும் சரோ, மாதாஜியின் 62 ஆவது வயதில் வாசகர்களறிய வெனச் சில குறிப்புகளை மேலும் கூறுகிறார்.

> நீர்வளம், நிலவளம், பக்தி வளம் உடையது குப்பிளான் என்னும் கிராமமாகும். இக்கிராமத்தின் சிறப்பு என்னவென்றால் புற-பிற-மதங்களில் ஆலயங்கள் இக்கிராமத்தில் இல்லை. புறச் சமயக் கலப் பில்லாத புனித பூமி குப்பிளான் கிராமமாகும். இக்கிராமவாசிகள் குப்பிளான், சோதி விநாயகரையும் கற்பகவிநாயகரையும் பூக்கொண்டு வழிபடும் தன்மையுடையவர்கள்.

1974 இல் வன்னி மாவட்டத்திலுள்ள குருகுலத்தில் அநாதைப்பிள்ளை களின் பெண்கள் பகுதி மேற்பார்வையாளராகவும், அயலிலுள்ள கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத் தமிழ் சமயச் சிறப்பாசிரியராகவும் கடமையாற்றினார். இக்காலத்தில் இவர் வித்தியாலயத்திலும் குருகுலத்திலும் ஆற்றிய சமய, தமிழ்ப்பணிகள் அளப்பரியனவாகும். வன்னிப் பகுதியில் மட்டுமன்றி வடகீழ் மாகாணங்களின் சில இடங்களிலும் பிரசங்கங்கள் செய்தார். இக் காலங்களில் இவருக்கு எதிர்ப்புக்களும் மிகுந்து காணப்பட்டன. அத்தனை

எதிர்ப்புக்களையும் விஞ்சித் தமது பணியில் சலிப்பில்லாது காணப்பட்டார். திருமலைத் தபோவன மாதாஜியுடன் நெருங்கிய தொடர்பால் அவரிடமும் நல்லாசிகள் பெற்றார்.

வன்னி மாவட்ட மாணவர்கள் தமிழில் தேர்ச்சியுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்ற பேரவாவால் தமது செலவிலேயே மாணவர் மாதிரிக் கட்டுரையொன்றை எழுதி வெளியிட்டார். இந்துமகா வித்தியாலயத்தில் தனது மூச்சாலும், பேச்சாலும் செய்த சேவைகளை இன்றும் அப்பகுதி மக்கள் நினைவில் வைத்திருந்து நன்றி செலுத்தி வருகின்றார்கள். மாதாஜியின் அளப்பரிய செயல்கள் யாவும் இன்றுவரை இலைமறை காயாக இருந்த போதிலும் இலங்கை இந்து கலாசார அமைச்சர் மாண்புமிகு பி.பி. தேவராஜ் அவர்களின் கண்களுக்கும், சிந்தனைக்கும் தவறாத காரணத்தால் 21.02.1993 இல் 'சைவநன்மணி' பட்டமும், விருதும் பெற்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் புலவர் பயிற்சி பெறும் காலத்தில் சக மாணவர்கள் கல்வி கற்பித்த விரிவுரையாளர்கள் மூலமும் பட்டமும் நன்மதிப்பும் பெற்ற போதும் இதுவரை அவைகளை வெளிக்காட்டாது சாதாரண புலவராகவே காட்சியளித்து வருகிறார். இவரிடம் முத்தமிழ் வல்லமையுண்டு' என்று நிறைவு செய்கிறார் சரோ.

''அடியேனின் இன்னுரை'' என்னும் பகுதியில் மாதாஜி எழுதும் வரிகள் இன்றைய சைவசமய இழிநிலையை விவரிப்பதாய் அமைகிறது.

> இறைவன் இவ்வுடலைத் தந்தது தன்னை வழிபட்டு முத்தியின்பம் அடைவதற்கேயாகும் என்கிறார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் அவர்கள்.
>
> அடியேன் பெரிய அறிவாளியுமல்லேன்; அல்லது நல்ல சிவபக்தையும் அல்லேன். அறிவாளி போன்றும், பக்தை போன்றும் நடக்கும் பண்பைக் கொண்டவளாகையால் இந்நூலை உரைநடையில் எழுத முயன்றேன்.
>
> முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் முருகன் என்றால் இந்நூலை வாசிக்கும் சிவபக்தர்கள் அடியேனைப் புகழாவிடினும் இகழமாட்டார்கள் என்ற துணிவும் நம்பிக்கையும் கொண்டவர் இவர். இன்று சைவசமய உண்மைகளை மக்கள் நம்பி அதன்படி நடப்பதற்கு அவர்களிடம் மனவுறுதியும் நம்பிக்கையுமில்லாது தள்ளாடுகிறார்கள். 1983-1993 வரைக்குட்பட்ட சீர்கேடுகள் காணப்படும் தமிழ் மக்கள் (சைவம்) தெய்வ நம்பிக்கையில் தளர்ந்து காணப்படுகிறார்கள். யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு இவ்வாறு பல இடங்களில்

> இருந்தும் நாட்டுப் பிரச்சினைகள் காரணமாகவும், வெளிநாடுகட்கு வேலைவாய்ப்புத் தேடிச் செல்வதற்காக வந்த சைவமக்கள் சைவமே உண்மைச் சமயம் என்பதை அடியோடு மறந்து பிறமதத்தைத் தழுவும் ஆலயங்களுக்குச் செல்கின்றார்கள். இதனால் அடியேன் சைவப்பணி, தமிழ்ப்பணி செய்ய வேண்டும் என்பதாலும், சைவசமய உண்மை களைக் கூறும் நூல்களிலொன்றாகிய பிரமோத்தர காண்ட நூலின் செய்யுட்களை எல்லா மக்கட்கும் விளங்கக்கூடிய வகையில் வசன நடையில் எழுதினோம். இந்நூலின் மூலதனப் பொருளுக்கு ஆதார மாக இருந்தவர் மாவிட்டபுரம் டொலர் கொம்பனி முதல்வரும், கொழும்பிலுள்ள ஸ்ரீ பூபால விநாயகராலயத்திற்கும் செக்கடித்தெரு கதிரேசன் ஆலயத்திற்கும், நீர்கொழும்பு ஸ்ரீ மீனாட்சி சமேத சுந்த ரேஸ்வரர் ஆலயத்திற்கும் அறநெறிக் காப்பாளராகவும் சபரிமலை குருசாமியாக இருக்கும் அருள் தியாகச் செம்மல் செந்தில்வேள் அவர்களாகும். இந்நூல் விற்பதனால் கிடைக்கும் பணம் மேலும் மேலும் நூல்கள் வெளியிட உதவுமென நம்பிக்கையுடையேன்.

இந்நூலின் உள்ளடக்கமென,

திருவைந்தெழுத்தில் அற்புதம், சிவவழிபாட்டின் மகிமை, சிவராத்திரியில் முத்திபெற்ற கதை, சிவராத்திரி கதை - 2, சனிப்பிரதோஷ கதை - 1, சனிப் பிரதோஷ விரதம் - 2, பிரதோஷ விரத மகிமை - 3, சோமவார விரத மகிமைக் கதை - 1, சோமவார விதரம் - 2, சிவத்தொண்டின் கதை, விபூதியின் மகிமை, சிவபூசையின் மகிமை, பொன்னம்பலவாணேசர் தங்க ரதத்தில் வந்தருளே, வெள்ளிக்கிழமை விரதம், கேதார கௌரி விரதம், சிவகவசம் என்பன அமைந்துள்ளன.

கேதார கௌரி விரதம் பற்றிய கட்டுரையில் (ப. 80) போதனை முறை குறித்து மாதாஜி குறிப்பிடும் விஷயங்கள் இன்றைய பெண்களுக்கும் பெரிதும் பொருந்துவனவாயுள்ளன. பெண்களைப் பற்றிச் 'சிவமயச் செல்வி' புலவர்மணி கூறும் கருத்துகள் வலிமையும் மெய்ம்மையும் பொருந்தியனவாகும். அவர் எழுதுகிறார்:

> பெண்கள் வைகறைப் பொழுதாகிய காலையில் எழுந்து செய்ய வேண்டிய சுபகருமங்களாகிய மலசலம் கழித்தல், பல் துலக்கல் முதலியன முடித்து வீட்டுப் பணிகளையும் செவ்வனே நிறைவேற்றி முற்றத்தில் கோலமிட்டு, நீராடி இறைவனைத் துதித்து நெற்றியில் திலகமிட்ட பின்னரே தன் தன் துணைவரை பயபக்தியோடு துயி லெழுப்ப வேண்டும். அதிகமாகப் பெண்கள் படபடவெனப் பேசுவது, கடகடவென நிலத்தில் சத்தம் எழும்ப நடப்பது வழக்கம். அவ்வாறு

> செய்யக் கூடாது. நீராடியதும் தலையை அகிற்புகை, சாம்பிராணிப் புகையில் உலர்த்த வேண்டும். எந்த நேரமும் தலைவிரி கோலமாக இருத்தல் வீட்டிற்கும் நாட்டிற்கும் நன்றாக இருக்க மாட்டாது. நிலத்தில் முந்தானை விரித்துப்படுத்தல், இருவர் பேசிக் கொண்டிருக்கும் போது குறுக்கே செல்லுதல் புறம் பேசுதல் முதலியவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.

என்கிறார். மாதாஜி அவர்கள் அடியேனுக்கு 2011.04.08 ஆந் திகதி ஒரு கடிதம் குப்பிளானிலிருந்து அனுப்பியிருந்தார். அதிர் அவர் குறிப்பிட் டுள்ளதாவது;

> நாம் பெரிதாக எதுவும் சாதித்துவிடவில்லை. குருகுலப்பண்பு விருந் தினரைப் பண்புடன் ஆதரவுடன் உபசரிப்பது. 1977 ஆம் ஆண்டில் சேகுவேராகாரரின் கலகம் நடந்தபோது பல நூறு அகதிகளைக் குருகுலம் வரவேற்று நல்ல முறையில் ஆதரித்து குருகுலத்தின் கிழக்குப் பகுதியில் வீடுகள் கட்டிக் கொடுத்தது. புதுமுறிப்பிலும் வீடுகள் கட்டியதுடன், சங்கக் கடை, பாடசாலை இவ்வாறு எத்தனையோ பணிகள் செய்தது. அதெல்லாம் 1987 கலவரத்துடன் இலைமறைகாய்தான். மேலும், என் நிலை 2008 இல் இவ்விடம் வரும்போது நடைப்பிணம் தான். இலைமறைகாய் குடத்துள் விளக்காய் நின்று மலையின் விளக்காக முடியுமா? எம்பணி சிறிது தான், நல்லவர் நாட்டில் நிலையாக வாழ்ந்தால் தொல்லைகள் தேயுமல்லவா?

என்று எழுதி,

> *நயினை தந்த ஞானக் களஞ்சியமே*
> *பயன்தரு ஞான போதகராய் மிளிர்ந்து*
> *கயல்விழி துணைவி குடும்ப சமேதராய்*
> *நயினை அம்மன் அருளால் வாழ்க*

என்று அடியேனையும் வாழ்த்தி அருளியுள்ள மாதாஜியவர்கள் நீடு சுகானந்த வாழ்வை வாழ்ந்து நிலவுலகில் சைவமும் தமிழும் வாழப் பணிகள் புரிக வென வாழ்த்தி வணங்கி நிற்கிறோம். வாழி! வாழி! வணக்கம்.

IV

**பவளவிழா நாயகர் 'ஆசிரியமணி'**

## ச. விநாயகரத்தினம்

தெல்லிப்பழை, பன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட எமது வழிகாட்டியும் பேராசானுமாகிய 'ஆசிரியமணி' தன்னலமற்ற தொண்டன். பவளவிழா நாயகர் ஸ்ரீமான் ச. விநாயகரத்தினம் அவர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியத் தகைமை பெற்று சுன்னாகம் மயிலமணி சைவ மகாவித்தியாலயம், ஹட்டன் ஹைலண்ட் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட அலுவலகம், யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் என்பவற்றிலே நல்லாசிரியராகவும், முழு நேரச் சைவசமய ஆசிரிய ஆலோசகராகவும் 1958.11.03 ஆம் திகதி முதல் 1997.07.31 ஆந் திகதி வரை திறம்பட, தன்னலமற்ற சேவையாற்றிப் பணிநிலையிலே ஓய்வு பெற்றுள்ளார். தம்வாழ்நாளிலே பெருமைமிகு பவளவிழாக் காணும் பேறு பெற்ற எமது நல்லாசான் குடும்ப சுகத்துடனும் நீடு மகிழ்ச்சியுடனும் நலமாக வாழ வேண்டுமெனச் சிவகாமி சமேத ஆடல் வல்லானது பாதாரவிந்தங்களைப் பணிந்திறைஞ்சுகிறோம். என்றும் இன்றமிழ் போல் வாழிய நீடு.

அருமையும், அமைதியும், பெருமையுடன் பெருமிதமற்ற எம் ஆசான் 1956-1957ஆம் ஆண்டுகளிலே பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலே பல்வேறு துறைகளிலேயும் ஆசிரியத்துவப் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டார்.

ஆசிரியப் பயிற்சித்துறைகளுட் தேசியத்திட்டப் பயிற்சி, யோகாசனப் பயிற்சி, சாரணர் பயிற்சி, முதலுதவிப் பயிற்சி என்பவற்றுடன் ஈற்றில் பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திரம் என்பவற்றைப் பெற்றுக் கொண்டார். பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அமைந்த கலாசாலை உதைபந்தாட்டக் குழு உறுப்பினராயும் கலாசாலை மெய்வல்லுனர் குழு உறுப்பினராயும் பதவிகள் வகித்தார். இவரை மாணவர்களாகிய நாங்கள் விம் Sir என்று அழைப்போம். அழுக்கை அகற்றித் தூய்மை செய்யும் 'விம்' போன்று மாணாக்கரின் அறியாமையைப் போக்கி அறிவுச் சுடர் கொளுத்திய

விம் (விநாயகரத்தினம்) (வி + ம்) அரும்பணி புரிந்தவர் என்பதாலே சுருக்க மாக அமைந்த அப்பெயர் நல்ல பொருத்தமானதாகும்.

ஆசான் 'விம்மர்' 1958.11.03 தொடக்கம் 1963.06.30 வரை சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்திலே ஆசிரியராயிருந்தார். அக்காலத்தில் தமது தகைமைகளையும் துறைசார் வித்துவப் புலமையையும் கூடவே வளர்த்துக் கொண்டார். ஆசிரிய ஆலோசகர் என்னும் தகைமையையும் உடற்கல்வித் தராதரத்தையும் தனதாக்கிக் கொண்ட இவர் சுருக்கெழுத்து தட்டச்சுப் போதனைகளை இலவசமாகவே கற்பித்தார். விளையாட்டுத்துறைத் தலைவராயும் இல்லங்களின் பொறுப்பாசிரியராயும் புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவரைத் தயார் செய்யும் பயிற்சி வகுப்புக்களையும் நடத்தினார்.

அட்டன் ஹைலண்ட் கல்லூரி மாணவர்கள் செய்த கடுந்தவப் பயனால் 1963.07.01 முதல் 1970.07.31 வரை ஏழாண்டு காலம் துடிப்புமிகு நல்லா சானாய் அக்காலத்தில் மலையகக் கல்விமான்களெனக் கொடிகட்டிப் பறந்த சிந்தனையாளர்களான இரா. சிவலிங்கம், எஸ். திருச்செந்தூரன் ஆகியோருடன் எம். பவள நாயகன் ச. விநாயகரத்தினமும் இணைந்த மலையக மாணாக்கரின் கல்விக் கண்ணைத் திறந்தமை வரலாற்றிலே பொன்னெழுத்துக்களாலே பொறிக்கப்பட வேண்டிய செய்தியாகும். இக்கூட்டு - இம் முக்கூட்டு - மிக்க தனித்துவமானது. அட்டன் ஹைலண்ட் கல்லூரியிலே படித்த பல மாணவர்கள் இன்றும் 'விம்' அவர்களை மறவாது நீள நினைந்து உயர்வுடன் வாழ்கின்றனர் என்பது சுட்டப்பட வேண்டியது.

இவ்விடத்திலே பிறிதொரு மலையகத் தொடர்பும் ஞாபகத்திற்கு வரு கிறது. 'விம்' அவர்கள் மகாஜனக் கல்லூரிக்கு பணிமாற்றலாகிய பின்னர் பிற்காலத்தில் மலையகத்து மாணாக்கர்கள் பலர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலே கல்விகற்று இன்று பல்கலைக்கழகங்களிலே மிகவுயர் கல்விப் பதவியான பேராசிரியர் பதவிகளையும், துறைசார் தலைமைத்துவங்களையும் பீடாதிபதி முதற் பல்வேறு பெரும் பொறுப்புக்களையும் வகிக்கின்றன ரென்பது மனங்கொள்ளத்தக்கது. அந்த வகையிலே பேராசிரியப் பெருந்தகை களான சோ. சந்திரசேகரன், மு. சின்னத்தம்பி ஆகியோர் விதந்து குறிப்பிடப் பட வேண்டியவர்களாவர். இவர்கள் இன்றும் நல்ல தரத்துடன் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

அட்டன் ஹைலண்ட் கல்லூரியிலே 'விம்' அவர்களும் இரா. சிவலிங்கம், எஸ். திருச்சந்திரன் ஆகியோரும் கல்வி புகட்டிய காலம் மலையகக் கல்வியின் எழுச்சிக் காலம் பொற்காலம் என்று கூறலாம். மலையக மாணாக்கரின்

கல்விப் புலமையின் ஆழங்காலுக்கும் அகற்சிக்கும், வியாபிதத்திற்கும் இம்மூவரும் பெரும் பங்களிப்பினைச் செய்துள்ளனர் என்பது பேருண்மை. அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் விளையாட்டுத்துறைத் தலைவராயும், இந்து மாமன்றத்தின் பொறுப்பாசிரியராயும், கல்லூரி நேரசூசிகை (Time table) தயாரிக்கும் நிபுணராயும் உதைபந்தாட்டப் பயிற்றுனராயும், மெய் வல்லுனர் பயிற்றுனராயும், நாடகப் பயிற்றுனராகவும், பணிகள் பல ஆற்றி யுள்ளார். அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரிக்கு வெளியிலேயும் கல்விக்காகவும், கல்லூரிக்காகவும் பல பன்முகப் பணிகளைத் திறம்பட ஆற்றினார். பொது மறைக் கழகத்தின் அமைப்பாளராகவும், திருக்குறள் மாநாட்டு இணைச் செயலாளராகவும், திருவள்ளுவர் 2000 ஆம் ஆண்டு விழாப் பொறுப்பாள ராயும் பணிபுரிந்ததுடன் அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் அக்காலங் களிலே படித்த மாணவ மாணவியரை நெறிப்படுத்தியும், வழிப்படுத்தியும் இருபது தங்கப்பதக்கப் பரிசில்களைக் கல்லூரி பெற்றுக் கொள்ளச் செய்தார். இது ஒரு சாதனையேயாகும். அகில இலங்கைத் திருவள்ளுவர் 2000 ஆம் ஆண்டு விழாப் போட்டியில் மூன்று பிரிவிலும் முதற் பரிசுகளைப் பெற்றுக் கொள்வதற்கான பயிற்சிகளை வழங்கினார்.

அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியிலே 1963-1970 காலப் பகுதிகளிலே எழுச்சிமிகு சிந்தனைப் புரட்சி - களம் - உருவாக்கப்பட்டதென்பது மிகைக் கூற்றல்ல. இவ்விடத்திலே இன்னுமொரு பேருண்மையையும் பதிவு செய்வது அவசியமாகிறது. மலையகக் கல்வி வளர்ச்சியிலும், புலமை எழுச்சியிலும் யாழ்ப்பாணத்து தமிழாசிரியர்கள் ஏற்படுத்திய தாக்கம் என்பது மிகமிக முக்கியமானது. இன்றும் மலையகத்து கல்விமான்களும், சிந்தனையாளர் களும், புத்திஜீவிகளும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளும் பேருண்மை இக்கருத் தாகும். எனினும், இன்று மலையக மைந்தர்கள் அணி திரண்டு தத்தம் பிரதே சங்களில் தரமான கல்வி மேம்பாட்டுத் திட்டங்களை ஏற்படுத்துவதற்கு முன்னோடிகளாகவும் மூலவர்களாகவும் தொடக்குனர்களாகவும் விளங்கு வதற்கு ச. விநாயகரத்தினம் அவர்களுக்குத் தனி இடம் உண்டு என்பது மறுக்க முடியாத உண்மை. இது வெறும் புகழ்ச்சிக் கூற்று அல்ல.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிலே படித்த மாணவர்கள் செய்த பூர்வ புண்ணிய அருந்தவப் பயனால் 1970.08.01 முதல் 1992.12.31 வரை அங்கு பெருமை மிகு ஆசிரியராகப் பணியாற்றினார். அவ்வேளையிலும் தமது தகைமையினையும் திறமையினையும் ஆசிரியவாண்மையினையும் வளர்த்துக் கொண்டார். இந்துசமய சிறப்புக் கற்கைநெறி, சைவசமய முதன்மை ஆசிரியர் பயிற்சி என்னும் தராதரங்களைப் பெற்றார்.

வகுப்பறையில் தமது பாடங்களை எளிமையாகவும் விளங்கும் முறையிலும் நுட்பமாகவும் தெளிவுபடவும் நிபுணத்துவத்துடனும் சாணக்கியத்துடனும் நேரகாலம் பார்க்காது போதித்ததுடன் எண்வகைத் துறைகளிலே தமது காலத்தையும் பேருழைப்பையும் நல்கி மாணவர் நலன் கருதியும் செயற்பட்டார். இவர் கோலோச்சிய எண்வகைத் துறைகளும் வருமாறு: இல்லப் பொறுப்பாசிரியர், உதைப்பந்தாட்டப் பயிற்றுனர், சைவசமயபாட இணைப்பாளர், விளையாட்டுத்துறைத் தலைவர், கல்லூரிப் பதிவாளர், தொடர்ச்சியாக ஆறு ஆண்டுகள் அகில இலங்கை இராமநாதன் நினைவுப் பேச்சுப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவ, மாணவியர் முதற்பரிசுகள் பெறுவதற்கான பயிற்றுனர், மகாஜனா மாணவர்கள் மாணவியர் நூற்றுக்கு மேற்பட்ட தங்கப் பதக்கங்களைப் போட்டிகளிலே வென்று வெற்றி வாகையைத் தட்டிக் கொள்ள பயிற்சிகளை வழங்கிய பயிற்றுனர். 'சோதனை', 'குறும்பு செய்த கோமகள்', 'வில்லால் அடித்த விஜயன்' ஆகிய தரமான மேடை நாடகங்களைத் தயாரித்துப் பயிற்றுவித்துப் போட்டி நிலையிலே முதற்பரிசு பெற வைத்தவர் என அயராது உழைத்தார்.

மகாஜனக் கல்லூரிக்கு வெளியில், 1979 ஆம் ஆண்டிலே வடமாநில சைவசமய ஆசிரிய ஆலோசகர் (பகுதிநேரம்) பணியாற்றினார். வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலமான கீரிமலைச் சிவன் கோயிலில் சிவநெறிக் கழகம் அமைத்து அதன் செயலாளராகப் பணிகள் பல புரிந்தார். வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம் நடத்திய சைவசமய அறிவுப்போட்டியில் முதற்பரிசான தங்கப்பதக்கத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாண மாவட்டத்தின் சிறந்த ஆசிரியர் விருதினையும் பெற்றார். இனி உலகளாகிய ரீதியிலே வெளியிடப்பட்டுள்ள இரு பெரும் நூல்களிலே வெளியிடப் பட்டுள்ள 'விம்' பற்றிய இரு மேற்கோள்களைக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். முதலாவது மேற்கோள் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி, கனடாவிலே வெளியிடப்பட்ட மகாஜனன் (1910-2010) நூற்றாண்டு மலரிலே ப. 39 இல் இடம்பெற்றுள்ளது. அம்மேற்கோள் வருமாறு:

> இவர் மகாஜனாவின் பழைய மாணவரா அல்லது ஆசிரியரா எனப் பிரித்துப் பார்க்க முடியாதளவுக்குக் கல்லூரியின் சகல நிலைகளிலும் விடயங்களிலும் செயற்றிட்டங்களிலும் செயற்பாடுகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, கல்லூரி தான் மனையென்று கருதுமளவுக்குச் செயலாற்றிய பழைய மாணவன். இவர் மகாஜனாவில் கல்வியை நிறைவு செய்த பின் முதன் முதலாக பலாலியில் தொடங்கப்பட்ட

விசேட ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கல்வியை நிறைவு செய்த சில வருடங்களின் பின் மகாஜனாவின் ஆசிரியராக இணைந்து கொண்டார். இவர் தமிழையும் சமயத்தையும் முக்கிய பாடங்களாகப் படிப்பித்தார். சமய விடயங்கள் அனைத்திற்கும் திரு. சின்னத்துரை ஆசிரியருக்குப் பின் முழுப்பொறுப்பும் இவரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. மாணவர்களைச் சமயப்போட்டிக்கு அவை எங்கு நடந்தாலும் கூட்டிச் சென்று பங்குபற்றச் செய்வதிலும், அவர்களுக்குத் தேவையான சமயம் தொடர்பான பயிற்சிகளை நேரம் காலம் பாராது பயிற்சியளிப்பதையும் கடமையாகக் கொண்டிருந்தார். இவரின் பயிற்சியினாலும் விடாத ஊக்கத்தினாலும் போட்டிகளில் மகாஜனா மாணவர்கள் பெருமையும் சிறப்பும் பெற்றுக் கொண்டதுடன் கல்லூரிக்கும் பெருமை சேர்த்தனர். மகாஜனாவின் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் திருவிழா, திருக்கேதீச்சரம் ஆலயத் திருவிழா இரண்டையும் வருடந்தோறும் சிறப்பாகவும் திறம்படவும் நடைபெறச் செய்வதிலும் மாணவர்களைக் கொண்டு செயற்படுத்தும் திறமை கொண்டவர். திருக்கேதீச்சர ஆலயத்திற்கு மாணவர்களையும் ஆசிரியர் களையும் கூட்டிச் சென்று விழாவினைச் சிறப்பிப்பதில் கண்ணுங் கருத்துமாகச் செயற்பட்டவர். மாணவர்கள் சமய நெறியிலும் தமிழ் மொழியிலும் வல்லமை புலமை - அடைய வேண்டுமென்ற ஆவலை யுடையவர். இவர் சில விளையாட்டுகளுக்கும் பொறுப்பாக இருந்தார். வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு ஒழுங்குகள் செய்வதில் திறமையாளராக இருந்தார். கல்லூரி ஆவணங்கள், மாணவர்களின் அடையாளப் புகைப்படங்கள் என்பவற்றைப் பாதுகாப்பாகப் பேணிக் காக்கும் பொறுப்பும் இவருடையதாக இருந்தது. கல்லூரியில் மகாஜனச் சிற்பியின் (அதிபர் தெ.து. ஜெயரத்தினம்) வெண்கலச் சிலைக்கான பணிகளில் தம்மை முழுமை யாக ஈடுபடுத்தி அதனை ஜெயரத்தினம் மண்டபத்தில் நிலைபெறச் செய்தவர்களில் முக்கியமானவர்களில் ஒருவர் என்று புகழாரஞ் சூட்டப்பட்டுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

பெரிதும் விதந்து பாராட்டத்தக்க முறையிலே இந்து சமய தத்துவங்களையும் சிவதத்துவ விளக்கங்களையும் கீரிமலையின் பூர்வீக வரலாற்றையும் கீரி மலைக் கண்டகி தீர்த்த மகிமையையும் பாடல்களையும் தன்னகத்தே கொண்டு மலர்ந்துள்ள நகுலநாதம் (24.03.2012) ப. 59 இல் 'சிவத்தமிழ் வித்தகர்' எழுதிய கட்டுரையிலே இடம்பெற்றுள்ள 'கீரிமலைச் சிவநெறிக் கழகம்' பற்றிய குறிப்பு வருமாறு:

> நகுலேஸ்வரர் ஆலயத்தின் தர்மகர்த்தா சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களைத் தலைவராகக் கொண்டு 1976 இல் கீரிமலைச் சிவன் கோயிலில் சிவநெறிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. மாதம் இருமுறை யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமிருந்து சைவச் சான்றோர்கள் பலரும் வந்து ஆலயத்தின் சபாமண்டபத்தில் கூடுவர். குருக்கள் ஐயா ஆசீர்வாதம் வழங்கிக் கூட்டத்தினை ஆரம்பித்து வைப்பார். இலக்கிய வித்தகர் இ. நமசிவாயம் ஐயாவின் நெறிப் படுத்தலில் சான்றோர் சங்கமம் நடைபெறும். இந்தச் சங்கமம் ஒரு சங்கப் பலகை போலவே காணப்படும். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலையில் சைவசித்தாந்த வகுப்பும் மாலையில் இலக்கண இலக்கிய வகுப்புகளும் நடைபெறும். யாழ். மாவட்ட மாணவர்களிடையே பேச்சுப்போட்டி, பண்ணிசைப்போட்டி, புராணப்போட்டி, கதாப்பிர சங்கப் போட்டி, மாலை கட்டுதல், கோலம் போடுதல் போன்ற செய்முறைப் போட்டிகள் என்பன நடத்தப்பட்டு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டு வந்தன. மிகச் சிறந்த முறையிலே திரு முறை மாநாடு இவ்வாலய முன்றலில் நடத்தப்பட்டது. மகாஜனக் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியர் திரு. ச. விநாயகரத்தினம் சிவநெறிக் கழகத்தின் செயலாளராக இருந்து அர்ப்பணிப்புடன் பணிகள் பல புரிந்து வந்தார்.

இவ்விரு மேற்கோள்களும் எம்புனையெனவும், கலங்கரை விளக்கு எனவும் திகழும் 'விம்' அவர்களின் சைவத்தமிழ்ச் சேவையையும் செயற்பாட்டு நலனையும் விண்டுரைப்பனவாகும். 'விம்' அவர்கள் 1993.01.01 முதல் 1993.12.31 ஆம் திகதி வரை முழுநேரச் சைவசமய ஆசிரிய ஆலோ சகர் என்னும் பதவியில் பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வி அலுவலகத்திலே பணியாற்றினார். 1994.01.01 ஆம் திகதி முதல் 1997.07.31 ஆம் திகதி வரை அதே பதவியில் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்திலே சேவை யாற்றினார். இவரின் சைவத்தமிழ்ப் பணியினைப் பாராட்டி 'இறைபணிச் செம்மல்' என்னும் சிறப்பு விருதினை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இவருக்கு வழங்கிக் கௌரவித்தது. திரு. ச. விநாயகரத்தினம் அவர்கட்கு 2010 ஆம் ஆண்டு தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ் தானத்தின் 'சிவத்தமிழ் விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

'இறைபணிச் செம்மல்', 'சிவத்தமிழ்ச் செல்வர்', 'ஆசிரியமணி' விம் அவர்கள் தடம் பிறழாத வைராக்கிய தெய்வநம்பிக்கையும் உழைப்புறுதியும் சேவை மனப்பாங்குங் கொண்ட நல்ல சீலம்மிக்க குணநலங் கொண்ட மகான்; தன்னலம் மறுத்த சமயத் தொண்டன்; பிறர் பிள்ளைகளையும் தன்

பிள்ளையென எண்ணிய உயர் மானுடன்; தந்தைக்குத் தந்தையானவர். அமானுடக் குணங் கொண்டவர். எளிமையே உருவானவர். சேவையிலே தொண்டிலே இன்பங்கண்டு குதூகலிக்கும் பண்பினர். 'தூண்டுசுடர்'; கல்லூரி மாணவ மாணவியரைத் தூர விலக்கி நடக்கத் தெரியாத 'அன்புடைத் தேன்றல்'; 'ஆசிரியத் தவம்' என்பது கற்பித்தல் மட்டுமல்ல; நன் மாணாக்கரை - திறமையுள்ளவரை - ஆற்றலும் ஆளுமையும் கொண்டவர்களை கூர்த்த நுண்மதி படைத்தவர்களை - நுண்மாண் நுழைபுலமிக்கவர்களைக் கண்டு பிடித்தல் 'இனங்காணுதல்', 'தெரிந்தெடுத்தல்' என்னுங் கல்விக் கோட் பாட்டைத் தமது பிறப்பின் இயல்பாகவே கொண்டமைந்தவர். இப்பண்பு களனைத்தினதும் கூட்டுமொத்தமான திரண்ட வடிவமே - திருவுருவே 'விம்' எனலாம். இவருக்கு இன்னுமொரு பட்டம் சிறப்புப் பெயர் வைப்பதாயின் தங்கவிம் (தங்கப்பதக்க விம்) என்று சூட்டி அகமகிழலாம். கல்வி, மொழி, சமயம் என்பன எக்காலத்தும் பெறுமதிமிக்கன என்பதும் மாணவர் நலனே - கூர்த்த மெய்ஞ்ஞானமே - ஆசிரியத்துவத்திலே தமது மேலான குறிக்கோள் என்னும் உறுதி கொண்டவர் எம் நல்லாசான். 'புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என்பான் பாரதி. அத்தகு திடசித்தத்துடன் எம்மை வையத்துள் வாழ்வாங்கு பிறரும் மதிக்கத்தக்க வகையிலே வழிகாட்டி வாழ வைத்த எம் பவளவிழா நாயகர் தனித்த புகழ் கொண்டவர்; பிறர் வாழத் தாம் வாழ்பவர்; அவரது சேவைகளும் காலத்தினாற் செய்த உதவிகளும் அளப்பரியன. ஈடிணையற்றவை; உன்னதமானவை. மறத்தற்கரியன - எம் நல்லாசிரியரை - ஆசிரிய மணியை, பவளவிழா நாயகரை அவரது திருவடி களைத் தொழுது, குரு வணக்கம் செய்து, நீள நினைந்து நித்தமும் கை தொழுது வாழும் பெரும்பேறு எம்மை வாழ்நாள் முழுவதும் மகிழ்வூட்டி இன்பஞ் செய்வதாக.

**பவள விழா நாயகர் நீடு வாழ்க! குருவே சரணம்!**

*என்னை எனக்கறிவித்தான்*
*எங்கள் குருநாதன்*
*இணையடியென் தலை வைத்தான்*
*எங்கள் குருநாதன்*

*- யோகர் சுவாமிகள்*

***(பவளவிழா மலர், 01.08.2012)***

**கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், M.A., Ph.D.**



கணபதியை உமாபதியைக் கைகூப்பித் தொழுதாலும்
மணமலர் போல் நிறைய மகிழ்ந்து குல தெய்வமாம்
குணமகளாம் நயினையூர்க் குலநாக பூஷணியை(க்)
கணமேனும் மறவாக்கனக நாகேஸ்வரன் வாழ்க

கருவிலே திருவுடைய கனகசபா பதிபெற்ற
பெருமகனாய் பூஷணியின் பேரருளால் கற்றோங்கி
மருவியொரு பட்டதாரி மணியாகி எம் ஏயும்
திருவருளால் பெற்றவனே சிறந்தென்றும் நீ வாழ்க

சங்கநூல் பின்வந்த சார்ந்த விலக்கிய நூல்கள்
தங்கமாய்க் கற்றுணர்ந்த தன்மையால் எதிர்காலம்
சிங்கமென அவை முன்னே சென்று சொன் மழை பொழிய
பங்கயத்தின் வாணியுனைப் பாராட்டுவாள் உண்மை

அத்திவாரத்தில் கல்வி ஆசறவே கற்றதனால்
சித்தியாயிவ்வுலகில் சீர்பெரிய புலவனுமாய்
பத்தியாய்ச் சமயத்தில் பகருஞ் சித்தாந் தத்திலுமே
புத்தியாம் பெற்றவுனை புகழ்மிக்க வாழ்த்துவனே

காத்திரமாய் இலக்கியங்கள் கனத்தபல கட்டுரைகள்
தோத்திரநூல் பற்பலவை தூயவர்கள் போற்றும்படி
நேத்திரம் போல் வெளியிட்டனை வித்துவானே நயினை யூர்ப்
பாத்திரமாய் ஈழமெங்கும் பாராட்ட வாழுதியால்

நவகோள்கள் வரிசையிலே நாயகனாம் வியாழனுக்கு
புவனமெல்லாம் போற்றுகின்ற பொன்னான பேரதுதான்
தவமான வாசீகத் தனிப்பெயர் அவ் விருதினை நீ
உவமையாய் குருவெனவே பெற்றுவிட்டாய் உயர்ந்தாயே

(பெரும்புலவர், கலாபூஷணம் வை.க. சிற்றம்பலம், இணுவில்)

ISBN 978-955-4745-03-2

விலை ரூபா 400.00